MS-09

MS13

அகத்தியர் சிந்தாமணி - 600

அகத்தியர் மெய்ஞானம்

பாகம் III

சிந்தாமணி அறுநூறு

(முதல் படி)

Typed

1.சுவடியின் பெயர் : அகத்தியர் சிந்தாமணி -600
அகத்தியம் மெஞ்ஞானம்.பாகம் 111
சிந்தாமணி அறநூறு.

2.சுவடி எண் :

3.படி எடுத்தவர் : க. லலிதா

4.மொத்த பக்கங்கள் : [illegible] 643

5.தட்டச்சு செய்தவர் : வெ.சும்புலட்சுமி

6.தட்டச்சு பக்கங்கள் : 273

7.தட்டச்சு எடுத்த நாள் : 13.6.03 முற்பகல்

8.தட்டச்சு முடித்த நாள் : 17.7.03 பிற்பகல்

பொருளடக்கம்

..

உஹரி ஓம் நன்றாக / குருவே துணை

(அகத்தியர் பாடல்)

அகத்தியர் சிந்தாமணி - 600

அகத்தியர் மெய்ஞானம் (பாகம் III)

சிந்தாமணி அறுநூறு

...

1. பூரணமாய் நிறைந்த பரம்பொருளா யெங்கும்
 புறமுகமாய் வெளியி லொளிவாள் சோதி
தாரணியில் சிவசெந் துதனைப் பளித்து
 சடலமெனுஞ் சடாட்சர சோடசத்தின் கூராய்
வாரணமாய் முகத்தோனை முதலாரா தாரம்
 மலியிர கனலெனு மண்டலத்துக் கப்பால்
காரணமா மதிமுழுந்த முண்ட சித்தர்
 கூரத்தினி லனின்றிலங்குங் காிமுகனை காப்பு

பூரணமாய் நின்ற பரம்பொருளே எங்கும் காணாது தோற்றமளிக்கும் இறைவனே. ஒளியாய் சோதியாய் நிற்பவனே. சிவசெந்துகளை படைத்தளிப்பவனின் சடாட்சரமந்திரத்தின் கூறாய் உள்ள யானை முகத்தோனே எல்லாவற்றிற்கும் ஆதாரங்களாய் நிற்பவனே. 40 நாட்கள் மதியமிர்தம் உண்ட சித்தர்கட்குக் காப்பாக நிற்கும் கனிமுகனே காப்பு.

2. காிமுகன் ஓம்நமசிவாய மெனவு
 கருத்தினால்த் தினம்பணியாக கருதா மாவ்பரி
பெருமைமிகப் பேசிடுவா ரனம்பாி......
 பேயானோ டினங்காதே பெரியோர் பாதம்
அருமையுடன் தொிசினைசெய் அன்பு செய்தால்
 அநுபவிக்கும் அறுநூறு ஆய்ந்து பார்த்து
திரிபுர காலாக் குனியைக் கண்டனோவு
 சிதறிப்போம் செந்தூரம் திறமாய்ச் செய்யே

காிமுகனோம் விநாயகனை கருத்தில் கொண்டு தினம் பணிந்து அவன் பெருமையை மிகவும் பேசிடுவர். கீழோருடன் கூடாமல் பெரியோரைப் போற்றி பாதம் பணிந்து தாிசம் செய்து ஆராய்ந்து பார்த்து செந்தூரம் சொல்லும் 600 பாடல்களைப் பாடினேன்.

3. அரமென்று யென்னாதே யிரதங் கெந்தி
துலங்கு-மரி தாரமுடன் மகறசுண்ணத் தாலே
வீரியமாய்ப் புடம்போட துருசுகரு வங்கம்
விதமுடனே வகையிஞ்சு விராக னாக
வரப்பா லோகமென்ற உருக்குச் சேமஞ்
உத்தமமாஞ் சங்குடனே வகைக்கு ரஞ்சாம்
பேறுபெற்ற வெள்ளியன் விடையே யொன்று
மறைபமிகும் பொன்வீரம் வகைபத் தாச்சே

இரசம், கெந்தி, அரிதாரம், இவற்றைக் கல் சுண்ணத்துடன் புடம் போடவும். துருசு, கருவங்கம், இவை வகைக்கு 4கி வீதமெடுத்து உருகும் உலோக வகைகள் 20கி, வெள்ளி, 4கி, பொன் 280கி இவற்றைச் சேகரித்துக் கொள்ளவும்.

4. பத்தான வகையெல்லாம் கல்வத் திட்டு
பாச்சியரை செம்பருத்திச் சாறு சர்மம்
கொத்தான செம்முள்ளிச் சாறு சாமம்
குமரிச்சார் யப்படியே கூட்டி ஆட்டி
சித்திர மூலத்தின்வேர் கொத்தமல்லி திப்பிலி
திப்பிலி முல்லை குரோசோனி ஓமம்
சத்தியமாய் வகைக்கஞ்சு விரக னாக
தானிடித்து பாண்டத்தில் சலத்தை வாரே

இவற்றையெல்லாம் கல்வத்திலிட்டு செம்பருத்திச்சாறு, செம்முள்ளிச்சாறு, கற்றாழைச்சாறு இவற்றில் தனித்தனியே 3மணிநேரம் அரைத்துக் கொள்ளவும். சித்திரமூலவேர், கொத்தமல்லி, திப்பிலி, திப்பிலி மூலம், குரோசானி ஓமம் இவை வகைக்கு 20கி எடுத்து இடித்துப் பாண்டத்திலிடவும்.

5.வாரிடுவாய்ப் படியஞ்சு நாலி லொன்றாய்
வத்தியபின் கஷாயத்தில் மருந்தை யாட்டி
தேத்தான்விரைப் பிரமானம் உருண்டை செய்து
தேவிதனைத் தியானித்து னிழலு லர்த்தி
காய்த்திர மாயிடும்போதில் கொண்டு வந்து
கடுகவே வயாகினித்து மருந்தை-யெல்லாஞ் செலுத்தி
சேத்தியே துவாரமெல்லாம் துண்ணி போட்டு
திறமான பாண்டத்தில் உப்பைக் கொட்டே

நீர்விட்டு, அந்த நீர் நாலிலொன்றாகச் சுருங்கும்படி காய்ச்சி கசாயம் இறக்கிக் கொள்ளவும். அக்கசாயத்தால் மருந்தை மீண்டும் ஆட்டி தேற்றான் கொட்டைஅளவு உருண்டை செய்து நிழலிலுலர்த்தி உடும்பை பிடித்து வந்து வயிற்றைக் கீரி மருந்தை உட்செலுத்திகிழித்த வயிற்றைத் தைத்துக் கொள்ளவும்.

6. உப்பென்ன நாலுபடி உள்ளே யிட்டு
உடும்பையதின் மேல்வைத்து அதின்மே லுப்பு
தப்பிறவில் லாமல் முன்போலக் கொட்டி
சரிவரவே மணலிட்டு சமமாய் மூடி
அப்பனே எழுசீலை மண்ணுஞ் செய்து
ஆனமுழங் காலளவு குழிதான் வெட்டி
ஒப்புரவாய் யிரண்டுசாண் எருவ டுக்கி
உகந்த-சட்டி தனைவைத்து எருவைக் கொட்டே

ஒரு பாண்டத்தில் 5.200 கிராம்உப்பைக் கொட்டை அதன்மேல் உடும்பை வைத்து மேலும் உப்பைக் கொட்டி மண்ணிட்டு சமமாக மூடி எழு சீலை மண் செய்து $1\frac{1}{2}$அடி ஆழமான குழிவெட்டி அதில் வரட்டியை அடுக்கி சட்டியை வைத்து மேலும் எருவடுக்கிக் கொள்ளவும்.

7. கொட்டியே மாலையிலே வன்னி மூட்டி
    கூசாம லெரியிடுவாய் னாலு சாமம்
தெட்டுவர்போல் திரியாதே மனதொன் றானால்
    தெய்வம்வஞ்சி தன்னுடைய பதத்தைப் போற்றி
திட்டமா யுதையாதி கடவுள் பூசை
    செய்துநீ செந்தூ ர மெடுத்துப் பார்த்தால்
அஷ்டட்ட மிரண்டான கலைசந்திரன் ஒவ்வாது
    அவன்கர்மி யானாக்கால் ஆகா தென்னே

வன்னி விறகால் 12மணிநேரம் மாலையில் எரித்துக்கொள்ளவும். இவ்வேளையில் தெய்வத்தைப் பணிந்துபோற்றி உதைய காலத்தில் கடவுளைப் பூஜை செய்து பிரித்துப் பார்த்தால் செந்தூ ரமாகியிருக்கும். எட்டிரெண்டாகும் (16) கலைச்சந்திரன் அளவு பெருகும்; அவன் கருமியாக இருந்தால் இது கைகூடாதென்பதாம்.

8. கர்மமென்ன மனம் வெளியில் போன தாலும்
    கண்டத்தின்மேல் மோகம்வைத்து கருத்தே சென்றால்
வர்மவமே அதுவெளியே கர்ம வந்த
    மார்க்கமிதை யறிந்து மனதை தேற்று
தர்மமதில் மனம்வே ணும் நோயா ளிக்கு
    சயரோகந் தனக்கு செந்தூ ரந் தேனில்
சும்மாநீ கொடுத்திடவே யிரண்டாஞ் சாமம்
    சுழன்றுவிழுங் கோழையெல்லாம் பின்னைக் கேளே

மனதை வெளியிலே பரவவிடாமல் கண்டத்தின்மேல் மனதைப் பரவவிட்டு வர்மவெளியில் பரவவிட்டு மார்க்கத்தை அறிந்து மனதை ஒன்றாக்கி தர்மத்திற் மனம் கொண்டு நோயாளிக்கு இந்தசெந்தூரத்தை வழங்கலாம். சயரோகத்திற்கு செந்தூ ரத்தைத் தேனில் கொடுக்க 6மணிநேரத்தில் கோழைகள் எல்லாம் வெளியேறும் என்பதாம்.

9. பின்னையுஞ் சத்துவமிருந்தால் யெருக்கம் பாலிற்

பேணியே நெல்லிடைதான் செந்தூ ரத்தை

கன்னமறக் கொடுத்துவிடு மஞ்சள் போலும்

கயற்போலும் யிளையிளையாய்க் கங்குங் கோழை

அன்னமது விரும்பாதே சிறுபயத்தின் கஞ்சி

அடுத்தனாள் பணவிடை யறாத தேனில்

உண்ணுவாய் பத்தியமாய் யிரண்டு பகல்

உலகிலுள்ளோர் காசவகை ஒளிந்து போச்சே

இனியும் சவரோகமிருந்தால் நெல்லளவு செந்தூரத்தை எருக்கம்பாலில் கொடுத்து வர மஞ்சள் நிறத்தில் கங்கு கோழைகள் வெளியேறும். அரிசிச் சோறுண்ணாமல் ஒருநாள் மட்டும் சிறுபயிற்றங் கஞ்சி சேர்க்கவும். இதனை 5கி அளவு தேனில் உட்கொண்டுவர காசநோய்கள் ஒழியும்.

10. போச்சப்பா குன்மமதுக் கனுப்பா னங்கேள்

புகளோமந் திரிகடுகு திரிப லாதி

வாச்சுதே யிளவறுப்பாய் சூர ணித்து

வாகான செந்தூ ரம் அரையுங் கூட்டி

பாச்சுநீ யுள்ளருந்த ஏழு நாளில்

பறக்குமே அஷ்டகுன்மம் பஞ்சு போல

காச்சுவாய் வாய்வுக்கு ஓமந் தன்னை

கருகாமற் சூரணித்துச் சர்க்கரையுங் கூட்டே

இந்தச் செந்தூரத்தை குன்மத்திற்கு வழங்கும்போது திரிகடுகு, திரிபலா இவற்றை இளவறுப்பாக வறுத்து சூரணித்து அதில் பாதியளவு செந்தூரம் சேர்த்து தொடர்ந்து ஏழு நாட்கள் சாப்பிட்டு வரவும். அவ்வாறு உண்டுவர எட்டுவகை குன்மநோய்களும் நீங்கும் என்பதாம். ஓமத்தை இருகாமல் வறுத்துச் சூரணித்துச் சர்க்கரை சேர்த்துச் சாப்பிட்டு வர வாயுக்கள் நீங்கும்.

11. சூரணத்தில் செந்தூரம் பணவிடைக் காலாக
தல்லகவே னியருந்து பதிமூன்றே னாளி
பாரிலுள்ள வாய்வு-யிருவத் தெட்டே யாகும்
பரத்தையால் வருஞ்சூலை பறங்கி பட்டை
பேர்பரப்பங் கிழங்கிரண்டும் உரப்பாஞ் செய்து
பேணியிடு பணவிடைகால் செந்தூ ரந்தான்
கூறாக ஒன்பதுனாள்க் கொண்டா யானால்
குணமாகும் பதினெட்டுச் சூலைக் கூறே

125மிலி அளவு செந்தூரத்தைத் தொடர்ந்து 13 நாட்கள் சாப்பிட்டு வர வாயுவகை 28ம் நீங்கும் என்பதாம். பரங்கிப்பட்டை, பிரப்பங்கிழங்கு இரண்டையும் இடித்துக் கலந்து 1கிராம் செந்தூரத்துடன் சேர்த்து ஒன்பது நாள் சாப்பிட்டு வந்தால் 18வகை சூலைநோய்களும் நீங்கும் என்பதாம்.

12. குணமாகுஞ் சுரத்தின்மேல் தோஷங் கண்டால்
கூட்டுன் சீரகமும் திரிகடுகுஞ் சீந்தி
சினஞ்சித்தர் முட்டியீன்டு கண்டங் கத்திரி
சேர்பற்படா கமிவை கஷாயந் தன்னில்
பணமாங்கால் பணவிடை செந்தூ ரந் தூவி
பத்தியமை தா....கொடுத்திடு திரிநேற்ந்தான்
னிமான உடலில்வந்த வாதமெல்லாம்
நீங்கிடவே திருகுகள்ளி நேர்ந்திடாயோ

சுரதோஷம் நீங்கு சீரகமும் திரிகடுகும் சேர்த்துப் பொடித்து செந்தூரம் சேர்த்துச் சாப்பிட குணமாகும். சித்தாமுட்டி, ஈஞ்டு, கண்டங்கத்திரி, பற்படாகம் இவற்றைக் கஷாயம் செய்து 4கி செந்தூரம் சேர்த்துக் கொடுத்திட 3 வேளையில் வாதமெல்லாம் நீங்கிப் போகும்.

13. நேர்ந்திட்ட கள்ளிதனை வரகம் பில்லால்
 னீவாடிச் சார்பிளிந்து செந்தூ ரத்தை
பரந்தமரைய் பணவிடையாய் பதிமூன் றேநாள்
 பத்தம்வைத்துக் கொண்டவர்க்கு வாதமெங்கே
சேர்ந்தபிற மேகமது தேங்காய்ப் பாலில்
 சேர்த்திடுவாய் ஆட்டுப்பால் செந்தூ ரங்கால்
சார்ந்தவிஷ பாகமது பாண்டு சோகை
 தவறிப்போ மிப்படியே தான்செய் வாயே

திருகு கள்ளியினை வாட்டிப்பிழிந்து சாறெடுத்து 4கி செந்தூரத்தை சேர்த்து வழங்கிட வாதத்தால் கோலூன்றி நடந்தவன்கூட தனியே நடப்பான். இவனுக்கு வாதத்தின் உபாதை நீங்கும் என்பதாம். மேகம் நீங்க ஆட்டுப்பாலும் தேங்காய்ப்பாலும் சேர்த்துப் பருக செந்தூரத்துடன் பருக விஷபாகம் பாண்டு, சோகை இவை நீங்கும்.

14. தான்செய்வாய் கிராணிவகை எல்லாந் தீர
 தனிமேதித் தயிர்தன்னில் செந்தூ ரத்தை
நாளென்று குன்றியிடை விதமாய் இட்டு
 நீய் ரஞ்சு நாளில்த் தீரும்
பூவென்று உடல்தனிலே உள்ள நோயை
 உடனாடி யறிந்து அனுபானத் தீய்ந்தால
மாநிலத்தில் நோவில்லை யிதொன்று போதும்
 வாச்சுதென்று காமாலை தனக்குக் கேளே

கலப்படமில்லாத தனி எருமைத் தயிரில் செந்தூரத்தைக் கலந்து 5 நாட்கள் 130மிக அளவு சாப்பிட்டு வந்தால் கிராணி நோய்கள் எல்லாம் தீரும். இநோயின் தன்மையை இன்னதென்று அறிந்து அதற்கு தக்க அனுபானத்தில் வழங்கிட பல நோய்களை நீக்கும்பண்பு செந்தூரத்திற்குண்டு.

15. கேளுநீ கையாந்தகரைச் சாறுதன்னில்

கெணிதமாங்-கால் பணவிடையே செந்தூ ரந்தான்

நாளுமே ஐந்துதினம் பத்து நேரம்

நாட்டிடுவே காமாலை சோகை நீங்கும்

தூளவே வேப்ப்மபட்டை கஷாயம் செய்து

செந்தூ ரமது கால்பணத்தின் தூக்கஞ் சேர்த்து

வீழுமே பெருங்கீரிப் புழுக்க எளல்லா

விளக்கெண்ணை வாழைப்பழம் விரைந்து சேர்த்தே

கையாந்தகரைச் சாற்றில் 125மிகி அளவு செந்தூரத்தை 5 நாட்கள் சாப்பிட்டு வர (5x2=10வேளை)காமாலை, சோகை இவை தீரும். வேப்பம்பட்டையைக் கஷாயம் செய்து அதில் 1கி செந்தூரத்தைக் கலந்து சாப்பிட்டு வர வயிற்றிலுள்ள பெருங்கீரிப் புழுக்கள் எல்லாம் தீரும். விளக்கெண்ணையும், வாழைப்பழமும் உணவில் சேர்த்துக் கொள்ளலாம்.

16. சேர்த்துரெண்டு மொன்றாகப் பிசைந்து கொண்டு

செந்தூ ரங் கால்பணத்தில் சிறுகீரி விழும்

யெடுத்துக் கோவைதனை அரைத்து நன்றாய்

யெருமை வெண்ணையில் குழைத்து செந்தூ ரங்கால்

பார்த்துநீ முன்னா ளருந்தும் போது

பறந்திடுமே கூடுவிற் புறிதி தானும்

சேர்த்தபெரும் பாட்டுக்கு பசுவின் மோரிற்

சீரகத்தை தான்பொரித்து பொடிசெய் திட்டே

வாழைப்பழத்தை விளக்கெண்ணெய் சேர்த்துப் பிசைந்து செந்தூரம் ஒரு கிராம் அளவு கூட்டிச் சாப்பிட்டு வர வயிற்றிலுள்ள சிறுகீரிப்பூச்சிகள் விழும். கோவை இலையை அரைத்து வெண்ணெயில் குழப்பி 125மிகி அளவு செந்தூரம் சேர்த்து 3 நாட்கள் உண்டுவர விப்புருதி நோய் நீங்கும். இதனைப் பெரும்பாட்டிற்கு பசுவின்மோரில் சீரகத்தைப் பொரித்து போட்டு சாப்பிடலாம்.

17. திட்டங்கால்ப் பணந்னு க்கஞ் செந்னு ரந்தாள்

தினம்மூன்று அருந்திடவே உதிர்தோ உஷம்

கெட்டசூதக வாய்வு பறந்து ஓடும்

குளருகின்ற வாய்நீர்க்கு யிஞ்சிச் சாற்றில்

யிட்டமலை தாங்கிவேர் கஷாயஞ் செய்து

யிதனிற் காற்பணவிடை செந்னு ரங் கூட்டி

யட்டியில்லை னாள்மூன்று கொள்ளும் போது

அகலுமே சன்னிபதி மூன்றுஞ் சுக்கே

125மி.கிராம் செந்னு ரத்தை 3 நாட்கள் சாப்பிட்டு வர வாயுக்கள் எல்லாம் பிரிந்தோடும். இதனை இஞ்சிச் சாற்றில் சாப்பிட்டால் மிகுதியாகச் சுரக்கும் உமிழ்நீரைக் கட்டுப்படுத்தும். மலை தாங்கி வேரைக்குடிநீர் செய்து அதில் 1கி அளவு செந்னு ரம் சேர்த்துச் சாப்பிட்டு வர 13வகை சன்னிநோய்களும் நீங்கும்.

18. அஞ்சுமே யித்தாரணி தயிலத் திலிட

செந்னு ரமிட அப்பா லோடும்

மிஞ்சுசலக் கழிச்சலுக்கு சொல்லக் கேளு

மிகுந்தகுறு விஞ்சிலையும் எள்ளி யெண்ணை

கொஞ்சமாய்க் கலந்திடகாற் பணவிடை செந்னு ரங்

கூட்டியஞ்சு நேரங்கொள குடிலந் தீரும்

நெஞ்சினிலே களங்கமில்லா னிஷ்டை யோர்கு

நிமிஉஷத்திலப் பிணிகளெல்லாம் நீந்னு ளாமே

நீர்ப்பேதி கட்டுப்பட இத்திராணி தைலத்தில் 125மி கிராம் அளவு செந்னு ரம் சேர்த்துப் பாய்பிட்டு வரலாம். குறுவிஞ்சியையும், நல்லெண்ணையும் கலந்து 125மிகி செந்னு ரமும் சேர்த்து 5 வேளைகள் சாப்பிட்டு வர குடில நோய் தீரும். நெஞ்சில் கலங்கமில்லாமல் உறக்கங் கொள்ள பிணிகள் எல்லாம் நீங்கிப் போகும்.

19. ஆகுமோ நீர்கட்டதற்கு வயனங் கேளு

அகத்தியிலை தனிப்பறித்து உப்பில்லாமல் தாமேதரீனி

வேகவை நீர்பிழிந்து தவளம் பறிநம்

வெங்காரம் பொரித்துப் போட்டுத் தாமே

காலிண விடை செந்தூ ரத்தில்

நீர்க்க டங்கே கெட்டுவிடும் காலாக்குனி

வேகமாமே பூங்குழ லாளு மைக்கு

யீசனீவகுத்து வைத்த விதிப்ப டியே

வைத்தியஞ்செய் செய்தார்பூ மீதில்

கும்பமுனி யருளும் பெற்ற புகழ

பிரமன்பேர் பொருந்தி மகிழ்வ தாமே

கேத்தியிலையைப் பினி பறித்து உப்பு சேர்க்காமல் வேக வைத்து நீரை வடித்துக் கொண்டு வெங்காரத்தைப் பொரித்துப் போட்டு 2கி செந்தூரத்துடன் சேர்த்துச் சாப்பிட்டு வர நீர்க்கட்டு நீங்கும். பூங்குழலாளாம் உமையாளுக்கு ஈசன்-சிவன் வகுத்து வைத்த விதிப்படி மருத்துவம் செய்வதற்குக் கும்பமுனியாம் அகத்தியர் அறிந்த பிரம்மம் போன்றோர் அருளுடன் செய்த நோய் குணமாகி மகிழ்வதாம்.

இனி
19எ) மகிழ்ந்திடவே காரீய செந்தூ ரங் கேளு

மக்களே காரீயம் பலமும் ரெண்டு

சுகமுடனே சட்டியிட்டுப் பச்சை மஞ்சள்

சூரணிப்பாம் மூவஞ்சு பலமும் நன்றாய்

வகையுடனே நாயுருவி சமூலங் கொண்டு

மஞ்சள்தனைத் தூவியே கிண்டிக் கிண்டி

தகையில்லா திருசாமங் கிண்டி யப்பா

சவுக்காரப் பொடியுமரைப் பலமுங் கிண்டே

காரீய செந்தூரம் செய்யும்முறை சொல்வேன். காரீயம் 70கி, எடுத்துச் சட்டியில் போட்டு பச்சை மஞ்சள் 525கி பொடித்து நாயுருவி சமூலம் சேர்த்து மஞ்சள் பொடி தூவி கிண்டி சவுக்கார பொடி 18கி இதனுடன் சேர்த்துக் கொள்ளவும்.

..11

19பி) கிண்டவே யிருகளஞ்சி யித்துங் கூட்டிக்
கடிதான அரிதாரங் களஞ்சி ரெண்டு
மண்டலத்தோர் கொண்டாட வகைக்கிச் சாமம்
வகையுடனே நாயுருவிக் கம்பால் கிண்டி
கண்டீரோ செந்தூரங் கண்கொள்ளாது
கருகாமல் வறுத்திடுவாய் நாலு சாமம்
பண்டிதரே யெடுத்துநீ பதனம் பண்ணு
பாங்கான செந்தூர மின்னங் கேளே

சவுக்காரப் பொடி சேர்த்தபின் 10கிராம் அளவு இந்துப்பூக் கூட்டி, அரிதாரம் 10கி நாயுருவி குச்சியால் கிண்டிவர செந்தூரம் கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். செந்தூரம் கருகிவிடாமல் வறுத்தெடுக்கவும். இவ்வாறு நான்கு சாமம் வறுத்தெடுத்துக் கொள்ளவும். இந்தச் செந்தூரத்தைப் பக்குவப்படுத்திக் கொள்ளவும்.

19சி) இன்னந்தான் ரெண்டுபலங் காரீயத்தை
யிதமாகச் சுத்திபண்ணி சட்டி யிட்டு
சொன்னதொரு மாதளங்காயித் தோலுந் தோடுஞ்
சுகமாக மஞ்சளந்த வீதங் கூட்டி
சன்னதமாய் ரெண்டுமொன்றாய்த் தூளே கூட்டி
தருகாமல் வெருகடிதா னெடுத்துத் தூவி
அன்னமே யிருசாமம் வறுத்து நன்றாய்
அப்பனே வெடியுப்புப் பலந்தா னாலே

இவற்றுடன் சுத்தி செய்த காரீயம் 70கிராம் எடுத்துச் சட்டியிலிட்டு மாதுளம்பழத் தோலும், மாதுளம் ஓடும் அதே அளவு மஞ்சளும் சேர்த்து எல்லாவற்றையும் ஒன்றாகக் கூட்டி வறுத்தெடுத்து (6 மணி நேரம் தொடர்ந்து வறுத்து) அதனுடன் பொடித்த வெடியுப்பு 70கிராம் சேர்த்துக் கொள்ளவும்.

19டி) நாவுடனே காரமுடன் சீனம் கூட்டி
நலமாக வகையொன்று பலமுஞ் சேர்த்து
பாலகனே மூன்றமொன்றாய்த் தூளே செய்து
பண்புடனே வறுத்திடுவாய் தூவித் தூவி
கேலமுள்ள செந்நாயி னுருவி தன்னால்
குருகவே வறுத்திடுவாய் ரண்டு சாமம்
சீலமுள்ள முப்பது நாழிகைக்குள்ளாய்
செந்தூர மாகுமடா தெளிந்து செய்யே

16 மேற்சொன்ன காரத்துடன் சீனக்காரம் கூட்டி வகைக்கு 35கி சேர்த்து மூன்றையும் ஒன்றாகக் கூட்டி இடித்துத் தூள் செய்து வறுத்தெடுத்துத் தூவி தூவி செந்நாயுருவி குச்சியால் கிண்டி வறுக்க வேண்டும். தொடர்ந்து 6 மணி நேரம் வறுத்தெடுக்கவும். ஏறத்தாழ 600 நிமிடங்களில் இது செந்தூரமாகும்.

19இ) செய்யவே சக்கரையில் பணவிடைதான் கொண்டால்த்
திரேகத்திலே குட்டமெல்லாந் தீர்ந்து போகும்
தொய்யுமடா பதினெட்டு நாளைக்குள்ளே
தூரேடே போகுமடா குட்ட மெல்லாம்
நய்யவே வலிக்கின்ற குன்மம் மெல்லாம்
நாலுநாளித் தேனில்க்கொள் நன்றாய்த் தீரும்
உய்யவே சக்கரை சீரகமும் வெண்ணை
உருட்டியே பணவிடை செந்தூரங் கூட்டே

இச்சூரணத்துடன் சமஅளவு சர்க்கரை சேர்த்துதினமும் 5கி அளவு 18 நாட்கள் உட்கொண்டு வந்தால் குட்டநோய்கள் அனைத்தும் நீங்கும். இச்சூரணத்தை தேனில் உட்கொண்டு வந்தால் விரைவில் குட்டங்-களெல்லாம் தீரும். சர்க்கரை, சீரகப்பொடி வெண்ணையுடன் உருட்டி செந்தூரத்துடன் சேர்த்துச் சாப்பிடவும்.

19எ) கூட்டியே திண்றுவிடு யிருபது நாள் மட்டும்

கூசாமல்ப் பத்தியமாய்த் தார்மங்கிடஉம் போகும்

வாட்டியதோ ரெலும்புருக்கி நீர டைப்பு

மாறிபடுமே திரேகத்தில் மயக்க மில்லை

தாட்டிகமாகச் செந்தூ ரம் வைத்துக் கொண்டு

தருகாம விதிமுறையைச் சார்ந்து பாரு

மூட்டுவாய் செந்தூ ரம் பணவிடையே யப்பா

முனிவேர்கள் சொன்னபடி மொழிந்திட் டேனே

இந்தச் செந்தூ ரத்தைத் தொடர்ந்து 20 நாட்கள் வேளைக்கு 5கி வீதம் உண்டு வர பின்வரும் நோய்கள் நீங்கும்.முறைப்படி பத்தியம் காத்துக் கொள்ளவும். உடம்பில் வீசும் கெட்ட வாடை மாறும். எலும்புருக்கி நீங்கும். நீரடைப்பு நீங்கும். உடல் மயங்குதல் இல்லை. இம்மருந்தை வேளைக்கு 5கி வீதம் உண்ண வேண்டும்.

19ஜி) மொழிந்திட்டே னின்னமொரு செந்தூ ரங் கேளு

முக்கியமாய்ச் செம்புமொரு பலமே வாங்கி

அசரவே யீசலிற காகத் தட்டி

அப்பனே சுத்திபண்ணி நறுக்கிக் கொண்டு

தளம்பாமல்ப் புளியிலைபோல்த் தகடுதன்னில்

சாத்துகிறேன் கெந்தகமுங் கழஞ்சி கூட்டி

வளம்பிறவே நொச்சியிலைச் சாறுவிட்டு

மாண்டிடவே அரைத்த அந்தத் தகட்டில்ப் பூசையே

இன்னமொரு செந்தூ ரம் சொல்வேன். செம்பு 35கிராம் எடுத்து ஈசலிறகுபோல் மெல்லிதாகத் தட்டி சுத்தி பண்ணி சிறுசிறு துண்டுகளாக நறுக்கி புளியிலை போல் துண்டுகளாக நறுக்கிய செம்புடன் கெந்தகம் 5கி கூட்டி நொச்சியிலைச் சாறுவிட்டு அரைத்து தகட்டில் பூட்டி வைத்துக் கொள்ளவும்.

20.பூசிடுவாய்த் தகடெல்லாம் புனித மாக

புதச்சட்டி தனிலப்பரப்பி அடுப்பி லேத்திப்

பேசாமல் மேல்மூடி சஷ்டி கொண்டு

பிலமாக யேழுமண்ணுஞ் சீலை செய்து

கூசாம லஞ்பது நாழிகை மட்டுந்தான்

குணங்காமலத் தீயெரித்து அப்பா லாத்தி

நேசமுடன் நொச்சிசார் விட்ட ரைச்சு

லேசாக அடைபோலே ரவியில் வையே

தகடு முழுமையும் பூசி புதச்சட்டியில் பரப்பி அடுப்பேற்றி மேல் சட்டிமூடி ஏழுசீலை மண் செய்து தொடர்ந்து 25மணி நேரம் எரித்து ஆறியபின் எடுத்து நொச்சிச்சாறு விட்டரைத்து அடைபோல் தட்டி சூரிய வெளிச்சத்தில் காயவைக்கவும்.

21.ரவியிலே வைத்தெடுத்த மருந்தை யப்பால்

நன்றாக ஓட்டில் வைத்து ஓடு மூடி

கவியவே மண்சீலை செய்து நன்றாய்க்

கள்ங்கமறக் குக்கிடத்திலக் கனலை மூட்டி

தவியாம லிந்தமுறை நொச்சிச் சாற்றில்

தளம்பெறவே அரைத்தரைத்து குக்கிடத்திலப் போட்டு

அவியவே குக்கிடந்தான் யிருப தக்குள்

அப்பனே செந்தூர முருக்கம் பூவே

காந்தபின் எடுத்து ஓட்டில் வைத்து ஓடுமூடி சீலைமண் செய்து குக்கிடப்புடத்தில் (10 வரட்டி) புடமிட்டெடுக்கவும்.பின்னர் நொச்சிச் சாற்றில் நேக இரைத்து பின் 10 வரட்டியில் புடம் போடவும்.இவ்வாறு அரைத்து-புடம்போட்டு 20முறை செய்தெடுக்க செம்பு செந்தூரம் முருக்கம்பூப்போல் மலர்ந்திருக்கும்.

22. பூவான செந்தூரம் பணவிடையே கூட்டி
புகழான கருப்பட்டி தன்னில்க் கொள்ள
தாவியதோர் குன்மம் பதினெட்டும் போகும்
தருகாம விருபதநாள் சாரக் கொள்ளு
ஆவலுடன் திரிகடுகு சித்திர மூலம்
அப்பதினைசூரணித்துப் பூரஞ் சூதம்
கூசாமல்ப் பணவிடைதா னரையுங் கூட்டி
கொள்ளுவாய் சூரண செந்தூரங் கொள்ளே

இந்த செந்தூரத்தை (488) 500மிகி. கூட்டி கருப்பட்டி சேர்த்து உட்கொள்ள குன்மம் பதினெட்டும் நீங்கும். இதைத் தொடர்ந்து 20 நாட்கள் உட்கொள்ள வேண்டும். திரிகடுகு சத்திரமூலம் இரண்டையும் சூரணித்து பூரம், சூதம் இவை வகைக்கு 250மிகி சேர்த்து சூரண செந்தூரம் உட்கொள்ளவும்.

23. செந்தூரம் பணவிடைதா னரையுங் கூட்டி
சேர்த்திலன்றாய் மண்டலந்தான் தின்றா யாகில்
வந்திட்ட கவிசை பீலிசையுங் குன்மம்
வாடாத பெருவயிறு பக்க சூலை
முந்தியதோர் நீராமை யோனிச் சூலை
மூட்டோடே பெறாமை மூலம் போகும்
யிந்தமுறை செய்தாக்கால் யெல்லாம் போகும்
யிப்படியே செந்தூரம்நீ கண்டு கொள்ளே

செந்தூரம் 250மிகி மேற்சொன்னவற்றுடன் சேர்த்து 40 நாட்கள் உட்கொண்டுவந்தால் கவிச்சை, பீலிகை, குன்மம், பெருவயிறு, பக்கசூலை, மூலம் ஆகிய நோய்கள் நீங்கும். இந்தமுறையில் செய்து செந்தூரம் கண்டுகொள்ளலாம்.

24. கண்டுந் கொள்வதா யின்னங் கேளு
காரீயம் பலமெட்டுக் காந்த மெட்டு
கண்டுள்ள கெந்தகந்தான் பலமும் நாலு
பாரினில யிரதமுமோர்பலமுங் கூட்டி
தண்டாமல்க் குகைக்குள்ளே பொடித்து வைத்துத்
தருகாமல் செம்பருத்தஞ் சார ளாக்கு
சுண்டாமல் வெத்திலைச்சா ராளாக்குத் தானுஞ்
சுகமாக விட்டேழு சீலை செய்யே

280கி காரீயம், காந்தம் 280கி, கெந்தகம், 140கி, இரசம் 35கி இவற்றைக் குகைக்குள் வைத்து செம்பருத்தம்சாறு 325மிகி. சேர்த்து வெற்றிலைச்சாறு 163மிகி உள்ளேவிட்டு ஏழுசீலை மண் செய்துகொள்ளவும்.

25. சீலையாம் மண்சீலை செய்து நன்றாய்
திகைக்கவே யெருமுழங்கால் மட்டுங்கொட்டி
காலமே முதலாக மூன்று சாமம்
கனலாகப் பொடம்போடு அப்பா லாற்றி
சாலவே மருதம்பட்டைச் சாத்தா லாட்டிச்
சாந்துபோ லாட்டிநீ வழித்துக் கொண்டு
பாலகனே ஆவிரை-யின் வல்லி தன்னில்
பதராமல்ப் பரித்துவந்து வழுத்தி டாயே

சீலை மண் செய்து முழங்கால் அளவு வரட்டிகளைப் பரப்பி 12மணி நேரம் எரித்து புடம்போடவும். ஆறியபின் எடுத்து மருத்ம்பட்டைச் சாற்றால் ஆட்டி சாந்துபோலாகும்போது வழித்து ,தனியே ஆவாரம்பூவை தனியே வழுத்தெடுத்துக் கொள்ளவும்.

26. வறுத்திட்ட அவ்விதன்னைச் சூர ணித்து
மக்களே மருந்தையெல்லாம் ஒன்றாய்ச் சேர்த்து
ஒருத்திட்டுப் போகாமல்ச் சட்டி யிட்டு
ஒருகம்பு ஆவரையால்க் கிண்டிக் கிண்டி
கருத்திட்டுப் போகாமல் நாலு சாமங்
கனல்மூட்டி யெரித்திடுவாய் செந்தூ ர மாகும்
யெரித்திட்ட நீரிழிவு யெல்லாந் தீரும்
பேசாதே பணவிடைதான் தேனி லுண்ணே

வறுத்த பூக்களை இடித்துச் சூரணமாக்கி மருந்துகளை எல்லாம் ஒன்றாய்ச் சேர்த்து சட்டியிலிட்டு ஆவாரைக் கொம்பால் கிண்டி கிண்டி கருக்கவிடாமல் 12மணிநேரம் கிண்டி வரவும். தொடர்ந்து எரித்துவந்தால் செந்தூரமாகும். 500மி அளவு தேனில் உண்டுவர நீரிழிவு நோய்கள் எல்லாம் நீங்கும்.

27. உன்னவே ரசபற்பஞ் சொல்லக் கேளு
உப்புடனே செங்கல்த்தூ ள் தானுங் கூட்டி
கன்னவே சட்டியிட்டு அமுக்கி நன்றாய்
கல்க்குளிபோல் மத்தியிலே குளிச்சுக் கொண்டு
பண்ணுவாய் கண்டங்கத்திரி தன்னைத் தானு
படுக்கவே குளைபிடித்து அதன்மேல் வைத்து
யெண்ணாமல் சுத்திசெய்த யிரதமிட்டு
யிடைவெளி யில்லாம லொருசட்டி மூடே

உப்புடன் செங்கல்தூளும் சேர்த்து சட்டியிலிட்டு கல்குழிபோல் மத்தியில் குழித்துக் கொண்டு கண்டங்கத்திரியைக் குகைபிடித்து அதன்மேல் வைத்து சுத்திசெய்த இரசத்தை அதன்மேல்விட்டு இடைவெளி விடாமல் ஒரு சட்டிகொண்டுமூடிடவும்.

28. சூலை வெடிசூலைக்குப் பற்பம்:-

முடுவாய் சீலைமண் ஏழு செய்து
முக்கியமாய் அடுப்பேத்தி நாலு சாமம்
போடுவாய் அனலெரிக்க பற்ப மாகும்
பூத்திருக்கும் மேல்சட்டி தன்னி லுள்ளே
தேடுநீ பற்பத்தை யெடுத்து அப்பால்ச்
சிமிளிதனிலே அடைத்துநீ வைத்துக் கொண்டு
வாடுகின்ற வெடிசூலை புடைக்க ரப்பான்
மகத்தான பரங்கிகுட்ட மாண்டு போமே

நன்றாக மூடி ஏழுசீலைமண் செய்து அடுப்பேற்றி 12மணிநேரம் எரிக்கவும். அவ்வாறு எரித்தெடுக்க பற்பமாகும். சட்டியினுள் பூத்திருக்கும் பற்பத்தை எடுத்துச் சிமிளில் அடைத்துக் கொள்ளவும். இதனை அனுபானத்துடன் உட்கொள்ள வெடிசூலை, புடைகரப்பான், பரங்கி, குட்டம் இவை நீங்கும்.

29. மாண்டுபோம் பணவிடைதான் வெல்லத்திற் கொள்ள
மக்களே மேகமென்ற தெல்லாம் போகும்
ஆண்டுநீ பற்பத்தைக் கொண்ட போது
அலகுகட்டுங் கருவேலஞ் சாற்றில் மாற்று
வேண்டும்போ தனக்குவந்து கிட்டா தப்பா
மெய்மையுள்ள பற்பத்தை வேண்டிச் சொன்னேன்
தாண்டிடுமே நோயெல்லா மஞ்சு நாளில்
தமுகாமல்ப் பத்தியந்தான் வைத்துக் கொள்ளே

500மிகி பற்பத்தை வெல்லத்தில் உட்கொள்ள மேகவகை நோய்கள் எல்லாம் தீரும். மாற்றிற்கு அனுபானமாக கருவேலம் சாற்றில் உட்கொள்ளலாம். தொடர்ந்து 5 நாட்கள் உட்கொள்ள பல நோய்கள் தீரும் என்பதாம். இதற்கு பத்தியம் இருந்து மருந்தைச் சாப்பிட்டு வர வேண்டும்.

30. காந்த செந்தூரம்:

கையடா காந்தமொரு முறைதா னப்பா
பரிவான கத்தாளஞ் சாறு தன்னில்
பய்யவே காந்தமொரு பலமே வைத்து
பதறாமல் வேகவைத்துக் கழுவிப் போட்டு
நய்யவே பொடியாக்கி கையான் சாற்றில்
நாளொன்று தானரைத்து சட்டி யிலிட்டு
உள்ளவே குக்கிடத்தில் சீலை மண்தான்
உத்தமனே அரைத்தரைத்துப் புடந்தா னேழே

35கிராம் காந்தத்தை கற்றாழைச் சாற்றில் வேகவைத்து கழுவி பொடியாக்கி கையாந்தகரைச் சாறில் 24மணிநேரமும் அரைத்து சட்டி-யிலிட்டு சீலைமன் செய்து 10வரட்டியில் புடம் போட்டெடுக்கவும். இவ்வாறு ஏழுமுறை புடம்போடவும்.

31, புடமான குக்கிடத்தில் போட்டை தந்து
பொல்லாத வீக்கமொடு பாண்டு சோகை
அடர்ந்திட்ட நீரழிவு நீரா மைக்கும்
அப்பனே பணவிடைதான் தேனில் கொள்ள
தொடர்ந்திட்ட நோயெல்லா மோடிப் போகும்
சோலியில்லை யிருபதுனாள் சுருக்கைப் பாரு
மடங் குமடா செந்தூ ரங் கண்ட போது
வயித்தியரே வாலைதன்னை வணங்கிக் காரே

ஆறியபின் எடுத்துப் பதப்படுத்திக் கொண்டு வழங்க பாண்டு, சோகை, நீரிழிவு, நீராமை இவை நீங்கும். வேளைக்கு 500மிகி. வீதம் தேனில் உட்கொள்ள மேற்சொன்ன நோய்கள் நீங்கும். வைத்தியத்தையும், வாலையையும் வணங்கி 20 நாட்கள் இம்மருந்துண்டு வரலாம்.

32. சிந்தாமணி:

காருநீ மேனி கொண்ட
கண்ணன்மால் மருகன் தம்பி
சீர்பெரும் பாதம் போற்றி
தீர்ந்திடும் வியாதி கேளு
கூறுடனே யிருநூ த்தன் பால
வியாதிகள் குடிபோ மெள்ளு
பாரினில் சனகளஞ் சிந்தா
மணியெனும் பகரு வோமே

கருநீல மேனி கொண்ட மால்மருகன் தம்பியின் பாதம்போற்றி இருநூற்றுக்கும் மேற்பட்ட வியாதிகள் நீங்குகின்ற விவரம் சொல்லும் இனை சிந்தாமணி எனும் நூலை யாம் இங்குச் சொல்வோம்.

33. பகருவோம் பச்சை நாவி
பாஷாணங் காந்தந் தாரம்
நிகரிரு விஷமும் வெண்காரம்
நெறிவிஷங் கடுங்காரந் தானும்
புகருவேன் குங்கிலியந் தான்டி
போற்ற திரிகடுகு நெல்லி
தகரில்லா மருந்தைச் சுத்தி
தனித்தனி பலமும் வாங்கே

பச்சைநாபி, இ பாஷாணம், காந்தம், அரிதாரம், இருவிஷங்கள், வெங்காரம், நெறிவிஷம், கடுங்காரம், குங்கிலியம், தான்றி, திரிகடுகு நெல்லி இவற்றை தனித்தனியே முறைப்படி சுத்தி செய்து வகைக்கு 35கி வீதம் எடுத்துக் கொள்ளவும்.

..உ௧

34.வாங்கியே மருந்துக் கெல்லாம்

வாளமுஞ் சமனாய்ச் சேர்த்து

பாங்குடன் சுத்தி செய்து

பருப்பினில் நஞ்சு போக்கி

தீங்கில்லா மருந்தை யெல்லாஞ்

சேரவே யொன்றாய்க் கூட்டி

ஆங்குள்ள கையான் சாறு

அரைத்திடு பத்து நாளே

மேலும் முன்சொன்ன மருந்துகளுடன் சுத்திசெய்த நேர்வாளம் 35கி எடுத்து நஞ்சுபோக்கி எல்லா சரக்குகளையும் ஒன்றாய்க் கூட்டி கையான்சாறு சேர்த்து பத்துநாட்கள் தொடர்ந்து அரைத்துக்கொள்ளவும்.

35.பத்துநாளரைக்குஞ் சாறு

படியொன்று நாளொன் றாக

சித்தமு மரைத்து நன்றாய்

நீசிறு பயறு போல

சுத்தமாய் நிழலு லத்தி

துலங்குநெல்ப் பானை வைத்து

கர்த்தனை நினைந்து நீயும்

கிராணிக்கு மோரில் செய்யே

நாளொன்றுக்கு 1.300மிலி கையான்சாறு வீதம் 10நாட்கள் 1300மிலி சாறு சேர்த்து ஒன்றாகப் பத்துநாள் அரைத்து சிறுபயிறளவு உருண்டை செய்து நிழலில் உலர்த்தி எடுக்கவும்.நெல்பானையின் உள்ளே வைத்து பின் எடுக்கவும். கர்த்தரை நினைத்து கிராணி நோய்களுக்கு மோரில் வழங்கவும்.

36.செய்யவே யிருநே ரந்தான்

செலுத்தொரு உண்டை நீயும்

தையலாள் கிராணிக் கெல்லாந்

தயிருடன் செய்ய முன்போல்

உய்யவே வயறு விட்டால்

ஓமமும் பழச்சாற் றிய்ய

நய்யவே வாயு குன்மம்

நாட்டிடு மாதிவென் ன்றே

நாளொன்றுக்கு இரண்டுவேளை, வேளைக்கு ஒரு உருண்டைவீதம் கிராணிக்குத் தயிரில் வழங்கலாம்.வயிறு கழிச்சலுக்கு ஓமத்தீநீரிலும், பழச்சாற்றிலும் வழங்கலாம்.வாயு குன்மத்திற்கு சென்னீரிலும் இந்த உருண்டைகளைக் கொடுக்கலாம்.

37.ஆவலா முப்பி சங்க

ளறிந்திடும் மேனிச் சாறு

போவது பழங்கா மாலை

புளியிலை யீர்க்கிச் சாறு

மேவிய அண்ட வாதம்

விட்டிடும் ஆவின் பாலில்

பாவது பலவி யாதி

பகருமே தேனில் கொள்ளே

வயிற்றுப்பிசங்களுக்குக் குப்பைமேனிச் சாற்றிலும் தீராத பழைய காமாலைக்கு புளியிலை ஈர்க்குச் சாற்றிலும் அண்டவாதத்திற்கு பசும்பாலிலும்,பல வியாதிகளுக்குத் தேனிலும் இம்மருந்தைக் கொடுக்கவேண்டும்.

38.கொள்ளிவே வாத மெல்லாங்

குங்குமச் சாற்றில்த் தீரும்

மெள்ளவே ஆம மெல்லா

விளங்கு சீரகத்தில் போகும்

உள்ள நெஞ்செரிவு கண்டால்

உகந்த சக்கரையில் கொள்ளு

தள்ளிய வியாதிக் கெல்லாந்

தாக்கிடய் பழத்தி லீயே

குங்குமச் சாற்றில் உட்கொள்ள வாதமெல்லாம் தீரும்.ஆமநோய்கள் எல்லாம் சீரகத்தில் உட்கொள்ள நீங்கும்.நெஞ்செரிச்சலுக்கு சர்க்கரையின் சாப்பிடலாம்.வேறு பல நோய்களுக்கு எலுமிச்சம்பழச்சாற்றில் உட்கொள்ள நோய்கள் தீரும் என்பதாம்.

39. சாறுகா விளைப்புக் கெல்லாந்

தான்டுசெந் தொட்டிச் சாறு

ஆத்திடும் அம்மான் பச்சை

அரிசிச்சார் நரையை மாற்றும்

மேத்திடுங் குன்றி முத்து

யிலைச்சாறு சயித்திகெல்லாம்

மாற்று ச்க்கரையு மாகும்

வந்திடுந் திணைச்சோ றுண்ணே

குங்குமச் சாற்றில் உட்கொள்ள வாதமெல்லாம் தீரும். ஆமநோய்கள் எல்லாம் சீரகத்தில் உட்கொள்ள நீங்கும்.நெஞ்சரிக்கலுக்கு சர்க்கரையில் சாப்பிடலாம். வேறுபல நோய்களுக்கு எலுமிச்சம்பழச் சாற்றில் உட்கொள்ள நோய்கள் தீரும் என்பதாம்.

40.உண்டிடும் பிரமி யந்தானீ

உகந்த செம்பருத்திச் சாறு

பண்டுள்ள துளசி யாகும்

பழமுடன் சாறு மாகும்

நன்று தக்காளிச் சாறு

நல்லெண்ணை தலைக்குத் தேய்த்து

கண்டுநீ முழுகும் போது

களன்றிடும் ரோகந் தானே

பிரமி நோய்களுக்கு செம்பருத்திச் சாற்றிலும்,பிற நோய்களுக்கு துளசிச் சாற்றிலும், எலுமிச்சம்பழச்சாற்றிலும்,வேறு சில நோய்களுக்குத் தக்காளிச் சாற்றிலும் உட்கொண்டு தலைக்கு நல்லெண்ணெய் தேய்த்து மூழ்கிவர பலநோய்கள் நீங்கிடும் என்பதாம்.

41.களன்றுபோம் வாத மப்பா

தனித்தூ து ஆவின் நெய்யில்

வளம்பெறப் பாலுஞ் சோறும்

வைத்திடும் பத்திய த்தில்

உழன்றிடும் வாத மெல்லாம்

ஓடிடும் நோக்குக் கய்யான்

தளன்றிடும் ஆவின் நீரில்

தள்ளுப்புப் புளியந் தள்ளே

பசுநெய்யில் தொடர்ந்து உண்டுவர வாதம் நீங்கும். இம் மருந்துண்ணும் காலத்தில் பாலும் சோரும் சாப்பிடவும்.கையான்தகரைச் சாற்றில் உட்கொண்டாலும், ஆவின் கோமியத்தில் உட்கொண்டாலும்,வாதம் நீங்கும்.உப்பு,புளி தள்ளவும்.

42. தள்ளிவிடு கிராந்தி வாதம்

இளநீர் வாத டக்கி

உள்ளமும் உடம்பும் நொந்தால்

பருத்திலை மிளகு பூரம்

வள்ளலே வெதுப்ப மாமும்

மருந்தொடை துளசி கையான்

நள்ளயிடித்து புட்ட வித்து

அதின்சா ரருந்தநோய் போமே

கிராந்தி நோய்களுக்கும், வாதத்திற்கும் இளநீரும், வாதமடக்குச் சாற்றும் உட்கொள்ளலாம். உடம்பு நோதலுக்கு பஞ்சில் இலை, மிளகு, பூரம் இவற்றை வெதுப்பிச் சாப்பிடலாம். துளசி, கையான்தகரை இவற்றை இடித்துப்பிட்டவித்து அதன் சாற்றைப் பருகிவர பல நோய்கள் நீங்கும்.

43. நோயா மனைத்துந் துளிச்சார்

நொழக்குச் சக்கரை நெய்கூட்டி

தோயாந் துதன் வாய்வுக்குச்

சுக்குக் கஉஷாயம் பாலஞ்சோறு

ஏயா முசலின் கண்டன்வலி

பிசகா தோடும் நிலவேம்பின்

பாயும் பன்னிலந்தி தன்னை

பறியின் நீறில் நசியமவிடே

இம்மருந்தை துளசிச்சாறு, நெய், சர்க்கரை சேர்த்துச் சாப்பிட்டால் பலவகை நோய்களை நீக்கலாம். வாய்விற்கு சுக்குக் கஉஷாயம் கொடுத்து பாற்சோறு சாப்பிடலாம். முமற்கண்டவலிக்கு நிலவேம்பின் சாற்றும் வழங்கலாம். குதிரைநீரில்நசியம் விட பன்னிலந்தி நீங்கும் என்பதாம்.

44. இடுமே மூல வியாதிகள்க்குக்

கொடுமே சாதிக்காய்ப் பொடியில்

கொடுநீ மூல மாசனத்தில்

கொள்ள வெள்ளாட்டு எருப்புகையில்

விடுநீ ஆவின்நெய் தூவி

வேதும் புகையை அதில்க் காட்டப்

படுமே மூல வியாதியெல்லாம்

பாக்கும்புகையைப் பரிந்துசெய்யே

மூலநோய்களுக்குச் சாதிக்காய் சூரணத்தில் சாப்பிடவும். வெள்ளாட்டு எருப்புகையில் இதனை கலந்து ஆசனவாயில் பிடிக்கலாம். மேலும் இது பசுநெய் விட்டு புகையை ஆசனவாயில் பிடித்து வந்தால் மூல வியாதிகள் எல்லாம் நீங்கி சுகம்பெறலாம்.

45. செய்யும் நோவு தானறிந்து

செலுத்த நாள்தான் மூவேழில்

உய்யும் மாத்திரை ஒரொன்று

உசித மாக யிருநேரம்

நய்யும் வியாதி வோவதற்கு

நன்றாய் வைப்பாய் பத்தியந்தான்

தய்ய லிதுவே மருந்தொன்று

சாந்தமாகப் பரிந்து செய்யே

நோயின் தன்மைகளை முழுமையும் அறிந்து தொடர்ந்து 21நாட்கள் வேளைக்கு ஒரு மாத்திரை வீதம் நாறொன்றிற்கு இரண்டுவேளை சாப்பிட்டு வரவும். இதற்குப் பத்தியம் காக்கவும். இதுபலவகை நோய்களுக்கு மருந்தாகும் என்பதை உணர்ந்து பயன்படுத்தவேண்டும்.

46. **நெய்:**

பரிந்துநீ செய்வதற்கு யின்னங் கேளு
பண்பாகப் பன்னுமொரு கிருதஞ் சொல்வேன்
வருந்தியே அரைத்துலாம் நவ்வல்ப் பட்டை
நலமாக உலத்தியிடி தூள தாக்கி
சொரிந்திடுவாய் தண்ணீர் மிடவுக் குள்ளே
தூள்போட்டுக் காச்சியிடு யெட்டொன் றாக
மருந்துதான் புளியாரைச் சாறு நாளி
வடிகொண்ட தயிர்த்தண்ணீர் நாளி கூட்டே

இனியொர கிருதம் (நெய்) சொல்லப்படுகிறது. நாவல்பட்டையை எடுத்து உலர்த்தி இடித்துத் தூளாக்கி ஒரு பாத்திரத்தில் போட்டு 5.200மிலி தண்ணீர்விட்டு அடுப்பேற்றி எரிர்ம எட்டில் ஒன்றாகக் குறுக்கிக் காய்ச்சி இறக்கி அதனுடன் புளியாரைச்சாறு 1.3லிட்டர், தயிர்த்தண்ணீர் 1.3லிட்டர் சேர்த்துக் கொள்ளவும்.

47. கூட்டுவாய் ஆவின்நெய் படிதான் நாலு
கூர்விளப்பூச் சக்கரையும் பலமுஞ் சேர்த்து
நாட்டியே அதிமதுரம் ஏலங் கோஷ்டம்
நன்றான யிலவங்கம் வெள்ளி லோத்திரம்
நீட்டியதோர் தாமரையின் வளையுங் கூட்டி
நினவாக முந்திரிகை வேளப் பாலோடுந்
தாட்டிகமா யிலவன்பிசின் பேரீக் சோடு
சந்தனமுஞ் சிறுநாகம் அத்திப் பூவே

பசுவின்நெய் 5.200லிட்டர் கூவிளம்பூ சர்க்கரை 35கி, அதிமதுரம், ஏலம், கோஷ்டம், இலவங்கம், வெள்ளிலோத்திரம், தாமரை வளையம், முந்திரிகை, இலவம்பிசின், பேரீச்சம்பழம், சந்தனம், சிறுநாகப்பூ, அத்திப்பூ இவற்றையும் சேகரித்துக் கொள்ளவும்.

48.பூவான மாதளையின் பிஞ்சுங் கூட்டி
போதுவாய் நிலப்பனையின் விளா லரிசி
தாளில்லா வரச்சுண்டி வகைக்கரைப் பலமுந்
தனித்தனியே கஉஷாயமிட்டு அரைத்துப் போட்டு
பாவகமாய் அடுப்பேத்தித் தீயை மூட்டி
பதங்கண்டு யெரித்திடுவாய் நெய்தா னப்பா
ஆவுடன் நெய்கரண்டி யிருநே ரந்தாள்
அப்பனே அருந்திடநோ அகன்று போமே

இவற்றுடன் மாதுளம்பிஞ்சும் கூட்டி, நிலப்பனை, விழாலரிசி, வறட்சுண்டி இவை வகைக்கு 18கி ஃதமெடுத்துத் தனித்தனியே கசாயமிட்டு அரைத்தெடுத்துக் கொள்ளவும். அடுப்பேற்றி எரித்து நெய்பதம் வரும்போது பக்குவமாய் இறக்கி வடித்துக் கொள்ளவும். இந்நெய்யை இரண்டுநேரம் கொள்ள பின்வரும் நோய்கள் நீங்கும்.

49. அகன்றுபோம் ரத்தபித்தம் அதிசார ங்களி
யெடுத்தபெரும் பாடுவெள்ளை நீர்க்க டுப்பு
நகன்டிடுமே யெலம்புருக்கி மேகந் தீரும்
நாட்டிலுள்ள நீர்ப்பெருக்கும் உழலை வீக்கம்
அகன்டிடுமே னோயெல்லாம் பறந்து போகும்
மக்களே யிம்முறை யைத் தானே

இரத்தபித்தம், அதிசாரங்கள், பெரும்பாடு, வெள்ளை, நீர்க்கடுப்பு, எலும்புருக்கி, மேகம் இவை தீரும். நீர்ப்பெருக்கும். உழலை வீக்கம் போன்ற நோய்கள் இந்நெய்யை காலை, மாலை இரண்டுவேளை உட்கொண்டுவர நீங்கும் என்பதாம்.

50.கோடாகுறி மாத்திரை:

தெள்ளலே குளிகை தானும்
திறமுடன் சொல்லக் கேளு
யின்மையிலக் கெந்தி சூதம்
நெருவிஉ௷ம் நாபி சுக்கு
வன்மையாய் ஆக்கிடு காரம்
மனோசிலை மிளகு நெல்லி
உண்மையாய் வெள்ளைப் பூண்டு
உடனிரு விசமுங் கூட்டே

இனிவரும் பாடலில் குளிகை சொல்லப்படுகின்றது.கெந்தி, சூதம்,கருவிஉ௷ம்,நாபி,சுக்கு, காரம்,மனோசிலை,மிளகு, நெல்லி, வெள்ளைப்பூண்டு, நிருவிசம் இவற்றைக் கூட்டிக் கொள்ளவும்.

51.கூட்டிடு கடுக்காய் தானிக்
கொட்டையைப் போக்கி நன்றாய்
வாட்டிய மருந்து சுத்தி
வகைபல மரையு மொன்றாய்
நீட்டிய வாளம் பத்து
நிரைசெம்புப் பொடியும் பத்து
ஊட்டிய ரசமும் செம்பும்
ஒக்கவிட் டரைத்திட் டாயே

கடுக்காய்,தான்றிக்காய்,இவற்றைக் கொட்டை நீக்கி எடுத்துக் கொள்ளவும்.மேற்சொன்ன மருந்துகளைச் சுத்திசெய்து வகைக்கு 1கி வீதம் எடுத்துக் கொள்ளவும்.இவற்றைக் கையான் தகரைச்சாறு சேர்த்து ஏழு நாட்கள் அரைத்து கடுகளவு குளிகையுருட்டி நிழலிலுலர்த்தி எடுத்து வைத்துக் கொண்டு தக்க அநுபானத்தில் வழங்கிடவும்.

52. அரைத்தபின் கெந்தி கூட்டி
அருந்தவே மெழுகு போல
உரைத்திடு மருந்தை யெல்லா
மொக்கவே ஒன்றாய்க் கூட்டி
நிரைத்திடுங் கையான் சாறு
நேகவிட் டரைநா ளேழு
முறைப்படி யனுபா னத்தில்
மாத்திரை கடுகு முத்தே

கடுக்காய், தான்றிக்காய் இவற்றைக் கொட்டை நீக்கி எடுத்துக் கொள்ளவும். மேற்சொன்ன மருந்துகளைச் சுத்தி செய்து வகைக்கு 18கி ஷீதம் எடுத்துக் கொள்ளவும். இவற்றைக் கையான தகரைச்சாறு சேர்த்து ஏழுநாட்கள் அரைத்து கடுகளவு குளிகையுருட்டி நிழலிலுலர்த்தி எடுத்து வைத்துக் கொண்டு தக்க அனுபானத்தில் வழங்கிடவும்.

53. முத்திய கிராணி சுத்த
சாதிக்காய் ஆவின் மோரே
அத்தியி லுளைப்பி ருந்தால்
ஆவெண்ணை முருங்கைச் சாறு
நித்தலும் வயத்து நோவு
பொருமலு மநோகப் பாரில்ப்
பத்தியாய்த் தடவிச் சுட்டு
பச்சைநீர் தன்னில் கொள்ளே

நாள்பட்ட கிராணி நோய்களுக்கு சுத்த, சாதிக்காய் ஆவின்—மோரிலும், இளைப்பிற்கு ஆவின் வெண்ணையிலும் வயிற்று வலி, பொருமல் போன்ற நோய்களுக்கு முருங்கைச் சாற்றிலும் வழங்கலாம். மற்றவற்றிற்கு பச்சை தண்ணீரில் குடிக்கக் கொடுக்கலாம்.

54. கொள்ளவே பித்த மானால்ச்
சக்கரை கொள்ளீர் சீனி
அளிய பஞ்ச குன்மம்
அவுரியின் சார தாகும்
வள்ளியின் சிறுகி ழங்கு
நொச்சியின் தாது விர்த்தி
உள்ளிரு உஷ்ணட்ண ரோகம்
ஒடுங்கள் நீரில்க் கொள்ளே

பித்தம் மிகுந்தால் இந்த மாத்திரையைச் சர்க்கரையில் சாப்பிடலாம். ஐந்துவகை குன்மங்களும் அவுரிச் சாற்றில் சாப்பிட நீங்கும். சிறுவள்ளிக் கிழங்குச் சாற்றிலும், நொச்சிச் சாற்றிலும் சாப்பிட தாது விருத்தியடையும். தண்ணீரில் உண்பதால் உடல் வெப்பம் தணியும்.

55. ஓடிடுங் குன்மம் மெல்லா
மொழிந்திடும் பிரமிச் சாற்றில்
வாடுநீ ரடைப்புக் கையான்
வெற்றிலை வளம தாக
கூடுத லில்லாய் பெண்ணுங்
கொழுநனைப் பத்தி வாழ்க
நீடுயர்க் கருப்புக் கட்டி
பலாவிதை வெல்ல மருந்தீர்

பிரமிச்சாற்றில் குளிகையை உரைத்துச் சாப்பிட குன்மம் எல்லாம் நீங்கும். நீரடைப்பு, கையான்தகரைச் சாற்றிலும், வெற்றிலைச் சாற்றிலும் சாப்பிடலாம். இக்குளிகைக்கு கருப்பட்டி, பலாவிதை. வெல்லம் இவற்றையும்அனுபானமாகக் கொள்ளலாம்.

56. வோவே வெண்ணை ஒக்காளம்
நிகருஞ் சந்தணமரை கடிக்கும்
பாரே சீக்கிரம் வெள்ளாட்டுப்
பாலுங் கூட்டு நீரடைப்புக்
கூறாய்ப் பேதி மிகக்காணக்
கூட்டே விளக்கு யெண்ணைதனில்
தீரா விஷமும் பழச்சாத்தில்த்
தேனுமிஞ்சிச் சாற்றில் வையே

வாய் ஒக்காளத்திற்கு வெண்ணையிலும், நீரடைப்பிற்கு சந்தனச் சாற்றிலும், வெள்ளாட்டுப் பாலிலும் வழங்கலாம். பேதி அதிகமாகக் காணப்படுமானால் விளக்கெண்ணெய் வழங்கலாம். தீராத விஷங்கள் பழச்சாறு, தேன், இஞ்சிச் சாற்றில் இக்குளிகையைச் சாப்பிட இறங்கும்.

57. வைநீ வெள்ளைச் சாரணையில்
வளர்கா லெரிவு சீரகத்தில்
உய்யு மெலிகடி கொத்தமல்லி
உடல்மேல் நாற்றம் மருந்தாதி
அலைந்த பல்லுங் குணமாகும்
சாம்பிராணித் தயிலங் கொடுத்து மேல்ப்பூச்சு
நய்யும் நெஞ்சுக் கனைப்புக்கு
நாட்டு நன்றாய் வெற்றிலையில்

காலெரிச்சலுக்கு வெள்ளைச்சாரணை சாற்றிலும், எலிகடிக்கு சீரகத்திலும், உடலில் உண்டாகும் கற்றாழை நாற்றம் கொத்தமல்லிச் சாற்றில் குணமாகும். சாம்பிராணி தைலத்துடன் சேர்த்து பல்லில் தடவ பல் இறுகும். வெற்றிலைச் சாற்றில் வழங்க நெஞ்சுகனை நீங்கும்.

58. யிலைதானி குன்மம்பிரமியிலை

நேற்ற சுரமுங் கொத்தமல்லி

தலையுஞ் சோறு செரிமாந்தம்

துலங்கும் பழச்சார் மாதுளையும்

மலையாஞ் சேற்பும பித்தமுடன்

வையே சீனிச் சர்க்கரையில்

பல்னோ யெல்லாஞ் சீரகத்தில்

பறக்குந் தாகசுரம் நொச்சியிலையே

குன்மத்திற்கு பிரமியிலைச் சாற்றிலும் சுரத்திற்குக் கொத்து-மல்லிச்சாற்றிலும், செரியா மாந்தத்திற்கு பழச்சாறும், மாதுளையும் சேற்பும பித்தத்திற்கு சீனிச்சர்க்கரையிலும் வழங்கலாம். தாகசுரத்திற்கு நொச்சிச் சாற்றிலும் வழங்கலாம்.

59. நொச்சி சீத வாதபித்தம்

நோக அடிக்குங் கொத்தமல்லி

நொச்சி யோமங் கொத்தமல்லி

கொள்ளே சுக்குவிஷசுரமும்

பச்சம் வைத்த விடாச்சுரமும்

பறக்கு மோமக் கஷாயத்தில்

அச்சமில்லாச் சன்னி யிஞ்சி

அடங்கா வியாதிக் கிதுவொன்றே

சீதவாத பித்தங்கள் நொச்சிச் சாற்றில் உட்கொள்ள தீரும். நொச்சிச்சாறு, கொத்துமல்லிச்சாறு, ஓமக்குடிநீர் இவற்றிலும், சீதவாதப் பித்தங்கள் நீங்கும். சுக்கு நீரில் விஷசுரமும், ஓமக்குடிநீரில் விடாச் சுரமும் சன்னி இஞ்சிச்சாற்றிலும் மாத்திரையை உட்கொள்ள குணமாகும்.

60. ஒன்றே போத மிதுவெல்லா
        மோடித் திரியும் பண்டிதரே
    நன்றே கோடா குளிகையது
        நயந்து பாரு வையகத்தில்
    சென்றே நோய்கள் தீர்வதற்கு
        திறமாய்க் கிருதம் நெய்சொல்வேன்
    அன்றே அரனா ருரைத்தபடி
        அனைலை அவிக்கும் படிகேளே

கோடாசூரி மாத்திரை ஒன்றே பலவகை வியாதிகளைப் போக்கும்.பலவகை நோய்கள் நீங்குவதற்கு ஏற்ற தக்க அனுபானங்களில் சாப்பிட்டு வரவேண்டும்.சிறப்பான கோடாசூரி மாத்திரை சொன்னேன். இனி சிவன் உரைத்த வல்லாரை நெய்யைச் சொன்னேன்.

61. <u>வல்லாரை நெய்</u>:

    அவிக்கும் ஆவின் நெய்ப்படிதான்
        அதுக்குச் சமனாய்-வல் லாரைச்சார்
    புவிக்கும் மதுரம் மிளகேலம்
        புகழுஞ் சீரகம் வால்மிளகு
    தவிக்கு மரத்தை பலவ்தம்
        தாங்கா தரைப்பாய் ஆவின்பால்
    கவிக்கக் கலக்கிச் சார்நெய்யில்
        கனலை மூட்டி நெய்வடியே

ஆவின்நெய், 1.3லிட்டர்,வல்லாரைச்சாறு 1.3லிட்டர்,அதிமதுரம், மிளகு,ஏலம்,சீரகம்,வால்மிளகு, அரத்தை இவற்றை ஆவின்பால் விட்டரைத்து ஆவின்நெய் வல்லாரைச் சாற்றுடன் கலக்கி அடுப்பேற்றி எரித்து நெய் வடித்துக் கொள்ளவும்.

62.வடிக்கும் முட்டி தனிலேதான்

வளமாஞ் சாதிக்காய்ப் பத்திரியும்

பொடிக்குந் கிராம்பு அரைப்பலமாம்

பொடியாய்த் தூவி நெய்வடித்த

துடிக்குஞ் சீனி ரெண்டுபத்து

தூளாய்க் கூடப் பலம்போட்டே

வடித்த நெய்யில் நல்ல திடமான சாதிக்காய், பத்திரி, கிராம்பு, இவை வகைக்கு 18கி எடுத்து பொடித்துத் தூவி நெய்வடித்த 35கி சர்க்கரையையும் பொடித்து அதில் தூவவும்

63. சூதக வாய்வுக்கு லேகியம்

போட்டுநீ நெய்வடித்துக் கடுகு தள்ளி

புகழாக லேகியமப்பா நெய்யுஞ் சீனி

தாட்டிகமாய்ச் சாதிக்காய் பொடியுங் கூட

தளம்பாமல்க் கைமுறையாய் யெல்லாங் கூட்டி

மூட்டுவாய் மண்டலந்தான் கரண்டி வீதம்

முசியாமல்த் தீரும்னோய் முக்கிய மாக

சூட்டுங்காண் மேகமென்ற தெல்லாம் போகும்

யோகோகோ வெள்ளையெல்லா மொளிந்து போமே

மேற்சொன்ன நெய்யை வடித்து கடுகு நீக்கிக் கொள்ளவும். நெய்யும், சீனியும் சேர்த்து சாதிக்காய் பொடியும் பொடித்துத் தூவி கிண்டி இளகிய பதம்வரும்போது இறக்கிக் கொள்ளவும். வேளைக்குத் தேக்கரண்டிவீதம் 40 நாட்கள் உட்கொண்டு வர மேகநோய்கள் தீரும். வெள்ளைப்படுதல் நிற்கும்.

64. <u>லேகியம்:</u>

ஒளிந்துவிட யின்னமொரு லேகி யந்தான்
உரிர்த்து னோய்தீர உறுதி யாக
அருந்தாத கும்மட்டிக்காய் செம்ப ருத்தி
அவெள்ளை னொச்சியிஞ்சி வெள்ளைப் பூடும்
தெரிந்தநீ அஞ்சுவகைச் சாரும் வாங்கித்
தெளிவாக அஞ்சுபடிச் சாரொன் றாக்கிக்
கொளுந்துவிடத் தீயெரித்து அடுப்பி லேற்றி
குருகவே காச்சியிட மருந்து கேளே

நோய் தீர்வதற்கு வசதியாக இன்னுமொரு இளகம் சொல்வேன். கும்மட்டிக்காய், செம்பருத்தி, வெண்ணொச்சி, இஞ்சி, வெள்ளைப்பூண்டு, இந்த ஐந்துவகைச் சாற்றையும் வகைக்கு 6.500மிலி வீதம் எடுத்துக் கலந்து அடுப்பேற்றி எரித்து சுருங்க காய்ச்சிக் கொள்ளவும்.

65. மருந்துரசஞ் சாதிலிங்கங் காந்தஞ் சுக்கு
மாசில்லா யிந்துப்பு வாளங் காயம்
வருந்தமிளகு மஞ்சள் வெந்தயமுங் கூட்டி
வளமாகச் சடாமாஞ்சி அமத்தை யோடும்
பொருந்தவே வகைமூன்றும் விராகன் வாங்கிப்
புகழாக யிளவறுப்பாய் வதித்துக் கொண்டு
திருந்தவே பொடிபண்ணிக் கூடப் போட்டுத்
திறமாக லேகியத்தைச் செய்து பாரே

மருந்து சாறுகள் சாதிலிங்கம், காந்தம், சுக்கு, இந்துப்பு, நேர்வாளம், பெருங்காயம், வறுத்தெடுத்த மிளகு, மஞ்சள், வெந்தயம், சடாமாஞ்சில் அமத்தை இவற்றை வகைக்கு 4கிராம் எடுத்து இளவறுப்பாய் வறுத்து பொடித்து முறைப்படி லேகியம் செய்து கொள்ளலாம்.

66. செய்திடவே மருந்துதனை யுண்ணக் கேளு
    செவந்தவாய் தா தளங்காய் அளவு உண்டை
நய்யுமடா குன்மம்-மெட்டுங் கவுசி வாய்வும்
    ஓடிவிடுந் திசைவாய்வுஞ் சோகை பாண்டு
பய்யவே காமாலை வீக்கந் தீரும்
    பாரமுள்ள வயிற்றுநோய் பறந்து போமே

இவ்விளகத்தில் தா தவளங்காயளவு உண்டுவர எட்டுவகை குன்மங்களும், கலிச்சு நாற்றமும், திசைவாயு, சோகை, பாண்டு, காமாலை வீக்கம், திருதுன்பம் தரும் வயிற்று நோய் இவை தீரும்.

67. கண்டாதி லேகியம்:-
    பறந்துபோங் கண்டாதி லேகி யந்தான்
        பண்பாக யிஞ்சிபலம் பத்து வாங்கிச்
    சுரங்காமல்த் தோல்போக்கிச் சீவிக் கொண்டுச்
        சுத்தாவின் நெற்வறுத்துப் பொடிய தாக்கிச்
    சிறந்திட்ட யிலவங்க மோமங் கூட்டி
        திரிகடுகு அதிமதுரஞ் சித்த ரத்தை
    பொருந்துபே ரிலவங்கம் நறுக்கு மூலம்
        போர்க்கடுக்காய் ரோகிணியும் புளித மாக்கே

கண்டாத்திரி இளகம் சொல்லப்படுகிறது. 350கி இஞ்சியைத் தோல்நீக்கி எடுத்துக் கொண்டு ஆவின் நெய்யில் வறுத்துப் பொடியாக்கி இலவங்கம், ஓமம், திரிகடுகு, அதிமதுரம், சித்தரத்தை, பேரிலவங்கம், நறுக்குமூலம், கடுக்காய், கடுகுரோகணி இவற்றையும் ஒன்றுசேர்த்துக் கொள்ளவும்.

68.புனிதமாய் வகையொன்று விராகன் மூன்றுப்

பொடியாக்கி ஒன்றாகப் புகலக் கேளு

யினிதான் சர்க்கரைதான் பலமு மூன்று

யியல்பான நெய்தேனு முரியுங் கூட்டி

கனியவே பாகுபோலக் கிண்டிக் காய்ச்சிக்

கலந்திடுவாய் பொடிதூ விக் கிண்டிக் கிண்டி

தனித்தனியே பாக்களவு தின்றா யானால்

சகலபித்த வாய்வும்போம் பசியுண் டாமே

மேற்சொன்ன மருந்துகளை வகைக்கு 12கிராம் வீதமெடுத்து சர்க்கரை 105கி சேர்த்து, நெய்யும் தேனும் கூட்டி காய்ச்சி பாகு போல் கிண்டிக் கொள்ளவும். பொடிகளைத் தூ வித்தூ வித் கிண்டி இலேகிய பதத்தில் இறக்கிக் கொள்ளவும். இதில் பாக்களவு சாப்பிட்டால் அனைத்து வகையான பித்த வாயுக்களும் நீங்கும். பசியுண்டாகும்.

69. சயம் இருமலுக்கு

உண்டான சயமிருமல் யிளைப்பு யீளை

உள்மாந்தை போவதற்கு உமதி கேளு

பண்டான திரிகடுகு சித்த ரத்தை

பாங்கான வெங்காரம் அக்கிராக் காரம்

கண்டந்த வால்மிளகு நறுக்கு மூலம்

தடையறவே வகைக்கு மரைப்பலமுங் கூட்டி

முண்டாமல்த் தாளிசைதான் ரெட்டி கூட்டி

முகியறவே யிருநேர முழுங்கி டாயே

கபம், இருமல், இளைப்பு, ஈளை, உள்மாந்தை இவை நீங்குவதற்கு உமதியான மருந்தைச் சொல்வேன். திரிகடுகு சித்தரத்தை வெங்காரம் அக்கிராகாரம், வால்மிளகு, நறுக்கு மூலம் இவை வகைக்கு 18கி சேர்த்து தாளிசை 35கி சேர்த்துத்தூ ளாக்கி நாளொன்றிற்கு இரண்டு வேளை உட் கொண்டு வரவும்.

70.முழுங்கவே சூரணித்து வைத்துக் கொண்டு

முசியாமல்த் தேனிஞ்சிப் பாலில் கொள்ளு

வலித்தனோ யெல்லாம்போம் குளிர்ச்சி யாகும்

அப்பனே சயக்காய்ச்ச லெல்லாம் போகும்

பழந்தேங்காய் புளிப்புகையு மிறைச்சி விட்டு

பத்தியநீ காத்தண்டால் பலன முண்டு

களங்கமால் தயிலம் வைத்து முழுகி வந்தால்

காந்தியுண்டாம் மேனியெல்லாங் கதிக்கும் வெள்ளீர்

இதனைத்தேன், இஞ்சி, பாலில் உட்கொண்டால் பலவகையான நோய்களைப் போக்கலாம்.உடல் குளிர்ச்சியாகும்.சயம், காய்ச்சல் இவை நீங்கும்.பழந்தேங்காய், புளி,புகை, இறைச்சி, இவை தள்ளி பத்தியம் காக்கவும்.தயிலம் வைத்துத் தலை முழுகி வந்தால் காந்தல் உண்டாகும்.

71.மந்தார காசத்துக்குத் தைலம்:

வெள்ளீர்தானீ விளாவாமல் முழுகி தள்ளு

வீரான புளிதயிர்பால் புகையும் விட்டு

தண்ணீர்போல் நோய்களெல்லாம் விட்டே போகும்

சாத்துகிறேன் மந்தார காசத் தயிலம்தானும்

பன்னீர்போல்த் தெளிவதற்குக் கஊஷாயங் கர்க்கம்

பாடுகிறேன் புலத்தியனே பகரக் கேளு

நன்னியதோர் குருந்தொட்டி பொன்னாங் காணி

நல்லவட்டத் தத்திவேர் சீந்தில் தண்டே

தயிலம் தேய்த்து முழுகும்போது வெள்ளீரில் தண்ணீர் கலவாமல் தனி வெள்ளீரில் குளிக்கவும்.புளி, தயிர்,பால்,புகை இவற்றை நீக்கவும். நோய்கள் எல்லாம் விட்டோடும்.இனி மந்தார காசத் தயிலம் சொல்வேன். பன்னீர்போல தெளிவு பெறுவதற்கு கஊஷாயம் சேர்க்கலாம்.குருந்தொட்டி, பொன்னாங்காணி, வட்டத்தத்திவேர்,சீந்தில் தண்டு.

72. சீந்திலொடு முடக்கொத்தான் சீர்செங் கழுநீர்

சிறந்ததினைப் பனைக்கிழங்கு நீர்வள்ளிக் கிழங்கு

புகழ்ந்த அல்லி தாமரைவேர் விலாமிச்சம்வேர்

புகழான ஆல்விழுது மாவரசம் பட்டை

சேர்ந்த மலைதாங்கிவேர் நீர்ப்பு ரைவேர்

திரிகடுகு வகையொன்று பலந்தான் மூன்று

சேர்த்திடித்துச் சலங்குறுணி தானும் விட்டு

செலுத்துநீ மிடாவிலிட்டுத்தீயை மூட்டே

முடக்கறுத்தான், செங்கழுநீர், நிலப்பனைகிழங்கு, நீர்வள்ளிக்கிழங்கு அல்லி, தாமரைவேர், விலாமிச்சம்வேர், ஆல்விழுது, மாவரசம்பட்டை, மலை- தாங்கிவேர், நீர்ப்புரைவேர், திரிகடுகு இவை வகைக்கு 105கி சேர்த்து இடித்து இதவையான அளவு தண்ணீர் விட்டு தீமூட்டி எரிக்கவும்.

73. தீமூட்டி யெட்டொன்றாய்க் காய்ச்சி வாங்கி

சீலைவடி கொண்டுபின்பு செப்பக் கேளு

நேயமுடன் மருந்தையெல்லாங் கர்க்கஞ் சேர்க்க

நிகழ்த்துகிறேன் ஏலம் இலவங்கம் மதுரம்

மாயமாம் மஞ்சள் சாத்திரபேதி

வாய்விளங்கங் கச்சோலம் நாகங் கோஷ்ட்டம்

நாய்முள்ளிச் சதகுப்பை வெந்தயஞ் சாதிக்காயும்

நல்லசிறு தேக்கரத்தைச் செவ்வியங் கூட்டே

எரித்து எட்டில் ஒன்றாகச் சுருக்கிக் காய்ச்சி சீலை வடிகட்டிக் கொள்ளவும். பின்னர் ஏலம், இலவங்கம், மதுரம், மஞ்சள், சாத்திரபேதி, வாய்விளங்கம். கச்சோளம், நாகம், கோஷ்டம், நாய்முள்ளி, சதகுப்பை, வெந்தயம், சாதிக்காய், சிறுதேக்கு, அரத்தை, செவ்வியம் இவற்றைச் சேகரித்துக் கொள்ளவும்.

74.செவ்வியமொடு செண்பகப்பூத் தேவ தாரம்

திகைத்திடவே வகையொன்று களஞ்சி மூன்று

குவியுமுள்ளி கெந்தங் கஸ்தூ ரி மஞ்சள்

கூரறிய புன்னாக்குவேர் சாதிப் பத்திரி

நாயமுறுங் கோஷ்டம்பை கிராம்பு தானும்

நால்க்களஞ்சி நல்லசெஞ் சந்தனமுன் கொத்தமல்லி

பரியவே சமன்கூட்டி மருந்தையெல்லாம்

பண்பாக அரைத்துநீ கஷாயத் தூட்டே

செவ்வியம், செண்பகப்பூ, தேவதாரம் இவை வகைக்கு 15கி வீதம் தேர்ந்தெடுத்து உள்ளி, கெந்தகம், கஸ்தூரிமஞ்சள், புன்னாக்குவேர், சாதிபத்திரி, கோஷ்டம்பை, கிராம்பு இவை வகைக்கு 20கி, செந்தனம், கொத்துமல்லி இவற்றைச்சமஅளவு கூட்டி எல்லா மருந்தையும் சேர்த்தரைத்து கஷாயத்தில் சேர்க்கவும்.

75. ஊட்டியபின் அடுப்பேற்றி யெண்ணை படியிட்டு

ஒருகாமல்த் தீமூட்டி வத்திக் காச்சி

நீட்டியதோர் மெழுகுபத மான வாரே

நீயிறக்கி வடித்திடுவாய் கலசத் துள்ளே

தாட்டிகமாய் குங்குமங் கஸ்தூ ரி புனுகு

சட்டமுடன் கோரோசினை சமன்க ளஞ்சி

நாட்டியே நறுக்கிடுவாய் தயிலந் தன்னில்

நலமாக நனம்புடனே வைத்து முழுகவே

காசயத்துடன் சேர்ந்த பின்னர் அடுப்பேற்றி 1.3லிட்டர் எண்ணெய் சேர்த்து தீமூட்டி வற்றக் காய்ச்சி மெழுகுபதமாகும்போது இறக்கி வடித்து குங்குமம், கஸ்தூரி, புனுகு, கோரோசினை இவை வகைக்கு ஒரு கழஞ்செடுத்து தயிலத்தில் இட்டுக் கொள்.

76. மூழ்கடா சீகைக்காய் அரப்பு வெந்நீர்

மோசமில்லை புளிப்புகையிலை பால்தயிர் மோர்தள்ளு

மூழ்கடா முறையோடே மற்றநாளிக் கூட்டு

உறுதியுண்டாங் குமரியெண்ணெந் தயிலத் தக்கு

மூழ்கடா தலைநோவு கண்ணு நோவும்

மூர்க்கமுள்ள உள்சூடு காந்தல் தீரும்

மூழ்கடா திரேகமொடு காந்தல் காணு

மூத்திரநீர்ச் சிறப்புமும் பிலம்போங் காணே

எண்ணெய் வைத்து சீயக்காய் தேய்த்து வெந்நீரில் மூழ்கவும். புளி, புகையிலை, பால், தயிர், மோர் இவை தலைமூழ்கிய நாளன்று நீக்கவும். மறுநாள் முதல் இவற்றைச் சேர்க்கலாம். குமரியெண்ணெய் கற்றாழை தயிலத்திற்கு தலைநோய், கண்கோண் இவை நீங்கும். உள்சூடு காந்தல், மூத்திரச் சீற்றம் இவை நீங்கும்.

77. கலிக்கம் மாத்திரை.

காணவே கலிக்கமொன்று சொல்லக் கேளு

கரிமிளகு முக்களஞ்சி கல்வத் திட்டு

ஊணவே திப்பிலி முக்களஞ்சு கூட்டி

உரைப்பான சுக்குமோர் களஞ்சி கூட்டிப்

பூணவே சமுத்திராப் பழங்க ளஞ்சி

புகழ்சுத்தி வாளமொரு களஞ்சி கூட்டித்

தோணவே சாரணை வெற்றிலையின் சாற்றால்த்

துவள வரைத்தே குளிகை துலங்குவாயே

கரிமிளகு, 15கி, திப்பிலி 15கி சுக்கு 5கி, சமுத்திராப்பழம் 5கி, சுத்திசெய்த நேர்வாளம் 5கி இவற்றை எடுத்து சாரணைச் சாற்றாலும் வெற்றிலைச் சாற்றாலும் அரைத்துக் குளிகை செய்து கொள்ளவும்.

78.முன்டூர_சூரணம்:

தலங்கவே சூரணந்தான் யின்னங் கேளு
சுக்கோமஞ் சீரகமு மிளகு யிந்து
கலங்காமல் வசம்பு யிடம்புரியும் வலம்புரியும்
மறுகுசிறு திப்பிலியுஞ் சாதிக் காயும்
பிலங்கானும் பத்திரியும் பற்ப டாகம்
பேசியதோர் சதகுப்பை மதுரங்கோ-ரோசினை
கலங்காமல் விளாவரிசி கரப்பான் பட்டை
கைமுறையாய் வகையொன்று பலமுஞ் சேரே

சுக்கு,ஓமம்,மிளகு,சீரகம்,இந்துப்பு,வசம்பு, வலம்புரிசங்கு, இடம்புரிசங்கு, சிறுதிப்பிலி,சாதிக்காய்,பத்திரி,பற்பாடகம்,சதகுப்பை, அதிமதுரம்,கோரோசனை,வளாவரிசி,கரப்பான்பட்டை இவை யாவும் வகைக்கு 35கி வீதம் எடுத்துக் கொள்ளவும்.

79.சேர்த்திட்ட மருந்தெல்லாந் தூள தாக்கிச்
செந்நா யுருவிட நகதை முள்ளி
பேர்த்திடவே காட்டு மல்லிகையுங் கூட்டி
பிரிசமுடன் நாலுபிடி வறுத்துச் சாம்பல்
காத்திடவே ரெண்டுமொன்றாய்ச் சேர்த்துக் கொண்டு
கானகத்துக் கிட்டமஞ்சு பலமுந் தேடி
வாத்திடுவாய் மேதைபசு ஆட்டு நீரும்
மறக்காமல் மோர்சுட்ட மதிப்பொன் னாமே

மேற்சொன்ன மருந்துகளை எல்லாம் சேர்த்துத் தூளாக்கி செந்நாயுருவி, நகதைமுள்ளி, காட்டுமல்லிகை,வறுத்த சாம்பல் இவற்றையும் சேர்த்து காட்டுக்கிட்டம் 175கி சேர்த்து எருமை நீர்,ஆட்டுநீர் சேர்த்து மோரும் சேர்த்துக் கொள்ளவும்.

80. மதிப்புடனே மோர்நீரும் பானை சேர்த்து
மறக்காமல்க் கிட்டமதக் குள்ளே வைத்து
கதிரிபாகப் பத்துநா ளூற விட்டுக்
காயவைத்து யெடுத்துநன்றாய்த் தூளதாக்கி
விதிப்படியே மூன்றுமொன்றாய்ச் சேர்த்துக் கொண்டு
வெருகடிதான் அறுபதுநாள்த் தின்பா யானால்
புதுப்பானை ய்யதுபோல் நோய்கள் போகும்
பொய்யல்லப் புளிப்புகையுந் தவிர்த்திட் டுரே

ஒரு பானை நீர்மோர் சேர்த்து கிட்டத்தில் உள்ளே வைத்து பத்துநாட்கள் ஊறவிட்டு காயவைத்தெடுத்துத் தூளாக்கி முறைப்படி மூன்றையும் ஒன்றாகச் சேர்த்துக் கொண்டு வெருகடியளவு 60 நாட்கள் சாப்பிட்டுவர புதுப்பானையில் மொய்க்கும் ஈக்கள் உடனுக்குடன் அகல்வது போல நோய்கள் அகலும்.புளியும் புகையும் தள்ளவும்.

81.ஞாழாலைத்தி_மண்டூர குளிகை
தவிர்த்திடவே மண்டூர குளிகைக் கேளு
தனிநூறு வருஷமது கிட்டங் கொண்டு
வமுத்திடுநீ பேயாக உருக்கக் கொல்லன்
நன்றாகக் காச்சியபின் ஆவின் நீரில்
கவிழ்த்திடுவாய் நாலுதிறங் காய்ச்சிக் காய்ச்சி
களங்கமறக் கோமயத்தி லரைத்து நன்றாய்
அவித்திடுநீ ஆவின்நீர் தனில்க்க ரைத்து
அடிப்பத்தாக் கரண்டியினால்க் குறுகக் காய்ச்சே

நூற்றாண்டு கடந்த கிட்டத்தை எடுத்து வமுத்து கொல்லன் உலையில் வைத்து உருக்கவும்.உருக்கிக் காய்ச்சி ஆவின்நீரில் கொட்டவும். பின்னர் கோமயத்தில் விட்டு அரைத்து அவித்து ஆவின்நீரில் அரைத்து அடிபிடிக்காமல் கிண்டிக்கிண்டிக் காய்ச்சவும்.

82. காய்ச்சியதோர் மருந்ததனை வெயிலில் வைத்து

களங்கமறக் கிண்டியே உலற வைப்பாய்

நாட்சியலில்லாச் சீலைவடி கொண்டு நன்றாய்

சீரக மோர் ரண்டு மிந்துப்

பாச்சிடுவாய் திரிகடுகு திரிப லாதி

பகர்ந்திடுவாய் ஓமம்பெருங் காயங் கூட்டி

மாச்சிடவே வகையொன்று பலமொன் றாக

வறுத்துநீ பொடியாக்கி முன்பொடியுங் கூட்டே

காய்ச்சிய மருந்தை வெயிலில் வைத்து கலங்கமறக் கிண்டி உலர்த்தி சீலையில் வடிகட்டிக் கொண்டு சீரகம், இந்துப்பு, திரிகடுகு, திரிபலாதி, ஓமம், பெருங்காயம் கூட்டி வகைக்கு 35கி வீதம் எடுத்து வறுத்துப் பொடித்து முன்பொடியையும் சேர்த்துக் கொள்ளவும்.

83. கூட்டியே கரந்தைச்சார் தூதுவளையின் சாறு

குறையாமலத் துளசிச்சாறு கையான் சாறும்

வாட்டமில்லா நாளொன்று சாறொன் றாக

வகைவகையாத் தானரைத்து உலர வைத்து

தாட்டிகமாய் நாலுநாள்ச் சாறு நாலு

தனித்தனியே அரைத்தரைத்து உலர வைத்து

மூட்டுவாய் தேன்வார்த்து அரைத்துச் சேர்த்து

முசியாமல்ச் சுண்டைக்கா யளவு கொள்வாய்

கரந்தைச் சாறு தூதுளைச்சாறு, துளசிச்சாறு, கையான்சாறு, இவற்றில் ஒவ்வொரு நாளும் ஒரு சாற்றால் அரைத்து உலரவைத்து இவ்வாறு நான்கு சாறுகளில் 4 நாட்கள் அரைக்கவும். பின்னர் தேன்சேர்த்து அரைத்து சுண்டைக்காயளவு தினமும் உட்கொண்டு வரவும்.

84. கொள்ளுவாய் யிருபதுநா ளிருநே ரந்தான்
கூசாமலச் சோகை காமாலை பாண்டு
தள்ளுமடா நோயெல்லாம் நொறுக்கிப் போடும்
தருகாம லிருநேரஞ் சார்ந்து பாரு
வள்ளலே புளிப்புகை கைப்புத் தள்ளு
மாசில்லா மேனியெல்லாம் வச்சிர மாகும்
உள்ளபடி சொல்லிவிட்டேன் குளிகை தன்னை
உத்தமமா மெள்ளுசொல்லி உகந்து பாரே

நாறொன்றிற்கு இருவேளை வீதம் 20 நாட்கள் உட்கொண்டு வரவும், அவ்வாறு உண்டு வந்தால் காமாலை, பாண்டு இவை நீங்கும். புளி, புகை, கைப்பு தள்ளவும். உத்தமான குளிகையைச் சொல்லிவிட்டேன். உன்னதமாக உணர்ந்து கொள்வாயாக.

85. உகந்துநீ பார்ப்பதற்குக் கிருதம் கேளு
உறுதியாய்க் காந்தம்-கிட்டம் லோக மித்து
பகுத்திடவே வகையொன்று பலமஞ் சாக
பதறாமல் மாவாக்கி வைத்துக் கொண்டு
தகர்ந்திடவே திரிகடுகு கடுக்காய்ப் பூவும்
சமைத்திடுவாய் ஓமம்நேர் வாளஞ் சுத்தி
அகந்தனிலே சீரகந்தான் ரெண்டு கூட்டி
அப்பனே வகையாகப் பலமும் வாங்கே

காந்தகுட்டம், உலோகம், இடித்துத்தூ ளாக்கிக் கொண்டு திரிகடுகு, கடுக்காய்ப்பூ, ஓமம், சுத்திசெய்த நேர்வாளம், நற்சீரகம், பெருஞ்சீரகம், இவ்விரண்டும் வகைக்கு 35கி வீதம் சேர்த்தெடுத்துக் கொள்ளலாம்.

86.பலம்வாங்கி முன்பொடியு மொன்றாய்ச் சேர்த்து

பதறாமல்க் கையாஞ்சாறு தன்னி லாட்டி

மலையாமல் யெலுமிச்சம் பழமி-ரண்டு பத்து

வாய்கீறிப் பிளந்துநன்றாய் வைத்துக் கொண்டு

தலையவே மருந்தையதற் குள்ளே வைத்து

வாட்டிடவே நல்லெண்ணை கூட விட்டு

அலையாமல்ச் சட்டியிட்டு அடுப்பி லேத்தி

அவித்துநீ யெண்ணெயுடன் கடுகு தின்னே

வகைக்கு 35கி எடுத்து முன்பொடியுடன் ஒன்றாய்ச் சேர்த்துக் கலந்து கையான்தகரைச்சாற்றால் ஆட்டி 20 எலுமிச்சம் பழங்களை வாய்கீறி பிளந்து மருந்தை அதற்குள்ளே வைத்து,சட்டியை அடுப்பேற்றி நல்லெண்ணவிட்டுக் காய்ச்சி எண்ணெய் இறக்கி எண்ணையுடன் கடுகும் சாப்பிட்டு வரவும்.

87.தின்னவே யிருபதுநாள்ப் பத்தியந்தான்

தினந்தூதுக் காயிலையும் பூவுங் கூட்டி

சொன்னதொரு முருங்கையிலை காயு மாகும்

துலங்கவே முளைக்கீரைத் தண்டு மாகும்

வள்ளியிலே உப்பதனை வறுத்துக் கூட்டி

மகோதரங் காமாலை பித்தபாண்டு தீரும்

மன்னமே வியாதியெல்லா மற்றுப் போகும்

ஐயமில்லை யித்தமுறை அறிந்து பாரே

நாறொன்றுக்கு ஒரு எலுமிச்சம் வீதம் 20 நாட்கள் 20 பழங்களையும் சாப்பிடலாம்.பத்தியங் காக்கவும்.தூதுவளங்காயும், பூவும் கூட்டி முருங்கைக் கீரையும்,காயும்,முளைக்கீரை தண்டும் ஆகும். உப்பை வறுத்துக் கூட்டவும்.மகோதரம்,காமாலை,பித்தபாண்டு ஆகிய வியாதிகள் எல்லாம் நீங்கும்.

88. சஞ்சீவி குளிகை

பார்க்க வகைத்தின் னமொரு

குளிகை வகையை சொல்லக்கேள்

ஊர்க்கமுள்ள வியாதி கள்க்கு

உறுதி யாக -மருந்தொன்று

சொல்வேன் நன்றாய்க் கேகு

தீர்க்கும் வியாதிக் கனுப்பானம்

செலுத்த நன்றாய்ப் பகரக்கேள்

மார்க்குங் குளிகை சஞ்சீவியாம்

மலையா திருந்து வகைநாடே

அடிக்கடி தோன்றி துன்பம் தரும் நோய்கள் போக்கும் சஞ்சீவி குளிகை சொல்வேன். தீர்க்கும் வியாதிகட்கு ஏற்ப அனுபானம் சேர்த்து உண்போமானால் எல்லாவகை நோய்களையும் உரியமுறையில் போககலாம்.

89. நாவிதாரங் செந்தி யருவி

நல்ல யிரதம் வெண்காரம்

மேவுங் களஞ்சி வகைமூன்று

விளங்குந் திப்பிலி மிளகு சுக்கு

காவில்க் கடுக்காய் தான்றியுடன்

கலக்க வகைக்கு நால்க்களஞ்சித்

தாழ்வில்லாமல் சுத்தி யுடன்

சமனாய்வாழ் சமனி டையே

நாபி, அரிதாரம், கெந்தி, இருவி, இரசம், வெண்காரம் இவை வகைக்கு 15கி எடுத்து திப்பிலி, மிளகு, சுக்கு, கடுக்காய், தான்றிக்காய் இவை வகைக்கு 20கி இவற்றைச் சுத்தி செய்து எடுத்துக் கொள்ளவும்.

90. இடைதான் சேர்ந்து நொச்சியிலைச்

சாறுமொன்றாய்த் தான ரைத்து

அடவாய் முருக்கின் சாறொருநாள்

அப்பால்க் குப்பை மேனியொன்று

தோறாக் கய்யான்ஞ் சாறொருநாள்த்

தொடையிலைச் சாரா ரானாள்

இடைநாள் விடாம லஞ்சுநாள்

அழகா யுரைத்தே மிளக–ளவே

இவற்றை ஒன்றாகச் சேர்த்து நொச்சியிலைச் சாற்றில் அரைத்து, பின் முருக்கிலை சாற்றால் ஒருநாள் அரைத்து குப்பைமேனிச்சாற்றால் 1நாள் அரைத்து, கையான்தகரைச் சாற்றால் 1 நாள் அரைத்து, ஆடாதோடை இலைச்சாற்றால் ஒருநாளும் ஆக ஐந்து நாட்கள் இடைவிடாது அரைத்துக் கொள்ளவும்.

91. அழகா யரைத்து நிழலுலத்தி

அங்கு கபால......

புகழ மாக ஆவின்பால்

போட்டுக் கரைத்து உள்ளிருந்த

தளமாய் மேலுந் தான்பூசி

தவிர்க்க உப்புப்புளி.....யு

மாளமா மண்டைக் கரப்பானுக்கு

நாட்டுமேனிச் சாற்றி விடே

அரைத்ததை எடுத்து நிழலில் உலர்த்தி ஆவின்பாலிலிட்டுக் கரைத்து உண்ணலாம். உப்பு புளி இரண்டையும் நீக்க வேண்டும். இதனை மண்டைக் கரப்பான் நோய்க்குவழங்கும்போது குப்பைமேனிச் சாற்றில் வழங்கவேண்டும்.

92.யிடவே மேலுந்தான் பூசி

மெல்லாக் கரப்பான் செருப்படிச்சார்

தொடுமே கபால குட்டமெல்லாந்

துலங்கும் வேலிப் பருத்திச்சார்

அடவாங் கபால விப்புருதிக்

காகுமுத்ததாமணி யிலைச்சார்

படுமே னோவு ஒருத்தலைக்கு

பாங்கா நாரத்தம் பழச்சாரே

உடம்பெல்லாம் பூசி செருப்படிச் சாற்றிலி உள்ளுக்கும் வழங்க கரப்பான் நீங்கும். வேலிப்பருத்திச் சாற்றில் வழங்கிட கபால குட்ட-மெல்லாம் நீங்கும். உத்தாமணி இலைச்சாற்றில் வழங்கிட கபால விப்-புருதிகளும், ஒற்றைத் தலைவலிக்கு நாரத்தம்பழச்சாற்றிலும் வழங்கலாம்.

93. பழகும் படலி மணிலிச்சார்

பார்க்கும் காசக்காக் கணச்சார்

அளவாம் நீல காசத்துக்கு

ஆகும் வெள்ளைக் காக்கணப்பூ

குலையும் பித்த காசத்துக்கு

குடிநீர் கூட்டி தக்காளி

தளையும் கண்ணில் பூவுக்குத்

தாக்கும் வேப்பெண்ணை தனில்வையே

கண் படலத்திற்கு மணலிச் சாற்றிலும், நீல காசத்திற்கு காக்கணாஞ் சாற்றிலும், பித்த காசத்திற்கு வெள்ளை காக்கணாஞ் சாற்றிலும், பித்த காசத்திற்கு குடிநீர் கூட்டி தக்களை இலைச்சாற்றிலும் கண்ணில் பூவிற்கு வேப்பெண்ணெயிலும் வழங்கலாம்.

94. வையே கண்ணில் வியாதிக்கு

மாதர் முலைப்பால் தன்னிலிடு

செய்யுங் காசஞ்செஞ்சந்தனமும்

செலத்தும் போதப்பசு விச்நெய்யும்

பய்யுஞ் சுக்கில வடுகனுக்கு

பகரும் புள்ளடிச் சாற்றிலிட

அய்யமுடைய கண்ண மரம்

பறக்கும் வேப்பிலைச் சாற்றிலிடே

மேலும் கண் நோய்களுக்குத் தாய்ப்பாலிலும், காசநோய்க்குச் செஞ்சந்தனத்திலும், பசுவின் நெய்யிலும், சுக்கிலவடுகனுக்கு புள்ளடிச் சாற்றிலும் அய்ய நோய்களுக்கு வேப்பிலைச் சாற்றிலும் வழங்கிட நோயெல்லாம் பறந்து போகும்.

95. இருந் யிரணச் சுக்கிரனுக்

கேகும் மத்தஞ் சாத்திலிடுந்

தோடுந் ரத்தப் படுவனுக்கு

துலங்கும் வேப்பம் பட்டைச்சார்

கடுகிலீக் கண்ணிற் பூழுவெட்டுக்

கசக்கி முருக்கிலைச் சாற்றிலிட

மூடுங்கண்ணு முழிப்ப தற்கு

முத்திரந் தன்னிலிடப் போமே

இரண சுக்கிரனுக்கு ஊமத்தம் சாற்றிலும், இரத்தப்படுவனுக்கு வேப்பம்பட்டைச் சாற்றிலும், கண்ணில் உண்டான பூழுவெட்டிற்கு முருக்கிலைச் சாற்றிலும், மூடிக்கொண்டே இருக்கும் கண்களைத் திறப்பதற்கு சிறுநீரிலும் இடலாம்.

96. போமே சேத்தமக் கரப்பானுக்கு
புற்பம் பேரண்டச் சாற்றிலிட
ஆமே பித்த கரப்பானுக்கு
ஆகுங் கருஞ்சீரகந் தன்னிலிடு
காமகெரந்தி யுள்ள தெல்லாங்
காணாத் தோடைச் சாற்றிலிட
தாமே வாத வாய்வுக்குத்
தளரும் வெற்றிலை தனிப்பகரே

சேற்பமக் கரப்பானுக்குப் பேரண்டச் சாற்றிலும், பித்த கரப்பானுக்கு கருஞ்சீரகத்திலும், காமகிரந்திக்கு ஆடாதோடையிலைச் சாற்றிலும், வாதவாயுவிற்கு வெற்றிலைச் சாற்றிலும் வழங்க அந்த நோய்கள் குணமாகும்.

97. பகரும் வெந்தையம் வாய்வுக்கு
பறக்குஞ் சேத்தமம் கொள்ளுப்பொடி
கொல்லாத வயர்க ளிருந்தால்
தாக் மத்திப் பட்டைச்சார்
ஆகமே கிராணிக் கெருமைவெண்ணை
ஆகுஞ்சீரா கிராணி ரத்தம்
துகையாம் வாய்வுக்கு
யொக்கு மிவைகளுக்கு வையே

வாயுத் தொல்லைகளுக்கு வெந்தயத்துடனும், சேற்பம நோய்க்குக் கொ,ளுப் பொடியிலும், வயிறு கழிந்தால் தாக்குமத்தி பட்டைச்சாற்றிலும் கிராணி நோய்களுக்கு எருமை வெண்ணையிலும், சீதக்-கிராணி, இரத்த கிராணி வாயு கிராணிகளுக்கு பாவட்டை சுரசங்களிலும் சாப்பிடவேண்டும்.

98. சுரத மெட்டுக் கிராணிக்கும்

துலங்கு மெருமைத் தயிராகும்

விரதம் விரோசன மிளகிலிட

விளங்குங் குன்மம் மெருமைநீர்

பாதம் வலிக்கும் வலிகுன்மம்

பகரும் முருங்கைச் சாற்றிலிட

இரத்தந் இரதம் குன்மம் வாய்வுக்கு

யொத்த மிவைகளுக்கு வையே

எட்டுவகை கிராணிகளுக்குச் சுரசத்திலும், விரோசனங்களுக்கு எருமைத் தயிரிலும், குன்ம நோய்களுக்கு மிளகிலும், கால், கை வலி-களுக்கும், வலிகுன்மத்திற்கும் எருமைநீரிலும், இரத்தகுன்மம், வாயு இவற்றிற்கு முருங்கைச் சாற்றிலும் வழங்கிட நோய்கள் நீங்கும்.

99. கருக்குச் சத்தி குன்மத்துக்கு

கஷாயம் வில்வச் சாற்றிலிட

உருக்கும் வயிற்றில் வலி கண்டால்

ஓடுமோடு மாவிலங்கைச் சாறு

பருக்கும் மேலில் கவிசைக்கு

பகிர்ந்த காரை யிலைச் சாறு

பெருகும் பித்த வாய்வுக்கு

பேசும் நீலிச் சாறாமே

சத்தி குன்மத்திற்கு வில்வ இலை கசாயத்திலும், வயிற்றுவலிகளுக்கு மாவிலங்கைச் சாற்றிலும் உடம்பில் உண்டாகும் கவிச்சு நாற்றத்திற்கு காரை இலைச்சாற்றிலும் பித்த வாயுவிற்கு நீலிச் சாற்றிலும் வழங்க இந்நோய்கள் குணமாகும்.

100. நீலிகாது வெளிச்சிக்கு

நிகழுங் கீழ்க்காய் நெல்லிச்சார்

காலில் வாதம் மொடக் கொத்தான்

கன்றந் தலைவாதந் தடரியிலை

சூலை விரணம் வாதமெல்லாம்

யேகுஞ் சாரணை யிலைச்சாறு

காதெழுச்சிக்குக் கீழ்க்காய் நெல்லிச்சாற்றிலும், கால்வாதத்திற்கு முடக்கொற்றான் இலைச்சாற்றிலும், சூலை, வாதம், விரணம் இவற்றிற்கு சாரணை இலைச்சாற்றிலும் வழங்க வேண்டும் என்பது.

101. பெண்ணே பல்லடி வாதம்போம்

பெருகுஞ் சுக்கு நீரிலிட

கண்ணே தடிப்பு வாதமெல்லாம்

களரும் பழச்சாறு தன்னிலிட

அண்ணே ஊது வாதமெல்லாம்

அகல அஞ்சடிக்கு மகத்திடுமே

சுக்குக் கசாயத்தில் இம்மருந்தை வழங்கிட பல்லடி வாதம். தடிப்பு வாதமெல்லாம் எலுமிச்சம்பழச் சாற்றிலிட நீங்கும். ஊது வாதம் ஆகிய எல்லாவற்றையும் கூட இம்மருந்து குணமாக்கிடும் என்பதாம்.

102. அண்டத் தடுத்கும் வாதமெல்லாம்

அடிக்குங் குழற்சிப் பருப்புச்சாறு

பாதங் குதியில் வாத-மெல்லாம்

மடங்கு முவரின் மஞ்ஞிவிட

நீத முடனே ஆசனத்தில்

நெருக்கும் பிளவை பசுவின்பால்

ஞதந் தண்டில்ப் பிளவைக்கு

துலங்கும் பொன்னாங்-காணிச் சாறே

அண்ட வாதங்களுக்கெல்லாம் கழற்சி பருப்புச் சாற்றிலும், குதிங்கால் வாதமெல்லாம் உவர் மஞ்ஞிலிடவும். ஆசனத்தை நெருக்கித் தங்கித்ரும் பிளவை பசுவின்பாலில் வழங்கலாம். முதுகந் தண்டில் பிளவைக்கு பொன்னாங்காணிச் சாற்றிலும் வழங்க அந்தந்த நோய்கள் குணமாகும் என்பதாம்.

103. சாரே உச்சிப் பிளவைக்குத்

தானே பசுவின் நெய்யுடனே

வாரே பித்தசுரம் முலைப்பால்

வாங்குஞ் சன்னி முசுறுமுட்டை

சேரே வாத சுரத்துக்கு

செலுத்து நொச்சிச் சாற்றிலிட

பாரே பித்த சன்னிகண்டால்

பரக்கு முள்ளி யிலைச்சாரே

உச்சிப் பிளவைக்குப் பசுவின் நெய்யிலும், பித்த சுரத்திற்கு முலைப்பாலிலும் சன்னிநோய்க்கு முசுறுமுட்டைச் சாற்றிலும் வாதசுரத்திற்கு நொச்சிச் சாற்றிலும் பித்த சன்னிக்குமுள்ளி இலைச் சாற்றிலும் வழங்கலாம்.

104. விலையே அலட்டுச் சன்னிக்கி
யேகுந் தவரை யிலைச்சாறுந்
தலையா திருக்கும் நடைச்சன்னி
தலங்குஞ் சாரணை யிலைச்சாறு
மலைக்கும் பாம்பு கடித்தாக்கால்
வாரே பாக லிலைச்சாறு
அலையுஞ் சன்ன வெற்றிலையாம்
ஆகும் நசியஞ் சிறுவனுதல்

அலட்டு சன்னி நோய்க்குத் தவரை இலைச்சாற்றியும், துன்பந்தரும் நடைசன்னிக்கு சாரணை இலைச்சாற்றியும், பாம்பு கடித்த விஷம் ஏறாமல் இருக்க பாகலிலைச் சாற்றியும் வழங்கலாம், விஷம் ஏறாமல் இருக்க வெற்றிலைச் சாற்றில் நசியமிடவும்.

105. வளுதலை பனைசை ஊமத்து
வழங்கும் விரியனஞ் சித்தகத்தி
தொளுகும் பூரான் பாகலிலை
குடிக்குந் தேளு யிலுப்பைப்பூ
புகட்டுமுடக் கொத்தா னிலையே

கட்டுவிரியன் கண்ணாடிவிரியன் போன்ற விஷ உயிரிகளுக்குச் சிற்றகத்திச் சாற்றியும், பூரான் கடிக்குப் பாலிலைச் சாற்றியும், தேளுக்கு இலுப்பைச் சாற்றியும் முடக்கொத்தான் இலைச் சாற்றியும் வழங்கலாம்.

106.முடக்கும் முதலைக் கடித்தாக்கால்
மீனும் பன்னி நெய்தனிலே
நடக்கும் மனிதர்தான் கடித்தால்
நாட்டும் பருத்தி யிலைச் சாற்றில்
கொடுக்குஞ் சூனியம் பேய்கறுப்பு
துலங்கும் பூனைப் பாதயிலை
அடக்க மான பெருச்சாளி
ஆகும் பேயின் பாகலிலை

முதலை கடித்துவிட்டால் இந்தச் சஞ்சீவி குளிகையை சமைத்த மீனுடன் சேர்த்துச் சாப்பிடலாம். மனிதர்கள் கடித்துவிட்டால் பருத்தி இலைச்சாற்றில் கொடுக்கலாம்.பில்லி,சூனியம்,பேய் கறுப்பு பூனை,பெருச்சாளி,கடிகளுக்கு பேய்ப்பாகயிலையில் சேர்த்து வழங்கலாம்.

107.மேயும் பூச்சி காதில் வந்தால்
பெருகு மெருக்கிலைச் சாறாகும்
ஆயும் நாசி காய்ப்டமும்
முத்து மாவின் கோமியத்தை
வாயில் வளரு முன்னாக்கு
மரிக்கும் ஆட்டு நெய்யிலிட
ஆயும் பல்லு அசைவானால்
ஆகும் வேலம் பட்டைச்சார்

மேயும் பூச்சிகள் காதில் விழுந்தால் எருக்கிலைச் சாற்றில் குளிகையை வழங்கலாம்நாசிகாப்டம் செய்து முற்றிய ஆவின் கோ-மியத்தை வாயில் வளரு உண்ணாக்கிற்கு வழங்கலாம். இதனை ஆட்டு நெய்யிலும் வழக்வும்.பற்கள் ஆடுமானால் இக்குளிகையை ஆலமீ-பட்டைச்சாற்றில் வழங்கலாம்.

108.பட்டை யான ஒட்டியபுண்
பரிக்கு மாகுங் கெந்தமன்ப
அட்ட வாதஞ் சூலைக்கு
ஆகும் வெள்வேலங் காய்ச்சாறு
மூட்டும் பக்கச் சூலைக்கு
மோதுங் கோடக சாலைச்சார்
தட்டுஞ் சந்த விப்புருதி
தாக்கும் ஆட்டின் னீர்தன்னில்

உடம்பில் ஒட்டிய புண்கள், அட்டவாதம்,சூலை இவற்றிற்கு வெள்வேலங்காய்ச் சாற்றுடன் வழங்கலாம்.பக்க சூலைக்கு ஓதும் கோடைச் சாலைச் சாற்றிலும்,சந்த விப்புருதிக்கு ஆட்டு நீரிலும் வழங்கலாம்.

109.ஆட்டுங் கெர்ப விப்புருதி
ஆகும் பழஞ்சோர் தன்னிலிட
மூட்டும் புத்தக் கரப்பானுக்கு
மீறும் பழச்சார் தன்னிலிட
யீட்ட மருந்து யிடுகுறைக்கு
இயகுங் கோவை பசுவின்பால்
தேட்டும் யோனிக் கட்டுக்கு
திரண்ட பிரண்டைச் சாற்றிலிடே

பெற்ப விப்புருதி நோய்க்கு பழஞ்சோற்றில் வழங்கலாம். புற்றுக் கரப்பானுக்கு பழச்சாற்றில் வழங்கலாம்.மருந்தீட்டை நீக்குவதற்கு கோவை இலைச் சாற்றில் பசும்பாலிலும் வழங்கலாம். யோனிக் கட்டு நோய்க்குப் பிரண்டைச் சாற்றில் வழங்கலாம்.

110. சாத்தே ஆலின் கட்டுக்குச்
சரக்கு முருங்கைப் பூச்சாற்றில்
யேற்றுங் கொற்ற மாம்பொடியாம்
யேகும் பித்தபாண்டு வீக்கம்
மாத்தஞ் சங்குச் சோகைக்கு
வளருஞ் சீரகந் தன்னில் வையே

ஆலின் கட்டிற்கு முருங்கை பூவின் சாற்றியும், பித்தபாண்டு வீக்கம் இவற்றிற்கு கொற்ற மாம்பொடியும், சங்கு சோகைக்கு நல்ல சீரகத்துடன் சேர்த்துங் கொடுக்கலாம்.

111. வையே சோகைக் காமாலை
மாற்று மேல அரிசியிட
உய்யும் வாத்குக் காமாலை
யெல்லாமொடுங் கடுக்காய்ச் சாற்றிலிட
செய்யும் னோவு நானறிந்து
சேர்த்து மாத்திரை யநுப்பானம்
அய்ய மின்றிக் கொடுத்தாக்கால்
அருந்தும் நோய்க ளகன்றிடுமே

மேலும் சோகை, காமாலை இவற்றிற்கு அரிசியுடன் கலந்து வழங்கலாம். கடுக்காய் சாற்றில் வழங்கினாலும் காமாலை நீங்கும். நோயின் தன்மை அறிந்து மாத்திரைகளை தக்க அனு-பானத்தில் வழங்கினால் பல நோய்களை அகற்றலாம்.

112. அகன்றிடுவே தாபசுரக் குளிகை கேளு
அதிமதுரஞ் சந்தனமுங் கிராம்பு நன்னாரி
புகன்ற கோ ரோசினையுஞ் சுக்கு மேலம்
பிரியமுடன் முந்திரிகை பேரிச் சோடு
தகன்றிடு விலாமிச்சுடனே வெட்டி வேரும்
தளம்பாமல் ரோகிணியும் வேறு தாரம்
நெகிழ்ந்திடு வங்காளப் பச்சைதண்ணீர் மிட்டான்
நேரான யிலுப்பைப்பூ பலமு மொன்றே

இனிவரும் பாடல்களில் தாபசுர குளிகை சொல்லப்படுகின்றது. அதிமதுரம், கிராம்பு, சந்தனம், நன்னாரி கோரோசினை, சுக்கு, ஏலம், முந்திரிகை, பேரீச்சு, விலாமிச்சுவேர், வெட்டிவேர், கடுகு ரோகிணி, அரிதாரம், வங்காளப் பச்சை, தண்ணீர்மீட்டான் இலுப்பைப்பூ இவை வகைக்கு 35கி ாீதம் எடுத்துக் கொள்ளவும்.

113. ஒன்றான வகையெல்லாம் பலமொன் றாக
உறுதியாய் யிளநீரி விட்டு ஆட்டி
நன்றாகத் தேத்தான்காய் அளவு உண்டை
நல்லயிள நீருரைத்துக் கொள்ளும் போது
கொண்டதொரு தாபசுரஞ் சன்னி வாதம்
தெரிக்குமடா கெர்ப்பசுர மெல்லாந் தீரும்
வென்றதொரு சுரங்களெல்லாந் தீருஞ் சொன்னேன்
விதமுடனே வேரையொன்று விபரங்க ளேளே

வகைக்கு 35கி ாீதமெடுத்து இடித்து இளநீர் விட்டு அரைத்து தேற்றான் கொட்டை அளவு உருண்டைசெய்து இளநீரில் உரைத்து உட்கொண்டு வர தாபசுரம், சன்னிவாதம், கெற்பசுரம், பிற சுரங்கள் எல்லாம் தீரும். இதற்கு வேறு ஒரு விபரம் சொல்வேன்.

114. கோரோசினைக் குளிகை கிராணிக்கு:-

அகமுங்கோ ரோசினையின் குளிகை யப்பா
கெடியான மிளகோமம் லவங்கப் பூவுந்
தாழ்வில்லாச் சாதிக்காய்ப் பத்திரியுங் கூட்டி
தாக்கியதோர் மூலமுடன் திப்பிலியுங் கோஷ்டம்
மாணுக்குஞ் சீரகங்கோ ரோசினையும் நல்ல
அதின்துளிரும் மாந்துளிரும் வேப்பினங்கரு வேப்பினீர்க்கில்
மீனுமரசங் கற்பூரம் வகைக்க களஞ்சி
மீளாமல்த் தங்கரேக் கரைக்க ளஞ்சே

மிளகு, ஓமம், இலவங்கப்பூ, சாதிக்காய்ப்பத்திரி, மூலம், திப்பிலி, கோட்டம், சீரகம், கோரோசினை மாந்துளிர், வேப்பந்துளிர் மற்றும் ஈர்க்குகள் இவற்றுடன் கற்பூரம், இவை யாவும் வகைக்கு 5கிராம் வீதம் எடுத்துக் கொள்ளவும்.

115. அரைக்களஞ்சி தன்னுடனே மருந்தை யெல்லாம்
மாட்டவே வகைகேளு செண்பகப்பூக் கூட்டி
குறையாமல் மிளகு காவட்டம் புல்லும்
குணமுடனே வகையொன்று பலமொன் றாக
நிறையாகக் கஷாயத்-தை விட்டு ஆட்டி
நினவுடனே யிருசாமம் நேரா யாட்டி
பறையாமல் நிழலுலர்த்தி பதனம் பண்ணி
பண்புடனே அனுபான மறிந்து செய்யே

தங்க ரேக்கு 2.5கி எடுத்து மருந்துகளை எல்லாம் சேர்த்து அரைத்துக் கொள்ளவும். மிளகு, காவட்டம்புல் இவை வகைக்கு 35கி வீதமெடுத்து கஷாயம் விட்டு ஆட்டி 6மணி நேரம் தொடர்ந்து ஆட்டவும். இவற்றை நிழலில் உலர்த்தி பக்குவப்படுத்திக் கொள்ளவும்.

116. அறிந்துநீ செய்திடுவாய் வாத பித்தம்
ஐயமுடன் நோயறிந்து அதற்குச் சாந்தி
முறிந்திடாச் சீரகங் கொத்த மல்லி
மிளகோமங் கொடுவேலி அரத்தை சுக்கு
தெரிந்துகொண்டு அனுப்பானங் கிஷாயத் திட்டு
செகதலத்தி லுள்ளநோய் தெறிக்கும் பாரு
பொருந்தவே நாள்மூன்று அஞ்சு ஏழு
போகுமடா பத்திய மாத்திரை நாளொன்றே

வாதபித்தம், இவற்றின் தன்மையறிந்து அதற்கேற்ப மருந்தினை வழங்கிடவும். சீரகம், கொத்தமல்லி, மிளகு, ஓமம், கொடுவேலி, அரத்தை, சுக்கு இவற்றை இட்டு முறைப்படி கஷாயத்தைச் செய்து கொடுக்க மனிதனுக்கு உண்டாகும் நோய்களுள் பலவும் நீங்கும். நோய்க்கேற்ப ஐந்து நாட்கள், ஏழு நாட்கள் இக்குளிகையை உண்டு வரவும்.

117. ஒன்றான கிராணிவகை யேழுக் குந்தான்
உறுதியா யனுபான மருந்துக் கேளு
வென்றான தென்னம்பூ முத்தக் காசு
விளங்கவே வாளைசிறு மொட்டும் பூவும்
பண்புடைய காட்டத்திப் பூவும் பட்டை
பதறாமல் குருக்கத்திப் பட்டை கூட்டி
செண்பகங்கம் பாளைவேர் கிளுவைப் பட்டை
சேரவே சமனிடையாய்த் தூள தாக்கே

ஏழுவகையான கிராணிகளுக்கும் இவ்வகை மருந்தை அளிக்கும்போது தென்னம்பூ, முத்தக்காசு, வாளையின் சிறுமொட்டு, காட்டாத்திபூ பட்டை, குருக்கத்திபூ பட்டை, பங்கம்பாளைவேர், கிளுபைப்பட்டை இவற்றைச் சமஅளவெடுத்துத் தூளாக்கிக் கொள்ளவும்.

118. தாக்கிட்ட தூள்தனிலே சிறி தெடுத்து

தனிநாளி நீரிலிட்டு யெட்டொன் றாக்கி

மார்க்கமுடன் மன்சட்டி காய வைத்து

வளமாக அதிலிட்டு முறித்துக் கொண்டு

யேறகவே வெள்ளை யுள்ளிதனைத் துவைத்து

யிதமாக விராகன்கால்க் காயம் வைத்து

சேர்க்கவே வேப்பம்பூ வரைத்துக் கட்டி

சிவக்கவே உமிப்புடந் செலுத்தி வாங்கே

1.3லிட்டர் தண்ணீரில் சிறிதளவு மேற்சொன்ன பொடியைப்போட்டு அடுப்பேற்றிக் காய்ச்சி எட்டிலொன்றாக்கி மன் சட்டியைக் காய வைத்து அதில் கசாயத்தை ஊற்றி முறித்துக் கொள்ளவும். பூண்டை நசுக்கிச் சேர்த்து பெருங்காயம் 1 கிராம் சேர்த்து வேப்பம் பூவை அரைத்துக் கட்டி சிவக்கும்வரை உமிப்புடமிட்டு பெருங்காயத்தை எடுத்துக்கொள்ளவும்.

119. கிராணி யுண்டை:

செலுத்திருந்த பெருங்காயத் தனை யெடுத்து

தேய்த்துரைப்பாய் கஷாயத்தில்க் கிராணி யுண்டை

பலித்திடவே ரெண்டுமொன்றாய் உரைத்துக் கொண்டு

பன்பாக மேதைத்தயிர் வடித்துச் சேர்த்து

கலித்திடவே வசம்புசுட்டுப் பொடித்துக் கொண்டு

கனம்பிறவே மேல்த்தூவிக் குழப்பி நன்றாய்

துலித்திடவே மூன்றுநா ளருந்தும் போது

சுகமாகப் புளிப்புகையைத் தூரத் தள்ளே

பெருங்காயத்தை உரைத்துக் கசாயத்தில் சேர்த்துக் கொள்ளவும். கிராணி உருண்டையையும் ஒன்றிரண்டெடுத்து உரைத்துக் கொண்டு எருமைத் தயிர் சேர்த்து வடித்து வசம்பைச் சுட்டுப் பொடித்து மேலே தூவி குழப்பி 3 நாட்கள் சாப்பிடவும். புளி, புகை தள்ளவும்.

120. ஊருகின்ற கிராணிதனுக் குருண்டை கேளு

சுத்திசெய்த கஞ்சாவுங் கூகை நீறும்
சேர்கின்ற கருவேம்பு களச்சிவனைக் கஞ்சும்
சேர்த்திடுவாய் குரோசாணி விடைய மூனும்
மீறுகின்ற சாதிக்காய் விராக னொன்று
விதமான அபினியொன்று விரைந்து கூட்டி
கூறபடா வாழைப்பூச் சாற்றில ரைத்து
குன்றுமுத்து முன்மருந்தோ டுரைத்துக் கொள்ளே

இப்பாடல் கிராணிக்கு உருண்டை சொல்கிறது. சுத்திசெய்த கஞ்சா, கூகைநீறு, கருவேம்பு, கழற்சி, குரோசாணி, அதிவிடையம், சாதிக்காய் வகைக்கு 4கி இவற்றுடன் அபினியும் சேர்த்துக் கூட்டி வாழைப்பூச்சாற்றில் அரைத்து ஆமணக்கு விதையையும் உரைத்துக்கொள்ளவும்.

121. உரைப்பான உள்க்காச்சல் ரத்த பித்தம்

உழலையுடன் பயித்தியத்தால் வந்த நோவும்
சிறப்பாக யிருக்குமஉ்ஷ்ட்டின காந்தி தன்னை
திறமாக ஓர்பிடியும் முத்தக் காசு
மறைப்பான மிளகுமோர் களஞ்சி போடு
மறக்காமல்ச் சீரகமு முடிஞ்சு போடு
விரைப்பாகக் காச்சியுண்ணு சீரகமுஞ் சேர்த்து
விதமான ரத்தபித்தங் காய்ச்சல் தள்ளே

உள்காய்ச்சல், இரத்தபித்தம், உழலை, பித்தத்தால் வந்த நோய்கள், உஉ்ஷ்ணடின காந்தி இவை யாவும் நீங்கும். முத்தக்காசு, மிளகு, சீரகம் இவற்றைத்துணியில் மடிந்து போட்டு காய்ச்சி உண்ண சீரகம் சேர்த்து உண்ண ரத்தபித்தமும் காய்ச்சலும் நீங்கும்.

122. சதாவேலி நெய்:

தள்ளவே சதாவேலி நெய்யைச் சொல்வேன்
தருகாம லதின்கிழங்குச் சாறு வாங்கி
வெள்ளரிக்காய் நெல்லிக்காய் விரைந்து சேர்த்து
விளங்கவே யிளநீரும் கரும்பு சாறும்
கொள்ளவே வகைக்கியிரு நாளிச் சாறு
குறையாமல் நாநாளி நெய்யை விட்டு
மெள்ளவே திரிகடுகு திரிபலையுங் கூட்டி
மீறாமல்க் கொத்தமல்லி ஏலங் கூட்டே

சதாவேரிக் கிழங்கின் சாற்றை எடுத்து வெள்ளரிக்காய், நெல்லிக்காய் இவற்றைச் சேர்த்து 1.3லிட்டர் இளநீர் 1.3லிட்டர் கரும்புச்சாறு இவற்றைச் சேர்த்து 5.2லிட்டர் நெய்யைச் சேர்த்து திரிகடுகு திரிபலை கூட்டி கொத்தமல்லியும், ஏலமும் சேர்த்துக்கொள்ளவும்.

123. ஏலமுடன் யிலவங்க மதுரங் கோஷ்டம்
யின்பமுடன் ரெண்டுபலம் வீதம் வாங்கி
கோலமுடன் வங்காளப் பச்சை தானும்
குறையாமல்ச் சீரகமோ ரண்டுங் கூட்டி
ஆலயமாய்ப் பேரீச்சுகல்கண்டு சக்கரையுங் கூட்டி
அப்பனே யிந்துப்பு ஓமங் கூட்டே

ஏலம், இலவங்கம், அதிமதுரம், கோஷ்டம் இவை வகைக்கு 35கி வீதம் எடுத்து வங்காளப் பச்சை, சீரகம் இவற்றையும் அதே அளவு கூட்டி பேரீச்சம்பழமும் சர்க்கரையும்சேர்த்து இந்துப்பு ஓமம் இவற்றையும் சேர்த்துக் கொள்ளவேண்டும்.

124. கட்டுவாய் கோரையுடன் அரிசி மேதை
குறையாமல் மகாமேதை யெல்லாங் கூட்டி
நாட்டியதோர் வகைக்குரெண்டு பலமும் வாங்கி
நன்றாக வேயரைத்து அதனில்ப் போட்டு
மூட்டுவாய் அடுப்பேத்தி அனலை மூட்டி
முறுகாமல் மெழுகுபதங் காய்ச்சி வாங்கி
ஊட்டுவாய் நெய்க்கரண்டி யிருநே ரந்தான்
ஓரத்திட்ட தண்டுதனக் குயிருண் டாமே

கோரை அரிசி, மேதை, மகாமேதை இவற்றை வகைக்கு 70கிராம்வரை கூட்டி அரைத்து முன் மருந்தில் சேர்க்கவும். பாத்திரத்தில் எடுத்து அடுப்பேற்றி அனல்மூட்டி மெழுகு பதமாகும் வரை காய்ச்சி இறக்கி வேளைக்கு ஒரு நெய்யக்கரண்டி வீதம் இருவேளை உண்டு வரவேண்டும்.

125. உயிருண்டாம் பூரிக்குந் தாது விர்த்தி
ஓகோகோ ரத்த பித்தம்நீர்க்க-டுப்பு
செயலான மூத்திரத்தின் கிரிச்சி பானை
தெளியுமடா எலும்புருக்கி சதை யடைப்பு
தகிலானமாஞ் சரீரமெல்லாங் கரந்தி யுண்டாம்
சகலவெட்டை மேகங் காந்தள் தீரும்
பயிரிட்டுப் பலன்கண்ட வார தொக்கும்
பண்பாக புளிப்புகளை மாத்தி டாயே

அவ்வாறு உண்டுவர உடம்பில் உயிர்ப்பு உண்டாகும். தாது விருத்தி-யடையும். இரத்தபித்தம், நீர்க்கடுப்பு, மூத்திரகிரிச்சரம், எலும்புருக்கி, சதையடைப்பு, உடலெங்கும் உண்டாகும் காந்தல், வெட்டை, மேகம், காந்தல் இவை நீங்கும். மருந்துண்ணும் காலங்களில் புளியைத் தவிர்க்கவும்.

..67

126. இரத்தபித்தம் போக செங்களுநீர் நெய்

மாத்திடவே ரத்தபித்தப் போகக் கேளு

பதறாமல் செங்களநீர்க் கிழங்கு கொண்டு

மாத்தியதோர் சதாவேலி தாமரையின் வளையம்

மகாமேக அமுர்தவள்ளிக் கிழங்கு சேர்த்து

தொகுத்திடவே குன்றியிலைச் சாருபடி ரெண்டு

தோணவே ஆவின்பால் படியும் ரெண்டு

நேத்தியதாய் ஆவின்நெய் படியும் ரெண்டு

நேகவரைக் குளங்குதனை நெய்யில் சேரே

செங்கிளநீர்க் கிழங்கையெடுத்து அதனுடன் சதாவேரி, தாமரை வளையம், அமிர்தவள்ளிக் கிழங்கு இவற்றையும் சேர்த்து அரைத்து குன்றிமணி இலைச்சாறு 2.600மிலி ஆவின்பால் 2.600மிலி ஆவின்நெய் 2.600மிலி சேகரித்துக் கொள்ளவும்.

127. நெய்யதனில் சமன்கொண்டு மருந்தை யெல்லாம்

நேசமுடன் லேகியமா யிரக்கு முன்னே

பையவே கருப்புக்கட்டிப் பொடிதா னாது

தவறாமல் மதுரமரைப் பலமுந் தூவி

தொய்யவே யேகமொன்றாய்த் தஞ்சக் கிண்டி

சுகமாக யிரக்கிவைத்து சுருக்கைக்கேளு

அய்யமாய்க் கடுகுடனே நெய்யுந் கொண்டால்

அதிசாரம்ரத்தபித்தம் மகன்டு போமே

சரக்குகளை எல்லாம் அடுப்பிலேற்றிக் காய்ச்சி இளகிய பதமாக வரும்போது கருப்பட்டி பொடியைச் சேர்த்து அதனுடன் பொடித்த 35கி அதிமதுரத் தூளையும் தூவிக் கொள்ளவும். பின்னர் நன்றாகக் கிளறி இறக்கிக் கொள்ளவும். கடுகும், நெய்யும் உட்கொண்டால் அதிசாரம், இரத்த பித்தம் இவை நீங்கும்.

128. போமடா யிருவேலிச் சந்தனமும் நன்னாரி

புகழ்முத்த மதிமதுரந் திப்பிலியுங் கூட்டி

ஆமடா முந்திரிகை பேரிச்சங் கூட்டி

அப்பனே யிலுப்பைப்பூ யேக மொன்றாய்

தாழ்வில்லா மருந்தோர் பலமொன் றாக

தப்பாம விளநீரி லரைத்துப் பின்பு

ஓமடா கருப்பஞ்சார் முலைப்பால மாகும்

உறுதியா யரைத்துண்டை குன்றி முத்தே

இருவேலி, சந்தனம், நன்னாரி, முத்தக்காசு, அதிமதுரம், திப்பிலி, முந்திரிகை, பேரிச்சம்பழம், இலுப்பைப்பூ இவற்றை ஒன்றாக்கி இளநீரில் அரைத்து கரும்புச் சாற்றிலும், தாய்ப்பாலிலும் அரைத்து குன்றிமணி அளவாக உருண்டை செய்து கொள்ளவும்.

129. குன்றிமுத்துப் போலுருட்டி நிழலு லத்திக்

கொடுத்திடுவாய் யிளநீரில் முலைப்பா லொன்றை

சென்றுதான் கொடுத்திடவே பித்த மெல்லாந்

தீருமடா யின்னமொரு சேதி கேளு

பண்டுள்ள செண்பகப்பூ பூமிநாதந் திப்பிலியும்

பாவகமாய் வறுத்துநீ பொடிதான் செய்து

தின்றிடுவாய் ஆவின்பால் கலக்கிக் கொள்ள

தெறிக்குமடா நெஞ்சில்க் கட்டு போமே

குன்றிமுத்து அளவாக உருண்டை செய்து நிழலில் உலர்த்தி இளநீரிலோ, தாய்ப்பாலிலோ வேளைக்கு ஒரு உருண்டை வீதம் கொடுக்க பித்தம்நீங்கும். செண்பகப்பூ, பூமிநாதம், திப்பிலி, இவற்றை வறுத்துப் பொடிசெய்து ஆவின்பாலில் கலந்துக் குடிக்க நெஞ்சில் உண்டாகும் கோழைக்கட்டு நீங்கும்.

130. பித்தவெறி:

போச்சுதடா பயித்தியத்துக் கின்னங் கேளு
முடல்முசுக்கை சிறுக்கீரை பொன்னாங் காண
வாச்சுதே நாய்ப்பாலை நெல்லிக் காயும்
வகைவகையாய்ச் சாறு உரியளவு கொண்டு
காச்சவே அதிமதுரம் லவங்கப் பட்டை
கனியான முந்திரிகை யிலுப்பைப் பூவும்
வாச்சுதடா சீரகமுஞ் சந்தனமு மெல்லாம்
வளர்சாத்தி பேதியுடன் மருந்தை யெல்லாம்

பித்தத்திற்கு இன்னும் ஒரு மருந்தைச் சொல்வேன். முசுமுசுக்கை, சிறுகீரை, பொன்னாங்காணி, நாய்ப்பாலை, நெல்லிக்காய் இவற்றின் சாறு 1.3லிட்டர் பின்னர் அதிமதுரம், இலவங்கப்பட்டை, முந்திரி, இலுப்பைப்பூ, சீரகம், சந்தனம், சாத்திரபேதி இவற்றையெல்லாம் சேகரித்துக் கொள்ளவும்.

131. மருந்தையெல்லாஞ் சமன்கொண்டு ஆவின் பாலில்
வளமாகத் தானரைத்து ஆவின் நெய்தான்
திருந்தவே ரெண்டீபடிச் சாறுக் குள்ளே
செலுத்துவா யரைத்த மருந்தனுக் குள்ளே
பொருந்தவே யடுப்பேத்தி நெய்வ டித்து
புசித்திடுவாய் யிருநேர மஞ்சு நாளும்
மறித்திடவே பித்தமெல்லாந் தீருந் தீரும்
மக்களே உப்பும்புளி மறந்தி டீரே

மேற்சொன்ன மருந்துகளை எல்லாம் சம அளவாக எடுத்துக் கொண்டு ஆவின்பாலில் அரைத்து 2.6மிலி ஆவின்நெய் சேர்த்து காய்ச்சி வடித்திறக்கி தினம் இரண்டுவேளை வீதம் 5 நாள் வழங்க அனைத்து வகை பித்தங்களும் நீங்கும். உப்பு, புளி நீக்கவும்.

132. மறக்காம லின்னமொரு மருந்து கேளு

வயித்தியரே ஆவளை கீழ்காய் நெல்லி

சிறுகுருஞ்சா ரெண்டுடனே சமூலங் கொண்டு

சேரவே யிடித்துநன்றாய்ச் சாறு வாங்கி

பெருகவே பழச்சாறுஞ் சமனாய் விட்டு

பின்னுமின்று முச்சியுடன் குடோரி யாடி

உருகவே மருந்துவிட்டுத் தேய்த்துப் பின்னும்

உடம்பெல்லாந் துவாலையிட ஓடிப் போமே

ஆவளை, கீழ்க்காய்நெல்லி, சிறுகுறிஞ் இவற்றின் சமூலம் எடுத்து இடித்து சாறு பிழிந்து அதே அளவு எலுமிச்சம்பழச்சாறு சேர்த்து தலைக்குத் தேய்த்து முழ்கி, பின்பு உடம்பெல்லாம் தேய்த்துத் துவாலையிட ஓடிப்-போகும்.

133. ஓடியே போவதற்கு மருந்து கேளு

ஊர் முருங்கைப் பிஞ்சுபத்து சுக்கு ரெண்டு

தேடியதோர் நெல்லிக்காய் பத்துங் கூட்டி

சீரகமும் விராகன்ரெண்டு மிளகு ஒன்றாய்

ஓடியதோர் கடுகுஅரை தேத்தான் கொட்டை

நாலுடனே விரவியெல்லா மிடித்துத் தூளாய்

கூடியிரு நாளி நீ ரெட்டொன் றாக்கி

கொடுத்திடுவாய் விடியுமுன்னே குணத்தைக் கேளே

முருங்கை பிஞ்சு 10, சுக்கு இரண்டு, நெல்லிக்காய் 10, சீரகம்10, மிளகு10சி, கடுகு, அரை தேற்றான் கொட்டை இவற்றை இடித்துத் தூளாக்கிக் கொள்ளவும்.

134. கேளுநீ ராவடுப்பிலிக் குமுறக் காய்ச்சி

கிருபையுடன் விடியுமுன்னே கொடுக்கும் போது

தாள்வில்லா அகத்தியிலைச் சாரணையின் கொளுந்து

தளம்பாமல்ப் பிரண்டை பழம்புளி மிளகு

மேளமாய்க் கள்கரியு மீன்கரியு மூன்று

விரட்டிடுவாய் பத்தியம்பேரம் வெறியுந் தீரும்

நீளவே போடாமல்க் குடோரியுடன் மருந்து

நிலவாகத் துவாலையும் நீற கின்றிடாயே

இரவு நேரத்தில் அடுப்பேற்றிக் குமுறக் காய்ச்சி விடிவதற்குமுன் கொடுக்கலாம். அகத்தியிலை சாரணைக் கொழுந்து, பிரண்டை, பழம்புளி, மிளகு, கரி, மீன் இவற்றை நீக்கவும். குடோரி மருந்தையும் துவாலை இட்டுக் கொள்ளவும்.

135. நெகிழ்திடவே யின்னமொரு மருந்து கேளு

நிலவில்லா வெரிபித்தம் நெகிழ்ந்து போக

பகுந்திடுவாய் சுக்கு சக்கரையுங் கூட்டிப்

பழம்புளியும் புளியமரம் பொருக்கள் சாம்பல்

சுகபிச்சம் பழமேதைச் சாணிச் சாறும்

சுத்தமுடன் மேதைத்தயிர் சாரணையின் வேரும்

உகந்திடவே சமன்கூட்டி உள்ளுக் கொண்டு

உச்சியிலந் தேய்த்து உடம்பெங்கும் போடே

எரிபித்தம் இல்லாமல் நீங்குவதற்கு மருந்து சொல்வேன். சுக்கு, சர்க்கரை கூட்டி, பழம்புளியின் புளியமரப் பொருக்கின் சாம்பல், எலுமிச்சம்பழச்சாறு, எருமை சாணிச்சாறு, எருமைத்தயிர், சாரணைவேர் இவற்றை சமனாகச் சேர்த்து உடம்பிலும், தலையிலும் தேய்த்துக் கொள்ளவும்.

136. பொருவாய் நெரியிரண்டு முச்சி மேலும்
பிடரியிலே கோடோரியிட்டு ரத்தம் வாங்கி
தேடியதோர் முன்மருந்து விட்டுத் தேய்த்து
தேக்கிடவே யெலுமிச்சம் பழம்பத்துக் கீறி
ஓடிடவே ரத்தம்வர உரைக்கத் தேய்த்து
ஒருநா று குடஞ்சலத்தை மருநா ஊத்து
வாடாமல்க் கழுதைப்பால் பொன்முட்டை வேரும்
மயக்கமாய்ச் சமனரைத்து மகிழ்ந் தருந்தே

இரண்டுபக்க நெறியிலும், உச்சியிலும், பிடரியிலும், குடோரி-யிட்டு ரத்தம் வாங்கி முன்மருந்தை வித்துத் தேய்த்து பத்து எலுமிச்சம்-பழத்தைக்கீறி இரத்தம் வரும்வரை உரக்கத் தேய்த்து நூறுகுடம் தண்ணீரை ஊற்றவும். கழுதைப்பால் பொன்முசுட்டை இவற்றைச் சமனாக அரைத்து அருந்தவும்.

137. பொன்னாங்காணி தைலம்

அழுந்திடவே யின்னமொரு யெண்ணெய் கேளு
ஆனபொன்னாங்காணி மொசுக்கை சிறுக்கீரை வேரும்
பொருந்தவே சமன்கூட்டி தேங்காய் மட்டும்
பேரபட அரைத்துத் திரட்டிக் கொண்டு
வருந்தாமல் ஆவின்நெய் நாளி கூட்டி
மறக்காமல்ப் பாலதுவும் படிதான் கூட்டித்
திருந்தவே மதுரமரைப் பலம ரைத்துப்
பால்நெயில்ச் சேர்த்தி டாயே

பொன்னாங்காணி, மொசுமொசுக்கை, சிறுக்கீரை இவற்றைச் சமனாகக் கூட்டி தேங்காய் சேர்த்து அரைத்துத் திரட்டி ஆவின் நெய் 1.3லிட்டர், பசும்பால் 1.3லிட்டர், அதிமதுரம் 18கி அரைத்து மேற்-சொன்ன பால் நெய்யில் சேர்த்திடவும்.

.அக

138. சேர்த்திட்ட மருந்துகளையப் பாண்டந் தன்னில்

சலங்குருணி கூடவிட்டுக் கலக்கி நன்றாய்

வேத்திட்டுப் போகாமலக் கடைய மத்தால்

வேகமுன் திரளுமடா வேளை பார்த்து

மாத்திட்டுக் கலசத்தி லெடுத்து வைத்து

மருகாமல் நெல்லுக்குள் ளோர்னாள் வைத்து

யேத்திவே மறுனாளு மெடுத்து நன்றாய்

எலுமிச்சங் காயளவு யெடுத்த ருந்தே

சேர்த்த இந்த மருந்துகளை எல்லாம் பாண்டத்திலிட்டு 2.600மிலி தண்ணீர்விட்டுக் கலக்கி சேர்த்துப்போக விடாமல் நன்றாக மத்தால் கடைந்து வந்தால் மேலே திரளும். திரள்வதை எடுத்து வேறு கலசத்தில் எடுத்து எலுமிச்சம் காயளவு எடுத்து அருந்தவும்.

139. <u>உன்னாக்கு மருந்து:</u>

அருந்தவே உன்னாக்கு மருந்து கேளு

அப்பனே ஒட்டடையுங் கல்லுச் சுண்ண

மருகவே யெருக்கம் பால்தனிலிக் குழைத்து

மாசில்லா உன்னாக்குத் -தனில்த் தடவி

குருவை நெல் லடைசுட்டுத் தின்னத் தீரும்

கொண்டுநீ பத்தியந்தான் மூன்று நாளும்

விருதாவென் றெண்ணாதே மெய்யே தீரும்

விருப்பமுட னன்மருந்து விளம்பி டாயே

ஒட்டரை, கற்சுண்ணம் இரண்டையும் எருக்கம்பாலில் குழைத்து உன்னாக்கில் தடவி, நெல்லையும்சுட்டு சாப்பிட்டுவர உன்னாக்கு தீரும். விருப்பத்துடன் இந்த மருந்தைச் சாப்பிட்டு, மருந்துண்ணும் காலத்தில் பத்தியம் காத்கவும்.

..ஐ 74

140.விளம்பினோங் கபாலச்சன்னி மண்டை னோவு

வேரோடே போவதற்கு விளம்பக் கேளு

பழமான சம்பழச் சாறுழக்குத் தானும்

பத்தசித்தா மணக்கெண்ணை உரியுங் கூட்டி

தளம்பாமல்க் குத்திரிக்க மரத்தை சதகுப்பை

தான்கடுகு வசம்புகருஞ் சீரகமு முள்ளி

பொங்கவே வகைகளஞ்சி பொடிய தாக்கி

பூரிக்கச் சாறு யெண்ணை புகட்டிவெயில்

கபாலச்சன்னியும், மண்டை நோவும் இடியோடு ஒழிவதற்கான மருந்தைச் சொல்வேன். 165மிலி எலுமிச்சம்பழச்சாறு, சிற்றாமணக்-கெண்ணை 1.3லிட்டர் சேர்த்து குந்திரிக்கம், அரத்தை, சதகுப்பை, வசம்பு, கருஞ்சீரகம், உள்ளி இவை வகைக்கு 5கி அளவெடுத்துப் பொடித்துச் சாறு, எண்ணையுடன் சேர்த்து வெயிலில் வைக்கவும்.

141.வெயிலியே வைத்தெடுத்து மறுநாள்த் தாறு

பிரவே கலக்கியிட்டு வேடு கட்டி

பையவே ஆமணக்கி லிலையால்க் கட்டி

பாங்குடனே அஞ்சுநாள் அடவாய் வைத்து

தய்யலா ளாறாநாள் நல்லெண்ணை காய்ச்சி

தளம்பாமல் வெந்நீருஞ் சார்வாய் மூழ்கு

வையகத்தில் நாசிநீர் காத டைப்பு

மாறுமடா ஆதண்டைச் சாறுங் கூட்டே

வெயிலிலிருந்து இரண்டாம் நாளெடுத்து நன்றாகக் கலக்கி விட்டு வேடுகட்டி (ஆமணக்கிலையால்)வைத்து அடவாக ஐந்துநாட்கள் வைத்து ஆறாம் நாள் நல்லெண்ணை சேர்த்துக் காய்ச்சி தலைக்கு வைத்து வெந்நீரில் மூழ்கவும். மூக்கில் நீர்பாய்தல், காதடைப்பு இவை நீங்கும். இதனுடன் ஆதண்டைச் சாறு கூட்டிக் கொள்ளவும்.

142. கூட்டுடனே பல்லசைவு குடைச்சல் தாமும்
வட்டுவலி போவதற்குக் கூறக் கேளு
நாட்டிலுள்ள வெள்வேலு மகிழ மருது
நல்லகரு வேலுடனே யெலவம் பட்டை
வட்டமில்லாக் குறுணிநீர் வார்த்து நன்றாய்
வகைப்பட்டை சமன்கொண்டு குறுக்காச்சி
ஊட்டியே யிருநேரங் கொப்ப ளித்து
உறுதியுடன் வாய்னோவு யொழியும் பாரே

பல் ஆடுதல், பல்வலி, வட்டுவலி இவை நீங்குவதற்கு மருந்து சொல்வேன். வெள்வேல், மகிழம், மருது, கருவேல், இலவம்பட்டை இவற்றை 8லிட்டர் நீர்வார்த்து நன்றாகக் குறுகும்படி காய்ச்சி கஷாய-மெடுத்து காலை, மாலை இருநேரம் வாய்க்கொப்பளிக்க இந்த வாய்-நோய்கள் நீங்கும்.

143. புண்ணுக்கு கட்டும் மருந்து.
பாரென்ன வெள்ளைப் பாஷாண லிங்கம்
பாங்கான செங்கழுநீர் கோஷ்டங் கொண்டு
சேரென்ன பூவ ரசம்-பூ வுந் -தளிர்
சித்திரை மூலஞ் சமன்சேர் வாங்கி
மீறவே அச்சாறு விட்ட ரைத்து
விகமான யிலைக்கள்ளி தன்னி லூட்டே

வெள்ளைப் பாஷாணம் லிங்கம், செங்கழுநீர் கோட்டம், பூவரசம்பூ தளிர், சித்திரமூலம் இவற்றைச் சமஅளவெடுத்து பூவரசம் சாறு கூட்டி அரைத்து இலைக்கள்ளி சாற்றுடன் சேர்த்துக் கொள்ளவும்.

144. மூட்டாக யிலையவித்துப் புளித்து போட்டு

புதுமையுள்ள மருந்ததனை யிலையிலிப்பூசி

கட்டிடுவாய் புண்ணைதனிலிக் கட்டி வைத்துக்

கட்டுமறு நாளவத்து ஓலை கொண்டு

திட்டமாய் வழித்திடவே புழுக்க ளெல்லாந்

திரண்டுவரு மெடுத்தெறிந்து திரும்பக் கேளு

மட்டாக பூவரச யிலைய வித்து

மாசில்லாப் புண்தனிலே மகிழ்ந்து கட்டே

இலைக்கள்ளி இலைகளை அவித்துப் பிழிந்து இப்புதுமையான மருந்தை இலையில் பூசி புண்ணில் வைத்துக் கட்டவும்.மறுநாள் இக்கட்டை அவிழ்த்து ஓலைப்பால் வழித்தெடுத்துக் கொள்ளவும்.இப்போது புண்ணிலிருந்து புழுக்கலெல்லாம்வெளியே வரும்.அவற்றை வெளியே எடுத்தெறிந்து பூவரசு இலையை அரைத்துக் கட்டவும்.

145. மகிழ்ந்துநீ புண்ணுக்கு வரிசை கேளு

மரமஞ்சள் கஸ்த்தூரி காசுக் கட்டி

புகழ்ந்தகருங் குங்கிலியந் திப்பிலியுங் கட்டி

புனிதமாய்ச் சாதிக்காய் சமனீந் தூளாக்கி

தகந்த தென்னங் குரும்பைச்சாறீ நாளி கூட்டி

தருவான நல்லெண்ணை படிதானுஞ் சேர்த்து

யிகழ்ந்திடவே காச்சிநன்றாய் வடித்துக் கொண்டு

யிளைச்சிலை தனிலூட்டிப் புண்ணிலிப் போடே

பானையிலிருக்கும் குடிநீரினை இரண்டு நாட்கள் தொடர்ந்து காய்ச்சி குழம்பாக்கிக் கொள்ளவும்.அகலமான சட்டியில் குழம்பை வடித்து 35கி காந்தத்தையும் உடன் சேர்த்து அரயிபொடி, கெந்தி இவையும் வகைக்கு 35கி சேர்த்து ஆவாரை பொடி 25கி சேர்த்து எல்லாவற்றையும் ஒன்றாக்கி பொடித்துக் கொள்ளவும்.

146.போடவே வகையொன்று சொல்லக் கேளு
புனிதமாங் கடலிரஞ்சி மருது நவ்வல்
தேடுநீ கருங்காலி ஆவரையுந் தோடு
திடமாக வட்டத்தத்தி வேருங் கூட்டி
வாடாமல் வகைக்கஞ்சு பலமி டித்து
மக்களே சிலமாறு மரக்கால் விட்டு
கூடவே தாளிபோட்டு மிடா நாலுக்குள்
குமிறவே காச்சியொரு பானை சேரே

கடலிரஞ்சி, மருது, நவ்வல், கருங்காலி, ஆவாரை, வட்டதத்திவேர் இவை வகைக்கு 175கி சேர்த்து இடித்து 15.600மிலி தண்ணீர் சேர்த்து எட்டில் ஒன்றாகச் சுருங்க காய்ச்சி பானையில் வடித்து வைக்கவும்.

147. ஒருபானை காச்சியதோர் கஷாயந் தன்னை
உறுதியா யிருந்தநாளிக் குழம்பாய்க் காச்சி
பருஞ்சட்டி தனிலிறுத்தி வைத்துக் கொண்டு
பாங்கான காந்தமது பலமுஞ் சேறு
சிறந்திட்ட அரைபொடியுங் கெந்தி கூட்டி
திடமாக வகையதுவும் பலமுஞ் சேர்த்து
பொருந்திடவே ஆவரையில் பொடிதான் முக்கால்
புகழ்படவே வகையெல்லாம் பொடிய தாக்கே

பானையிலிருக்கும் குடிநீரினை இரண்டு நாட்கள் தொடர்ந்து காய்ச்சி குழம்பாக்கிக் கொள்ளவும். அகலமான சட்டியில் குழம்பை வடித்து 35கி காந்தத்தையும் உடன் சேர்த்து அரப்பொடி, கெந்தி இவையும் வகைக்கு 35கி சேர்த்து ஆவாரை பொடி 25கி சேர்த்து எல்லாவற்றையும் ஒன்றாக்கி பொடித்துக் கொள்ளவும்.

148. தாக்கிடுவாய் கஉஷாயத்தில்ப் பொடியை யெல்லாம்

தளம்பாமலக் கிண்டியே யிருக்கிக் கொண்டுப்

பாக்களவாய்த் தானுருட்டி நிழலு லர்த்திப்

பலமொரு மாவரைதேன் பரிந்து கொள்ளே

. . . .

உத்தமமா மின்மருந்து உழுதி காணே

குழம்பில் பொடியைச் சேர்த்து தளம்பாமல் கிண்டி இறக்கிக் கொள்ளவும். இதனைப் பாக்களவாக உருட்டி நிழலில் உலர்த்தி ஆவாரை 18கி அளவு சேர்த்துக் கொள்ளவும். இம்மருந்து மீது உழுதிகொண்டு சாப்பிட நோய்கள் குணமாகும்.

149. ஒருதலை வலிக்கு:

கண்ஒருத்தலை வலிக்கு மருந்து கேளு

காட்டிவுள்ள தும்பையிலை குப்பை மேனி

தோணவே கசக்கி நசியம் பண்ணி

துலங்கஉள்ளி உப்புமெள்ளு டரைத்துப் பூசு

பூணவே வேப்பிலையை வாய்பே சாமல்

பிடிங்கியே பிழிந்திடுவாய் காதுக் குள்ளே

ஊணவே செப்புகின்ற நெருஞ்சி தன்னை

உழுதியாய் ஒருகண்ணி லூ த்தி டாயே

தும்பையிலை, குப்பைமேனி, இரண்டையும் கசக்குப் பிழிந்து நசியம் செய்யவும். உப்பும், எள்ளும் அரைத்துப் பூசலாம். வேப்பிலையை வாய் பேசாமல் பறித்து வந்து இடித்துப் பிழிந்து காதுக்குள் விடவும். நெருஞ்சிச் சாற்றை ஒரு கண்ணில் விடவும்.

150.ஊத்திடுவாய் அரைவிரை முலைப்பால் நசியம்
முருங்கை நாயுருவி விரையுங் கூட்டி
நீத்திடுவாய் நீலியுட சாறு வாங்கி
நிலவாகத் தானரைத்து நல்லெண்ணை விட்டு
தேத்திடவே காய்ச்சி நசியம் பண்ண
தெறிக்குமடா ஒருதலையி லுள்ள னோவு
நீத்துடனே வெள்ளெருக்கம் பாலுஞ் சேர்த்து
நீநசிய மிடனோவு நெகிழ்ந்து போமே

தாய்ப்பாலையும் நசியத்தில் விடலாம். முருங்கை நாயுருவி விதை, நீலிச்சாறு இவற்றுடன் நல்லெண்ணை சேர்த்துக் காய்ச்சிநசியம் பண்ண ஒற்றைத் தலைவலி அகன்று போகும். இவற்றுடன் வெள்ளெருக்கம் பாலும் சேர்த்து நசியம்பண்ண ஒற்றைத் தலைவலி நீங்கும் என்பதாம்.

151.நெகிழ்ந்துபோம் வங்கப்பூ காந்தங் கோஷ்டம்
நேராகச் சமன்கூட்டி நீய ரைத்து
உகந்திடவே உழக்காகக் கலக்கிக் கொண்டு
உத்தமனே பேய்ச்சுரைக்காய் தனில டைத்து
புகழ்ந்து மறுநாளுதைய மருந்தும் போது
புதுமையாய் யெதிரெடுக்கும் புகலக் கேளு
கிளந்திலுப்பை புன்னாக்கு வேருங் கூட்டி
மறவாமல் ஆவின்பா லரைத்துக் கொள்ளே

வங்கப்பூ, காந்தம், கோஷ்டம் இவற்றைச் சமஅளவாக எடுத்து அரைத்துக் கலக்கி பேய்ச்சுரைக்காய் குடுவையில் அடைத்து மறு நாள் எடுத்து அருந்த எதிர் எடுக்கும். இலுப்பைப் புண்ணாக்கும், வேரும் கூட்டி ஆவின்பால் சேர்த்து அரைத்துக் கொள்ளவும்.

152. அரைத்தநீ கொண்டுவிடு மூன்று நாளும்
ஆவின்மோர் கல்லுப்புக் கரைத்துப் பேயின்
சுரைக்கூட்டி லூற்றியதை மறுநா ளப்பா
சுகமாக அருந்திடவே சுளரெ டுக்கும்
விரையவே பேய்ப்பீர்க்கு மருதம் பட்டை
வயனந் -தவசி முருங்கையுடன் விளங்கக் கொண்டு
குறையாமல் நாளிநீ ராளாக் காக
குடித்திடுவாய் வெலிவிஷங்கள் குடிபோங் காணே

ஆவின் மோரில் கல்லுப்புக் கலந்து கரைத்து 3 நாட்கள் உட்கொள்ளவும். பேய்ச்சுரைக் கூட்டில் ஊற்றியதை மறுநாள் எடுத்துப்பார்க்க அது புளித்திருக்கும். இதனுடன் பேய்ப்பீர்க்கு மருதம்பட்டை தவசி முருங்கையுடன் 1.3லிட்டர் நீர்விட்டு எட்டில் ஒன்றாகக் குறுகும்அளவு காய்ச்சிக் குடித்து வந்தால் எலிகடி விஷம் நீங்கும்.

153. யிந்திரியக் கட்டு

குடிபோன யிந்திரியக் கட்டு தற்கு
மீறுமடா நிலப்பனையின் தண்ணீர் விட்டான்
துடியாக நெருஞ்சிவேர் சமனீ் கொண்டு
துலக்கமுடன் ஆவின்பா லரைத்த ருந்த
விடியுமுன்னே பெண்மயக்க மிகவுண் டாகுமே
விலுப்பைப் புண்ணாக்கு காசுக் கட்டி
பொடியாக்கி யருந்திநீ யிருப்பா யானால்
பூரித்துப் பொங்கிவிடும் புதுமை சொன்னேன்

நிலப்பனை தண்ணீர்மீட்டான், நெருஞ்சி வேர் இவற்றைச் சம அளவாக எடுத்துக் கொண்டு ஆவின்பால் சேர்த்து அருந்தினால் விடிவதற்கு முன் பெண்மயக்கம் மிகுதியும் உண்டாகும். இலுப்பை புண்ணாக்கு காசுக்கட்டி இவற்றைப் பொடியாக்கி சாப்பிட்டால் விந்து பூரித்துப் பொங்கும் என்பதாம்.

[illegible]

154. கழல்வாதம். _ அண்டவாதம். _

புதுமைகழல் வாதமுடன் அண்ட வாதம்

போவதற்கு மருந்துநான் சொல்லக் கேளு

கதுமையாம் நன்னாரி பேய்மி ரட்டி

கதிக்கின்ற வேலியிலை குப்பை மேனி

மெதுமையுள்ள கொழுந்துவகை பிடிதா னொன்று

மேவுசுக்குத் திப்பிலியுங் காய மிந்து

அதுமையுள்ள கடுகுயிரு களஞ்சி வீதம்

அப்பனே வெள்ளுள்ளிப் பூடு மூனே

கழல் வாதத்துடன் அண்டவாதத்திற்கு மருந்து சொல்வேன். நன்னாரி பேய்மிரட்டி வேலிப்பருத்தியிலை குப்பைமேனி இவற்றின் கொழுந்தாக ஒவ்வொரு பிடி எடுத்துக் கொண்டு சுக்கு, திப்பிலி, காயம், கடுகு இவை வகைக்கு 10கி எடுத்து வெள்ளப்பூண்டு மூன்று பல்லையும் இதனுடன் சேர்த்துக் கொள்ளவும்.

155. பூடுடனே மருந்தையெல்லா மெரியால்ச் சாத்தால்

புனிதமா யரைத்து நல்லெண்ணை யூத்தி

மூடுநீ சட்டிதனி லூ த்தி யப்பா

முக்கியமாய்ப் பொரித்துநீ வைத்துக் கொண்டு

மாட்டிடவே யிலுமிச்சங் காயளவு தின்ன

மாறுமடா வாதங்கள் வாதம் போமே

பூண்டுடன் மற்ற மருந்துகளை எல்லாம் சேர்த்து நன்றாக அரைத்து நல்லெண்ணெய் ஊற்றி மூடி எரித்துக் கொண்டு, எண்ணெயில் மருந்தை எல்லாம் பொடித்துக் கொள்ளவும். இதனை எடுத்து எலுமிச்சங்-காயளவு உண்டுவர வாத நோய்களும், வாதமும் நீங்கும்.

156\. வாதம்போ மாவிலங்கை வசம்பு கொடிவேலி
மறக்காமல் வெள்ளுள்ளி ஆவின் பாலால்
நீதமுடன் தானரைத்து மூன்றுநாள்க் கொள்ள
உப்புடனே புளிப்புகையுந் தவிரை மாற்று
போதிவே தையவேளை கறுப்புக் கட்டி
புனிதமா யரைத்தருட்டிப் பொருந்தக் கொள்ளு
சூதான வேலியிலை மொடக்கொற் றானுந்
துலங்குகழல்க் கொடியிலையும் புங்கிலையுங் கூட்டே

மாவிலங்கை வசம்பு கொடிவேலி, வெள்ளைப்பூண்டு இவற்றை ஆவின்பாலால் அரைத்து மூன்று நாட்கள் உட்கொண்டு வரவும். உப்பு, புளி தவிர்க்கவும். தைவேளை கருப்பட்டி இரண்டையும் அரைத்துருட்டி உட்கொள்ளவும். வேலிப்பருத்தியிலை, முடக்கறுத்தான் இலையும், புங்கின் இலையும் இதனுடன் சேர்த்துக் கொள்ளவும்.

157\. புங்கிலையோ டிவையெல்லா மிடித்து நன்றாய்
புனிதமாய் வறுத்தொத்தப் போகும்
அங்குகளக் கொடிப்பருப்பு வறுத்த ரைத்து
பங்கமில்லா உரிவெந்நீர் தன்னில்க் கொள்ளு
பாக்குமடா வாதங்கழல் வாதம் போமே

மேற்சொன்ன புங்கிலையோடு கூடிய எல்லாவற்றையும் இடித்து சுத்தமாக வறுத்தெடுத்துக் கொள்ளவும். கழற்கொடி பருப்பு சேர்த்து வறுத்து அரைத்து வெந்நீரில் உட்கொண்டு வர வாதங்களும், கழல்வாதமும் நீங்கும்.

158.கெற்பம் வீழ

போகுமடா களவுகெற்பம் போகக் கேளு

பெய்யல்லாக் கடுகிந்து காயங் கூட்டி

வேகமுனி பழங்காடி மிகவ ருந்த

விழுகுமடா கடுகுநல் லெண்ணை கொண்டால்

தாகமுடன் மிளகுசெம் பருத்திப் பூவும்

தப்பாமலக் காடியுள்ளப் புள்ளை யில்லை

சோகமுடன் பெரும்பீக்கை விரையு ரைத்து

துலங்கு மூன்றுநாள்க் குடிக்கக் கெற்பம் போமே

களவு முறையில் உறவு கொண்டதால் ஏற்பட்ட கெற்பம் கரைவதற்கான மருந்து சொல்லப்படுகிறது. கடுகு, இந்துப்பு, காயம் கூட்டி வேக வைத்து வடிகட்டி அருந்தினால் கெற்பம் கரையும். கடுகும் நல்லெண்ணையும் உட்கொண்டால் கெற்பம் தரிக்காது. மேலும் செம்பருத்தி பூவும், மிளகும் காடியில் சேர்த்துண்ண பிள்ளை உன்டாகாது. பெரும் பீர்க்கன் விதையை அரைத்து மூன்றுநாள் தொடர்ந்து குடித்துவர கெற்பம் நீங்கும்.

159.கெற்பம்போம் துக்காரை விரைமோரி லூறி

கிரிகையுட னதைஅரைத்துக் குடிக்கப் போகும்

செப்பமுடன் கீழ்காயின் நெல்லி வேரை

திறமாக நல்லெண்ணை தன்னில்க் கொள்ள

ஒப்பரவாய் கெற்பமிமல்லா மொளிந்து போகும்

உறுதியுட னிம்மருந்து உகந்து செய்தால்

தப்பாது யிம்மருந்து அப்பா சொன்னேன்

சதிரத்துக் கொருநாளும் தான்வா றாதே

துக்காரை விதையை மோரில் ஊறவைத்து அரைத்து மோரில் குடிக்க கெற்பம் கரையும். கீழாநெல்லி வேரை அரைத்து நல்லெண்ணையில் உட்கொள்ள கெற்பம் கரைந்துவிடும். இவ்வகை கெற்பங் கரைக்கும் மருந்துகளை உட்கொள்வதால் உடம்பிற்கு எந்தக்கேடும் வராது.

160. தாழ்விலிலை நீரடைத்தால் மருந்து கேளு
தானியுள்ள ஓரிதழ்வேர் காடி தன்னில்
கூழாகத் தானரைத்துச் சரீர மெல்லாங்
குமிறவே தான்தடவ நீர்தெ றிக்கும்
பூளை சிறுபூளைவேர் பொன்னாங் காணி
புகளாலாந் துளிரும்பால் பொசிக்கத் தீரும்
நாளான பலகறையைச் சுட்ட சாம்பல்
நல்லதொரு பாண்டத்தில் தன்னில் வையே

ஓரிதழ்த் தாமரை வேரை காடியில் கூழ்போன்று அரைத்து உடம்பெல்லாம் பூசிக் கொண்டால் தடைபட்ட நீர் வெளியேறி நீரடைப்பு சரியாகும். பீளை, சிறுபீளைவேர் பொன்னாங்காணி, ஆலம்துளிர், ஆலம் பால் இவற்றை அரைத்துச் சாப்பிட்டால் நீரடைப்பு நீங்கும். பலகறையைச் சுட்டு அதன் சாம்பலை ஒரு பாண்டத்திலிட்டுக் கொள்ளவும்.

161. வைத்தபழச் சாருடனே மேனிச்சாறும்
மதிப்பாக அதில்விட்டு மறுநாள் வாங்கி
உத்தமமா யிறுத்துளக்கு ஆவின் பாலில்
உடனருந்தக் கல்லவ்ழு மூன்றி யாக
மெத்தவே வெள்ளரிக்காய் சீவித் தோலை
விதமாகத் துருசுஅதில் மேலே பூசி
சுத்தமுடன் அதையெடுத்து அருந்த நீரில்
மூலங்கயிரு மூன்மா விருந்த ருந்தே

எலுமிச்சம்பழச்சாறு, குப்பைமேனிச்சாறு இரண்டையும் பலகறைச் சாம்பலில் இட்டு இரண்டாம் நாள் இறுத்துக் கொண்டு அதனுடன் பசும்பால் 325மிலி சேர்த்துச் சாப்பிட்டு வர சிறுநீரகக் கற்கள் நீங்கும். வெள்ளரிக்காய்த் தோலைச் சீவி அதன்மேல் துருசைப்பூசி, வெள்ளரிக் காயைச் சாப்பிட்டு வரவும். இவ்வாறு மூன்றுநாள் செய்யவும்.

162. அருந்துவாய் வட்டத்துத்தி யிலையை மூன்று

நாளாவின் பாலரைத்து நீகுடிக்கத் தீரும்

பொருந்தவே வெள்ளாட்டுநெய் ஆவின் நெய்யும்

போத நல்லெண்ணை சமன்கஞ்சித் தண்ணி

வருந்தவே குடித்தாக்கால்க் கல்லு வீழும்

மறுகாலஞ் சோத்திலுண்ணத் தீருங் கண்டாய்

தீருமிள நீரேலமுவிந் தேத்தான் கொட்டை

திரளரைத்துச் சக்கரையும் பாலில்க் கொள்ளே

வட்டதுத்தி இலையை ஆவின்பாலில் அரைத்து 3 நாட்கள் பருகிவர நீரடைப்பு நீங்கும். வெள்ளாட்டு நெய்யும், ஆவின்நெய்யும் சேர்த்து அதே அளவு நல்லெண்ணெய் சேர்த்து கஞ்சித்தண்ணீரில் குடித்து வர கல்வீழும். பின் சாதத்துடன் சேர்த்துண்ண தீரும். ஏலத்துடன் தேத்றான் கொட்டை சேர்த்தரைத்து சர்க்கரை, பாலில் சாப்பிடலாம்.

163. கொள்ளுவாய் கத்தாழைச் சோறுவாங்கி

குண்டுசட்டி தன்னிலிட்டு அத்திப் பட்டை

மெள்ளவே யிடித்து அதில்ப் பிசைந்து சேர்த்து

வெயிலில் வைக்கத் தெளிவுரு மிறுத்துக் கொண்டு

தள்ளாமல் சர்க்கரையுங் கலஞ்சி யிந்த

தவறாமல் வெள்ளரிக்காய் காடி கட்டி

கொள்ளவே ரத்தமுடன் கல்லுஞ் சீயுங்

கட்டோடே சதையடைப்புங் குதிக்கும் பாரே

கற்றாழம் சோற்றைச் சேகரித்து ஒரு மண்சட்டியிலிட்டு அத்திப் பட்டையை இடித்து அதில் பிசைந்து வெயிலில் வைக்கவும். தெளிவு வரும். தெளிவை இறுத்துக் கொண்டு 5 கிராம் இந்தப்பு சேர்த்து சர்க்கரை கலந்து வெள்ளரிக்காய், காடி கூட்டி இரத்தம், கல், சீழ் இவற்றுடன் வெளியேறும் சிறுநீர் சரியாகும். சதையடைப்பும் நீங்கும்.

164. காதிவுள்ள தண்டு நொந்தால்

குதிக்குமே காதிவுள்ள தண்டு நொந்தால்
குன்றுமுத்துக் காய்பன்னிப் போத்தாளி வேரும்
மதிப்பாக எருமைப்பா லதனி லரைத்து
மரையா வரையாத்திக் கடைய வெண்ணை
துதியாக நீயெடுத்துக் காதுத் தண்டு
வாலையிட வள்ளைத்தண்டு துலங்கும் பாரு
விதிப்படியே சொல்லிவிட்டோம் ஒளிக்க வில்லை
விமடாவின் கலப்பனையால் மீறுங் காணே

ஆமணக்குக்காய், போத்தாளிவேர், இரண்டையும் எருமைப்பாலில் அரைத்து பின்னர் கடைய வெண்ணை திரளும். அந்த வெண்ணையை எடுத்து காதுத்தண்டில் உள்ளே தடவ காதுத்தண்டில் உண்டான வலி நீங்கும்.

165. கெற்பம் விழ

மீறாமல்த் தூ ரமில்லாப் பெண்க ளுக்கு
வேலியிலை பசுவின்பால் மிகவ ருத்து
கூறான தூ துவளைச் சாறும் வாங்கி
கொட்டை கொட்டையாய்க் கிடக்கும் குளத்துப் பாசீ
யேறாமல்ப் புன்னைக்கா யளவு கூட்டி
யிதமாகச் சக்கரையும் யேக மொன்றாய்
பேறுபட மூன்றுநா ளருந்தும் போது
புறப்படுமே செங்குருதி சிகப்ப தாமே

வீட்டுத்தூ ரம் இல்லாத பெண்கள் வேலிப்பருத்தி இலையை பசுவின் பாலில் அரைத்துத் தூ துவளை சாறு வாங்கி, கொட்டை,கொட்டை- யாகக் கிடக்கும் குளத்துப் பாசியும் சேர்த்து அரைத்து புன்னைக்காயளவு உருட்டி மூன்று நாட்கள் சாப்பிட்டுவர இரத்தப் போக்கு உண்டாகும்.

166.தாமான ஆண்கட்டுத் தடையாய்ப் போனால்
சங்கம்வேர் நீர்முள்ளி விரையுங் கூட்டி
போமென்ற சோகிதனைச் சுட்ட சாம்பல்
புகழாலம் விழுதுடனே முத்தக்காசு
ஆமென்ற ஆவின்பால் தன்னி லாட்டி
அதுவுடனே சக்கரையுங் கலந்து கொள்ள
ஓமென்ற யிந்திரியக் கட்டுப் பட்டு
யிஷ்டமுடன் அநுபோக மிசைந்து பண்ணே

இந்திரியம் கட்டுப்பட்டு தடை உண்டாகுமானால், சங்கம்வேர், நீர்முள்ளிவிதை இரண்டையும் கூட்டி சோகி சுட்ட சாம்பலும் சேர்த்தரைத்து விழுதுடன் முத்தக்காசையும் ஆவின்பால் வார்த்தரைத்து சர்க்கரை கலந்து உட்கொள்ள இந்திரியக் கட்டு நீங்கி போகம் எளிதில் கைகூடும்.

167.இசைந்ததொரு மெண்மலடு யெங்கு மில்லை
யெதனாலே மலடான சேதி கேளு
அசைந்திருக்கும் பேயினால் பூதத் தாலும்
அடிவயிறு நொந்துவரும் வாயு வாலும்
பிசைந்த கெர்ப்பப் பூச்சியினாலக் கிரகத்தாலும்
பிணிநோவு மேகத்தால் வாதசூலை யாலும்
சங்கை-கெட்ட கலவியினால் பூவொ துங்கி
துலங்காமலக் கெற்பமில்லைச் சொல்லக் கேளே

பெண்மலடு எங்குமில்லை. சில காரணங்களால் அது மலடுபோல் தோன்றும். பேயினாலும் பூதத்தாலும், அடிவயிற்றை நோகச் செய்யும் வாயுவாலும், வயிற்றைப் பிசைந்தெடுக்கும் கெற்ப பூச்சியினாலும், கிரகத்தாலும் மேகநோயாலும், வாதசூலையாலும் பூவானது ஒதுங்கி நின்றாலும் கெற்பம் தரிக்காது.

168. கெஞ்நீ கெர்பந்தான் வாழ்வ தற்கு
கெடியான நானாங் கள்ளி வேரும்
ஆளவே அதையரைத்துப் புளிக்காய் போல
ஆவின்வெண்ணை பாக்களவு கலந்து கொள்ள
நீளநீ குளித்தமுதல் மூன்று நாளும்
நிலவாகத் தானருந்தக் கெர்ப முண்டாம்
கொள்ளவே பத்தியந்தான் புளிபுகை யுப்பு
கொள்ளாமல் ஆவின்பால் சோறு முண்ணே

கெற்பம் உருவாவதற்கு உண்டான கெற்பம் நிலைத்து வாழ்வதற்கு நானாங்கள்ளி வேரை இரைத்துப் புளிக்காயளவு எடுத்துக் கொள்ள வேண்டும். இதனுடன் ஆவின் வெண்ணெய் கொட்டைப்பாக்களவு கலந்து கொண்டு பெண்கள் விலக்கான நாளிலிருந்து 3 நாட்கள் தொடர்ந்து அருந்தி வரவும். இவ்வாறு தொடர்ந்து செய்துவர கெற்பம் உண்டாகும். புளி, புகை, உப்பு தள்ளி பசும்பாலும் சோறும் உண்டு வரவும்.

169. உண்ணுவாய் வெட்பாலரிசி சீந்தித் தண்டும்
உடன்முத்தக் காசுடனே ஒக்கத் தட்டி
கண்ணவே சாருரியும் நெய்யு ழக்குக்
கலந்துந் கொதிப்பித்துக் காலை மாலை
திண்ணமாய்க் குளித்தமுதல் மூன்று நாளுந்
திடமாக அருந்திடவே கெர்ப முண்டாம்
ஒண்ணாகச் சீந்தவேர் னானாங் கள்ளி
யிதமாக வேரரைத்து நெய்யில் தாக்கே

வெட்பாலரிசி, சீந்தில்தண்டு, முத்தக்காசு, இவற்றை ஒக்கத்தட்டி 2.6லிட்டர் சாறெடுத்து, நெய் 325 மிலி சேர்த்துக் கலந்து கொதிக்க வைத்து, குளித்த முதல்நாள் முதல் 3 நாட்களும் காலை, மாலை இருமுறை உண்டுவந்தால் கெர்ப்பம் உண்டாகும். சீந்தில்வேர், நானாங்கள்ளி வேர் இவற்றை அரைத்து நெய்யில் சாப்பிட்டு வரவும்.

170.தாக்குவாய் பெருங்காய மிந்து தானுந்
தருகாமலப் புளியமரப் புறணிக் கூட்டி
ஆக்கமுடன் கத்தாழைச் சாற்றால் நீயும்
உருட்டிடுவாய் புன்னைக்கா யளவு தானுஞ்
சுருக்கவே குளித்தமுதல் மூன்று நாளும்
யிதமாக நீயருந்து கெர்ப் முண்டாம்
கேள்க்கவே வாய்வருங் கிருமி வீழுங்
கெடியான தோஷமுடன் விஷங்கிரகம் போமே

பெருங்காயம்,இந்துப்பு,புளிமரப் புறணி இவற்றைக் கற்றாழைச் சாற்றில் அரைத்துப் புன்னைக்காயளவு உருட்டி மாதவிலக்கு வந்த முதல் நாள்முதல் தொடர்ந்து சாப்பிட்டு வர கெர்ப்பம் உண்டாகும்.வாயு நீங்கும். கிருமி வீழும். தோஷமும் விஷங்களும் நீங்கும்.

171.விஷப்பாலை வேள்ப்பாலை வாலுளுவை கடுக்காய்
வெள்ளுநெல்லி தான்றிக்காய் கொன்னைப்பட்டை
சிகப்பான கொடிவேலி யிந்து சுக்கு
நிரையாக வகைமூன்று களஞ்சி கூட்டி
அசைப்பான பிரமிச்சா ராவின் பாலும்
அப்பனே வகைக்கு யிருநாழி கூட்டி
பிசகாமல் முன்மருந்துச் சாற்றரைத்து
பின்னுமோர் ஆவின்நெய் நாழி கூட்டே

விஷப்பாலை, வெப்பாலை,வாலுளுவை,கடுக்காய், நெல்லி, தான்றிக்காய்,கொன்றைப் பட்டை,கொடிவேலி, இந்துப்பு,சுக்கு இவை வகைக்கு 15கி கூட்டி பிரமிச்சாறு ஆவின் பால் இவற்றைச் சேர்த்தரைத்து பசுநெய் 1.3லிட்டர் கூட்டிக் கொள்ளவும்.

..தி 90

172. நாழிநெய்யுடன் மருந்து தானுஞ் சேர்த்து
நன்றாகக் கொதிப்பித்து மொழுகு போல
தாளியாய் கலசத்தில் வடித்துக் கொண்டு
தருகாமல் முழுசுமந்த மூன்று நாளும்
ஊழியா மிருபோது கரண்டி யுண்ண
உத்தமமாய் கெற்பமுண்டா முறுதி யாகும்
காளியெனுஞ் சாமுண்டி பிசாசு நோய்கள்
கடந்தோடும் பத்தியநீ கண்டு கொள்ளே

1.3லிட்டர் மருந்து சேர்த்துக் கொதிக்க வைத்து மெழுகுபோல் ஆகும்போது கலசத்தில் வடித்துக் கொண்டு மூழ்கும் மூன்று நாளும் வேளைக்குக் கரண்டி வீதம் உட்கொண்டு வர கெற்பமுண்டாவது உறுதியாகும். உரிய பத்தியங் காத்துக் கொள்ளவும்.

173. தண்டுமாலைக்கு_
கண்டுதான் சொல்லுகிறேன் யின்னங் கேளு
கானமதி லெருக்கின்பால் அரப்புக் கட்டி
தண்டாமல் மெழுகுபோ லரைத்து ருட்டி
தனியேழு நாயறுக்கு வெந்நீர் கொள்ளு
முண்டியே யெடுத்திட்டால் மோருஞ் சோறு
முக்கியமாய்த் தயிறாகும் வேறு கேளு
பண்டுகை காலெரிவுக்கு நீறு முள்ளி
பாலுடனே அருந்திடவே பறந்து போமே

எருக்கம்பாலையும் அரப்புக் கட்டியையும் மெழுகுபோல் அரைத்து உருட்டி, ஏழுநாட்கள் தொடர்ந்து வெந்நீரில் உட்கொண்டு வரவும். மோரும் சோறும் சாப்பிடவும். தயிரில் சேர்த்துச் சாப்பிட பாண்டு, கைகால் எரிவு, நீர்முள்ளிபால் இவற்றுடன் அருந்த நோய்கள் பறந்துபோகும்.

174. பறந்துபோம் கழுத்தில்வருங் கண்டா மாலை
பாங்கான சிறுகுறிஞ்சா பலந்தா னஞ்சு
பறந்துபோம் பொடியாக்கி வசம்பு உள்ளி
பாங்கான நல்லெண்ணை தன்னி லிட்டு
பறந்துபோம் எரியிட்டுப் பதமாய்க் காச்சி
பாங்கான புண்ணிலிடு மண்டலந் கொண்டால்
பறந்துபோம் புண்ணாறும் பத்தியமாய் வைத்து
பத்தியாய்த் தானருந்தப் பலிக்கு மின்னே

கழுத்தில் உண்டாகும் கண்டமாலை, நீங்கும். சிறுகுறிஞ்சா 175கி, எடுத்துப் பொடித்து வசம்பு, உள்ளியுடன் நல்லெண்ணெய் சேர்த்து அடுப்பேற்றி எரித்துப் பதமாகக் காய்ச்சி இறக்கி புண்ணில் தடவிவந்து 40 நாட்கள் உட்கொண்டும் வந்தால் புண்கள் ஆறும். பத்தியம் காத்துக் கொள்ளவும்.

175. அமுக்குலரா_தைலம்:
மின்னேகேள் சிரவாய்வு போவ தற்கு
பெருங்குமிழ்வேர் கழற்சிவேர் இமுக்கு றாவும்
வன்னமாங் கொடிவேலி வகைபலமுந் தான
மிடாவிலிட்டுத் தா ணிநீர் மறுகக் காச்சி
பொன்னேநீ யெட்டொன்றாய் வடித்துக் கொண்டு
போடுவாய் வெள்ளுள்ளி பலந்தான் பத்தே

தலை வாய்வு நீங்குவதற்கு பெருங்குமிழவேர், கழற்சிவேர், அமுக்கிரகேவேர், கொடிவேலி இவை வகைக்கு 35கி வீதமெடுத்து பாண்டத்திலிட்டு நீர் வார்த்து எட்டில் ஒன்றாக வற்றக் காய்ச்சி வடித்துக் கொள்க. வெள்ளைப்பூண்டு 350கி சேர்த்துக் கொள்ளவும்.

176. பத்தநீ போட்டுவாய் பதக்கு நீரில்

பதறாம லெட்டொன்றாய்க் காய்ச்சிக் கொண்டு

வத்திலபின் ரெண்டுமொன்றாச் சேர்த்தி நன்றாய்

வகையான வாதடக்கி படிதான் ரெண்டு

சுத்தமுடன் கழல்பருப்பு பல்நீதா லஞ்சு

சொல்லிரதங் காந்தங் கெந்தி காயமிந்து

வெத்திபெருஞ் சவுக்காரம் வளைய லப்பு

வேறு வாலுளுவை சீரகம் வசம்பே

அதனை 5.200மிலி தண்ணீரில் போட்டு கொதிக்கக் காய்ச்சி எட்டில் ஒன்றாகச் சுருங்கக் காய்ச்சி வற்றியபின் முன்சொன்ன குடி-நீரையும் இதனையும் ஒன்றாகச் சேர்த்து வாதமடக்கி 2.600மிலி., கழல்பருப்பு 175கி இரசம், காந்தம், கெந்தி, காயம், இந்துப்பு, சவர்க்காரம், வளையலுப்பு வாலுளுவை சீரகம் வசம்பு இவற்றைச் சேகரித்துக் கொள்ளவும்.

177. வசம்பாக வேயரைப்பாய் கஷாய மிட்டு

மருந்து-சித் தாமணக்-கெண்ணை படிதான் ரெண்டு

நிசம்படவே யெட்டொன்றா யரைத்துக் கொண்டு

நிலவாக அடுப்பேத்தி வடித்து நீதான்

பிசகாமல்ப் பத்தியமாய யருந்தும் போது

பிணியில்லை வாயில்லை வாத மில்லை

துசங்கட்டி யதையுண்டு துலைப்பா யானால்

தூரத்தே அந்தரவாய் வலைந்து போமே

இம்மருந்து சரக்குகளை எல்லாம் மேற்சொன்ன குடிநீர் சேர்த்து அரைத்து சிற்றாமணக்கெண்ணை 2.6மிலி சேர்த்துக் காய்ச்சி வடித்து அருந்தி பத்தியமும் கடைபிடித்துவர பல பிணிகள் நீங்கும். வாயு, வாதம் போன்ற பல நோய்கள் நம்மைவிட்டு அகலும்.

178. தலைவதற்கு யின்னமொரு மருந்து கேளு
சுகமான அமுக்குறா பலந்தாவ் நா மு
மலையாமலச் சமூலமுடன் உலர்த்தித் தூ ளாய்
வடிகொண்டு கலசத்தில் வேடு கட்டி
அலையவே வேண்டாங்கா னொன்றே போதும்
அனுப்பான மறிந்துந் செய்தா யானால்
மலைபோலே வந்ததொரு வியாதி யெல்லா
மக்களே விட்டோடு மறிந்து செய்ம

அமுக்கிரா 350கி, சமூலமாக எடுத்துக் கொண்டு உலர்த்தித் தூ ளாக்கி சலித்துந் கொண்டு கலசத்தில் வைத்து வேடுகட்டி தேவைக் கேற்ப அனுபானம் அறிந்து உட்கொண்டால் மலைபோல் பெரிதாகத் தோன்றிய வியாதிகள் எல்லாங்கூட குணமாகும்.

179. மாரியே மெலிந்தவுடன் நெய்யில் கொள்ளு
மயக்கமும் பெருத்திருந்தால் தேனில் கொள்ளு
மீறியே-வரும் பித்தபாண்டுக்கு யெருமை மோரும்
விடமான எலிக்கடிக்குக் கோம-யமாகும்
பூரியதோர் விரியனுக்கு வெள்ளீர் கொண்டு
பூசுவது மதுவாகுஞ் சிரங்குக் கெல்லாம்
நாரியே வெள்ளாட்டு நீரில்க் கொண்டு
நலமாக மேல்ப்பூச நன்றாய்த் தீரும்

உடல் மெலிந்தவர்கள் இதனைத் இதனில் உட்கொள்ளலாம். உடல் பெருத்திருந்தால் தேனில் உட்கொள்ளலாம். பித்த பாண்டிற்கு எருமை மோரிலும் எலிக்கடிக்கு கோமயத்திலும், விரியன் கடிக்கு வெள்ளீரிலும் வழங்கலாம். புண்களுக்குத் தேனில் குழப்பிப் பூசலாம்; வெள்ளாட்டுச் சிறுநீரில் உள்ளுக்குச் சாப்பிடலாம்.

180. நன்றான பிள்ளைதான் நிலைத்திருந்தால்
நலமான ஆவின்பால் கலக்கிக் கொள்ளு
சென்றான குன்மம்வலி நாரத்தின் பழமாம்
தேவிமார் கைமயக்குப் பசுவின் வெண்ணை
ஒன்றான மிளகுதூள் கூட யிட்டு
உடனருந்தக் கைமசக்கு ஓடிப் போகும்
வென்றதொரு குட்டமெல்லாம் விட்டுப் போக
வேப்பெண்ணை நாள்தோறும் மூழ்கிடாயே

கர்ப்பம் உண்டானபின் பிள்ளைகள் நிலைப்பதற்கு ஆவின்பாலில் கலக்கி உட்கொள்ளலாம். குன்மவலி நீங்குவதற்கு நாரத்தம்பழச் சாற்றிலும், கெர்ப்ப கால மசக்கைக்கு பசுவின் வெண்ணையுடன் மிளகுத்தூள் கூடச்சேர்த்துப் சாப்பிட கைமசக்கு ஓடிப்போகும். குட்டமெல்லாம் நீங்குவதற்கு வேப்பெண்ணையில் நாள்தோறும் மூழ்கிடவும்.

181. உஷ்ணப்புவெண்ணை:
விழுங்குவாய் வாதமடா விளக்கெண்ணைக்குள்
மேலுநீ பூசிடுவாய் குளப்பிக் கொண்டு
களங்கமாத் தூரமது காணா விட்டால்
காட்டுத் திப்பிலிச்சாறுங் காயங் கூட்டி
விளங்கு-சன்னி கோமயமும் நல்லெண்ணை கூட்டி
மிக வருந்து மேல்பூச்சு விட்டே போகும்
புளங்குகின்ற விப்புருதி வென்னீர் கொண்டு
பூசிடுவாய் வீக்கத்தில் புகலக் கேளே

வாதநோய்களுக்கு விளக்கெண்ணையில் வழங்கலாம். மேலுக்கும் விளக்கெண்ணைய்பூசி வரலாம். வீட்டுத்தூரம் காணாவிட்டால் காட்டுத்-திப்பிலிச்சாறு, காயம் கூட்டி வழங்கலாம். சன்னிக்கு கோமியமும், நல்லெண்ணை கூட்டி அருந்தலாம். மேல்பூச்சும் பூசலாம். விப்புருதிக்கு வென்னீர் கொண்டு சாப்பிடலாம். மேலுக்கும் பூசலாம்.

182.புகலுவேன் நீர்விரியன் நீரிலப் பூசு
பிள்ளைகள்தான் நோய்தனக்குப் பச்சைப் பாலில்
அகலவே மேல்ப்பூசு காமா லைக்கு
அப்பனே வேப்பம்பட்டைச் சாற்றில் கொள்ள
தகையில்லா யினமுறைகள் பாக மாக
தப்பாமல் பத்தியங்கள் தாழ்ச்சி போகா
வகைவகையா யளப்பான மறிந்து கொண்டால்
மக்களே வியாதியெல்லா மாண்டு போமே

விரியன் பாம்புக் கடிக்கு நீரில் மேல்பூச்சு பூசலாம். பிள்ளை நோய்களுக்கு பச்சைப் பாலில் வழங்கலாம். காமாலைக்கு வேப்பம் பட்டைச்சாற்றில் கொள்ளலாம். முறை களை அறிந்து பக்குவமாக உட்-கொண்டு வர வியாதிகள் எல்லாம் பறந்து போகும்.

183.மாண்டுபோங் கெர்ப்பமெல்லாங் குமரி யாலே
மதுரமுடன் சந்தனமும் நாகப் பூவும்
வேண்டுமடா செய்பகப்பூ கஸ்த்தூ ரி மஞ்சள்
விளங்குயிரு வேலியுடன் சிவந்தி புன்னை
தாண்டுமடா செங்களநீர் கோஷ்ட்ட மெல்லாந்
தமகாமல்க் கடுகு ரோகிணியுங் கூட்டி
மீண்டுந் திரிபலை அஞ்சனக் கல்வங்கம்
யிதமான தக்கோலஞ் சாதிக் காயே

கெர்ப்பமெல்லாம்குமரியனும் கற்றாழையும், மதுரம், சந்தனம், நாகப்பூ, செண்பகப்பூ, கஸ்தூரிமஞ்சள், இருவேலி, சிவந்தி, புன்னை, செங்களநீர்கோஷ்டம், கடுகுரோகணி, திரிபலை, அஞ்சனக்கல், வங்கம், தக்கோலம், சாதிக்காய் இவற்றையும் சேகரித்துக் கொள்ளவும்.

184.காயான சரக்குடனே அகில மாஞ்சி

கனமான தாமரைப்பூ முள்பூவுங் கூட்டி

கூடிய மருந்தையெல்லாஞ் சமன தாக

யெடுத்தரைப்பாய் குமரிவேர் நீரி னாலே

ஆயவே யெள்ளெண்ணை நாழி விட்டு

பதறாமல் அடுப்பேத்திப் பதம தாக

மாயவே மெழுகுபதம் வடித்துக் கொண்டு

வாசனையாம் புனுகுடனே பூரம் போடே

மேற்கண்ட அகில், மாஞ்சில், தாமரைப்பூ, முள்சொன்ன பூவையும் சேர்த்துக் கூட்டி சமளவு கூட்டி கற்றாழைச் சாற்றினால் ஆட்டி நல்லெண்ணெய் 1.3லிட்டு விட்டு அடுப்பேற்றி மெழுகு பதமாகக் காய்ச்சி வாசனைக்காக புனுகு,பூரம் சேர்த்து இறக்கிக் கொள்ளவும்.

185. பூரமுடன் கோரோசியும் போடு போடு

பூரித்த தயிலத்தில் கலசத் துள்ளே

வாரமஞ் சனிபுதனு முழ்கி வந்தால்

மகத்தான பித்தமெல்லா மாய்ந்து போகும்

தாரமுட னிருபேரு முழ்க வேணுஞ்

சகலபிணி மேகமெல்லாந் தவறிப் போகும்

வீரமுடன் சரீரமெல்லா புஷ்டி யாகும்

வெஞ்சுறுக்குக் குடுதயிலம் வேண்டிப் பாரே

பூரம்,கோரோசினை இரண்டையும் சேர்த்து மேற்சொன்ன தைலத்தைத் தேய்த்து புதன்,சனி முழ்கிவந்தால் மிகுதியான பித்தம்நீங்கும். கணவன், மனைவி இருவரும் முழ்க வேண்டும்.மேகப்பிணிகள் எல்லாம் நீங்கும். உடம்பு பலப்படும்.எனவே இத்தைலத்தை முறைப்படிபயன்படுத்தவேண்டும்.

186. வேண்டிய கெர்பமாய் யிருந்த பேர்க்கு
வெடிப்பாக வயிர்கழிந்தால் மருந்து கேளு
ஆண்டிருந்த முதல்மாதம் வயிறு போனால்
அப்பனே முண்டகப் பூக் கொத்த மல்லி
மீண்டதொரு யிருவேலி சமனும் நீரில்
லிவரைத்துப் பாலருந்த மிகமாய் நிற்கு
மூண்டிருந்த மறுமாதம் போக்குண் டானால்
புகள்நெய்தல்க் கிழங்கு நாயுருவி வேரே

கெற்பமாயிருக்கும் போது வயிறு கழிந்தால் அதற்கு மருந்து சொல்லப்படுகிறது. முதல் மாத வயிறு கழிதலுக்கு தாமரைப்பூ, கொத்துமல்லி, இருவேலி இவற்றைச்சமாக எடுத்து நீரில் அரைத்து பாலில் சாப்பிட்டு கழிச்சல் நிற்கும். இரண்டாம் மாமம் வயிற்றுப்போக்கு உண்டானால் நெய்தல் கிழங்கையும் நாயுருவி வேரையும் சேகரித்துக் கொள்ளவும்.

187. வேருடனே சந்தனமும் நீர ரைத்து
விதமான ஆவின்பால் தனில ருந்து
பாருநீ மூன்றான மாத்தைக் கப்பா
பகரநெருஞ்சி ஆம்பல்ப்பூ வாழைக் கட்டை
நீராலே தானரைத்துப் பாலில்க் கொள்ளு
நிசம்நால மாத்தைக்கு லாமிச் சோடு
அருக்கான சந்தனமுந் தாமரையின் வேரும்
அதின்நீரில்த் தானரைத்துப் பாலில்க் கொள்ளே

இவற்றுடன் சந்தனமும் சேர்த்தரைத்து ஆவின்பால்ல் சாப்பிட்டு வரவும் மூன்றாம் மாதத்திற்கு பிறகும் கழிச்சல் உண்டானால் நெருஞ்சி. ஆம்பல்பூ, வாழைக்கட்டை இவற்றை நீரால் அரைத்து பாலில் உட்கொண்டு வரவும். நான்காம் மாதத்தில் உண்டானால் விலாமிச்சோடு, சந்தனமும், தாமரைவேர் இவற்றை நீரால் அரைத்துப் பாலில் உட்கொள்ளவேண்டும்.

188. பாலான மாதமஞ்சில் மருந்து கேளு
பகருங்கச் சோலமுடனே லாமிச் சோடு
ஆலயமாம் நெய்தல்வேர் ஆம்பல்ப் பூவும்
அப்பனே நீரிலாட்டிப் பாலில்க் கொள்ளு
கோலமா மாமுதனில்ச் சீந்திக் கொழுந்து
சீரகம் நெய்தல் முந்திரிகை யோடு
காலமே சிறுதிப்பிலி நீரி லாட்டி
கசப்பில்லாய் பாலிலுண்ண கழிச்சல் நிற்கும்

ஐந்தாம் மாதக் கழிச்சலுக்குக் கச்சோலம் விலாமிச்சு, நெய்தல் வேர், ஆம்பல்பூ இவற்றை நீரில் ஆட்டி பாலில் உட்கொள்ள நிற்கும். ஆறாம் மாதக் கழிச்சல் சீந்தில் கொழுந்து, சீரகம், நெய்தல், முந்திரி, சிறுதிப்பிலி சேர்த்து நீரிலரைத்துப் பாலில் கொள்ள. நீங்கும்.

189. நிற்கவே யேழுதனில்ச் சந்தனம் லாமிச்சு
நிசமான தற்கோலந் திப்பிலியும் நெய்தல்
பக்குவமாய் நீரரைத்துப் பாலில்க் கொள்ளு
பகருமெட்டுத் திங்களிலே விளங்காய்ச் சாறு
தக்கநெய்த லரிசியுடனே யிலுப்பைப் பூவும்
சக்கரையுங் கல்கண்டுந் தானரைத்து
மெக்கவே பாலிலுண்ண வியாதி போகும்
விதமான ஒன்பதாந் திங்கள் கேளே

ஏழாம் திங்களில் கழிச்சல் உண்டானால் சந்தனம் விலாமிச்சு, தற்கோலம், திப்பிலி, நெய்தல் இவற்றை நீரில் அரைத்துப் பக்குவமாய் உட்கொண்டுவர நிற்கும். எட்டாம் திங்களில் உண்டாகும். கற்பக் கழிச்சலுக்கு விளங்காய்ச்சாறு நெய்தல் அரிசி இலுப்பைப்பூ சர்க்கரை கல்கண்டு இவற்றில் நீரில் அரைத்து பாலில் உண்டுவர அக்கழிச்சல் நிற்கும்.

190. திங்களா முந்திரிகை யிலுப்பைப் பூவும்
திறமான தாமரைப்பூ பாலில்க் கொள்ள
பொங்கமுடன் பத்துதனில் வயறு போனால்
புதுமையுள்ள குலதெய்வம் போற்றி செய்து
மங்காமலக் காத்திடவே பராத்திச் சப்பா
வச்சுந் வணங்கிடவே நிமிர்த்தி யாகும்
நுனுக்கலுரக் காவலாஞ் சமயங்த தெய்வங்
காத்கவொண்ணாத் காப்பணிந்து முன்கையில்ப் போடே

ஒன்பதாம் திங்களில் உன்டாகும் கழிச்சலுக்கு முந்திரி, இலுப்பைப்பூ, தாமரைப்பூ இவற்றை நீரில் அரைத்து பாலில் கொள்ளவும்.

191. கைப்பாலா யின்னமொரு மருந்து கேளு
காரிளையாள் கெர்பமுடனங் கிராணி யெல்லா
மெய்ப்பான யிஞ்சிச்சார் படிதான் ரெண்டு
வெந்தையமோ குராசாணி கிராம்பு கட்டி
வாய்ப்பான சாதிக்காய் விராகன் ரெண்டு
வகைவகையாய் வாங்கியே விடைய மூன்று
தோய்ப்பாக யிளவறுப்பாய்ச் சூர ணித்து
சுகமாக யிஞ்சிச்சா றடுப்பி லேத்தே

இஞ்சிச்சாறு 2.லிட்டர், வெந்தயம், குரோசாணி, கிராம்பு, சாதிக்காய் இவை வகைக்கு பத்து கிராம் சேர்த்து இள-வறுப்பாய் வறுத்துக் கொண்டு அடுப்பில் இஞ்சிச்சாற்றை பாத்திரத்தில் ஊற்றி வைக்கவும்.

..100

192. யேத்தியதோர் சாருதனைப் பாகு போலே
யிதமாகச் சுண்டிவரிலீப் பொடியைத் தூவி
பாத்திடுவாய் கற்கம்போலப் பதந்தான் கண்டு
பாங்கான மருசட்டி தன்னி லப்பா
அத்திலிடு கற்கந்தான் வடகம் போல
உருதிகறி வடகம்போ லுருட்டி வேலிய
நெத்தியதாய்க் கலசத்தி லெடுத்துவைத்து
நிதமாக ஒருண்டை தயிரில்க் கொள்ளே

அடுப்பேற்றிய சாற்றைப் பாகுபோல சுண்டும் வரைக் காய்ச்சிப் பொடியைத்தூவி கற்கம்போல் பதம்வரும்போது இறக்கி மாற்றுச்சட்டியில் மாற்றிக் கெதள்ளவும். கற்கத்தை வடகம்போல் உருட்டி நேர்த்தியாக வெயிலில் காயவைத்து எடுத்து ஒரு உருண்டையைத் தயிரில் உட்கொண்டு வர கற்பிணிக்கு உண்டான கிராணி நோய்கள் நீங்கும்.

193. தயிறான மேதையுட தயிரு மாகுந்
தப்பாம லோருண்டைத் தயிரில் வைத்து
உயிதமுடந் தயிர்கலக்கி உள்ளே கொள்ளு
உண்பது-சோர் தயிறாகும் மற்ற தாகா
கைப்பான புளிப்புகையு முப்புந் தள்ளி
காலமே யோர்வடகங் கலிஞ்சு கொள்ளு
பயிரான கிராணியெல்லா மெங்கே போச்சு
யிதைவிட்டால் மருந்தேது வெளின் ராமே

எருமைத்தயிர் இதற்கு சிறப்பு. எருமைத்தயிரில் ஓர் உருண்டையைக் கலக்கி உட்கொள்ளவும். தயிரும் சோறும் உண்ணவும். மற்ற உணவு வேண்டாம் புளிப்பும் கைப்பும் உப்பும் தள்ளிவிடவும். இவ்-வடகத்தைச் சாப்பிட்டு வர கிராணிநோய்கள் எல்லாம் தீரும்.

194. சிறுநீர்க்கட்டுக்கு

வெள்ளராந் தொடையிலை பலந்தா னாறு

விதமாக யிடித்து பதக்கு நீரில்

....ண்ணியே காய்ச்சிவிடு யெட்டொன் றாக்கி

நலமான முசலித்தலை கால்குடல் தோல்போக்கி

பண்ணிவிடு கண்டமது பத்தாய் வெட்டிப்

பாகமாய்க் குருணிநீர் தன்னி விட்டு

சென்னியதாய்க் குருகவேற்றி காய்ச்சிக் கொண்டு

சேர்த்திடுவாய் முன்சாற்றில் சேரக் கட்டே

ஆடாதோடை இலை 3.500கிராம் 5.200 மிலி தண்ணீர் விட்டு எட்டில் ஒன்றாகச் சுருங்கக் காய்ச்சிக் கொள்ளவும். முயலைக் கொன்று கால், குடல், தோல்போக்கி 10துண்டங்களாக வெட்டிக்கொண்டு 2.6மிலி நீர்விட்டு அந்நீரில் சுருங்குமளவு காய்ச்சிக் கொண்டு முன்-சாற்றுடன் சேர்த்துக் கட்டிக் கொள்ளவும்.

195. கட்டுவாய் மதுரம் வெண்காரங் கோஷ்ட்டமேலங்

கூரியதோர் லவங்கப்பூ கடுக்காய் ஓமம்

வாட்டியதோர் சீரகமும் லவங்கப் பட்டை

மகத்தான கற்கண்டு சாதிக் காயும்

தாட்டிகமாய் வெண்ணுள்ளி நாழி கட்டி

தனித்தனியே மருந்தெல்லாங் களஞ்சி ரெண்டு

முட்டியே யிடித்துநீ வைத்துக் கொண்டு

முக்கியமா யிளநீரும் பசுவின் பாலே

இதனுடன் அதிமதுரம், வெண்காரம், கோஷ்டம், ஏலம், இலவங்கப்பூ, கடுக்காய், ஓமம், சீரகம், இலவங்கப்பட்டை, கற்கண்டு, சாதிக்காய், வெள்ளுள்ளிச்சாறு 1.3லிட்டர் மற்ற கடைச்சரக்குகளை இடித்து அதனுடன் இளநீரும் பசுவின்பாலும் சேர்த்துக் கொள்ளவும்.

196. பாலிளநீர் நானாழி நெய்யும் நாழி

பகருசிறுக் கீரையிலை பொன்னாங்காணிச் சாறு

கோலமுடன் கடைமருந்து யெல்லா மொன்றாய்

கூடவே போட்டுநீ குமுறக் காச்சி

சாலவே மெழுகு பதந்தனில் வடித்துத்

தழுகாம லாளாக்கு நெய்கு டிப்பாய்

யேடலீ வைத்த பித்தமெல்லாந் தீரு மப்பா

யின்னமொரு வயித்தியந்தா னியம்பக் கேளே

பால்,இளநீர் இவை வகைக்கு 5.200மிலி நெய் 1.3லிட்டர், சிறுகீரை இலைச்சாறு, பொன்னாங்காணிச்சாறு கடைமருந்து எல்லா வற்றையும் ஒன்றாகப் போட்டு குமுறக் காய்ச்சி மெழுகுபதமாகும்போது வடித்து 325மிலி நெய்யை குடித்துவர நோய்கள் பல குணமாகும்.

197. கேட்பதற்கு மூத்திரத்தின் கிரிச்சிரம்போக

கெடியான சிறுபூளை நெருஞ்சி வேரும்

பார்ப்பதென்ன செங்கழனி வேருந் தானும்

பகருசெப்பு நெருஞ்சிவேர் பரிந்து கூட்டி

வார்ப்பதுதான் ஆவின்பா லரைத்துக் கொண்டு

வளமாக அதில்க்குழப்பி மருந்து கொள்ள

தீர்ப்பதுதான் மூத்திரத்தின் கிரிச்சிரம்போகும்

தேகந்தில் உள்காந்தல் தெளிவ தாமே

மூத்திர கிரிச்சரம் நீங்குவதற்கான மருந்து சொல்லப்படுகிறது. சிறுபீளை,நெருஞ்சிவேர், செங்கழனிவேர்,செப்புநெருஞ்சிவேர் இவற்றை ஆவின்பாலால் அரைத்து, அதில் குழப்பி உட்கொண்டு வந்தால் மூத்திரக் கிரிச்சரம் போகும். தேகத்தில் உண்டாகும் உள்காந்தல் நீங்கும்.

198. நடுக்கு வாதம்:-

தாமென்ற நடுக்கியதோர் வாதந் தீர
　　தனிமுருங்கை சிவதையுடன் குப்பைமேனி
வாமென்ற வெண்ணோ மாவி லிங்கை
　　மறக்காமல் விடைத்தலையும் வெள்வே லாவும்
போமென்ற கருவேல முப்பு ரண்டி
　　பெருவேலி முசுட்டையுடன் வாத டக்கி
ஆமென்ற கொத்தானுங் கொழுஞ்சி தும்பை
　　அப்பனே சாறுவகை நாழி கட்டே

முருங்கை, சிவதை, குப்பை மேனி, மாவிலங்கை, விடத்தலை, வெள்வேல், கருவேலம், உப்பு, பெருவேலி, முசுட்டை, வாதமடக்கி, கேத்தான் கொழுஞ்சி, தும்பை இவற்றின் சாறு வகைக்கு 1.3லிட்டர் அளவு சேகரித்துக் கொள்ளவும்.

199. நாளியுடன் முன்வேருஞ் சமனாய்க் கட்டி
　　நன்றாகச் சாறுவிட்டு அரைத்துக் கொண்டு
ஊளிழா யெண்ணெபடி ரெண்டு விட்டு
　　முறுதியாய் நன்றாகக் காய்ச்சிக் கொண்டு
தாளியாய்ச் சட்டிதனில் பதமுங் கண்டு
　　தறுகாமல் வடித்திடுவாய் தயிலந் தன்னை
நீயிதோர் கரண்டயுண்டு மேலே பூசி
　　நிலவரமாய்ப் பத்தியம்வை நிமிர்த்தி யாமே

இவ்வகை சாற்றுடன் முன்சொன்ன வேர்களையும் சேர்த்து அரைத்து எண்ணெய் 1.3லிட்டர் சேர்த்து நன்றாகக் காய்ச்சிக்கொண்டு பதங்கண்டு இறக்கி தயிலத்தை வடித்துக் கொள்ளவும். மேலுக்கும்பூசி, வேளைக்கு ஒரு கரண்டி வீதம் தொடர்ந்து உண்டுவர நடுக்குவாதம் நீங்கும். முறையான பத்தியம் காக்கவும்.

.விஷக்கிருணை

200.விப்புருதிக்கு:-

நிமிர்த்தியாம் விப்புருதிக் கென்னை கேளு
நெரிசத்தி சாரணைவேர் கிலுகிலுப்பைவேரும்
பவித்தியாம் வசம்புள்ளி தண்ணீர் விட்டான்
பாகமாய் நீலிவேர் சமன தாக
தவித்திடாத் தானரைத்து விராகன் ரெண்டுகாயஞ்
சாந்தகமா யாவின்நெய் தன்னிலுக் காய்ச்சி
குவித்திடவே யிருநேர மெட்டு நாளுங்
கொண்டிடுவாய் காசிடை பத்தியமுங் காரே

சாரணைவேர், கிலுகிலுப்பைவேர், வசம்பு உள்ளி, தண்ணீர்விட்டான், நீலிவேர் இவற்றைச் சமனாக எடுத்து அரைத்து தேவையான அளவு ஆவின்நெய் சேர்த்து நாளொன்றிற்கு 2 வேளை வீதம் 8 நாட்கள் உட்கொண்டு பத்தியம் காத்திட விப்புருதி நோய் நீங்கும்.

201.காற்பதுதான் மேல்ப்பூசு புங்கங் கொட்டை
காராட்டுப் புழுக்கையுடன் கலந்த ரைத்து
வார்ப்பதுதான் நீர்வார்த்து அரைத்துப் பூசி
மறக்காமல்க் கவுதும்பை புளியங் கொட்டை
ஏற்பதுவே புத்தமண்ணு மிலைதான் பூலா
யிதமாக தானரைத்து மேலே பூசி
மூர்க்கமுடன் சொல்லக்கேள் பத்து நாளு
முசியாமல்ப் பூசிடவே தெரிக்கும் பாரே

புங்கங்கொட்டையைக் காராட்டுப்புழுக்கையுடன் சேர்த்து நீர்வார்த்து அரைத்து மேலுக்குப் பூசிக் கொள்ளவும். கவுதும்பை, புளியங்கொட்டை, புற்றுமண், பூலா இலை இவற்றையும் சேர்த்து அரைத்து மேலுக்குப் பூசிக்கொள்ளவும். இவ்வாறு பத்துநாள் பூசிட தெரிக்கும் பாரு.

202. இளைப்புக்கு ஆமணக்கெண்ணெய்

தெரிந்தா மணக்கெண்ணை யுரிசேர்

கோரோசினை விராகனீ ரண்டு

குருந்தா வசம்பு ஒருபலமுங்

குறையாத் துள்ளி யிருபலமுங்

களத்தும் பூலாக் கொழுஞ்சியிலை

கருத்த சீரக மரைப்பலமும்

நரந்தப் பொடித்து வெயிலில் வைத்து

ஆகுங் கனைகள் கழுவருமே

ஆமணக்கெண்ணெய் 2.6மிலி, கோரோசினை 10கி வசம்பு 35கி, உள்ளி 70கி, பூலா, கொழுஞ்சி இலை, கருஞ்சீரகம் 18கி இவற்றை எல்லாம் ஒன்றாகச் சேர்த்துப் பொடித்து வெயிலில் வைக்கவும்.

203. கருசிலாங் கன்னி சங்காம்

கரவலை நொச்சிப் பாமும்

பெரியதோர் வில்வச் சாறும்

பேரா-டாதோடைச் சாறும்

அரிய தூதுவளையின் சாறும்

அமுக்கிராப் பூச்சாறு மத்தம்

யெரியவே நெய்யில்க் காச்சி

நக்கிட யிளைப்புத் தீரும்

கரிசலாங்கன்னிச்சாறு, சங்கஞ்சாறு, நொச்சிச்சாறு, பெருவில்வச்சாறு, ஆடாதோடைச்சாறு, தூதுவளைச்சாறு, அமுக்கிராச் பூச்சாறு, ஊமத்தஞ்சாறு, இவற்றையெல்லாம் கூட்டி தேவையான அளவு நெய் சேர்த்துக் காய்ச்சி தொடர்ந்து 'நக்கிவர இளைப்புத்தீரும்.

204. தீருமடா கல்மதங் கல்நார் கார
திப்பிலியு மதிவிடையுங் கடுகு ரோகிணி
பேருபடாத் தாளிசையுஞ் சீரகமும் ரண்டு
பெருஓமம் அக்கிராகாரஞ் சாதிகாயும்
பாருஅத பத்திரியுங் கஸ்த்தூ ரி மஞ்சளி
பஞ்ச திரவியங் குரோசாணி சிங்கி
வளமான சிலாசத்து நாயுருவி சேரே

கல்மதம், கல்நார், காரதிப்பிலி, அதிவிடையம், கடுகுரோகிணி, தாளிசை, சீரகம், ஓமம், அக்கிராகாரம், சாதிக்காய், பத்திரி, கஸ்தூ ரி மஞ்சள், பஞ்சதிரவியம், குரோசாணி, மிருதார்சிங்கி, சிலாசத்து, நாயுருவி இவற்றைச் சேர்த்தெடுத்துக் கொள்ளவும்.

205. நாயுருவி கிரந்தி நாயகமுங் கூட்டி
நன்றாகச் சமன்கொண்டு துளசிச் சாறு
ஓயாத கரிசலாங் கண்ணிச் சாறு
உத்தவள்ளை நொச்சிச்சாறு கஞ்சாங் கோரை
பாயுமே யிஞ்சிச்சாறு மத்தஞ் சாறும்
பாயவிட்டு அரைத்துநீ கடலை போல
மாயமாய் வந்ததொரு னோய்கள் தீருங்
களஞ்சி.....தேனுங் கலந்து உண்ணே

நாயுருவி, கிரந்திநாயகம் இவற்றையும் சமஅளவெடுத்து, துளசிச்சாறு, கரிசலாங்கண்ணிச்சாறு, வெண்ணொச்சிச்சாறு, கஞ்சாங் கோரை, இஞ்சிச்சாறு, ஊமத்தஞ்சாறு, இவற்றைச் சேர்த்து அரைத்து கடலைபோல உருட்டி காய வைத்துச் சாப்பிட பலநோய்கள் நீங்கும் என்பதாம்.

206. உண்ணவே ஆவின்நெய் யுரிந் குள்ளே
உத்தமமா மிஞ்சிச்சாறு மருந்து சேர்த்து
கன்னநீ காய்ச்சியே தட்டிடையே கொண்டால்
கடல்புக்கும் நோய்களெல்லாங் கமறிப் போகும்
பன்னுசித்தா மணக்கென்ண முன்சாறுங் கூட்டி
பகுத்திடுவாய் கடைமருந்து கூடச் சேர்த்து
தின்மையாய் எரித்துநீ உள்ளுக் கொண்டால்
தீருமென்னா வெல்லாந் தெளிந்து போமே

2.6லிட்டர் நெய், 2.6லிட்டர் இஞ்சிச்சாறு சேர்த்துக் காய்ச்சி 500மிலி. அளவு உட்கொள்ளும்போது துன்பந்தரும் நோய்கள் எல்லாம் நீங்கிப் போகும். சிற்றாமணக்கெண்ணையுடன் முன்சொன்ன சாறுகளையும் சேர்த்து கடைமருந்துகளையும் கூட்டி எரித்துக் காய்ச்சி உட்கொண்டால் பலவகை நோய்கள் தீரும் என்பதாம்.

207. தெளியவே மாத்திரையும் நெய்யு மெண்ணை
செலுத்தியே வெவ்வேறு கொள்ளும் போது
ஒளியரதோர் வியாதியெல்லா முரைக்கக் கேளு
உறுதியாங் கல்மாந்த மெட்டும் போகும்
பழியான உள்க்காய்ச்சல் சுரங்க ளெல்லாம்
பட்சியுட தோஷவகை பாலக்கிறுத தோஷமும்
துளிவான பிரமிய காந்தல் காலிசிவு
துலங்குசுல் வாய்வுகுண்டலியரையர்ப்புந் தீரும்

மேற்சொன்ன மாத்திரையும் எண்ணெயும், தனித்தனியாக உட்கொள்ளும்போது தீரும் நோய்களைச் சொல்வேன். எட்டுவகை மாந்தங்கள், உட்காய்ச்சல், சுரங்கள், பட்சிதோஷங்கள், பாலகிறுக தோஷங்கள் பிரமிய காந்தல் காலிசிவு, வாய்வு, குண்டலி, அரையாப்பு போன்றனவும் தீரும்.

208. திருமே அத்திசுரங் காலெரிவு கையெரிவு
திசைகெட்டு ஓடிவிடுங் குளிகை கண்டால்
வாருநீ யெண்ணைநெய் ஒன்றைவிட் டோரானாள்
மக்களே நோவெல்லாம் மாய்ந்து போகும்
கூறறிஞ்சு யிந்தமுறை மூன்றி லொன்று
குழந்தையின்நோய் தீர்ந்துவிடுங் குளிர்ச்சி யாகும்
வேருறுயின்னஞ் சூரணந்தான் சொல்லக் கேளு
வேறு நோய்கள் தீர்ந்துவிடு மேலாதி கேளே

அத்திசுரம், காலெரிவு, கையெரிவு, இவை யாவும் மாத்திரை உண்டால் நீங்கும். எண்ணெய், நெய் ஒன்றுவிட்டு ஒரு நாள் சாப்பிட்டு வரவும். குளிகை, எண்ணெய், நெய் இம்மூன்றில் ஒன்றை உட்கொண்டால் குழந்தையின் நோய்கள் எல்லாம் நீங்கும். உடல் குளிர்ச்சியாகும். பல நோய்கள் தீர்வதற்கான சூரணம் இனிச்சொல்வேன்.

209. ஏலாதி:
ஏலங் கோஷ்ட்ட மிலவங்கம்
லவங்கப் பத்திரி திரிகடுகு
கோலமுத்தக் கொத்த மல்லி
லோவு சீரகம் நாகப்பூ
பால சந்தனஞ் கற்பூரம்
வயங்கு கிராம்பு தாளிசையும்
சாலச் சமனா யிடைகொண்டு
சரியாய்ச் சர்க்கரை யிடைகூட்டே

ஏலம், கோஷ்டம், இலவங்கம், இலவங்கப் பத்திரி, திரிகடுகு, கோலமுத்தம், கொத்துமல்லி, சீரகம், நாகப்பூ, சந்தனம், கற்பூரம், கிராம்பு, தாளிசை இவற்றைச் சமஅளவு எடுத்துக் கொண்டு அதே அளவு சர்க்கரை சேர்த்துக் கொள்ளவும்.

210. கட்டி யிடித்து யிதந்தன்னில்

முலைவோ யெரிவு காலெரிவு

நாட்டில் மிகுந்த வாந்திகுன்மம்

நல்கு மாந்த பித்தமுடன்

யீட்டின் பெருத்த யிளைப்பிருமல்

யிருகண் சுழற்றல் தலைவலித்தல்

வாட்டம் பெருத்த மேலெல்லா

மாறிப் போகுங் கண்டீரே

சர்க்கரை சேர்த்து இடித்துக் கொண்டு நெஞ்சக நோய், நெஞ்செரிவு, காலெரிவு, வாந்தி, குன்மம் மாந்தம், பித்தம், இளைப்பு, இருமல், கண்சுழற்றல், தலைவலித்தல் ஆகிய நோய்களுக்கு வழங்கிட அவை நீங்கும்.

211. அமுர்தாதி குளிகை:-

கண்டதோர் குளிகையொன்று சொல்லக் கேளு

கசடறவே அமுர்தாதிக் கவியாச் சொன்னேன்

மண்டலத்தில் யெல்லாநீக்கும் வியாதி தீர்க்கும்

மகத்தான குளிகையுட மார்க்கங் கேளு

பண்டுள்ள வியாதியெல்லாம் பத்த முக்கும்

படுபாவி மேகமெல்லாம் பரந்து போகும்

மண்டலத்தி லுயிர்போனா லுடனே மீட்கும்

அப்பனே யிம்மருந்தை அறிந்து செய்யே

தேர்ந்த ஒரு குளிகை ஒன்றைச் சொல்வேன். அமுர்தாதி குளிகை என்பதைக் கவியாகச் சொல்வேன். 40நாட்கள் உட்கொள்ள வியாதி தீர்க்கும் மருந்தைச் சொல்வேன். பலவகை நோய்களைப் போக்கும். மேகங்கள் எல்லாம் நீங்கும். உயிர்போகும். நோய்கள் என்றால்கூட உடனே போக்கும்.

212. அரிதாரந் திரிகடுகுந் திரிப லையும்

மானகெந்தி யிருவிரசம் நாவி முத்தம்

பொரிகாரஞ் சீரகங் கஸ்த்- தூரி மஞ்சள்

பேறான கருஞ்சீரகமு வில்லை வேரும்

தெரியவே மரமஞ்சள் அக்கிராக் காரஞ்

சேர்த்தநீ வாய்விளங்கஞ் சந்தனமுங் கூட்டி

பெரியதொரு முருங்கை வட்டதிருப்பி வேரும்

பேர்கண்டங் கத்திரியின் வேருஞ் சேரே

அரிதாரம், திரிகடுகு, திரிபலை, கெந்தி, இருவி, ரசம், நாவி, முத்தக்காசு, பொரிகாரம், சீரகம், கஸ்தூரி மஞ்சள், கருஞ்சீரகம், வில்வவேர், மரமஞ்சள், அக்கிராகாரம். வாய்விளங்கம், சந்தனம், முருங்கை, வட்டதிருப்பிவேர், கண்டங்கத்திரிவேர் இவற்றையும் சேகரித்துக்கொள்ளவும்.

213. சேர்த்திடுவாய் வேர்வகையுங் கடைமருந்து

திறமாக வகைக்கியொரு விராகன் வீதம்

ஆர்த்திட்ட வாளஞ்சுத்தி விராகன் பத்து

ஆனதொரு மருந்தெல்லா மொன்றாய்ச் சேர்த்து

சேர்த்திடவே கடைமருந்து சுத்தி பண்ணி

குளிகைக் கல்லி லரைப்பதற்குக் கூறக்கேளு

வார்த்திடுவாய் மஞ்சள்ச்சாறு பிசறிக் கொண்டு

மகிழஅரை கையான்சார் முருங்கைப் பட்டை

மேற்சொன்ன வேர்வகைகளையும், கடைச் சரக்குகளையும் வகைக்கு 5கி வீதமெடுத்து சுத்தி செய்த நேர்வாளம் 10கி எடுத்துசுத்தி செய்த கடை சரக்குகளைக் குழிக்கல்லில் இட்டு இரைத்து மஞ்சள்கயிறு சேர்த்துப் பிசறிக்கொண்டு கையான்சாறும், முருங்கைப் பட்டைச்சாறும் விட்டு அரைத்தெடுத்துக் கொள்ளவேண்டும்.

214.பட்டையின் சாறொருநாள் கையான் சாறொரு நாள்
பதறாம லாளொன்று சாம மொன்று
எட்டுனா ளின்முறையா யறைத்து மையாய்
யிதமாக மிளகதுபோல் நிழலு லத்தி
திட்டமாய்க் கைபார்த்து முகத்தைப் பார்த்து
திறமான நோயறிந்து குளிகை யொன்று
கட்டளையாய் நாலஞ்சு எட்டு யேழு
கனமான நோய்களுக்கு பத்துனாளிக் செய்யே

ஒருநாள் கையான் சாறு சேர்த்து எட்டு நாட்கள் தொடர்ந்து அரைத்துக் கொள்ளவும்.மிளகளவு உருண்டை செய்து நிழலில் உலர்த்தி கைபார்த்து முகம் பார்த்து நோயின் தன்மை அறிந்து குளிகை வழங்கினால் நான்கு,ஐந்து,ஏழு,எட்டு,பதினைந்து என நோய்களுக்கு ஏற்ப குளிகைகளை வழங்கலாம்.

215. செய்திடு வியாதிக் கெல்லாம்
தீரப்பா அநுப்பா னத்தில்
அய்யித வியாதி வெவ்வே
ரருந்துவ தொவ்வோ ருண்டை
தையலே யிருநேர த்தான்
தாக்கிட னோய்கள் தீரும்
பய்யவே-பஞ்க் கிராணி போகும்
பாதி-ரியின் பட்டை

ஒவ்வொரு வியாதிக்கும்ஏற்ப தக்க அனுபானத்தில் வழங்கிடலாம். வியாதிகளுக்கு வேளைக்கு ஒரு உருண்டை வீதம் இரண்டுவேளை உண்டுவர நோய்கள் நீங்கும். இவ்வாறு உண்டுவர சங்கிராணி போகும்.

216. பட்டையை அரைத்து மேதை

யினத்தயிர் குடிக்கத் தீரும்

திட்டமாஞ் சுழிகழிச்ச லக்குச்

செவத்து மூன்று அம்மோரில்

நட்டமாய் விக்கல் வென்னீர்

நாட்டும் நெல்லிக்காய்ச் சாறு

எட்டுக் கிராணிக் கனுப்பான

மிகுத்த நிம்பஞ் பழச்சாறே

பாதிரியின் பட்டையை அரைத்துஎருமைத் தயிரில் கலந்து குடிக்கவும். கழிச்சலுக்கு 3 குளிகைகளை எருமை மோரில் வழங்கலபம். விக்கலுக்கு வெ.ன்னீரும்,நெல்லிக்காய் சாற்றிலும் வழங்கலாம். எட்டுவகை கிராணி நோய்களுக்கும் எலுமிச்சம்பழச்சாற்றில் சாப்பிடலாம்.

217. சகல விடம்:

சாரும் விரையு முண்டையுடன்

தாக்கு நசியஞ் கண்ணிலிடு

மீரு மெருமை சாணிச்சார்

வேண்டும் நொச்சிச் -சார் நெய்யா

கூறு மாச்சி நிலைச்சாறு

கூட்டு மதிலே யோருண்டை

உண்ணக்குள் விடம்போம் நீயருந்த

யெல்லா விஷமும் மிகழ்ந்திடுமே

எலுமிச்சம்பழச்சாறும் விதையும் வேர்த்து சாறெடுத்து நசிய-மிடவும். கண்ணிடவும். எருமை சாணிச்சாறு, நொச்சிச்சாறு, ஆச்சி நிலைச்சாறு ஆகியவற்றில் சேர்த்து ஓர் உருண்டையைச் சாப்பிட்டு வர எல்லாவகை விஷங்களும் நீங்கிப் போகும்.

218. மிகமு மிரத்த மண்டெலிக்கு
மிருநீ பாக்கு வெத்திலையில்
நிகமுஞ் சன்னி யிஞ்சிச்சார்
நாட்டுந் திப்பிலி கூட்டியிடு
பூமும் பச்சை நாவிதின்றால்
போகும் பச்சைக் கன்நீரில்
மகிழுஞ் சாதிக் காயாகு
மருந்துங் கண்டா மாலைப்புண்ணாம்

இவ்வுருண்டையை இரத்த மண்டலிக்கு வழங்கும்போது பாக்கு வெற்றிலையிலும், சன்னிக்கு இஞ்சிச் சாற்றிலும், திப்பிலியிலும், பச்சை நாபி உண்டதற்கு பச்சைக்கள் நீரிலும், கண்டமாலைப் புண்ணிற்கு சாதிக்காயுடனும் கூட்டி வழங்கலாம்.

219. புண்ணாந் துளசிச்சாற்ற ரைத்துப்
பூச ஆறுமுள் ளருந்த
கன்ன உதிர வாய்வுக்கு
காடி வசம்பு புளியிலைச்சாறுத்
தின்ன ஆவின் நீராகுஞ்
சேரும் நெய்யாம் வெந்நீராம்
வன்ன மருந்து முதிரோகம்
வாய்வுக் கையாந் சாறாகும்

கண்டமாலைப் புண்ணின்மீது துளசிச் சாற்றில் அரைத்துப் பூசலாம். கன்னவாயு, உதிரவாயுக்கணக்கு, ஆவின் சாற்றிலும், காடி, வசம்பு, புளியிலைச்சாற்றில் சாப்பிட நீர் நன்றாகப் பிரியும். நெய்யில் அல்லது வெந்நீரில் சாப்பிட முதுமை நோய்களும், வாய்வுக்கு கையாந்தகரைச் சாற்றிலும் சாப்பிடலாம்.

220. சாறுங் குளிருங் காய்ச்சலுக்குத்
தாக்கு மாலம் பாலாகும்
கூறும் நிம்பப் பழச்சாற்றில்
கூட்டி அஞ்சன் மிடப்போகும்
தீரும் நாலா முறைக்காய்ச்சல்
தெளியு மூமத்தஞ் சாற்றிலுண்ண
வாருஞ் சீத சுரத்துக்கு
வாங்குஞ் சீரகஞ் சர்க்கரையே

மேலும் குளிர் காய்ச்சலுக்கு ஆலம் பாலிலும், எலுமிச்சம்பழச்சாற்றில் கூட்டி அஞ்சனமிட நாலாமுறைக் காய்சல் நீங்கும். ஊமத்தம்சாற்றில் சாப்பிட்டு வர நீங்கும். சீதசுரம் இதனுடன் சீரகம், சர்க்கரையும் கூட்டிச் சாப்பிடலாம்.

221. கரைக்குந் தாப சுரத்துக்குக்
கையான துளசிச் சாறாகும்
நிரைக்குந் திரிபலைக்கு சயமுமாம்
நேரே வெள்ளி ரதவாகு
மரைக்குந் துளசி நிம்பச்சா
றதிலே உரைத்துக் கண்ணிலிடு
யிரைக்கும் வேறு-திரேக மெல்லா
மேகும் வசம்பு வரைமுருங்கை

தாபசுரத்திற்குக் கையான்தகரைச் சாற்றிலும், துளசிச்சாற்றிலும் வழங்கலாம். சயரோகத்திற்கு திரிபலைத் தூ ளிலும், வெள்ளிலும் வழங்கலாம். துளசிச் சாற்றிலும், எலுமிச்சம்பழச்சாற்றிலும் உரைத்துக் கண்ணிலிட கண்புரை நீங்கும். உடல் பலத்திற்கு வசம்புச் சாற்றிலும் வரைமுருங்கைச் சாற்றிலும் வழங்கலாம்.

222. வலிப்பு_மிஜள_காரசம்:-

உருகுந் திரிதோஷ சுரங்களீ-வாய்வு
　　முளக்கும் பித்திய மிவையெல்-லாங்
கருகு நிம்பை பழச்சாற்றில்
　　கடுகு உரைத்துக் கண்ணிலிட
பெருகுஞ் சுக்கிலத் தம்பனம்போம்
　　புளியம் விரைத்தோல்ச் சூரணத்தில்
உருகு மூர்ச்சை முசவலிப்பு
　　உரைத்த அஞ்சனங் கையான்சாறே

திரிதோஷங்கள், சுரங்கள், வாயு, பித்தம் இவை எல்லாவற்றையும் எலுமிச்சம்பழச் சாற்றில் உரைத்துக் கண்ணிலிட சுக்கிலம் பெருகும். தம்பனம் நீங்கும். புளியம்விதை, தோல்சூரணம் சேர்த்து மூர்ச்சை முசல் வலிப்பு இவற்றில் வழங்கலாம். கண்ணோய்களுக்கு கையான்சாற்றில் அஞ்சனமிடலாம்.

223. சாத்துகிறோம் வாய்வு-சுரம் வகுத்து உப்பல்
　　தவறாமல்ப் பாகலிலைச் சாற்றில்க் கொள்ள
போற்றியதோர் முருங்கப் பட்டை நெய்யு-ரைத்து
　　பொருந்தவே உண்டுவிடு பின்னுங் கேளு
காத்திடவே சீரகமுஞ் சக்கரையுங் கொள்ளு
　　கனமான நெல்லிக்காய்ச் சாறு மாகும்
விந்துகட்டுஞ் சூலைக்கு அமுரி கட்டி
　　வெண்காரம் பொரித்துண்ண விட்டுப் போகும்.

வாய்வுசுரங்கள் வயிறு உப்பல் இவற்றிற்குப் பாகலிலைச் சாற்றில் குளிகையைக் கொடுக்கலாம். முருங்கைப் பட்டையை நெய்யில் அரைத்து அதனுடன் சீரகமும், சர்க்கரையும்உட்கொள்ளலாம். நெல்லிக்காய்ச்சாறும் உண்கொண்டு வரலாம். விந்து கட்டுவதற்கும், சூலைக்கும் அமுரி சேர்த்து வெண்காரம் பொரித்துண்டால் நீங்கும்.

224. போவதற்கு வியாதிகளுக்கு ஆட்டுப் பாலில்

புகழ்முறி கட்டியே குடிக்க நன்று

ஆவதொரு காசம்போம் வெங்கார மாகும்

ஆனசிறு வழுதலை விரைச்சூரணமுந் தின்னக்

கேவலமாஞ் சுவாசமுடன் காச மெல்லாங்

கெடியான அறுகஞ்சார் யெலிச்செவியின் சாறும்

பாவகமாய்ச் சீரகமுங் கூட்டிக் கொள்ளு

பசியெடுக்கச் சீரகமும் வெல்ல முன்னே

வியாதிகள் நீங்க இந்த உருண்டையை உண்ணும் போது ஆட்டுப் பாலில் உன்பது நல்லதாகும். அவ்வாறு குடிக்க காசம் நீங்கும். வெங்காரம் சேர்த்தும் சாப்பிடலாம். சிறுவழுதனை விரைச்சூரணமும் சேர்த்துச் சாப்பிட சுவாசம், சுவாசகாசம் இவை நீங்கும். அறுகம்-புல்சாறு, எலிச்செவிச்சாறு சீரகமும் சேர்த்துக் கூட்டிக் கொடுக்க-லாம். பசி உண்டாக சீரகமும் வெல்லமும் சேர்த்து வழங்கலாம்.

225. உண்ணாவ் மாது பிறமேகத் துக்கு

உடனந்தேனுந் திப்பிலியும் ஆட்டுப் பாலாம்

ஒண்ணான சேநீருமம்போம் அக்கிரா காரம்

வாசமுள்ள சாதிக்காய் கூட்டிக் கொள்ள

என்னாமல்ச் சீரகமும் ஆவின் நீறும்

யிட்டமுடன் கொடுக்கவே குட்டந் தீரும்

பெண்களுக்குண்டாகும் பிரமேகம் தீர இந்தக் குளிகையுடன் தேன், திப்பிலி, ஆட்டுப்பால் சேர்த்து வழங்கலாம். இதனுடன் அக்கிராகாரம், சாதிக்காய், சீரகம், ஆவின்நீறு சேர்த்து வழங்க குட்டம் தீரும்.

226. குட்டம்போம் சொறிசிரங்கு திவவுத் தீர
குழப்பியே நல்லெண்ணையில்ப் பூசத் தீரும்
கட்டுகின்ற சூலைக்குச் சலவை சன்னி
கையான் சாறு கொடுத்திடவே கமறிப் போகும்
தொட்டதொரு சூலையின்மேல் மேக மானால்
சூரணமாஞ் சக்கரையுங் கொட்டைப் பாக்கும்
வட்டவரிக் கற்றாளைச் சாறுந் தேனும்
வரிசையுள்ள சீரகமும் முருங்கை வித்தே

குட்டம், சொறிசிரங்கு, திவவு இவை தீர குளிகையை நல்லெண்ணையில் குழப்பிப் பூச தீரும். சூலைக்கட்டிற்கும், சன்னிக்கும் கையான் தகரைச்சாறு சேர்த்து வழங்கலாம். சூலை, மேகத்திற்கு சர்க்கரை, கொட்டைப்பாக்கு, வரிக்கற்றாழைச்சாறு, தேன் சீரகம், முருங்கைத் வித்தையும் சேர்த்துக் கொள்ளவும்.

227. வித்துடனே விதையெல்லா மொன்றாய்ச் சேர்த்து
விளாவியே பழச்சாற்றில் மிகவ ருந்த
யித்தித்துப் பிறமேகஞ் சார்வ மேகம்
ஏகமுடன் மேகமெல்லா மெருமைப் பாலாம்
சுத்தமாய் யிந்திரிய நட்ட மானால்
சுருக்கான நெருஞ்சிய்ன்சார் சீரகமுங் கொள்ளு
நித்தலுமே கண்ணோவு யிசிப்பு மாந்தம்
நிகழவே அா துவளை பிரமிக் கொள்ளே

மேற்சொன்ன எல்லாப் பொருட்களையும் ஒன்றாகச் சேர்த்துக் கலக்கி எலுமிச்சம்பழச்சாற்றில் அருந்தினால் பிரமேகம், நீங்கும். எருமைப்பாலில் வழங்க மேகமெல்லாம் நீங்கும். இந்திரிய நட்டத்தை ஈடுசெய்ய நெருஞ்சிச்சாறு, சீரகம் இவற்றை உட்கொள்ளலாம். கண்ணோய் இசிப்பு, மாந்தம் இவற்றிற்கு அா துவளைச் சாற்றிலும் பிரமிச்சாற்றிலும் உட்கொள்ளலாம்.

228. கொளிளான வெகுமூத்திரக் கிரிச்சல் தீரக்
கொளிருகருந் துளசிச்சா றட்டுப் பாலும்
வாளாக ஊமத்தஞ் சாறுங் கூட்டி
மகிழவே ஒவ்றாகக் குடிக்கத் தீரும்
மேளமா யுடம்பெல்லா மெண்ணை போல
விசிறியே காஞ்சாக்கால்ச் செம்முள்ளிச் சாறாம்
தாழ்விலா ஆட்டுப்பால் கொம்புசந்தன முந்தேனுந்
தாங்கவே நோயெல்லாந் தவறிப் போகும்

வெகுமூத்திரக் கிரிச்சரம் தீர கருந்துளசிச் சாற்றினும், ஆட்டுப்பாலினும் உட்கொள்ளலாம். ஊமத்தஞ்சாறுகூட்டி முன்சொன்னவற்றுடன் சேர்த்தும் பருகலாம். உடம்பெங்கும் எண்ணெய்போல படர்ந்திருந்தால் செம்முள்ளிச்சாறும் ஆட்டுப்பால், கொம்புசந்தனம், தேன் இவற்றைச் சேர்ந்தருந்த நோயெல்லாம் நீங்கிப் போகும்.

229. தவறவே பிரமேகம் வெந்தயத்தில்க் கொள்ளு
சக்கரையாம் பயித்தியம்போம் நீரில்க் கொள்ள
பவங்கள் விட்டுக் கல்லவிளக் கொட்டைப்பாக்கு
பாகமாய்ச் சூரணித்துச் கல்லிச் சாறுங்
கவங்கவே பூசணிக்காய்ச் சாற்றி லூட்டி
கடுகவே குளிகைதான் குடிக்கத் தீரும்
நவமான மூலமென்ற வியாதி தீர
நாட்டிலுள்ள பிரண்டைச்சார் யிஞ்சிச் சாறும்

பிரமேகத்திற்கு இக்குளிகையை வெந்தயத்தில் உட்கொள்ளலாம். சர்க்கரைசேர்த்துப் பாச்சிட பித்தம் நீங்கும். நீரிலும் உட்கொள்ளலாம். கொட்டைப் பாக்கை இடித்துச் சூரணித்துப் பொன்னாங்காணிச்சாறும், பூசணிக்காய் சாறும் சேர்த்த குளிகையைச் சேர்த்துப் பருக மூல வியாதி தீரும்.

230. யிஞ்சிச்சாறு பூசணிக்காய்ச் சாறுங் கூட்டி
யிட்டமுடன் கொண்டிடவே மூலம் போகும்
மிஞ்சியதோ பீனிசமுங் கபாலக் கட்டி
விழுகின்ற சீயெல்லாம் விட்டுப் போக
கஞ்சாவி னிலைச்சாறு சீலை யூட்டிக்
காயவைத்து அதின்மேலே மருந்து கேளு
அஞ்சாமல் முந்திரிகைப் பழத்தின் சாற்றால்
அரைத்திடுநீ பாகைவிதை உளுந்துங் கூட்டே

இஞ்சிச்சாறும், பூசணிக்காய்சாறும் கூட்டிச் சாப்பிட்டு வர மூலம் நீங்கும். பீனிசம், கபாலக் கட்டி அதில் உண்டாகும் சீழ் இவையெல்லாம் விட்டுப்போக கஞ்சாஇலைச் சாற்றைத் துணியிலூட்டி காயவைத்து அதன் மேல் முந்திரிச்சாறு, பாகவிதை, உளுந்து இவற்றை வைத்துக் கொள்ளவும்.

231. உருட்டியே திரிப்புகையை மூக்கி லேத்த
ஓடிப்போம் பீனிசமுஞ் சீயு மாறும்
பிரட்டியே வைத்ததிலே யெரிவு கண்டால்
பேணியதோர் நெல்லிப்பருப்பை சூர ணித்து
சுருட்டியதோ ரிஞ்சிச்சார் வெற்றிலையின் சாறுஞ்
சுகமாக லேகித்துத் துலங்க உண்ணு
மறுபடியே பசியெல்லா மந்த மாகில்
மாசத்த பொருமலுக்கு மருந்து சொல்வோம்

திரிப்புகையை மூக்கில் ஏற்ற பீனிசமும் சீழும் மாறும். எரிச்சல் உண்டானால் நெல்லிப்பருப்பை இடித்துத் தூளாக்கி இஞ்சிச்சாறு வெற்றிலைச்சாறு சேர்த்து சாப்பிட்டு வந்தால் நோய்கள் தீரும். பசியெடுக்காமல் வயிறு மந்தித்துக் கொள்வதற்கும் இனி மருந்து சொல்வோம்.

232. சொல்லுங் கோட்டாங் கரந்தையுமா மறுகின்வேரும்
தனிறான புளியீர்க்கி குளிகை பண்ணி
கல்லுப்போலக் குளிகைதனை ஒன்று ரைத்து
கலக்கியே கொடுத்திடுவாய் ரோகந் தீரும்
நில்லாத பலகரப்பான் பிரமிச் சாறும்
நிலைக்கவே சரீரசுத்தி நினவாய்க் கேளு
வெல்லவே வருஉதமது மூன்று மாதம்
விளங்குபச்ச மூன்றுடனே நாகு மொன்றாம்

கோஷ்டம், கரந்தை, அருகன்வேர், புளியம் ஈர்க்கு இவற்றைச் சேர்த்து அரைத்து முறைப்படி நிழலிலுலர்த்திக் காயவைத்து குளிகைசெய்து கொள்ளவும். இக்குளிகையில் ஒன்றை உரைத்துக் கலக்கிக் கொடுக்க பலவகை கரப்பான் நோய்கள் நீங்கும் என்பதாம். பிரமிச்சாற்றைச் சேர்த்துப் பயன்படுத்த சரீரம் சுத்தியாகும். வருடத்தில் மூன்று மாதங்கள் இவ்வாறு உண்டுவர வேண்டியதாகும்.

233. ஒன்றாக நாளொன்று குளிகை யொன்று
உடன் நீச்சுத் தண்ணிதனில் உகந்து கொள்ளு
நன்றாகத் தீபனமும் வசிய முண்டாம்
நாட்டுவாய் குளிசத்திற் சிரசி லப்பா
பண்டுள்ளத் தலைதிரும்பி நடுக்க மானால்
தவறாமல் பூசணிக்காய்ச் சாற்றில் கொள்ளு
யென்றுசிறு திசைவாய்வு சந்து னோவு
யேக அந்திர வாய்வுடனே வாதந் தானே

நாளொன்றிற்கு ஒரு குளிகை வீதம் பழஞ்சோற்றுத் தண்ணீரில் உட்கொண்டுவர தீபனம் (பசி) உண்டாகும். வசியங்கள் கைகூடும். தலை நடுக்கம் கண்டால் பூசணிக்காய் சாற்றில் உட்கொள்ளலாம். திசைவாயு, சந்துநோவு, அந்திரவாயு, வாதம் இவற்றிற்கும் இக் குளிகையை வழங்கலாம்.

234. தானே முருங்கைவேர் சாற்றில்
தளம்பத்து வாலைதா னிட்டு
மானே அததாளுள் ளாக்கா
மருந்து திரிபலை திரிகடுகு
தேனே நிம்பப் பழச்சாற்றில்
திரட்டி யரைத்து உள்ளருந்த
நானே சொன்னேன் மருந்தீட்டால்
நாடிமுறியுங் கோவை யிஞ்சி

முருங்கைவேர் சாற்றில் ஷவாலையிட்டு பின்னர் திரிபலை, திரிகடுகு இரண்டையும் எலுமிச்சம்பழச் சாற்றில் சேர்த்து அரைத்துச் சாப்பிட்டுவர மருந்தீட்டால் வந்த கேடுகள் நீங்கும். கோவைச்சாறு, இஞ்சிச்சாற்றிலும் வழங்கலாம்.

235. யிஞ்சியாந் திரிதோஷ சுரமுஞ் சன்னி
யிசிப்புக்குத் திரிகடுகு திரிபலையுங் கூட்டி
அஞ்சாமல் சூரணித்துக் குளிகை யொன்று
நன்றாகத் தான்கொடுக்க அடங்கு னோய்கள்
மிஞ்சியதோர் மிருதசன்னி திரிதோ ஷங்கள்
விட்டோடும் நொச்சிச்சாறு சங்கஞ் சாற்றில்
கொஞ்சியதோ ருப்பிசமும் பயித்தியமுந் தீர
கூட்டுவாய் விளக்கெண்ணையில் நசிய மாமே

அவ்வாறு வழங்கும்போது திரிதோஷம், சுரம், சன்னி, இசிவு, இவற்றிற்குக் குளிகையுடன் திரிகடுகும், திரிபலையும், சேர்த்து வழங்க மிருதசன்னி, திரிதோஷங்கள் நீங்கும். நொச்சிச்சாறு, சங்கஞ்சாறு இவற்றில் வழங்க உப்புசமும், பித்தமும் தீரும். இதனுடன் விளக்கெண்ணையில் நசியமிடவும்.

236. ஆகுமே கண்ணுக்கு நசியம் பண்ண
அப்பனே வெற்றிலைச்சாறு நசிய மய்யா
போகுமே சமுத்திரத்தின் பாலை விரைச்சாறு
பொய்யெல்லா நசிய மஞ்சனமு மாகும்
தாகமாய் நித்திரையைக் கொண்ட பேர்க்கு
தவறாமல் ஏலரிசி தன்னில் கொள்கு
மேகமுடன் அண்டத்து வாந்தி யானால்
மிளகுபொடிக் கொண்டிடவே விட்டுப் போமே

குளிகையைக் கண்ணிலிட, நசியஞ் செய்ய வெற்றிலைச் சாற்றைப் பயன்படுத்தலாம். சமுத்திர பாலை விதைச்சாறு சேர்த்து நசியமும் அஞ்சனமும் இடலாம். ஏலரிசியில் உட்கொண்டால் நல்ல தூக்கம் உண்டாகும். வாந்தி உண்டானால் மிளகுப்பொடி சேர்த்துச் சாப்பிடலாம்.

237. பொருந்தவே வகுத்துக் கட்டி சங்கினிலைச் சாறு
போட்டுக் கோரோசினையுஞ் சந்தனமும் வாசீ
திருந்தவே மூட்டில்லா முறியள தங்கள்
தேடியதோ ராலம்விரை திங்கத் தீரும்
வருந்தியே புருஷன்பெண்ணை மருவ வேண்டி
வாழதத பெண்புருசன் மயக்கி வைக்க
சிறந்ததொரு அரவமது தீண்டா தார்க்கு
யெதிரேத்தக் கொளிவாகு மந்திரத்தும் வசியம்

இவற்றை எல்லாம் ஒன்றாகச் சேர்த்து சங்கனிலை சாறு சேர்த்து சந்தனம் கூட்டி ஆலம் விதையும் சேர்த்துச் சாப்பிடலாம். கணவன் மனைவி சேர்வதற்கும், பிரிந்த கணவன் மனைவியைச் சேர்ப்பதற்கும் பாம்பானது தீண்டாதிருப்பதற்கும் வசியம் இப்பாடல் வழியே சொல்லப்-படுகிறது.

238. வசியமா மாளுக்குப் பெண்ணுக் காகும்

மகத்தான குளிகையொன்று எடுத்துக் கொண்டு

ரிசிவேளை தானருந்து தீப தூபம்

நேமமுடன் பலிகொடுத்து ஒருபோ தாகப்

பொசியாமலத் தான்கொட்டான் கரந்தை வேரும்

பிடுங்கியே குளிகையுடன் சேர்த்துக் கொண்டு

ருசியான பொன்குளிசத் தடைத்துக் கட்டு

நோக்குமடா புருஊடிவுடன் பெண்ணுங் சேரும்

வசியமானது ஆண், பெண் இருபாலர்க்கும் பொருந்தும். ஒரு குளிகையை எடுத்து நடுநிசியில் உண்ணவும். தீபதூபம் காட்டி பலி கொடுத்து கொட்டான்வேர், கரந்தைவேர், இவற்றைத் குளிகையுடன் சேர்த்து ஒரு குளிசத்தடைத்துக் கொண்டு புருஊடிவுடன் பெண் சேருவாய் என்பது.

239. பெண்கள்தான் மரம்போலே முட்டில்—லா—ட்டால்

போட்டிடுவாய் பழச்சாற்றில் அஞ்சனமும் நசியம்

கண்ணான முந்திரிகைப் பழமும் நசியம்

காட்டுப் பன்னி—லத்தி நசியம் கண்ணுக்காகும்

யெண்ணாத ஒருதலையின் நோவுக் கப்பா

இகசிவிடுங் குன்றிமணி யிலைச்சார் தேய்க்க

உண்ணுகின்ற சாரணைச்சார் கோசத்தோர் பைச்சாரும்

உண்டையுடன் நீகூட்டி உரைக்கத் தேயே

பெண்ணானவள் அதற்குச் சரியான ஒத்துழைப்புத் தரவில்லை—யானால் எலுமிச்சம்பழச்சாற்றில் அஞ்சனமும், நசியமும் செய்து கொள்ளலாம். முந்திரிபழத்தில் நசியம்பண்ணலாம். காட்டுப்பன்றியின் லத்தியின் நசியம் கண்ணிற்காகும்.

240. தேயடா வாய்நாற்றம் முருங்கைச் சாறாம்

தீராவிட்டால் முந்திரிகை செம்பகப்பூச் சாறு

பேரான நரம்புக்கால்ச் சிலந்தி வந்தால்

பிசகாமல் நெல்லிக்காய்ச் சாற்றில் கொள்ளு

நாய்போல திரிந்துநீ அலைய வேண்டாம்

நாலாயிரத்திச் சிலவான நோயு மையா

மாயமாய்ப் பறந்துவிடுஞ் குளிகை கண்டால்

மகத்தான சித்தர்சொன்ன மார்க்கந் தானே

வாய்நாற்றம் போக்குவதற்கு முருங்கை சாற்றும், அதில் தீராவிட்டால் முந்திரிகை அல்லது செம்பகப்பூ சாற்றும், நரம்புக்கால் சிலந்திக்கு நெல்லிக்காய் சாற்றும் வழங்கவேண்டும். நாலாயிரத்து நானூற்று நாற்பத்தெட்டு என்று சொல்லும் நோய்களில் சிலநோய்கள் இக்குளிகையை உட்கொள்வதால் நீங்கிவிடும் என்பது சித்தர்கள் சொன்ன மார்க்கமாகும்.

241. மேல்த்தடிப்பு, சிதப்பு, வெள்ளைக்கு மருந்து சூரணம்

மாசற்ற சூரணந்தா னின்னங் கேளு

வகையான எருக்கலம்வேர் சித்தர மூலம்

தேசத்து நாய்க்கொட்டான் அளிஞ்சி வேரும்

செம்பூரல்ப் பட்டையுடன் வண்டுக்கொல்லி

பாசற்ற தலைசுருளி வேப்பம் பட்டை

பஞ்காமல்ப் பெருமரமும் உசிலம் பட்டை

வாசற்ற மலைவேம்பு பெருவாகைப் பட்டை

வளமான முப்புரண்டி குப்பை வேரும்

எருக்கம்வேர், சித்திரமூலம், நாய்க்கொட்டான் வேர், அழிஞ்சி வேர், செம்பூரல்பட்டை வண்டுகொல்லி, தலைச்சுருளி, வேப்பம்பட்டை, பெருமரப்பட்டை, உசிலம்பட்டை, மலைவேம்பு, பெருவாகைப்பட்டை, முப்புரண்டி, குப்பைமேனிவேர்.

242.குப்பியுடன் வெளிப்பாலை பங்கம் பாளை
கர்மல்லி விளிதிமலை விளிதி கூட்டி
செப்பியதோர் கார்போகி கடுக்காய் தாணி
சீரகருஞ் சீரகமு மோமங் கூட்டி
தப்பாமல்ச் சேங்கொட்டை சுக்குஞ் சேரு
தனக்காட்டுச் சீரகமுஞ் சரிநின்றயாய்த் தானும்
ஒப்பியே யிளவருப்பாய்ச் சூர ணித்து
ஒருவேளை வெள்ளி வுகந்து கொள்ளு

சங்கங்குப்பி, வெட்பாலை, பங்கம்பாளை, கர்மல்லி, விளாத்தி-யிலை, கார்போகரிசி, கடுக்காய், தான்றிக்காய், சீரகம். ஓமம் இவற்றைக் கூட்டி சேங்கொட்டை சுத்தி, காட்டுச் சீரகம் இவற்றை எல்லாம் சம அளவாக எடுத்து இளவருப்பாய் வறுத்துச் சூரணித்து வெள்ளில் உட்கொள்ளவும்.

243.உகந்துநீ கொண்டாக்கால்த் தீரு நோய்கேள்
உறுதியாம் மேல்த்தடிப்பு சிகப்பு வெள்ளை
தகர்ந்திடு செம்பூரான் விஷங்க ளெல்லாந்
தருகனையுங் குட்டமொடு தவறிப் போகும்
சிகந்தனிலே சொறிசிரங்கு மேக வூரல்
திரேகத்தி லுள்ளநோய் தெளியும் பாரு
யிகழ்ந்திடா தின்மருந்து புளிப்புகையுந் தள்ள
யிட்டமுடன் மண்டலந் யிசைந்து கொள்ளே

முறைப்படி இச்சூரணத்தை உட்கொண்டால் உடல்தடிப்பு, சிகப்பு வெள்ளை, பூரான்கடி விஷங்கள், குட்டம், சொறிசிரங்கு, மேகவூரல் போன்ற உடல் தோலில் ஏற்படும் நோய்கள் எல்லாம் குணமாகும். புகை, புளி தள்ளி 40 நாட்கள் உட்கொள்ள வேண்டும்.

244. கண்_புகைச்சலுக்கு_யெண்ணெய்_

யிசைந்ததொரு கண்புகைச்சல் தயிலங் கேளு

இளநீரும் பாலமிரு நாலி கூட்டி

பசைந்தகா ரெள்ளெண்ணை படிதா னொன்று

பண்பான அதிமதுரங் கோஷ்ட்ட மோமம்

மொகந்ததொரு ஆவின்பால் விட்டு ஆட்டி

உண்மையா யதில்க்கரைத்துப் பதம தாக

துகந்ததொரு சனிபுதனு முழுகி வந்தால்

தூ ரத்தில் தாளிருக்கு மருந்ததியுந் தோணும்

இளநீர், பசும்பால் இரண்டும் வகைக்கு 2.6லிட்டர், எள்ளெண்ணை 1.3லிட்டர் அதிமதுரம், கோஷ்டம், ஓமம், இவற்றின் ஆவின்பால் விட்டு ஆட்டி ஆவின்பாலிலே கரைத்து காய்ச்சி தயிலமிறக்கிக் கொள்ளவும். சனி, புதன் இரு தினங்கள் முழுகி வந்தால் கண் புகைச்சல் நீங்கி கண்ணொளி தெளிவுண்டாகும்.

245. தோணுந் தொப்புள் முருக்குண்டாந்

துருங்கடுப்பு ரெத்தம் வீழும்

மாளும் மலங்கள் சிறுத்துவிழும்

மயப்பா லினாழும் நுரையுண்டாம்

பூளும் குறிகள் சாத்தியமென்று

பிரித்துச் சொன்னேன் மலங்களுக்கு

வேறு மிதக்குக் குறிப்பறிந்து

வென்ற அதிசாரக் கழிச்சலும்போம்

தொப்புள் பகுதி முருகிகி முருக்கி வலியை உண்டாக்கும். வயிறு கடுத்து இரத்தம் வீழும். மலம் சிறுத்துத் சிறுத்துக் கழியும். பாலினாலும் நுரை உண்டாகும். இவை சாத்தியமான குறிகுணங்கள் என அறிதல் வேண்டும். இவ்வகையான அதிசாரக் கழிச்சல் நீங்கும் என்பதாம்.

246. பித்த அதிசாரந் தானொன்று

பெருகக் கருதி கண்டபிண்பு

உத்தரிகை செய்வ தற்கு

உரைப்போங் கற்க முண்மையென

மெத்த திப்பிலி கொடிவேலி

மிகுத்த வசம்பு வேள்ப்பாலை

உத்தமூல யிலந்தை வேரு

முத்தம் விடையந் தாள்சேரு

அதிவிடையம், செவியம், கடுகுரோகணி, சிறுதேக்குத திரிகடுகு, கருவேப்பிலை, கடுகு, கருஞ்சீரகம், கீழாநெல்லி விளாவேர், காயம், செவியம் இவற்றை இடித்துப் பொடியாக்கி முறைப்படி தண்ணீர்விட்டு கசாயம் இறக்கிக் கொள்ளவும்.

247. விடையஞ் செவியம் ரோகிணியும்

மிகுந்த தேக்கு திரிகடுகு

அடவே கருமை வேப்பலகு

ஆகுங் கடுகு-கருஞ் சீரகமும்

தொடுகீழ் நெல்லி விளாவேருந்

தொடுத்த காயஞ் செவியமுமா

யிடுநீ சமனாய்ப் பொடியாக்கி

யிதமாய்க் கஷாயம் வெருகடியே

அதிவிடையம், செவியம், கடுகுரோகணி, சிறுதேக்கு, திரிகடுகு, கருவேப்பலகு, கடுகு, கருஞ்சீரகம், கீழாநெல்லி, விளாவேர், காயம், செவியம், இவற்றை இடித்துப் பொடியாக்கி முறைப்படி தண்ணீர் விட்டு கசாயம் இறக்கிக் கொள்ளவும்.

அதிவிடையம், இருவேலி, முத்தக்காசு, விளாம்பூம் கட்டி அளாக்கி தேவையான அளவு நீரைச் சேர்த்த எட்டில் ஒன்றாகக் குறுக்கிக் காய்ச்சி திப்பிலியையும், [redacted] சுக்கையும் கட்டி அளாக இடித்த மேலே தூவிக் கொண்டு பின் கலக்கி கஷாயத்தை உட்கொண்டால் அதிசாரக் கழிச்சல், வாதகுலை இவை நீங்கும்.

248. வெருகடி யளவ தாக
வெந்நீரு முகந்து கொள்ள
பருக்கவே குமகக் காய்ச்சி
பரிந்துகொ ளதிச ரம்போம்
பெருகுந் தீபனப் போசனமாம்
பெருத்த வயிறு பொருமலுடன்
உருக்கும் நாபி சூலையுடன்
நாடுங் கடுப்பு இருமலும்போம்

இதனை வெருகடி அளவெடுத்து வெந்நீரில் உட்கொண்டு வரவும். குமகக் காய்ச்சிய இதனை தொடர்ந்து உட்கொண்டு வந்தால் அதி-சாரம் நீங்கும். பசியுண்டாக்கி உணவைத் தாரளமாக உட்கொள்ளும். நாபி சூலை, கடுப்பு, இருமல் இவையும் நீங்கும்.

249. போகுமதி விடையமிரு வேலி முத்தம்
புகழாகூர் விளத்தின் பழங்கூட்டி
ஆகுமிரு களஞ்சிநீரை தூள தாக்கி
ஆனயிரு னாளிநீர் உழக்கதாக்கி
தாகுமே திப்பிலியுஞ் சுக்குங் கூட்டி
தவுடாக இடித்துமேல் தூவிக் கொண்டு
யேகமாய்க் கலக்கிநீ கஷாயங் கொண்டால்
யேகுமதி சாரமுடன் வாத சூலை

அதிவிடையம், இருவேலி, முத்தக்காசு, கூர்விளத்தின் பழம் இவற்றை முறையே 4கி கூட்டி இடித்துத் தூளாக்கி 1.6லிட்டர் நீர்விட்டு எட்டில் ஒன்றாகச் சுருங்கக் காய்ச்சி அதனுடன் திப்பிலி, சுக்கு, இரண்டையும் நல்ல தூளாக்கி மேலே தூவிக் கலக்கி இக்கசாயத்தை உட்கொண்டால் அதிசாரமும், வாத சூலையும் நீங்கும்.

[illegible]

[illegible]

250. இராமபூபால குளிகை

சூலையா மதிசாரம் போவ தற்கு

இலங்கு-மர மஞ்சளுடன் மஞ்சள் கட்டி

வேலையா மதுரங்க விளத்தின் வேம்பாலை

வேண்டுநீ யிருநாழி யூறத்த தாக

காலமே விடயத்மேல் பொடியாக்கித் தூவி

கல்லவே குடிக்க அதிசாரம் போகும்

நீலமாம் கிராணிவகை ஆறும் போகும்

நிச்சயமாய்ப் பிரண்டைகட்டிக் கரியாம் சூதம்

சூலையாம் அதிசாரம் நீங்குவதற்கு மரமஞ்சள், மஞ்சள் அதிமதுரம், கவிளம், வெப்பாலை இவற்றை ஒன்றிரண்டாக இடித்துத் தூளாக்கி 2.6லிட்டர் தண்ணீர் விட்டுக் காய்ச்சி எட்டில் ஒன்றாகச் சுருக்கி அதிவிடயத்தைப் பொடித்து மேல்தூவி குடித்து வர அதிசாரம் நீங்கும். கிராணி வகைகள் ஆறும் போகும்.

251. சூதமே யெட்டு நாபி

அஞ்சுகந்தகேள் கெந்தி யாறு

நீதமாந் தார மஞ்சு

நிறத்த வாளமீ றாலும்

ஓசம் வெண்கார முன்று

உகந்ததோர் சுக்கு ரெண்டு

யேதமோ மிளகு மத்தை

விரையை யேத்தி டாயே

பிரண்டையைக் கட்டி கரியாக்கி எடுத்துக் கொண்டு சூதத்தையும் எடுத்துக்கொண்டு எட்டு பங்கு நாபி, கெந்தி ஆறு பங்கு, அரிதாரம் ஐந்துபங்கு, நேர்வாளம் நாலு பங்கு, வெண்காரம் மூன்று பங்கு, சுக்கு இரண்டு பங்கு, மிளகு, ஊமத்தன்விதை இவற்றைச் சேகரித்துக் கொள்ளவும்.

252. மேத்திடு சித்திரை மூலந்
　　மிசைந்தசாறு விட்ட ரைத்து
　மேத்திடு விளகு போல
　　விளங்கவே உன்டை சேர்த்து
　உத்தமந் நிழலு லர்த்தி
　　உரைத்தி களநீரி லிட்டாற்
　அஞ்சுத்தியில் சுரங்க ளெல்லா
　　மகந்திடக் கடுகுத் கொள்ளே

சித்திரமூலச் சாறுவிட்டு மேற்சொல்லவற்றை அரைத்து மிளகளவு உருண்டைசெய்து நிழலில் உலர்த்தி, பின் தண்ணீரில் கரைத்துச் சாப்பிட்டு வந்தால் அத்திசுரங்கள் எல்லாம் நீங்கும். சாப்பிட்டபின் கடுகை உண்ணலாம்.

253. சுடிய சுக்கு நேர்வாளந்
　　களந்த யிரத மிவைமுன்யுந்
　யிடையோ றொன்று அயங்களஞ்சு
　　யிதுக்குச் சர்க்கரை யிருபலமாம்
　திடமாய் முலைப்பால் விட்டரைத்து
　　திருந்தந் பயறு மளவாக
　யிடவே முலைப்பா லிஞ்சியது
　　யிடுநீ ராம பாணயிது

சுக்கு, நேர்வாளம், இரசம் இம்மூன்றையும் வகைக்கு 25கி வீதம் எடுத்துக் கொண்டு, சர்க்கரை 70கி சேர்த்துத் தாய்ப்பாலில் விட்டு அரைத்து பயிரளவாக உருண்டை செய்து முலைப்பால்/இஞ்சி இவற்றைத் துணை மருந்தாக்கி உட்கொள்ளவும்.

254. இதுவாங் கெந்தி வெங்காரம்
மிருக்கும் நாபி யிரதமுடன்
அதுவாந் திப்பிலி திரிபாலை
ஆனதோர் தேவதார களஞ்சியொன்று
மெதுவாஞ் சுக்கு அரிதாரம்
வேண்டும் ஒவ்வோர் முக்களஞ்சி
பொதுவாஞ் சுத்தி நேர்வாளம்
பொருந்தக் களஞ்சி நிறைகூட்டே

கெந்தி, வெங்காரம், நாபி, இரசம், திப்பிலி, திரிபலை, தேவதாரம் இவை வகைக்கு 5கி வீதமெடுத்துச்சுக்கு, அரிதாரம் இவை வகைக்கு 15கி வீதமெடுத்து சுத்தி செய் நேர்வாளம் 5கி எடுத்துக் கொள்ளவும்.

255. கூட்டி நமக்கு குழிக் கல்லில்
கோலஞ் பூரச விலைச்சாறு
மீட்ட சுத்தி மருந்தெல்லாம்
வேண்டுஞ் சாறாய் தானரைத்து
நீட்டுந் துவரைப் பிரமாணம்
நிசமா யிஞ்சிச் சாற்றிலிட
ஓடுங் குளிரும் பிரதாம்
ஒழியுஞ் சுரமு மோடிடுமே

இவற்றைக் குழிக்கல்லில் விட்டு இடித்து பூரசவிலைச்சாறு சேர்த்து அரைத்து சுத்திசெய்த மருந்து சரக்குகளை எல்லாம் சேர்த்து அதற்குத் தேவையான சாற்றால் அரைத்து துவரை அளவு உருண்டைகளாக உருட்டி இஞ்சிச்சாற்றில் சாப்பிட்டுவர குளிர்சுரங்கள் நீங்கும். சுரமும் ஓடிவிடும்.

256. ஓடுந் வெங்கரம் லிங்கம்
உகந்த சாதிக்காய் மிளகு
வாகு மிகுந்த மிந்தப்பு
வழங்கும் நாபி மத்தளவிரை
தேடுந் திப்பிலி பலகரையுந்
திரும்ப சுக்கு அரிதாரம்
நாடுஞ் சமனாய் அவுரிச்சாறு
நன்றா யரைத்துக் குன்றிபோல

வெங்காரம், லிங்கம், சாதிக்காய், மிளகு, இந்துப்பு, நாபி, மத்தளவிதை, திப்பிலி, பலகரை, சுக்கு, அரிதாரம் இவற்றைச் சம அளவாகச் சேகரித்துக் கொள்ளவும். அவுரிச்சாறு விட்டு நன்றாக அரைத்து குன்றிபோல் உருட்டிக் கொள்ளவும்.

257. குன்றிபோ லுருட்டியே யிஞ்சிச் சாற்றில்
கூறக்கேள் பெருவாதஞ் சேத்தும வாதம்
மீண்டியதோர் மூத்திரத்தில் கிரிச்சரம் வெக்கை
வெடிசூலை யதிசாரஞ் கிராணிகுன்மம்
அண்டியிடும் பலபல வியாதி யெல்லாம்
அதிர்ந்தோடு மாத்திரையைக் கண்ட போதே
பண்டுள்ள வாழைக்காய்ச் சராவிஷ்களும்
பாலமொருஞ் சுண்டியே பத்தியங் கூறே

குன்றிபோல் லுருட்டியதை இஞ்சிச்சாற்றில் உண்டுவர பெருவாதம் சேற்றுமவாதம், மூத்திரக் கிரிச்சரம், செக்கை, வெடிசூலை, அதிசாரம், கிராணி, குன்மம் போன்ற பலவகை நோய்கள் எல்லாம் நீங்கிவிடும். வாழைக்காய் போன்றவற்றை நீக்கி பத்தியம் காக்கவும்.

258. காசிபோகி திரிகடுகு காய மோமம்
கருஞ்சீரகம் கடுக்காய் குப்பையிந்து
பேறான சங்கம்வேர் சங்கங் குப்பி
பெரியதொரு குருந்தம்வேர் கருஞ்சூரையின் வேரும்
சீரான தவசிவே ரெல்லாங் கட்டி
சிறக்கவே படத்தட்டிச் சமன தாக்கி
கூறான யிவையெல்லாங் குழிக்கல்லி லிட்டு
கரியிடவே வெந்நீரால் கட்டி யாட்டே

காசிபோகி, திரிகடுகு, பெருங்காயம், ஓமம், கருஞ்சீரகம், கடுக்காய், குப்பைமேனி, இந்துப்பு, சங்கம்வேர், சங்கங்குப்பி, குருந்தம்வேர் கருஞ்சூரைவேர், தவசிவேர் எல்லாம் கட்டி எல்லாவற்றையும் தட்டி சமனதாக்கி இவையெல்லாவற்றையும் குழிக்கல்லிலிட்டு வெந்நீர்விட்டு அரைத்துக் கொள்ளவும்.

259. ஆண்டியதோர் கடைமருந்து ஒருநிறையாய்க் கொண்டு
அமுக்கிடுவாய்க் கருங்கோழி வயத்துக் குள்ளே
தேடியதோர் கள்ளிப்பா லாழாக்கு விட்டு
திடமான காடி யாழாக்குங் கட்டி
வாட்டமா வெள்ளா நீர்படி யிரண்டு
வார்த்திடுவாய் சட்டிக்கு ளெல்லாங் கட்டி
மூட்டியதோர் கோழியதை உள்ளே வைத்து
மூடுவாய் சீலைமண் தான்மூடிப் பூசே

கடைச்சரக்குகளை எல்லாம் ஒரே அளவாக எடுத்துக்கொண்டு கருங்கோழியின் வயிற்றைக் கிழித்து வயிற்றினுள் வைத்து கள்ளிப்பால், புளித்தகாடி இவை 165மிலி எடுத்து வெள்ளுள்ளி சாறு 2.6லிட்டர் விட்டு எல்லாவற்றையும் சட்டிக்குள் விட்டு கோழியை உள்ளே வைத்து வாய்மூடி சீலை மண் பூசிக் கொள்ளவும்.

260. பூசியே எரித்திடுவாய் வத்த மட்டும்

பிறகெடுத்த லேகியம்போ லிடித்து நன்றாய்

வாசமிட்டுக் கலசத்தி லடைத்துக் கொண்டு

வயறுநோய் முடவாதம் மலட்டுப் பூச்சி

காசினியி லெரிகுன்மம் பித்த குன்மம்

கழல்வாதஞ் சகலமும்போம் களஞ்சி ரெண்டு

தேசிகனே பத்தியம் வைத் திருபதுநாள் கொள்ளத்

தெறித்தோடும் வியாதியெல்லாம் பஞ்சு போலே

அடுப்பேற்றி எரித்து ஆறியபின் எடுத்து இலேகியம் போல் இடித்து சுத்தமான கலசத்தில் அடைத்துக் கொள்ளவும். வயிற்றுநோய்கள், முடவாதம், மலட்டுப்பூச்சி, எரிகுன்மம், பித்தகுன்மம், கழல்வாதம் ஆகிய எல்லாம் நீங்கும். பத்தியம் காத்து, தொடர்ந்து 20 நாட்கள் உண்டுவர நோய்கள் எல்லாம் பறந்துபோகும்.

261. பூஞ்சுலவண குளிகைக்

பஞ்ச லவண மிவைச்சாரம்

பழுத்த அலிஞ்சி கொடிவேலி

அஞ்சாக் காட்டுக் கருணையுடன்

ஆன பிரண்டை அசமோதம்

மிஞ்சுஞ் சீரகம் பெருங்காய

மிவற்ற வாளம் விளாலரிசி

தஞ்சமாரி திரிபலை திரிகடுகு

தானே உள்ளி சமன்பொடியே

ஐந்து வகையான உப்புகளின் சாரம், பழுத்த அழிஞ்சில், கொடிவேலி, காட்டுக்கருணை, பிரண்டை, அசமோதகம், சீரகம், பெருங்காயம், நேர்வாளம், விழாலரிசி, திரிபலை, திரிகடுகு, உள்ளி இவற்றைச் சமஅளவாக எடுத்துப் பொடித்துக் கொள்ளவும்.

262\. பொடியே சமனாய்க் கல்லிற்பால்

பொருந்த வரைத்துக் கடலைபோல்

மிடுதீர் நெய்பால் தனித்துக் கொள்ள

தேவுங் குளித்ததண்ணீர் குளிப்பாட்டில்

தீரும் வியாதி தானெல்லாம்

பகரக் கேளீர் பாரிலுள்ளோர்

திடமே தீரும் மெய்முனிவர்

செப்பு முத்திரக் கிரிச்சியும்போம்

சமனாக எடுத்த சரக்குகளைக் கல்லிற்பால் விட்டு ஆட்டி கடலைபோல் உருட்டி வெயிலில் காயவைத்து தண்ணீர், நெய், பால் இவற்றில் உட்கொள்ளவும். குளித்த தண்ணீரில் குளிக்கவும். இவ்வாறு தொடர்ந்து செய்து வந்தால் முத்திரக் கிரிச்சரம் நீங்கிவிடும்.

263\. முத்திரக் கிரிச்சிரம் குன்மமுடன்

முசியா மகோதரஞ் சாலகுன்மம்

யேத்த சயமுஞ் சுவாசமுடன்

இசைந்த அத்தி வாய்வுபல

போத்த மந்தாக்கினி யீளை

பொருந்த பாண்டு காமாலை

தீத்தாக் கேகுமெய் மறைத்தசீர்

திருந்தும் பஞ்சாக்கினிக் குளிகை

மேற்சொன்ன குளிகையை உட்கொண்டு வந்தால் முத்திரக் கிரிச்சரம், குன்மம், மகோதரம், சாலகுன்மம், சயம், சுவாசம், அத்தி, மந்தாக்கினி, ஈளை, பாண்டு, காமாலை இத்தெல்லாவற்றையும் நாஞ்சொன்ன பஞ்சாக்கினி குளிகை நீக்கும் என்பதாம்.

264. குளிகையாம் நாவி சூதம்

மனோசிலை கெந்தி லிங்கம்

அளகுவெள் காரங் கட்டி

அந்திடை யெல்லாஞ் சேர்த்து

பழம்நிம்பைச் சாறு விட்டு

பன்புடம் சமன தாக

தெளிவுட னரைத்து நன்றாய்த்

திரட்டியே கடுகு போல

நாவி, இரசம், மனோசிலை, கெந்தி, லிங்கம், வெண்காரம் இவற்றைச் சம அளவாக நிறுத்துக் கொண்டு எலுமிச்சஞ்சாறு விட்டு நேகாக அரைத்தெடுத்துக் கொள்ளவும்.

265. ஆனந்த வயிரவக் குளிகை

கடுகுபோல் மாத்திரையைச் சன்னி வாதங்

கஷ்டத்தில் நோவெல்லாம் போவ தற்கு

முடுகியதோர் கொஞ்சிச்சாறு தன்னிற் கொண்டால்

மோசமில்லை தீர்ந்துவிடு முணர்ச்சி யாக

படுவாவி சன்னித்தி முலைப்பா லன்ன

பறந்துவிடுஞ் சன்னியென்ற தெல்லாம் போகும்

திடமுடனே யித்தமுறை செய்து பாரு

சிகத்திரி லானந்தத் தாங்கம் சாதியே

கடுகளவு உருண்டைகளாக உருட்டிக் காயவைத்தெடுத்துக் கொள்ளவும், இவ்வுருண்டையைக் கொஞ்சிச்சாற்றில் வழங்கிட கஷ்டத்தில் வரும் நோய்களெல்லாம் நீங்கும். தாய்ப்பாலில் உண்டு வந்தால் சன்னிநோய்கள் எல்லாம் தீரும். இதனை முறையாக உண்டு நோய்களைப் போக்கிக் கொள்ளலாம்.

266. சாதிலிங்கம் வெங்கார மிளகுநாவி தச்சமளாய்
நாதமுள்ள பழச்சாற்றரைத்து நன்றாய
பேதமற குன்றியள வுண்டை செய்து
யிஞ்சியுட சாறுதனிலே யிடவ் ராகில்
பேதமுள்ள சுரமேகுஞ் சன்னி போகும்
பித்தேகுந் தேள்விடமும் பேசி ஓடும்
ஓசுபர மானந்த வயிரவனா மென்றே
உரைய்பார்கள் யெங்களுக்கும் முதி தானே

சாதிலிங்கம், வெங்காரம், மிளகு, நாபி இவற்றைச் சம அளவாக எடுத்துக் கொண்டு எலுமிச்சம் பழச்சாறு விட்டு அரைத்துக் குன்றியளவு உருண்டை செய்து காயவைத்தெடுத்துக் கொள்ளவும். இதனை இஞ்சிச்சாற்றில் வழங்கினால் சன்னியும். சுரமும் நீங்கும். பித்தம் குறையும். தேள்விடம் நீங்கும். இவ்வகை குணங்கள் எல்லாம் பரமானந்த வயிரவன் எனும் மாத்திரைக்குண்டானதாகும்.

267. உறுதியாய் திரிபலையுங் காந்தம் காயம்
உகந்தலிங்கம் வெங்கார மிந்துதிரி கடுகு
பிரிதியாம் வசம்புடனே வாய்விளங்க மோமம்
பின்னுமோர் குராசாணி களஞ்சிவகை யொன்று
அறுதியா மிந்திடைக்கு வாளஞ் சேர்த்து
அப்பனே நொச்சிச்சா றரைநாள் முன்றே

திரிபலை, காந்தம், லிங்கம், வெங்காரம், இந்து, திரிகடுகு, வசம்பு, வாய்விளங்கம், ஓமம், குரோசாணி இவை வகைக்கு 5கி வீதமெடுத்து அதே எடையளவு சுத்திசெய்த நேர்வாளம் சேர்த்து நொச்சிச் சாற்றில் அரைத்திடவும்.

268. முதியநாள் தாமரைத்சத் கடலை போல
　　முழுகவே நிழலுலர்த்தி வைத்துக் கொண்டு
　மேண்டதொரு விரோசனமா மெல்லா மாகும்
　　மெடுத்திண்டால் மோர்தனிலே உண்ணத் தீரும்
　செகிறதொரு குன்மமது மொத்திச் சாறும்
　　தீருமே ஆவின்பால்ச் சோறுந் தானு
　வெகிற சீரகஞ்சுக்கு கஷாயங் கொள்ள
　　வெறும்பான சுரங்களெல்லாம் விட்டே போகும்

இதனைத் தொடர்ந்து 3 நாட்கள் அரைத்த நிலக்கடலை அளவு உருண்டைகளாகச் செய்து நிழலில் உலர்த்திக் கொள்ளவும். விரோசனம் உண்டாகும். [redacted] மோரில் உண்ண அது தீரும். குன்ம-நோய்கள் நொத்திச் சாற்றில் உள்ளலாம். பாலும், சோறும் சாப்பிடவும். சீரகம், சுக்கு கஷாயத்தில் உட்கொள்ள சுரங்கள் அனைத்தும் நீங்கிவிடும்.

269. போகுமடா சேத்துமந் குன்மட்டியின் சாறு
　　பொருந்தவே மாதளையின் சாறு மாகும்
　யேறுமே காசமெல்லாந் தோடை சுக்கு
　　கண்டங் காலியுடன் அ தவளையின் சாறாம்
　ஆகமே லெரிவு உள்க்காந்தல் போக
　　அப்பனே நெல்லிக்காய்க் கசாயங் கொள்ளு
　தாகமே யெடுத்தாக்கா லாவின் மோராம்
　　தனியுமே நோயென்ற வாய்வு வெல்லாம்

சேத்தும நோய்களுக்குத் குன்மட்டிக்காய் சாற்றிலும், மாதுளம் சாற்றிலும், காசநோய்களுக்கு அடாதோடை சுக்குச் சாற்றிலும், கண்டங்காலி, அ தவளை சாற்றிலும் மேலெரிவு, உட்காந்தல் இவற்றிற்கு நெல்லிக்காய் கசாயத்திலும் வாய்வு தொல்லைகளுக்கு பசுவின் மோரிலும் உட்கொள்ள வேண்டும்.

270. வாய்வு குன்மம் வயறுகழ்மல்
மருவு கைகால் சிறத்திருக்க
மேவுஞ் சிறநீர் துளிதுளியாய்
விழுவ தாகும் பிரமாணம்
பேயினித்தி யிலைச்சாற்றில்
பெருத்கவ் பத்தியம் மோர்சோறாம்
ஓயா யந்தப் பயித்தியமும்
உகந்த குன்மம் நெஞ்சொரிவும்

வாய்வு, குன்மம், வயிறு காந்தல், கைகால் சிறத்தல், சிறநீர் துளிதுளியாய் வீழ்தல் இவற்றிற்கு பேயத்தி இலைச்சாற்றில் வழங்கலாம். இதற்குப் பத்தியம் மோரும் சேர்மமாம். பித்தநோய், குன்மம், நெஞ்சொரிவு.

271. நெஞ்சை யெரிக்குந் தலைவலிக்கும்
நெகிழ்ந்த குளிரு முட்காய்ச்சல்
பஞ்சு போலே சந்துகளோம்
பருகு முருங்கைச் சாற்றிலிட
மிஞ்சு மாவின் பாலஞ்சோறு
மிகுத்த பேய்ப்புடல் முசுமுசுக்கை
தஞ்ச மென்றே குளிகையிட
தவறாச் சோற்றில்த் தயிரருந்தே

நெஞ்சொரிவை உண்டாக்கும் தலைவலிக்கும், உடல்குளிர்தல், உட்காய்ச்சல், பஞ்சுபோலுள்ள முட்டுகள் நொந்துபோதல், இவை யாவும் முருங்கைச்சாற்றில் சாப்பிட நீங்கும், பசும்பால் சோறு சாப்பிடவும். பேய்ப்புடல், முசுமுசுக்கை இவற்றின் சாற்றில் ஒரு குளிகையை வழங்கி தயிர் சாதம் சாப்பிடவும்.

272. அருந்சஞ் சீரணித்தோர் குளிகை

அசனம் பண்ணும் போதுகொள்ள
பசமங் குன்மம் நீர்க்கோவை
மகிழுஞ் சுக்கு வெந்நீரும்
பசிநீர் சோமந் தானாகும்
பகருங் கட்டி நீர்ச்சுருக்கு
பலக்கி ரொன்றில் வேய்பிலையும்
குத்தய் பாண்டு மிவை தீரும்

பின்னர் இரவு நேரங்களில் உணவு ஜீரணித்தபின் இக்குளிகை உட்கொண்டால் குன்மம், நீர்க்கோவை, சுக்கு இவற்றை வெந்நீரிலும், நீராகாரத்திலும் வழங்கலாம். குன்மம், நீர்க்கோவைக்கு சுக்கு வெந்நீரிலும் கலக்கிச் சாப்பிட்டுவர கட்டிகள், நீர்ச்சுருக்குக்கு வேப்பிலையிலும் முத்த பாண்டு இவை தீரும்.

273. தீரும் நாளாளி நீருள்காச்சி

சிறந்த திப்பிலி மேல்பொடிகள்
பாரு மருந்திட் டுடனுப்பும்
பறக்கும் வெள்ளை ஒக்காளம்
மரோ டனையாள் ரோசிகமும்
வாயா லெடுக்கும் நரைதள்ளும்
சேரும் நிம்பைப் பழச்சாறு
சேர்த்தே மோருஞ் சோறுமுண்ணு

இவற்றை 5.200மிலி தண்ணீரில் காய்ச்சி திப்பிலியை மேல் பொடியாகத் தூவி மருந்திட்டுடன் உப்பும் நீங்கிவிடும். ஒக்காளம், அரோசிகம், வாந்தி, நரைத்தள்ளல் இவற்றிற்கு எலுமிச்சம்பழச் சாற்றுடன் சேர்த்து வழங்கலாம். மோர் சாதம் உண்ணக் கொடுக்கலாம்.

274. உள்ளு மந்தாக்கினிக் குக்காயம் வெள்ளீ
ரிநெருஞ்சி திவூதிகு வாளை வேராம்
திளம் வெட்டி வேராகுங் குடகசாலை
திரும்பவே கருப்பஞ்சார் குளிகை யொன்று
பன்னும் புத்தி மேல்ச்சொரியு மரிசிமஞ்சள்
பகரவே பொடியாக்கிக் காச்சி யுண்ணு
கள்ளவே அரிசியு மஞ்சளுந் அ ளாம்
கைமுறை யாய்க் காச்சியுண்ண மூலந் தீரும்

மந்தாக்கினிக்கு காயம் கலந்த வெள்ளரிவம், நெருஞ்சி திவூதிகு வாளைவேர் சாற்றிலும், வெட்டிவேர் சாற்றிலும் வழங்கலாம். குடகசாலை கருப்பஞ்சாற்றில் ஒரு குளிகை வழங்கலாம். தோல்-சொரிக்கு அரிசிமஞ்சள் பொடியாக்கிக் காய்ச்சி உண்ணலாம். அரிசியும் மஞ்சள் அ ளம் கைமுறை பக்குவமாக் காய்ச்சி உண்ண மூலம் தீரும்.

275. மூல வியாதிக் கோர்குளிகை
முளிந்த கரந்தைச் சாற்றிலிட
சாலப் பத்தியம் பாலச்சோறும்
தங்குஞ் சுவாச காசத்துக்கு
ஏலஞ் சிவதை பேர்ச்சு
யேதி லெவரிலுந் தானிடவே
பரமா மாடா தோடையிலை
பரிந்து கஉநாயந் தாள்வையே

மூல நோய்க்கு ஒரு குளிகையைக் கரந்தைச் சாற்றில் கொடுக்கலாம். பத்தியம் பாலும் சோறும் உண்ணவும். சுவாச காசத்திற்கு ஏலம், சிவதை, பேர்ச்சு இவற்றில் ஏதேனும் ஒன்றில் வழங்கிடலாம். ஆடாதோடை இலைகளையிட்டுக் குடிநீர் காய்ச்சவும்.

276. வையே வயிற கல்போல

மகிற வீங்கித் தொய்புளுமே

அய்யத் சுளித்தால் நயமில்லை

ஆன பசியுந் தாகமில்லை

நய்யு மலங்கள் நாள்கறை

நாட்டும் இநாச்சிச் சாற்றிலிட

செய்யும் பத்தியம் பால்ச்சோறம்

திருந்தக் கூட்டி நீநல்கே

வயிற கனத்து கல்போலாகி, பெருத்து வீங்கி தொய்புளியும் வலி ஏற்பட்டால், பசியும்,தாகமும் குறைந்து மலக்கட்டுடன் காணப்-பட்டால் குளிகையை நொச்சிச் சாற்றில் வழங்கவும். இதற்குப் பத்தியம் பாலும் சோறுமாகும்.

277.கஸ்தூரி மாத்திரை:

கருவேப் பிலையு மிரண்டுபலம்

கனத்த சுக்கு மோர்பலந்தான்

மருவ நாலி நீருலக்காய்

மகிழுநீ திப்பிலி மேல்ப்பொடிகள்

திருவே லணையிால் மொசுமொசுக்கை

நிகழ்ந்த வெல்லமிதில்க் கூட்டி

உருவே மிக்க ஒளி சிறக்கும்

உணர்வாம் பத்தியமுணர்ச் சொல்வோம்

கருவேப்பிலை 70கி, சுக்கு 35கி 1.3லிட்டர் நீருடன் சேர்த்து அது 375மிலி ஆகச் சுருங்குமாற காய்ச்சி திப்பிலி முதலான மேல் பொடிகள் தூவி மொசுமொசுக்கையும் வெல்லமும் கூட்டிச் சாப்பிட்டுவர கண்ணொளி சிறக்கும்.இதற்குப் பத்தியம் உண்டு. அதனைச் சொல்வோம்.

278.சொன்ன அநுபானந் தப்பாமல்

சுகிக்க மருந்த தானிகொள்ள

வன்ன பத்திய மீறாமல்

மகிழ்ந்தே யுண்டு நடந்தாக்கால்

அன்னம் போலே நடையுடையாள்

அலைக்கும் வியாதி அடவெல்லாம்

நன்மை யாகும் நாளுக்கு நாள்

நன்றாய்த் அலங்கும் வயிரவனே

சேர்த்தன்ன வேண்டிய அநுபானம் தப்பாமல் மருந்தை உட்கொண்டு வந்தால் அன்னம்போல் நடை நடந்த வரும் பெண்மயிலே நம்மை அல்லப்படுத்திக் கொண்டிருக்கும் நோய்கள் எல்லாம் இந்த வைரவ மாத்திரையை உட்கொண்ட பின்னர் நீங்கி உடல் நல்ல நலபெறமும் அளவுக்கும் பெருமை உடையது. இந்த வயிரவ மாத்திரை.

279.வயிரம் வெள்ளைம் பவளமுடன்

வழங்கும் ஆட்டுக் கால்சேர்த்த

வயிர முள்ளும் பன்னிவிதை

ஆகு யிரண்டுகல்க் காந்தபற்பம்

வயிர வகைக்கு யிடைமுன்று

பன்னி கல்வம் போல்க்கவடி

கயராவ் குரங்குக் கல்வடனே

கண்ட தொகைக்கு ஒவ்வொன்றே

வயிரம், வெள்ளை, பவளம் இவற்றுடன் ஆட்டுக்கால் சேர்த்த வயிரமுள் செய்த இரண்டு கற்கள் காந்தபற்பம் எடுத்த வகைக்கு 3 எடை எடுத்த குரங்கு கல்லறை போன்ற ஒவ்வொரு தொகையிலும் ஒவ்வொன்றாகக் கொள்ளவும்.

280. ஒன்றே பாம்புக் கல்லறையாம்
உசந்த முத்து பவளம்பத்து
நன்றே ரெங்கும் கஸ்தூரி
நாட்கும் ரோசனை மூன்றிடையாம்
சேரே பிராந்தி தன்னைவிட்டுச்
சேர்த்து பத்து நா- ளரைத்து
அன்றே மிளகு போலருட்டி
ஆகும் பிராந்தி தனிலருந்தே

பாம்புக்கல் அரையும் பவளமும் முத்தும் பத்து பங்கும், கஸ்தூரி, கோரோசனை இவை 3 மடங்கும் பிராந்தி சேர்த்து பத்து நாட்கள் தொடர்ந்து அரைத்து மிளகு போல் உருண்டையாக்கி பிராந்தியில் அருந்தவும்.

281. அருந்தச் சன்னி பதின்மூன்று
மான சேத்மை யிருபதவும்
வருந்தும்பித்தம் நாற்பதவும்
வாத வகையோ றொன்பதவும்
இருந்து களன்று போயிற்பின்னும்
இகந்திடு நோய்களெல்லாந் தீருமென்று
உருந்து போலச் செய்யுங்
கஸ்தூரி உருண்டை

அவ்வாறு இவ்வுருண்டையைச் சாப்பிடுவதால் பதின்மூன்று வகை சன்னிகள், இருபது வகை சேத்துமங்கள், நாற்பது வகை பித்தங்கள், ஒன்று வகையான வாதங்கள் எல்லாம் நீங்கும். இதற்கு உருந்தளவு உருட்டும் கஸ்தூரி உருண்டையும் வழங்கலாம்.

282. தாளக சஞ்சீவி சூத்திரம்

உண்டையாந் தாளகத்தை யிஞ்சிச் சாறு
உகந்திச்சம் பழச்சாறு முள்ளிச் சாறு
தண்டாத பூவரசம் பட்டைச் சாறு
தருகாம லரைத்திடுவாய் நாலு சாமம்
விண்டவே யடைதட்டிப் பூவரசஞ் சாம்பல்
விருத்ததொரு குகைபிடித்த உலர வைத்து
பண்டான தாளகத்தை உள்ளே வைத்து
பதறாமல் கீழ்மேலுஞ் சாம்ப லிட்டே

உருண்டையாக உள்ள தாளகத்தை இஞ்சிச்சாறு, எலுமிச்சம்பழச்சாறு, உள்ளிச்சாறு, பூவரசம்பட்டைச்சாறு இவற்றால் 12 மணி நேரம் அரைக்கவும். அடைதட்டி பூவரசம்சாம்பல் பெரும் வகையில் குகை பிடித்து உலர வைத்துதாளகத்தை உள்ளே வைத்து கீழும் மேலும் சாம்பலிட்டுக் கொள்ளவும்.

283. யிட்டுநீ சட்டிக்குள் மேலு மூடி
மிதமாக தீயெரிக்க பற்ப மாகும்
பூட்டுப் போலதை யெடுத்தப் பரணிவைத்து
புகட்டிடுவாய் சயமீளை யிரைப்புத் தீரும்
திட்டமொரு பணவிடைதாள் திரிகடுகுப் பொடியில்த்
தீருமே சயகாச மீளை போகும்
தொட்டதொரு வியாதியில்லா முடனே போகும்
சுகமாக யின்னமொரு யிருவி கேளே

சட்டிக்குள் வைத்து மேல்மூடி சீலைசெய்து அடுப்பேற்றி மிதமான தீயில் எரித்துவர தாளகம் பற்பமாகும். இதனைப் பதனப்படுத்திக்கொண்டு வேளைக்கு 500மிகி வீதம் உண்டுவர சயம், ஈளை இரைப்பு தீரும். 500மிகி அளவு திரிகடுகுப் பொடியில் வழங்கிட யோகாசனம், ஈளை, இவை உடனடியாக நீங்கும் என்பதாம்.

284. இருவி நாவி யரிதார

மிரதஞ் கெந்தி சாதிலிங்கம்

வருமே தாளிக்காய் சுக்கு

மருந்து மிளகு திப்பிலியுந்

தருமே யோரோன்று களஞ்சாகத்

தானே வாள்மங்க ளஞ்சு

அறமே யாக சுத்திபண்ணி

அறைக வொன்று கையான்சாறே

இருவி, நாபி, அரிதாரம், இரசம், கெந்தி, சாதிலிங்கம், தான்றிக்காய், சுக்கு, மிளகு, திப்பிலி இவை வகைக்கு 5கி ஸ்தமெடுத்து முறைப்படி தனித்தனியே சரக்குளைச் சுத்தி செய்து கையாந்தகரை சாறுவிட்டு அரைத்துக் கொள்ளவும்.

285. சஞ்சீவி குளிகை -

கையாந்த கரைச்சாற் றினால்

கதிக்க யேழு நாளரைத்து

மெய்யே ஒருநாள்க் கொருசாம

மிதமா யிராமல்த்தாளரைத்து

உய்யும் பருப்பிள் பிரமாண

முன்டையாக்கி நிழலலர்த்தி

அய்யா சஞ்சீவி குளிகையென்று

அருளிச் செய்தார் அகஸ்த்தியனார்

கையாந்தகரைச் சாற்றால் தொடர்ந்து எழு நாட்கள் அரைத்து 3 மணி நேரம் கூட ஓய்வு விடாமல் தொடர்ந்து அரைத்து பருப்பளவாக உருண்டைகள் செய்து நிழலிலுலர்த்தி எடுத்துவைத்துக் கொள்ளவும். இதனை அகத்தியனார் சஞ்சீவி குளிகையென்று சொல்வார்.

286.அகத்தியமாய்ச் சொல்லுகிறோம் பவித்திர மூலம்

ஆகுமே சாதிக்காய் தன்னிற் கொள்ள

மகத்தான வாயுக்குச் சிறநீ ராகு

மாசற்ற பழச்சாறு விடங்கத்தக் காகும்

சுகமில்லாச் சூலைக்கு முருங்கைப் பட்டை

சுத்த வெளி குன்மமதுக்கு குடிநீர் நொச்சி

யிகத்திலே பிறமேகம் பஞ்ச மேகம்

யேகுமே நறுந்தாளிச் சாறு கொள்ளே

அகத்தியர் சொன்னமுறைப்படி நாமும் சொல்வேன்.

பவுத்திமூலம் இவ்வுருண்டையைச் சாதிக்காயில் உட்கொள்ள தீரும்.

வாயுத்தொல்லைகளுக்குச் சிறநீரில் கொடுக்கலாம்.விடங்கங்களுக்கு

எலுமிச்சம்பழச்சாற்றில் கொடுக்கலாம்.சூலைக்கு முருங்கை பட்டையிலும்

குன்மங்களுக்கு நொச்சி குடிநீரிலும் பிரமேகம்,பஞ்சமேகம் இவை

நறுந்தாளிச்சாற்றில் வழங்க நீங்கும்.

287. கொள்ளுமடா அஞ்சியதோர் குளிர்வெ குப்பு

கறு நெல்லிக்காய்க் கசாயம் வெள்ளராகும்

தள்ளுமே பிரண்டைவெள்ளை மலக்கட் டப்பா

தாங்காத யெரிகுன்மஞ் சீந்திச் சாறு

வள்ளவே சயம்பத்தும் போக வென்றால்

மகத்தான வெள்ளாட்டுப் பாலிற் கொள்ளு

மெள்ளவே வயிற்றிலுள்ள குன்ம மெல்லாம்

விட்டோடுந் திரிபலையுந் திரிக டுகில்

நெல்லிக்காய் கசாயத்திலும் வெந்நீரிலும் சாப்பிட்டால் குளிரும்,

வெதுப்பும் நீங்கும். பிரண்டை, வெள்ளை சேர்த்துச் சாப்பிட மலக்கட்டு

நீங்கும். எரிகுன்மம் சீந்தில் சாற்றில் உட்கொள்ள நீங்கும். சய

நோய்கள் எல்லாம் நீங்குவதற்கு வெள்ளாட்டுப் பாலில் உட்கொள்ளலாம்.

வயிற்றுவலி நீங்குவதற்கு இவ்வுருண்டையை திரிபலை, திரிகடுகுச் சாற்றில்

உட்கொள்ள வேண்டும்.

288. கடுக்கும் வயத்திற் குறிப்பறிந்து
கண்டு செய்வா யனுப்பானம்
மெடுக்கும் வியாதி குறிப்பறிந்து
மெல்லா நோவுந் தீர்ந்துவிடும்
தொடுக்கும் பேதி மாம்பட்டை
துலங்கு முப்பில் யிஞ்சிச்சாறு
நடுக்கு சஞ்சீவி குளிகைகண்டால்
நாடா தோடுங் கெந்தகங்கேள்

உண்பவரின் வயிற்றின் தன்மையறிந்து அனுபானத்தை அமைத்துக் கொள்ளலபம். வியாதியின் தன்மை அறிந்து மருந்தை வழங்கினால் நோய்கள் தீரும். பேதிக்கு மாம்பட்டைச் சாற்றிலும், வயிற்றுப்-பிசத்திற்கு இஞ்சிச்சாற்றிலும் வழங்கலாம். சஞ்சீவி குளிகை என்ற பேரைக் கேட்டாலே எல்லா நோய்களும் நீங்கிடும் என்பதாம்.

289. கெந்தகம் பன்னிரு களஞ்சி
கிளர்ந்த ரசமு மறுகளஞ்சி
வருந்த அரைபொடியு மைந்துகளஞ்சி
மருவு மருந்து நிறைகொண்டு
விந்தைக் குமரிச் சாற்றரைத்து
மேவுந் தேங்காய்த் தனிவிட்டு
அந்தம்போலே சட்டியுள்ளே
அடவாத் தேங்காய் தானவையே

கெந்தகம் 60கி, இரசம் 30கி, அரப்பொடி 25கி, நிறுத்தெடுத்து குமரி எனும் கற்றாழைச் சாற்றில் அரைத்து தேங்-காய்க்குள் வைத்து சட்டிக்குள் வைத்து சட்டிமுடிக் கொள்ளவும்.

290. வைத்த மருந்தை மூன்றுநாள்
மசிழ அரைத்துப் பொடியாக்கி
நித்தந்நாலு பணவிடைதான்
நிறையாம் நெய்யில் தான்கொள்ள
அந்த சோகை பாண்டுடனே
ஆம கழிச்ச லதிசாரம்
யித்தினை யெல்லாந் தீருமென்று
யிமையோர்க் கரிய யியம்பியதே

மிதமான தீயிட்டு எரித்து, ஆறியபின் எடுத்த அந்த மருந்தை 3 நாள் அரைத்துப் பொடியாக்கி 200மிகி அளவு நிறுத்து நெய்யில் உட்கொண்டு வர சோகை, பாண்டு, கழிச்சல், அதிசாரம் எல்லாம் தீரும். இது முன்னோர் சொல்லியதாகும்.

291. இயம்பியதோர் நாவிரசங் கெந்தி தாரம்
யெண்ட-மனோ சிலையுடனே வாளங் கட்டி
செம்பிறவே வச்சிர தெந்நா ரங் கட்டி
சேரடா லிங்கமுடன் சமன தாக
வயம்பிறவே நொச்சியிலை மத்தஞ் சாறும்
வகைவகைச் சாற்றாலரைத்துக் குன்றிமுத்து
நயம்பெறவே யுருட்டிந் நிழலு லர்த்தி
நன்றாகச் சட்டியிட்டு வேடு கட்டே

நாவி, ரசம், கெந்தி, தாரம், மனோசிலை, நேர்வாளம், இவற்றைக் கட்டி வஜ்ஜிரம், செந்நாரம் கட்டி, லிங்கமும் அதற்கு சம அளவெடுத்து நொச்சியிலைச்சாறுஊமத்தஞ்சாறு இவை வகைவகையாய் தனித்தனியே யிட்டு அரைத்து ஆமணக்கின் விதை அளவு உருண்டைகளாக உருட்டி நிழலிலுலர்த்தி சட்டியிலிட்டு வேடுகட்டிக் கொள்ளவும்.

292.கட்டியே வெயிலில் வைத்து யெடுத்து அப்பா
கைபார்த்து முகம்பார்த்து குணங்கள் பார்த்து
திட்டமுடன் மாத்திரைத்தானொன் றெடுத்துத்
திறமான அனுபானம் வைத்துக் கொள்ள
வட்டான அலைவெல்லாங் கட்டி தன்னில்
வயத்தருந்த வேமவெள்ளிச் சுரத்துக் காகும்
யிஷ்டமுடன் வாதசுரம் பித்தசுர மெல்லா
மேகுமே சீதசுர மெல்லாம் நீங்கும்

வேடுகட்டியதை வெயிலில் வைத்து எடுத்து கைபார்த்து, முகம் பார்த்து, குணங்கள் பார்த்து மாத்திரையை எடுத்துத் தக்க அனுபானத்தில் வழங்கிட பலநோய்கள் குணமாகும். வெள்ளிக்கு வழங்க சுரம் நீங்கும். அதுவே வாதசுரம், பித்தசுரம், சீதசுரம் எல்லாவற்றையும் போக்கும்.

293. நீர்குஞ் கெந்தகம் வெங்காரம்
நீற்ற நாவி சமனாக
ஒக்கக் கூட்டிப் பழச்சாறில்
உருளத் திரட்டி வைத்துக்கொண்டு
மெய்க்குஞ் சிரிய வெயிலில் வைத்து
வேண்டும் வாலைச் சுருட்டியடை
தக்கப் பானைத் தன்னிலுப்பைத்
தானே கொட்டி மேல்வையே

கெந்தகம், வெங்காரம், நாவி இவற்றைச் சமனாக நிறுத்துக் கொண்டு இடித்து உறவாக்கிக் கலந்து பழச்சாற்றில் (எலுமிச்சம்பழச்சாறு) அரைத்து வெயிலில் காய வைக்கவும். வெயிலில் இருந்து எடுத்து பானையில் உப்பைக் கொட்டி அதன் நடுவே வைத்துக் கொள்ளவும்.

294. வைத்த அமுமேல் கொட்டுஉப்பு
வாயை மூடிச் சீலைசெய்து
உத்த அடுப்பில் அனல்மூட்டி
ஓயா தெரிக்க நாழ்ச்சாமம்
கைத்தாழ் வில்லா தீயெரித்து
கலச மெடுத்து மத்தஞ்சாறு
மெத்தால் நொச்சி யிஞ்சிச்சாறு
விளங்கப் பிசறி உலர்த்தியிடி

அதன் மேலும் உப்பைக் கொட்டி வாய்மூடி சீலைமண் செய்து அடுப்பேற்றி அனல்மூட்டி தொடர்ந்து 12மணிநேரம் இடைவிடாது எரித்து வரவும். ஆறவிட்டு எடுத்து ஊமத்தஞ்சாறு நொச்சிச் சாறுவிட்டுப் பிசைந்து உலர்த்தி இடித்துக் கொள்ளவும்.

295. உலர்த்தி வைத்த சூரணத்தால்
ஒடுங்கும் சுரமும் நசியமிட
பிலத்தே யிடமும் வலமா கிலும்
பேனிச் சுரமு மிகவடித்தால்
வலத்தில் நாசி தானா த
மாற மிடமு மப்படியே
நிலைத்தே பேக சுரமானால்
நிகழு மிரண்டு நாசியுமே

உலர்த்தி இடித்து வைத்இத்தச் சூரணத்த வழங்கிட சுரநோய் நீங்கும். இடபக்க நாசியிலும் வலப்பக்க நாசியிலும் மாறி மாறி நசியமிட நாசியில் வைத்து உள்ளே ஊதவும். இவ்வாறு தொடர்ந்து செய்து வந்தால் சுரநோய்கள் நீங்கிடும் என்பதாம்.

296.நாசியே மயிலித்தத்தம் பலதீதா லொத்த
நாட்டிவள்ள தாளகமும் பலதீதாள் முத்த
பேசியதோர் கல்சுண்ணம் பலதீதா லால
பிரணிகவே வாழைமரச் சாற்ற ரைத்த
அப்பனே மிளகுபோ லுண்டை யாக்கு

மயில் தத்தம் 35கி, தாளகம்105கி, கல்சுண்ணம் 140கி, இவற்றை வாழைமரச்சாற்றால் அரைத்து மிளகளவாக உருண்டை செய்து கொள்ளவும்.

297.ஆனதொரு உண்டைதனை யிஞ்சிச் சாற்றில்
அருந்தவே சீதசுர மகலு மப்பா
போனதொரு எருக்கம்பால் கோதும்பை மாவில்
புகட்டியே புதைத்துவைத்து பின்னெடுத்துக்
காளகத்துச் சலரத்கல்லில் பாலா லாட்டி
கையடைபோல்த் தட்டியே நெய்யைப் பூசி
தாளமா மடைசுட்டு வைத்துக் கொண்டு
சாப்பிடுவாய் கடலைப்பருப்பு வெல்லம் நெய்யே

மிளகுபோல் உருட்டிய உருண்டையை இஞ்சிச்சாற்றில் அருந்தினால் சீதசுரம் நீங்கும். எருக்கம்பாலைக் கோதுமை மாவில் உள்ளே வைத்துப் புதைத்து பின்னர் அக்கோதுமை மாவைத் சதுரக்கல்லில் பாலால் ஆட்டி கையடைபோல் தட்டி நெய்பூசி அடைசுட்டு கடலைப்பருப்பு வெல்லம் நெய் சேர்த்துச் சாப்பிடவும்.

298.நெய்யாகுஞ் சோறுடனே மோரு முன்னு
நெத்தியாய்ப் பாண்டு காமாலை போகும்
நய்யுமே கெந்தகமுங் காட்டுப் பாகல்
நல்கிழங்குங் கடுக்காயுஞ் சமனாய்க் கூட்டி
கயினாக்கச் செம்பிலை சாறுவிட்டு ஆட்டி
கதிக்கவே நீர்சேர்த்து தன்னி லாட்டி
மெய்யாக உளுந்தளவு உண்டை செய்து
வெயிலிலே வையாக நிழலு லர்த்தே

நெய்சாதத்துடன், மோர்சோறும் சாப்பிடலாம்.இவ்வாறு இம்மருந்தை உண்டுவருவதால் பாண்டு, காமாலை இவை நீங்கும். கெந்தகம்,காட்டுப்பாகல் கிழங்கு,கடுக்காய் இவற்றைச் சமஅளவு கூட்டி செம்பிலைச் சாறுவிட்டு ஆட்டி பின்னர் நீர்சேர்த்து ஆட்டி உளுந்தளவு உருண்டை செய்து வெயில் படாமல் நிழலில் உலர்த்தவும்.

299.உலர்த்தியதோர் குளிகைதனை திரிகடுகி லிட்டால்
ஓடும் பதின்மூன்று சன்னி சுவாசகாசம்
பிலத்திட்ட பாண்டுடனே கிரானி வாய்வு
பேரான புண்ணு பதினெட்டுங் குட்டம்
அலைத்திட்ட எழுவகைச் சுவாச காசம்
சுருக்கான அற்புதமாம் வாதந் தீரும்
மதித்திட்டுப் போகாம லின்னங் கேளு
மகத்தான சுரகுளிகை வணங்கிச் செய்யே

உளுந்தளவு குளிகையைத் திரிகடுகிலிட்டால் 13 வகையான சன்னிகள், சுவாசகாசம்,பாண்டு,கிரானி வாயு, புண்கள், 18வகை குட்டங்கள், எழுவகை சுவாச காசங்கள், வாதநோய்கள் என பலவும் நீங்கும்.

300.எனக்கமுடன் சுத்தமஞ்சு யிரத மொஞ்ரு
மயிலான அருசுஒன்ற நாவி முக்கால்
யினக்கமுடன் தாரமொஞ்ற கூடச் சேர்த்து
இயல்பாகவ் பாகலிலைச் சாற்ற ரைத்து
கனக்குடனே பயிரளவு உண்டை செய்து
கஷாயமடா விஷ்ணுகிராந்தியி லரைத்துக்கொள்ள
பினக்கொஞ்ற மில்லையப்பா சுரங்க ளெல்லாம்
பேசாதே ஓடிவிடும் பேணிச் செய்யே

சுத்தம் 5 பங்கு, இரசம் 1 பங்கு, துருசு ஒரு பங்கு, நாவி 3/4 பங்கு, அரிதாரம் 1 பங்கு இவற்றையெல்லாம் சேகரித்து பாகலிலைச் சாற்றால் அரைத்து பயிரளவு உருண்டைகள் செய்து விஷ்ணு கிரந்த கசாயத்தில் உரைத்துக் கொள்ள மாறுபாடில்லாமல் எல்லா வகை சுரங்களும் நீங்கிப்போகும்.

301.பித்தத்துக்குத் குளிகை்
பேணியே யிரதமுடன் அப்பிரகஞ் சேர்த்து
பிசகாமல் சமங்கட்டி மாங்கொழுந்துச் சாற
பேணியா மிருவேலிச் சாறுங் கூட்டி
யிதமாகத் தானரைத்து கடுகுஉண்டை
அணிவாக விடாதசுரம் போக வேண்டி
அடிப்பாக யிருவேலி நீர்ச்சுத் தண்ணீர்
அணியா முண்டைதனை உரைத்துக் கொடு
அஞ்சிவிடுந்தோஷ மெருகஞ் சாறே

இரசம், அப்பிரகம் இரண்டையும் சமஅளவு சேர்த்து மாங்கொழுந்து சாறும் இருவேலிச்சாறும் கூட்டி அரைத்து கடுகளவு உருண்டை செய்து காயவிட்டு எடுத்துக் கொள்ளவும். விடாச்சுரம் நீங்குவதற்கு நீர்ச்சுத்தண்ணீரில் இவ்வுருண்டையை உரைத்துக் கொடுக்கலாம். தோஷத்தில் நீங்குவதற்கு மெருகஞ்சாற்றில் வழங்கலாம்.

302.சார மிர்தம் கெந்தகமுந்

தாக்கும் நாவி மனோசிலையும்

விரைய வெங்காரந் தன்னுடனே

விளங்கும் வகைக்கு ஒரீகளஞ்சி

கறாவதற்கு யெட்டிடையாம்

கூட்டு மிளகு பொடி செய்து

தீரா யிடித்துப் பொடியாக்கி

தின்னப் பணவிடை சூரணமே

சாராமிர்தம் கெந்தகம், நாவி, மனோசிலை, வெங்காரம் இவை வகைக்கு 5கி ஸ்தமெடுத்து 40கி மிளகெடுத்துப் பொடி செய்து மூன்றையும் ஒன்றாகக் கலந்து சேர்த்துப் பொடியாக்கி 500மிகி அளவு சாப்பிடவேண்டும்.

303.சூரணமாம் வெற்றிலையில் மடித்து உண்டு

சுகமாக வெந்நீர்தானே குடிக்கத் தீரும்

காரணமாம் பாண்டுகுட்டஞ் சோகைத் தீரும்

காமாலை குன்மமுடன் வளர்ச்சித் தீரும்

வாரணமாம் வலிப்புடனே யிசிப்புத் தீரும்

மகத்தான குளிர்த்காய்ச்சல் மாறிப் போகும்

பூரணமாயிந் பின்னையுமோர் பித்தந் தீரும்

புகழான குளிகைசெந்தூரமிதிந் கேளே

சூரணத்தை வெற்றிலையில் மடித்துச் சாப்பிட்டு வெந்நீர் குடிக்க வேண்டும். இவ்வாறு சாப்பிட்டுவர பாண்டு, குட்டம், சோகை, காமாலை, குன்மம் இவை தீரும். வலிப்பு, இசிப்பு, குளிர்க்காய்ச்சல் பித்தம் போன்றவையும் நீங்கும்.

304.இரதம் கெந்தம் வெங்காரம்
    மேகுந் தார மனோசிலையு
மருவுந் தாம்பிர பஸ்பமுடன்
    பஸ்மைத் திப்பிலி மிளகுடனே
உருமை நொச்சி கண்டாங்காலி
    ஓங்கு மாடா தோடையிலை
பெருகுஞ் சாற்றால் தானரைத்து
    பேணிப் பயிறள வுண்டை செய்யே

இரசம், கெந்தகம், வெங்காரம், தாரம், மனோசிலை, தாமிரபஸ்பம், திப்பிலி, மிளகு, நொச்சி, கண்டங்காலி இவற்றை ஆடா-தோடை சாற்றால் நன்றாக அரைத்து பயிறளவு உண்டை செய்து கொள்ளவும்.

305.செய்த வுண்டைக் கனுப்பானந்
    தேனே சக்கரை யிஞ்சிகொள்ள
அய்யநீ குழையாஞ் சுவாசம் பத்து
    மான யீளை யிருமல்சுரம்
வெய்யுங் குன்மம் பிரளியுடன்
    மிகுந்த சுரங்கள் வகையனைத்தும்
உய்யும் விடசுமு மில்லைபெனிச
    ஓடிப்போகுங் கண்டாயே

மேற்சொன்ன உருண்டையைத் தேன், சர்க்கரை, இஞ்சி இவற்றுடன் சேர்த்துப் பருக ஐயம், சுவாச நோய்கள், ஈளை, இருமல், சுரம், குன்மம் பிரளி சுரங்கள், சிறுவிடங்கள் இவை யாவும் நீங்கிவிடும் என்பதாம்.

306. கண்டே மிதற்குப் பத்தியந்தான்
கருதுந் துவரை யறைக்கீரை
அண்டம் புகழு மிஞ்சிசுண்டி
ஆக மென்றா ரகத்தியனார்
தொண்டர் புகழும் பராபரனார்
சுவித்த பாதம் பொத்தியபின்
மிண்டி வினைபோம் சுராங்கி–உந்தான்
மிகுத்த அதிசாரந் தீர்ந்திடுமே

துவரம்பருப்பு, அரைக்கீரை, இஞ்சி இவை இம்மருந்திற்குப் பத்தியமாகும். உலகம் புகழ்கின்ற அகத்திய மாமுனிவனைப் போற்றிப் புகழ்ந்த நம்பிக்கையுடன் இம்மருந்தை வழங்கினால் சுரங்களும் ரி அதிசாரமெனும் கழிச்சல்களும் நீங்கும்.

307. தீரும் நெல்லி திப்பிலியுந்
திகைக்கோ ரொன்று முக்களஞ்சி
பாருங் கெந்தி நாபியுடன்
பகரவோ ரொன்று கழஞ்சாக
சேரு மிஞ்சிச் சாற்றரைத்துத்
தெளியுங் குன்றிப் பிரமாணஞ்
நேரா யுலர்த்தி யிஞ்சியிட
நெகிழும் வியாதி யிளிக்கேளே

நெல்லி 15கி, திப்பிலி 15கி, கெந்தி 5கி, நாபி5கி, இவற்றை இஞ்சிச்சாற்றால் அரைத்து குன்றியளவு குளிகைகளாக உருட்டிக் கொள்ளவும். நிழலில் உலர்த்தி பத்திரப்படுத்தி இஞ்சிச்சாற்றில் உட்கொண்டு வர கீழ்க்காணும் நோய்கள் தீரும் என்பதாம்.

308.கேளீர் சுத்திப் -பிர மேகம்
கலந்த சன்னிப் பதிமூன்றும்
நாளும் உடலில் பலவாதம்
நன்றாய்த் தீருந் தப்பாது
ஆகு மாவின் பாலுடனே
அரிசி கூடத் தான்போட்டு
மீளும் பசிந்துத் தான்கஞ்சி
முன்னோ ருரைத்த மொழியதுவே

சுத்த பிரமேகங்கள், 13வகை சன்னிகள், உடம்பில் உண்டாகும் பலவகை வாதங்கள் ஆகியவை குணமாகும்.பசும்பாலில் அரிசிபோட்டு கஞ்சி காய்ச்சிக் குடிக்கவும்.

309.இதுவே கேளு வெள்கார
மிரத மனோசிலை மற்றுள்விரை
பொதுவாம் நாவி வகைகளஞ்சி
யோற்மந் திரிகடுகு அருகளஞ்சி
மெதுவாந் தேசி சாற்றரைத்து
மீறுங் குன்றிப் பிரமாணம்
அதுவாந் தேசிச் சாற்றிலிட
ஆன சுரங்கள் அகன்றிடுமே

வெள்காரம்,இரசம்,மனோசிலை, ஊமத்தன்விதை,நாவி இவை வகைக்கு 5கி வீதம் சேர்த்துக் கொள்ளவும்.திரிகடுகு 30கி எல்லாவற்றையும் சேர்த்திடித்து எலுமிச்சம்பழச் சாற்றால் அரைத்து குன்றிமணி அளவான உருண்டைகளாகச் செய்து எலுமிச்சம்பழச்சாற்றில் வழங்கிட அனைத்து வகையான சுரங்களும் நீங்கிவிடும் என்பதாம்.

310. அகண்ட ரோணி திரிகடுகு
ஆன யிலுப்பைப் பூவுடனே
புகண்ட கொளிய திலத்தானும்
புகனு மஞ்சக் கருவெடுத்து
ஆண்ட யிதவுஞ் சரிசமனாய்
ஆன முலைப்பால் விட்டரைத்து
யிண்ட சுண்டைக் காயளவு
யிஞ்சி முலைப்பால்க் குணமாமே

குடுகுரோகனி, இலுப்பைப்பூ, முட்டை மஞ்சள் கரு இவற்றை சமஅளவெடுத்துத் தாய்ப்பால்விட்டு அரைத்து சுண்டைக்காயளவு எடுத்து இஞ்சி அல்லது தாய்ப்பாலில் வழங்க பலவகை நோய்கள் குணமாகும்.

311.குணமாந் திப்பிலி சுக்குடனே
கட்டு கடுகு மிளகுடனே
மணமாங் காய மோமமுடன்
மறவாத திப்பிலிக் கட்டையுடன்
தவலா மிஞ்சிச் சாறுவிட்டுத்
தாங்கா தரைத து மிழுங்கிடவே
குணமாம் வாயு இருமலமும்
வெல்லாத் சுரமும் விட்டேகும்

திப்பிலி, சுக்கு, கடுகு, மிளகு, காயம், ஓமம், திப்பிலிக் கட்டை, இஞ்சிச்சாறுவிட்டு அரைத்து விழுங்கினால் வாயு இருமல் இவை குணமாகும்.

312. யேகுமே கற்கடக சிங்கி தேக்கு
யிதமான திப்பிலியும் அமுர்த்த் தண்டும்
போகுமே சடாமாஞ்சி சுக்குங் கோஷ்டம்
பொருதியதோர் வமுதிலையு மிளகு மிந்த
ஆகுமே ஆ அவளை கண்டங் காரி
அடுத்தநெல்லிப் பருப்புடனே பொரியுங் கட்டி
வாகுபெற வரைத்தந் பொடிய தாக்கி
வளமாகத் தேனிலுண்ண யிருமல் தீரும்

கற்கடகசிங்கி, தேக்கு, திப்பிலி, அமிர்ததண்டு, சடா-மாஞ்சில், சுக்கு, கோஷ்டம், வமுதிலை, மிளகு, இந்துப்பு, ஆ தவளை, கண்டங்காரி, நெல்லிப்பருப்பு பொரியும் கட்டி வைத்த தேனில் சாப்பிட்டு வர இருமல் நீங்கும்.

313. தீருமே சுக்குடனே சீந்தி கட்டி
சேவுகனு மிருவேலி விலாமிச் சோடு
பாருயிரு நாளிந் ரெட்டொன்றாக்கி
பதறாமல் திப்பிலியை வருத்தக் கொண்டு
சேருந் கஷாயத்தில் மேலேத் தூவி
செலுத்துவாய் யிருநேரங் கஷாயந் தன்னை
மாறுமே சுரங்களெல்லாம் விட்டே யேகும்
மயக்கமுடன் தகாமெல்லாம் மாறிப் போகும்

சுக்கு, சீந்தில், இருவேலி, விலாமிச்சு இவற்றை இடித்துத் தூளாக்கி தேவையான அளவு தண்ணீரில் போட்டு எட்டொன்றாக்கி கசாயம் இறக்கிக் கொள்ளவும். திப்பிலியை வருத்துப் பொடித்துக் கஷாயத்தில் மேலே தூவி காலை, மாலை இரண்டு வேளைக் கஷாயத்தைப் பருகி வரவும். சுரம் நீங்கும். தாகம் மாறிப்போகும்.

314. போமே தாளி-திரி கடுகு-நெல்லி

போதமந் தாமரை யிலவங்கம்

ஆமே கொன்றைத் தோலுடனே

அரிய களஞ்சித் கோரோஜ்ய

நாமே சொல்லோ மிருநாளி

நல்ல நீரில் வெந்திறக்கி

தாமே திப்பிலி அ வியுள்ளத்

தாங்காத் சுரமுந் தங்காதே

தாளிறிக்காய், திரிகடுகு, நெல்லி, தாமரை, இலவங்கம், கொன்றைத்தோல் இவை வகைக்கு 5கி ங்தமெடுத்து அடுப்பேற்றி ஏறத்தாழ 3/4 மணி நேரம் காய்ச்சி வேகவைத்திறக்கி திப்பிலியை வறுத்துப் பொடியாக்கி மேலே அ வி கஷாயத்தைப் பருகிவர அப்பந்தரும் சுரநோய்கள் நீங்கும்.

315. தங்காத் தாமரையின் கிழங்குச் சாமம்

செம்மட்டி மசிரமுடன் ஓமங் காயம்

பங்கமில்லா நன்னாரி வேரு மிந்து

பகரிலுப்பைப் பூவுடனே சமன தாக

சிங்கார மானதொரு யிருக ளஞ்சி

சேரவே காத்சிநீ யெட்டொன் றாக்கி

பங்கமில்லாத் திப்பிலிமேல்ப் பொடிய தாக்கி

பாவினையாற் கொள்ளச் சுரம்பள தாமே

தாமரை கிழங்குச் சாமம், செம்மட்டி, அதிமதுரம், ஓமம், பெருங்காயம், நன்னாரி வேர், இந்து, இலுப்பைப்பூ இவற்றைச் சம அளவாக எடுத்து இடித்து முறைப்படி கஷாயம் காய்ச்சிக் கொண்டு திப்பிலி பொடித்து மேல்பொடியாகத் தூ வி குடித்துவர சுரங்கள் நீங்கும்.

316. ஆமே நெல்லி கடுகு—தான்றி
ஆகு யிஞ்சி யிருவேலி
தாமே சொல்லும் லாமிச்சு
தமரத் தாமரை கிழங்குடனே
ஓமெனீ றொன்றிரு களஞ்சு
ஒயியும் நீரிலெட் டொன்றாய்
வேமே வெந்த குடிப்பீராகீ
வெதுப்புமில்லை விதியெனவே

நெல்லிக்காய், கடுகு, தான்றிக்காய், இஞ்சி, இருவேலி, விலாமிச்சு, தாமரைக்கிழங்கு இவை வகைக்கு 10கி வீதமெடுத்து இடித்து நீரிட்டு எட்டிலொன்றாகக் குறுக்கிக் காய்ச்சி குடித்திட வெதுப்பு நோய்கள் யாவும் நீங்கும் என்பது.

317. விதியே யென்னும் வெங்காரம்
வேண்டுந் தண்ணீ பதக்காக
கொதியாய் நின்ற வெதுப்புடனே
கூட்டிக் கொள்ளக் கொள்ளுமதில்
சதியாய் இருந்த நெமக்கென்று
தாம மதியச் சாறுடனே
பதியே அல்லக் காணுமது
பாரிற் சுரமும் பயமெனவே

வெங்காரத்தை இடித்து 2.6லிட்டர் தண்ணீர் விட்டு கொதிக்க விட்டு எட்டில் ஒன்றாகக் குறுக்கி மேற்சொன்ன வெதுப்பு நீரில் சேர்த்து முதியுக்சாறும் சேர்த்துப் பருகிவர சு'சுரம்' நீங்கி உடல் வளம் பெருகும்.

318.சுரக்குடிநீர்:

பச்சே காஞ்சோ ரியுடன்
பருத்த சீந்தி தொடையிலை
செய்யுஞ் சிறிய வமுதிலையுஞ்
சேருஞ் சுக்கு வள்ளியின் வேர்
மய்ய யிடிக்க வகைக்களஞ்சி
மருகக் காச்சி யெட்டொன்றாய்
நமிய பெடுத்துக் குடிப்பீரால்
நமனுஞ் சுரமும் நாடாதே

சிறுகாஞ்சோரி,பருத்த சீந்தில்,ஆடாதோடை இலை,சிறுவழுதிலை, சுக்கு, வள்ளிவேர், இவை வகைக்கு 5கி வீதம் எடுத்து இடித்து தண்ணீர் விட்டு எட்டிலொன்றாகச் சுருக்கிக் காய்ச்சிக் குடிக்க சுரம் நீங்கும்.எமனுக்கும் அங்கு வேலையில்லை.

319.நாடுஞ் சீந்தி வேப்பீர்க்கி
நல்ல நெல்லி கடுகுதாளிறி
போடாப் புடலம் ரோசனையும்
போற்று சிறுகாஞ் சோரியுடன்
பாடாய் பகரும் பெருங்கும்பை
பதித்தப் பட்டை வேருடனே
காடாத் திருத்து யெட்டொன்றாய்
கொடுப்பீர் களஞ்சித் தேனுடனே

சீந்தில், வேப்பீர்க்கு, நெல்லி, கடுகு, தாளிறி புடல், கோரோசினை, சிறுகாஞ்சோரி,பெருங்குரும்பை, பட்டைவேர் இவற்றை சமஅளவு சேர்த்து இடித்துத் தூளாக்கி தண்ணீர் விட்டு எட்டில் ஒன்றாகச் சுருக்கக் காய்ச்சி எட்டொன்றாக்கி வேளைக்கு 5கிவீதம் 3 நாட்கள் குடித்துவர சகல சுரமும் நீங்கும்.

320. தேனாந் சிறுதேக்கு நிலவேம்பு
திப்பிலி கோஷ்டம் முத்தக்காசு
வாசிசிறு காஞ்சோரி பதிபடாகம்
மதிக்குஞ் சீந்திற் கத்திரிவேர்
நாசிசிறு சுக்கு நாளிநீர்
நலம்பாயிக் காச்சி யெட்டொன்றாய்
தானது மூன்று நாளிக்குடிக்கத்
தகல சுரமும் வாறாதே

இனிக்கின்ற சிறுதேக்கு, சிலவேம்பு, திப்பிலி, கோஷ்டம், முத்தக்காசு, சிறுகாஞ்சோரி, பதிபாடகம், சீந்தில், கத்தரிவேர், சிறுசுக்கு இவற்றை இடித்து 2.6லிட்டர் தண்ணீர் விட்டுக் காய்ச்சி எட்டில் ஒன்றாகக் குறுக்கிக் கொண்டு வடிகட்டி 3 நாட்கள் குடித்து வர அனைத்து சுரங்களும் விலகிப் போகும்.

321. வாராத் சுக்கு சீந்தியுடன்
மருவும் வமுதிலை கத்திரிவேர்
நாராந் கோஷ்ட்டமுடன் களிசாம்
நன்பா யூதக மிருநாளி
பாராய்க் கசாய மெட்டொன்றாய்
பகரக்காச்சிக் குடிப்பீராய்
சீராய் வந்த சுரங்களெல்லாம்
சிதறிப் போகுங் கண்டீரே

சுக்கு, சீந்தில், வமுதிலை, கத்திரிவேர், கோஷ்டம் இவற்றை வகைக்கு 5கிராம் எடுத்துக் கொண்டு தண்ணீர் 2.6லிட்டர் சேர்த்து எட்டில் ஒன்றாகச் சுருக்கக் காய்ச்சிக் குடிக்க அப்பத்- தருகின்ற சுரங்கள் எல்லாம் நீங்கிப் போகும்.

322. கண்டதொரு சந்தனம் நல்லாரி வேரும்
காட்டில்க்-கொட்டிக் கிழங்கு செங்கழுநீர்
கோஷ்டம்
மீண்டதொரு முந்திரிகை யிலுப்பைப் பூவும்
மீறாம லிருகளத்தி கட்டிக் காச்சி
கண்டவே யெட்டொன்றாய்க் கஷாயங் கொண்டால்
சுரமனைத்து மதைப் பகரு வீரே

சந்தனம், நல்லாரிவேர், கொட்டிக் கிழங்கு, செங்கழுநீர் கோட்டம், முந்திரிகை, இலுப்பைப்பூ இவை வகைக்கு 10கி அளவெடுத்து இடித்து அடுப்பேற்றி தண்ணீர் விட்டுக் காய்ச்சி எட்டில் ஒன்றாகச் சுருக்கிக் காய்ச்சிக் குடிக்க. அனைத்து வகை சுரங்களும் நீங்கிப் போகும்.

323. பகரும் பழமும் முந்திரிகை
பருத்த லாமிச்சு யிருவேலி
வரும் பேரிச்சு சரிசமனாய்
மருகக் காச்சி குடிப்பீராம்
குளிகிச் சுரமும் பரிதாபம்
குதித்து ஓடிப் போவதற்கு
மருவிக் கஷாயந் தாக்கொள்ள
மருண்டு போகுங் கண்டீரே

எலுமிச்சம்பழம், முந்திரிகை, விலாமிச்சு இருவேலி, பேரிச்சம்பழம் இவற்றைச் சமனாக எடுத்துக் கொண்டு தண்ணீர்விட்டு எட்டில் ஒன்றாகச் சுருங்குமாறு குடிநீர் காய்ச்சிக் குடிக்க அனைத்து வகையான சுரங்களும் ஓடிப்போகும்.

324. கண்டதொரு கஷாயமொழி சொல்லக் கேளு
கசடான சுரம்விட்டுப் போவ தற்கு
மண்டலத்தில் சீந்தியதின் களஞ்சிக் கட்டி
வகையான சுக்குனால் களஞ்சிற்கூட
தண்டாம லிடித்திடுவாய் அள தாகத்
தானீரா லெட்டொன்றாய்க் காய்ச்சிக் கொண்டால்
பண்டுள்ள சுரங்களெல்லாம் பறந்து போகும்
பாவினையால் தேன்கட்டிப் பகரு நன்றே

அம்பம் தரும் சுரங்கள் நீங்கிப் போவதற்கு கஷாயமொழி சொல்கிறேன் கேள். சீந்தில் 50கி, சுக்கு 20கி இரண்டையும் நன்றாக இடித்துக் கொண்டு தேவையான அளவு தண்ணீர் விட்டுக் காய்ச்சி எட்டில் ஒன்றாகச் சுருக்கிக் கொண்டு பருகிவர பழஞ்சுரங்கள் எல்லாம் நீங்கிப் போகும். தேன்கட்டிப் பருகுவது சிறந்தது.

325. நன்றே மதுரஞ் சுக்குடனே
நறுக்கு மூலந் தொடையிலை
இன்டே நீர்தா னிருநாழி
யிடித்துக் காய்ச்சி யெட்டொன்றாய்
சென்றே குடிக்கச் சுரங்கள்விட்டுத்
தெறித்துப் போகுங் கனிமடவாய்
குன்டே முலையாள் கிராந்திமுத்தந்
கட்டிக் கொள்ளத் குணமாமே

அதிமதுரம், சுக்கு, நறுக்குமூலம், ஆடாதோடை இலை இவற்றை இடித்து 2.6லிட் தண்ணீர் விட்டு எட்டிலொன்றாக குறுக்கிக் காய்ச்சி குடித்துவர சுரங்கள் நீங்கும். இதனுடன் கிராந்தியும், முத்தக்காசும் சேர்த்துக் கொள்வது நல்ல பலனைத்தரும்.

326. கஷாயம்

குணமாம் ரோகிணி செவ்வியமும்
கூட்டுங் கடுக்காய்சுக்குடனே
மணமாஞ் சாரணை மரமஞ்சள்
வயக்குந் தேவ தாரமுடன்
பணம்போல் நீரிலெட் டொன்றாய்
பறக்கக் காய்ச்சித் தாளிறக்கி
உள்ர்வாந்த்திப்பிலி மேல்த்தூவி
உகந்து கொள்ளச் சுரமறுமே

கடுகுரோகணி, செவ்வியம், கடுக்காய், சுக்கு, சாரணை, மரமஞ்சள், தேவதாரம் இவற்றை இடித்துத் தூளாக்கி தண்ணீர் விட்டு எட்டில் ஒன்றாகச் சுருங்குமளவு கசாமுறைப்படி காய்ச்சி இறக்கி வடித்துக் கொண்டு திப்பிலியை இடித்துத் தூளாக்கி மேல் பொடியாகத் தூவி அருந்திவர சுரங்கள் நீங்கும்.

327. அறமே மிளகு கோஷ்ட்டமுடன்
சுள குமிழும் வேப்பலகு
குருகுங் கொத்தாள் முத்தமுடன்
கொள்ளுந் தேவ தாரமுடன்
மருகோ கானி பெருங்குரும்பை
வைக்கும் புடலோ விடையமுடன்
சிறுகாஞ் சோரி கீளிநெல்லி
சேர்த்தே கஷாயஞ் சுரமகலும்

மிளகு, கோஷ்டம், குமிழம்வேர், வேப்பலகு, முட்க்கொத்றாள் முத்தக்காசு, தேவதாரம், கோகணி, பெருங்குரும்பை, புடல், அதிவிடையம், சிறுகளஞ்சோரி, கீழாநெல்லி இவற்றைச் சேர்த்திடித்துத் தண்ணீர்விட்டுக் காய்ச்சி எட்டில் ஒன்றாகச் சுருக்கி குடித்துவர எல்லா வகையான சுரங்களும் நீங்கும்.

328. அகலுங் கொஷிறை தானியுடன்
     ஆகுங் ரோசனை வெப்பலகு
பூகவு முத்தக்காசு சுக்குஞ்
     போதுவாம் மூலஞ் சீரகமும்
வகையாய்க் களஞ்சி தான்வாங்கி
     வத்தக் காய்ச்சிக் கொடுப்பீராம்
தகையாய்த் திப்பிலி மேலீப்போயாத்
     தாங்கா தெடுத்தக் குடிப்பீராம்

கொஷிறை, தான்றிக்காய், கோரோசனை, வேப்பலகு, முத்தக்காசு, சுக்கு, சித்திரமூலம், சீரகம் இவை வகைக்கு 5கி வீத-மெடுத்து நீர்விட்டுக் காய்ச்சி எட்டிலொன்றாகச் சுருங்கக் காய்ச்சி திப்பிலியை இடித்து மேல்பொடி தூவிக் குடித்து வரலாம்.

329. குடிக்கும் முத்தக் காசுடனே
     கூட்டுஞ் சாரணை வெப்பலகு
முடிக்க கஷாய மோரொன்று
     முடுகு மெள்ளு முக்களஞ்சு
பொடிக்கும் பொடியை மேலிட்டு
     மெய்யாய்க் காய்ச்சி யெட்டொன்றாக்க்
மடிக்கப் பொடியை மேலிட்டு
     மதித்துக் குடிசுரம் வாராதே

முத்தக்காசு, சாரணை, வேப்பலகு மூன்றையும் இடித்து முறைப்படி எட்டில் ஒன்றாக்கி கஷாயமிட்டு குடிக்கவும். 15கி எள்ளைப் பொடித்து அப்பொடியை மேலே தூவிக் குடித்து வர சுரநோய் எதுவும் நெருங்காது.

330. வாராச் சிவதை கண்டங்காலி
வளருஞ் சுக்கு மிளகுடனே
ஓயா தென்ன சொல்லுகிறேன்
யிருமோ ரொன்று முக்களஞ்சி
காராங் குழலே யெட்டொன்றாய்க்
காச்சித் திப்பிலி மேற்பொடியாய்
சீராய் முலையா யிப்போதிற்
திகழுஞ் பருகத் திண்மையுறே

சிவதை, கண்டங்காலி, சுக்கு, மிளகு, இவை வகைக்கு 5கி வீதமெடுத்து முறைப்படி தண்ணீர் விட்டு எட்டிலொன்றாகச் சுருக்கக் காய்ச்சி திப்பிலியைப் பொடித்து மேல்பொடியாகத் தூவி கஷாயத்தைக் குடித்து வரலாம்.

331. திண்மையுறவே தோடையிலை
சீந்திக் கொடியும் வழுதிலையுந்
திண்றுஞ் சுக்கு வகையொன்று
தாங்காக் கொள்ளு முக்களஞ்சி
வண்ணப் புதிய நீரிலிட்டு
வத்தக் காச்சி யெட்டொன்றாங்
தன்னத் திப்பிலி மேல்பொடியாக
தாக்கச் சுரமுந் தறுகாதே

ஆடாதோடை இலை, சீந்தில்கொடி, வழுதிலை, சுக்கு இவை வகைக்கு 15கி வீதமெடுத்து இடித்து நீரிலிட்டு எட்டில் ஒன்றாக நீர் சுருங்குமாறு வற்றக் காய்ச்சி திப்பிலி மேல்பொடி தூவி குடித்து வர சுரங்கள் தன்னை அண்டாது.

332. தருகாத கடுக்காயுஞ் சிவதை வேருந்
தாஞ்சுக்கு ரோகணியுங் காந்தங் கூட்டி
முதியதோர் களிப்பாக்கு சீந்தித் தண்டு
முதகள்ளிச் சறகுடனே மோக்க நன்பாங்
உறுதியாம் நீர்விட்டு யெட்டொன் றாக்கி
உடநாகத் திப்பிலியும் மேல்ப்பொடியுங் கொள்ள
தருகாமு சுரமேகுந் வயறு போகுந்
தனிந்குளிகை கெந்தகத்தைச் சாற்று வோமே

கடுக்காய் சிவதைவேர், சுக்கு, கடுகு, ரோகிணி, காந்தம், களிப்பாக்கு, சீந்தில்தண்டு, முதகள்ளிச் சறகு இவற்றை சமஅளவெடுத்து இடித்து நீர்விட்டு வற்றக் காய்ச்சி எட்லொன்றாக்கி திப்பிலி மேல் பொடி தூவி குடித்து வர சுரம் நீங்கும். வயிறு கழிவதற்கான கெந்தக தனிக் குளிகையில் பற்றி இனிப் பேசுவோம்.

333. கெந்தக குளிகை

கெந்தகம் பச்சை நாவி
கேகுந் மிளகு சூதம்
வெந்தநேர் வாளந் தன்னை
விடமது தன்னிற் கூட்டி
பூந்திபூசணிப் பருப்பும்
பொருந்தவே தானுங் கூட்டி
யித்த உளுந்து அளவாக
யிஞ்சிச் சாற்றி லரைத்துருட்டே

கெந்தகம், பச்சைநாபி, மிளகு, சூதம், சுத்திசெய்த நேர்வாளம் சேர்த்து, பூந்திப்பருப்பு, பூசணிப்பருப்பு இவற்றைச் சம அளவெடுத்துக் கூட்டி இஞ்சிச்சாற்றில் அரைத்து உளுந்தளவு உருண்டைகளாக உருட்டிக் கொள்ளவும்.

334. உருட்டுங் குளிகைச் சுக்கிலிட

ஓடுஞ் சுரங்க ளனைத்துநிற்கு

மிருக்குஞ் சன்னி பதிமூன்று

மேகு மிஞ்சிச் சாற்றிலிட

அறுக்கும் வயத்தில் நோவெல்லா

மளிக்குந் தேனு மிஞ்சிரசம்

குறுக்கு முத்தி மலக்கட்டு

கொளையறுக்கும் விளக்கெண்ணையே

இக்குளிகையைச் சுக்கிலிட அனைத்து வகையான சுரங்களும் நீங்கிவிடும். பதிமூன்று வகை சன்னிகள், இக்குளிகையை இஞ்சிச்சாற்றில் வழங்கிட நீங்கும். வயிற்றில் உண்டாகும் நோய்களுக்கெல்லாம் தேனிலும் இஞ்சிச்சாற்றிலும் வழங்கலாம். மலக்கட்டை நீக்குவதற்கு குளிகையை விளக்கெண்ணையுடன் சேர்த்து வழங்கலாம்.

335. விளங்குந் துத்தம் நாலுடனே

வெண்பா ஷாணம் மூன்றாகும்

களங்க மற்ற வாளமிரண்டு

காட்டுஞ் சாத்திர பேதியொன்று

விளங்க மோரு விட்டரைத்து

பேணிக் கடுகு போலுருட்டி

உள்ளங் குளிருஞ் சுரமனைத்து

மோடி யொளிக்கு மோரிலிட

துத்தம் நான்குபங்கு, வெள்ளைப்பாஷாணம் மூன்று பங்கு, சுத்தி செய்யப்பட்ட நேர்வாளம் இரண்டு பங்கு சாத்திரபேதி ஒருபங்கு இவற்றை மோர்விட்டரைத்து கடுகுபோல் உருண்டைகள் செய்து காயவைத்து, சுரங்கண்டபோது மோரில் வழங்கிட அனைத்து வகை சுரங்களும் நீங்கும்.

336. மோராம் மத்தம்விரைநாலு
முனிவெண் கார மஞ்சாகும்
பாராம் கெந்த மாறாகும்
பகரும் நாவி ஏழாகும்
கறா யிரத மிரண்டுடன்
கூட்டிச் சேர்த்து நிறைகொண்டு
வேராஞ் சித்திர வேர்ச்சாற்றில்
விளங்கக்குன்றி முத்தாகும்

ஊமத்தம்விதை நான்குபங்கு, வெண்காரம், ஐந்து பங்கு, கெந்தகம் 6 பங்கு, நாபி 7 பங்கு, இரசம் இரண்டு பங்கு இவற்றை- யெல்லாம்ஒன்றாகச் சேர்த்து சித்திரவேர்ச் சாற்றில் அரைத்து ஆமணக்கம் விதையளவாக உருண்டை செய்து நிழலில் உலர்த்தி எடுத்துக் கொள்ளவேண்டும்.

337. முத்தா முண்டை தனையெடுத்து
மோது சுரத்தி லிஞ்சியிடு
மெத்த வலிக்கும் வலிகுன்மம்
வெள்ளை யுள்ளிச் சாற்றிலிட
பித்த மிகுந்து தலைசுற்றி
பேணி நொச்சிச் சாற்றிலிட
சுத்த வாதந் தான்பிடித்தால்த்
துலங்கு நொச்சிச் சாறருந்தே

இக்குளிகையை இஞ்சிச்சாற்றில் வழங்கிட சுரநோய்கள் நீங்கும். வலிகுன்மத்திற்கு வெள்ளை உள்ளிச் சாற்றிலும், மிகுதியான தலைச் சுற்றலுக்கு நொச்சிச் சாற்றிலும், வாத நோய்களுக்கும் நொச்சிச் சாற்றிலும் வழங்கலாம்.

338. வெள்ளைப் பாஷாண மாத்திரை-

அருந்தம் வெள்ளைப் பாஷாண
　　மான களஞ்சி ரெண்டாகும்
பொருந்து சந்தன முக்களஞ்சி
　　போதக் குழிக்கல் தன்னிலிட்டு
வருந்தி முலைப்பால் விட்டாட்டி
　　மருக மூன்று நாளரைத்து
திருந்த மிளகு அளவுவெயிலிற்
　　தீரும் வெள்ளைச் சுரமிருமல்

வெள்ளைப் பாஷாணம் 10கி, சந்தனம் 15கி இரண்டையும் குழிக்கல்லிலிட்டு தாய்ப்பால்விட்டு ஆட்டி-தொடர்ந்து 3 நாட்கள் அரைத்தபின் மிளகளவு உருண்டைகளாக்கி நிழலில் காயவைத்து வெயிலிலும், வெண்மையிலும் உட்கொள்ள சுரமும் இருமலும் தீரும்.

339. சுரமாந் அத்தம் பத்துடனே
　　இலிங்கு பாஷாணம் நாலாகும்
வருமை யிதனை யிடைகொண்டு
　　மற்ற மெருக்கில் சாற்றரைத்து
பருவமாக யிரண்டு நாள்தான்
　　பாங்கா யரைத்துக் கடலையளவுபோல்
சமைய சுரமு மாவிப்பால்
　　தன்னி லருந்தச் சாற்றியதே

அத்தம் பத்து பங்கு, பாஷாணம் 4 பங்கு எடுத்து எருக்கம்பால்விட்டு அரைத்து தொடர்ந்து 2 நாட்கள்அரைத்துக் கொள்ளவும். கடலை அளவு உருண்டைகளாக உருட்டி காயவைத்தெடுத்துத் தாய்ப்பாலில் வழங்கிவர அனைத்து சுரங்களும் நீங்கும் என்பதாம்.

340.சாதி லிங்கம் வெண்பாஷாணந்

தாலே மத்தஞ் சாற்றரைத்து

மேத மாக சாமமரை

விளங்கு முருந்தாய் பிரமாணம்

போத உருட்டி ....தண்ணீர்

பொருந்தக் குடிக்க வல்லீராய்

மாலே குளிருஞ் சுரமாறும்

மண்ணும் பிரமா அகஸ்த்தியத்தே

சாதி லிங்கம்,வெண்பாஷாணம் இரண்டையும் ஊமத்தஞ்சாற்றால் 3 மணிநேரம் அரைத்து உளுந்தளவாக உருண்டைகள் செய்து நிழலில் காயவைத்தெடுத்து தண்ணீரில் சாப்பிட்டுவர குளிர்சுரம் போகிற நோய்கள் குணமாகும்.

341.யிரதஞ் சுத்தி யறுகளஞ்சி

யேமத் தேசிப் பழச்சாற்றில்

நிருத மாக நாளொன்று

நிகண்ட சத்திச் சாரணையு

மரிதே சுக்குத் திப்பிலியு

மருகள் களஞ்சி வகைக்கொண்டு

பருவ மாக யிலுமிச்சம்

பழமு மிஞ்சிச் சாற்பகரே

சுத்தி செய்யப்பட்ட இரசம் 30கி எலுமிச்சம்பழச்சாற்றில் ஒரு நாள் முழுமையும் அரைத்துச் சத்திச்சாரணை, சுக்கு, திப்பிலி, இவை வகைக்கு 10கி சேர்த்து எலுமிச்சம் பழச்சாற்றிலும் இஞ்சிச் சாற்றிலும் தொடர்ந்து அரைத்து வரவும்.

342. பகலு முதலாய் நாள்மூன்று
பரிந்தே யரைத்துப் பயிரளவாய்
யேக மாக குளிகைசெய்து
யிஞ்சி தேனில் தானிடவே
சோகை சன்னி வாதமுடன்
சொல்லுங் கைகால் குளிர்ந்தசுரம்
ஆகுஞ் சன்னி விடமாமும்
அதிசார சுரமு மஞ்சியதே

இவ்வாறு தொடர்ந்து 3 நாட்கள் அரைத்து பயிரளவாக உருண்டைகள் செய்து நிழலில் உலர்த்தி எடுத்துக் கொள்ளவும். அக் குளிகையை இஞ்சிச்சாறு, தேனில் வழங்கிட சோகை, சன்னிவாதம், கைகால் குளிர்ந்திடும் சுரம், சன்னிவிடம், அதிசாரம் ஆகியன நீங்கும்.

343. அஞ்சு மிஞ்சிச் சாற்றிலிட
ஆகு மாடா தோடையிலை
மிஞ்சும் பூசனி கொத்தமல்லி
மிகுந்த கத்தாளஞ் சார்சுக்கு
விஞ்சு பற்படக மிவைதாமும்
விளங்கச் சமனாய் தான் காய்ச்சி
அஞ்சா தோருண்டை தானிடவே
ஆகுஞ் சுராங்கிடம் மதுசாதி

இஞ்சிச்சாறு, ஆடாதோடை இலைச்சாறு, பூசனிச்சாறு, கொத்தமல்லிச்சாறு, கற்றாழைச்சாறு, சுக்கு பற்படாகம் இவற்றைச் சமஅளவெடுத்துக் காய்ச்சி மேற்சொன்ன குளிகையை இவ் வேளைக்கு ஒவ்வொன்று வழங்கிட சுரங்கள் எல்லாம் நீங்கும்.

344. சாதி லிங்கம் பெருங்காயந்
தாளே நாவி வெங்காரம்
யேத மிளகு தான்சமனாய்
யெண்ணும் வாள முக்களஞ்சி
போதக் கற்றாழைச் சாற்றிலவுண்டை
பொருந்த மிளகு பிரமாணம்
மாதே யிஞ்சி யிலையன்றி
வருந்தக் கருப்புக் கட்டியுண்ணு

சாதி லிங்கம்,பெருங்காயம்,நாவி, வெங்காரம், மிளகு இவற்றைச் சம அளவாக எடுத்துக் கொண்டு நேர்வாளம்15ம் சேர்த்து கற்றாழம் சாற்றில் அரைத்து மிளகளவு உருண்டை செய்து நிழலில் உலர்த்தியெடுத்து இஞ்சிச்சாறு அல்லது கருப்பட்டி(பனைவெல்லம்) சேர்த்து சாப்பிடவும்.

345. உண்ணுஞ் சுரங்கள் தான் தீரும்
மோடு மதிசார மொளிந்திடும்
பண்ணுஞ் சீத சுரமாறும்
பாதா பசுரங்கள் பயந்தோடும்
எண்ணும் வாத சுரமேகு
மேக பித்தசுரந்தீரும்
திண்ண மிதவே யனுப்பானந்
செய்யக் குளிர்சுரந் தீர்ந்திடுமே

இவ்வாறு தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் சுரங்கள் அனைத்தும் குறையும்.அதிசாரம் நிற்கும். சீதசுரம் மாறும். பிறசுரங்கள் பயந்து ஓடும்.வாதசுரம் நீங்கும்.பித்தசுரம் தீரும்.இவ்வகை அனுபானங்-களைத் தொடர்ந்து பயன்படுத்தி வந்தால் குளிர்சுரமும் நீங்கும்.

346. தீந்திடுஞ் சாதிக்காய் குடைந்து
கிரந்த அபின் நிறையவிட்டுச்
சேர்த்தப் பின்னுங் காய்குடைந்து
சீரகம்நிறையத் தான்முக்கி
போந்த வாழைத் தண்டரிந்து
பொருந்த நாரால்த் தான் சுத்தி
வாந்தமாகப் புடங்களிட்டு
மருந்தவம் வாழைத் தண்டுதான்

சாதிக்காயைக் குடைந்து அதனுள் அபினை வைத்து மேலும் சாதிக்காயைக் குடைந்து சீரகத்தை முழுமையாக அதில் அடைத்து வாழைத்தண்டை அரிந்து அதன் நாரெடுத்து சாதிக்காயின்மேல் முழுமை-யாகச் சுத்தி புடமிட்டு எடுத்துக் கொள்ளவும்.

347. வாழைத் தண்டு மருந்தோடை
மகிழச் சுட்டுத் தானரைத்து
மீளச் சுண்டைக் காயளவு
மிகுந்த கஷாயச் சிறுக்கீரை
தான்வேர் பூலா வேரிலையுந்
தகுந்த கஷாயத் தோருண்டை
ஊரு மேக்குஞ் சுரங்களெல்லா
மதிர்ந் திட்டோடு மதுகேளே

பற்பமானதை வாழைத் தண்டுடன் சேர்த்து அரைத்து சுண்டைக் காயளவு உருண்டைகள் செய்து கொள்ளவும். நிழலில் உலர்த்தி எடுத்த இந்த உருண்டையை சிறுக்கீரைவேர், பூலாவேர், இலை இவற்றைச் சேர்த்-திடித்து தகுந்த முறைப்படி கஷாயஞ் செய்து அதில் இவ்வுருண்டையை வழங்கிவர பலவகையான சுரங்கள் நீங்கும்.

348. கெந்த மிரத மதிவிடையங்

கீளர்ந்த கடுக்காய் முத்தமுடன்

குத்து கற்கடக சிங்கியுடன்

கூறு சவுக்கார மிலவம்பிசின்

முந்தும் வசம்பு சமனாக

முனிந்த கஞ்சா விலைச்சாற்றால்

அந்தம் பெறவே தானரைத்து

அப்பால்க் கருசாலஞ் சாறொருநாள்

கெந்தம், இரசம், அதிவிடையம், கடுக்காய், முத்தக்காசு, கற்கடகசிங்கி, சவுக்காரம், இலவம்பிசின், வசம்பு இவற்றைச் சமஅளவாக நிறுத்தெடுத்துக் கஞ்சா இலைச்சாற்றால் அரைத்து நன்றாக நேக அரைத்தபின் கருசலாங்கண்ணிச் சாற்றால் ஒருநாள் அரைத்துக்கொள்ளவும்.

349. ஒருநா ளரைக்கு மிலுமிச்சம்

உகந்த சாற்றி லோர்நாளாம்

வருமே தேத்தாங் விரைபோல

மகிழ வுலர்த்தி யனுபானம்

மருவும் வாழ்வு தேனிலிட

மருகு பித் தெருமைத்தயிர்

தருமே சேஉக்ந் தேனிலிட

தங்கு திப்பிலி மேற்பொடியே

பின்னர் ஒரு நாள் எலுமிச்சம்பழச்சாற்றால் அரைத்துக்கொள்ளவும் தேத்தாங்விதைபோல் உருண்டைள் செய்து நிழலில் உலர்த்திக்கொள்ளவும். பிள்ளை வாயுக்களுக்குத் தேனிலும், பித்தத்திற்கு எருமை தயிரிலும் திப்பிலி மேற்பொடி தூவி வழங்க வேண்டும்.

350. சுராங்கிசம்

பொடியா மிந்த திரிகடுகு
    பூகமும் விடையம் நாவியவில்
விடியுந் கல்மதஞ் சீரகமும்
    மேவு மோதகம் வெங்காரம்
அடியாங் கெந்தகம் மத்தனிவிரை
    அலங்கு லிங்க மாங்கொட்டை
படியாம்பூளியம் விரைத்தோலும்
    பகருஞ் சுகை நீராமே

இந்தப்பூ, திரிகடுகு, அதிவிடையம், நாபி, கல்மதம், சீரகம், கடுக்காய், வெங்காரம், கெந்தகம், ஊமத்தன்விதை, லிங்கம், மாங்கொட்டை, பூவிதைத்தோல், சுகைநீறு இவற்றைச் சேகரித்துக் கொள்ளவும்.

351. கிராணிக்கு கருஞ் சாதிக்காய்

நீராஞ் சந்தனஞ் சாதிக்காய்
    நேய வசம்பு கிராம்புடனே
பேராங் காஞ்சோரி வசுவாசி
    பின்னும் னொச்சி யிஞ்சிகஞ்சா
நேராய்ச் சித்திரக் குளிறியுண்டை
    நேர்ந்த சக்கரைத் தயிர்தேனில்
கூரா யருந்தக் கிராணிகடுங்
    கிட்டும் விசுளி குடிபோமே

சந்தனம், சாதிக்காய், வசம்பு, கிராம்பு, காஞ்சோரி, வசுவாசி, நொச்சி, இஞ்சி, கஞ்சா, இவற்றையெல்லாம் சம அளவெடுத்து இடித்து குளிறியளவாக உருண்டை செய்து சர்க்கரை, தயிர் அல்லது தேனில் அருந்திட் கிராணி, குட்டம், விசுளி இவை நீங்கும்.

352. போகுங் குரும்பை பாண்டுடனே
புகழும் பானை யப்படியே
ஆடுஞ் சுந்த மந்திடையே
ஆறு களஞ்சி சுக்காகும்
வாரு முத்த மந்தயிடை
வளர்கா ர்ய மாறாகும்
பாகு மாவரை பன்னீராம்
பாளைச் சாற்றில் கிராணக்கிடே

குரும்பை, பாண்டு ஆகியனவுந் இதனால் நீங்கும் என்பதாம். சுந்தம் 25கி, சுக்கு 30கி, முத்தக்காசு 30கி, கார்யம் 30கி இவற்றைச் சேர்த்தும் பன்னீரால்அரைத்தும் பசுகம்பாளைச் சாற்றில் வழங்கிட கிராணி நோய்கள் நீங்கும்.

353. யிடுநீ நிரதம் நாவிகெந்தம்
யிகவிற கருவாய்த் தோல்வசம்பு
திடமாய் யிவைதா னோர்களஞ்சி
தீத்த மிளகு யிருகளஞ்சி
அடவா மாதுளைப்பழச் சாற்றரைத்து
ஆகு முகுந்து பிரமாணம்
படுபாவி நோய்க ளனைத்தக்கும்
பறக்க அடிக்கு மிதுவடவாம்

இரசம், நாபி, கெந்தகம், கடுக்காய்த்தோல், வசம்பு, இவை வகைக்கு 5கி மிளகு 10கி இவற்றை மாதளம்பழச் சாற்றால் அரைத்து அதனை உகுந்தளவு உருண்டைகள் செய்து சாப்பிட்டு வர பலவகை நோய்களும் நீங்கும் என்பதாம்.

..பக்கம் 181

354. அடவாம் வாத சுரத்துக்கு
ஆகும் நொச்சிச் சாற்றாலிட
அடவாம் பித்தங் கொத்தமல்லி
ஆன சன்னி சுரத்துக்கு
அடவாந் திரிகடுகு மிந்தப்பு
அந்தப் பொடியில் வைத்தன்ன
அடவாங் கண்ணு நோவுக்கு
ஆகு மெருக்கிலம் பழச்சாறே

விசுளி நோய்க்கு மிளகுச் சூரணத்திலும், வயிற்று நோய்க்கு வெள்ளைப் பூண்டுத் தைலத்திலும், சீத சுரத்திற்கு சுக்கு, இஞ்சி, தேனிலும் இம்மாத்திரையை உரைத்துக் கொடுக்கலாம்.

355. சாறாம் நீல காசமுடன்
சாத்தி மாவில் நீராகும்
தீரா வெரிப்புக் காமாலை
தீர்க்க ஆவின் பாலாகும்
பாரா யுதிர வியாதியும்போம்
பாலாஞ் சீனிச் சந்தனமாம்
சேரா வாத வாய்வுடன்
தீரு மாமணக் கெண்ணையிடே

நீலகாச நோய்க்கு பசு கோமியத்திலும், எரிப்புக் காமாலைக்கு பசும்பாலிலும் வேறுபிற நோய்களுக்கு சீனிச் சர்க்கரை, சந்தனம், வாத வாயு நோய்களுக்கு ஆமணக்கிலைச் சாற்றிலும் வழங்கலாம்.

356. ராமபாணம்.

இருவாய் நசியந் தலைவலிக்கு
    யேகு மகத்திச் சாற்பகரு
தொடுமே திரிபலை திரிகடுத்
    தூளாஞ் சேத்தமந் தாழ்வாங்க
வ்ராம் மூலஞ் கெந்தகத்தை
    விளங்கக் களஞ்சிய் பொடியதனில்
கொடுந் கிராணி தாழ்ந்தீர
    கொள்ளாய் வாழைப் பழந்தனிலே

தலைவலிக்கு நசியமிட்டு அகத்தியிலைச் சாற்றைக் குடிக்கவும். திரிபலை திரிகடுகு தூள் சேர்த்து வழங்க சேத்தும நோய்கள் நீங்கும். மூல நோய் தீர்வதற்கு 5 கிராம் கெந்தகப்பொடியைச் சேர்த்துக் கொள்ளலாம். கிராணிநோய்கள் தீர்வதற்கு வாழைப்பழத்தில் வழங்கலாம்.

357. அதின மான விசுளிக்கு
    ஆகு மிளகு சூரணமாம்
விதன மான வயிற்றல்நோய்
    விளங்கும் வெள்ளுள்ளித் தயிலமதில்
தனமாஞ் சீத சுரத்துக்கு
    சுக்கு மிஞ்சி தேனாகும்
பதனமான மாத்திரையாம்
    பறக்கும் ராம பாணமிதே

விசுளி நோய்க்கு மிளகுச் சூரணத்திலும், வயிற்று நோய்க்கு வெள்ளைப் பூண்டுத் தைலத்திலும், சீத சுரத்திற்கு சுக்கு, இஞ்சி, தேனிலும் இம்மாத்திரையை உரைத்துக் கொடுக்கலாம்.

358. இதமா யிரத மட்டியுடன்

ஏகுங் கெந்தி திரிகடுகு

பதன-மான திரிபலை வெங்காரம்

பருகுந் அருக அத்தமுடன்

நிதமாந் தார மோதகமும்

நிகண்டு சமனாய்ப் பழச்சாற்றில்

மிதமா யோர்நாள் தானரைத்து

விளங்கும் குழிக்கல் தன்னிலையே

இரசம், கெந்தி, திரிகடுகு, திரிபலை, வெங்காரம், அருக, அத்தம், அரிதாரம், கடுக்காய், இவற்றைச் சமஅளவெடுத்து எலுமிச்சம்-பழச்சாற்றில் முழுமையாக ஓர்நாள் அரைத்து எடுத்துக் கொள்ளவும்.

359. வைத்த மருந்து தன்னோடே

வழங்குந்த தாம்பூர பத்பமிதே

அத்தோ டிதையுஞ் சரிகொண்டு

வேதேசிப் பழச்சாற்றில்

மத்த நாளுந் தானரைத்து

மருவு மூன்று நாள்வெயிலில்

உத்த புடத்தில் தான்வைத்து

உகந்தகடலை அளவிந்தி

இம்மருந்தின் அளவிற்குச் சமமாக தாமிர பற்பத்தை எடுத்துக் கொண்டு இன்னும் ஒரு நாள் எலுமிச்சம்பழச் சாற்றால் அரைத்து மூன்று நாள் வெயிலில் வைத்து புடமிட்டு கடலை அளவு எடுத்துக் கொள்ளவும்.

360. மிஞ்சிச் சாறிறில் தாளிடவே
யியந்கு வியாதி கூறக்கேள்
வஞ்ச குன்மங் காஞ்சசலுடன்
மருவும் பித்தஞ் சயகாசம்
மிஞ்சப் பாண்டு காமாலை
மிகுத்த கிராணி பஞ்சகுன்மம்
அஞ்சி யோடு மிகுவெல்லா
மலைதீரும் வியாதி பலவாழ்வு

கடலை அளவுள்ளதை இஞ்சிச்சாறிறில் உண்டு வர குன்மங்கள் சுரம்,பித்தம்,சயகாசம், பாண்டு காமாலை, கிராணி, பஞ்சகுன்மம் பலவகையான வாயுக்கள் குணமாகும்.

361.வாழ்வு பத்தும் பலனோவு
மருவும் வாதம் யெண்பதுடன்
ஆயுங் குழலாய் தீர்ந்திடுங்காண்
ஆக பத்தியங் காத்திகேள்
நேய பித்த மதனுக்கு
நெய்பால் பிலாவின் பிஞ்சுடனே
காயமெனும் பூசனிக்காய்
கருத மென்று பிவைகூட்டே

பத்துவகையான வாயுக்கள், வேறு பல நோய்கள் வாதம் வகை எண்பது. ஆகியவைவும் இக்குளிகையைத் தொடர்ந்து உண்டுவந்தால் குணமடையும்.இதற்கும் பத்தியம் காக்கவேண்டும்.பித்த நோய்களுக்கு நெய், பால், பலாப்பிஞ்சு, பூசனிக்காய் இவற்றைச் சேர்த்துக் கொள்ளலாம்.

362.கட்டே உப்பும் புளிபத்தன்
சூலாவு பித்தத்துக் காகாது
வாட்ட மில்லா தசைரோகம்
மருவு கைப்பு விடத்தீருந்
தீட்டும் பசுவின் நெய்களஞ்சி
திடமாம் முருங்கைப் புடலங்காய்
ஆட்டு வத்தல் தானாகு
மானாழ்ப் பீக்கங் காயாகும்

பித்தாதிக்க உடம்பினர்க்கு உப்பு, புளி, நீக்கிச் சாப்பிடவும். தசை தொடர்பான நோய்களுக்கு கைப்புச்சுவை கட்டுவதைத் தவிர்க்கவும். பசுநெய் சிறிய, முருங்கை, புடலங்காய் ஆட்டுக்கறி வத்தல் பீர்க்கங்காய் இவற்றைச் சேர்த்துக் கொள்ளவும்.

363. காயாம் பகரும் வாழைக்காய்
காடை யுடனே மாவிறைச்சி
ஓயா துலர்த்தி உண்டுவிடு
உகந்த பிரண்டைச் சிறுபயறு
தாயா முள்ளங்கி பசுவின்பால்
தாக்குங் கருணை தானாகும்
பாயுஞ் சம்பா அரிசியுண்ண
பறக்கும் வியாதி பதினெட்டே

காய்களில் வாழைக்காயும், உலர்த்திய காடைக்கறி, மான்கறியும் உணவில் சேர்த்துக் கொள்ளவும். பிரண்டை, சிறுபயறு, முள்ளங்கி, பசுவின்பால், காராக் கருணைக்கிழங்கு (பிடி கருணை) இவற்றைச் சேர்த்துக் கொள்ளலாம். சம்பா அரிசியைச் சமைத்துண்-பதால் பல நோய்களைத் (இம்மருந்துண்டபின்) போக்கலாம்.

குளிகை

364. விட்டே சாதிக்காய் லிங்கம்
விளங்கு கிராம்புச் சுக்குடனே
காட்டு நாவி பொன்மத்தை
கட்டுவிரையுந் திப்பிலியும்
தீட்ட முத்தக் காசுடனே
சேர வொன்றிறை தான்கொண்டு
கொட்டுநீ தேசி யிஞ்சிச்சார்
அலங்கு மத்தை யிலைச்சாரே

சாதிக்காய், லிங்கம், கிராம்பு, சுக்கு, நாபி, பொன்ன மத்தை, திப்பிலி, முத்தக்காசு இவற்றைச் சமஅளவாக நிறுத்துக் கொண்டு எலுமிச்சம்பழச்சாறு, இஞ்சிச்சாறு, ஊமத்தை இலைச்சாறு இவற்றில் அரைத்துக் கொள்ளவும்.

365. இச்சா ரொன்று மும்மூன்று
இயன்ற நாளுந் தானரைத்து
வச்ச குன்றிப் பிரமாணம்
மருவு மிஞ்சிச் சாற்றிலிட
இயங்கும் வியாதி யறுஞ்சுரமே

சாதிக்காய், லிங்கம், கிராம்பு, சுக்கு, நாபி, பொன்ன மத்தை, திப்பிலி, முத்தக்காசு, இவற்றைச் சமஅளவாக நிறுத்துக் கொண்டு எலுமிச்சம்பழச்சாறு, இஞ்சிச்சாறு, ஊமத்தை இலைச்சாறு இவற்றில் அரைத்துக் கொள்ளவும்.

366. சுரமதி சாரஞ் சூலையுடன்

சுக்குல மாகு மிந்திரியும்

பிரவித் தூரிய கிராணிக்கு

பிலுப்பைப் பட்டை நாலுக்களஞ்சி

அரவஞ் குழலாய் சுக்கு ரெண்டு

அளகிரு நாளி நீருளக்காய்

பரவுங் கஷாயங் குளிகையிட

பாக்கும் கிராணி வகைநெல்லி

சுரம் அதிசாரம், சூலை, சுக்கிலமாகும். இந்திரியம், கிராணி இவை எல்லாம் மேற்கண்ட குளிகையால் நீங்கும். இலுப்பைப்பட்டை 20கி, சுக்கு 10கி, இரண்டையும் இடித்து 2.6லிட்டர் தண்ணீர் விட்டு குடிநீர் காய்ச்சி இக்குளிகையை வழங்கிட கிராணி நோய்கள் எல்லாம் நீங்கும்.

367. நெல்லி முள்ளிக் கசாயத்தில்

நிகமுந் தயிரு மதனாலும்

வல்ல அதிசார சுரத்துக்கு

மருவுங் குளிகை தானிடவே

நல்ல கஷாயம் நாம் சொன்னோம்

நயந்த வியாதிக் கனுப்பானம்

நெல்லாத் தீரும் வச்சிரமாம்

யேகு மானந்த வயிரவனே

நெல்லிமுள்ளிக் குடிநீரில் வழங்கினாலும், தயிரில் வழங்கினாலும், அதிசாரசுரம் நீங்கும். குளிகை உண்பதற்கான குடிநீரை நாம் சொன்னோம். வியாதிகளுக்கேற்ற அனுபானம் இது. இதனால் எல்லா நோய்களும் குணமாகும் என்பதாம். எல்லா நோய்களையும் நீக்கி உடலை வைரமாக்கும் வைரவன் தான் இக்குளிகை.

368.வயிர மான வெங்காரம்

வளரும் நாவி ரசமிளகு

கயிறாஞ் சுக்குத் திப்பிலியுங்

களத்த லோக செந்தூரம்

பயிறாம் மத்தை விதையுடன்

பாங்காம் ரெண்டு பங்குமிட்டு

ஒயிலாங் கெந்த மொருபங்கு

ஊமத்தஞ் சாற்றி லரைக்குன்றி

திடமான வெங்காரம்,நாவி, ரசம்,மிளகு, சுக்கு,திப்பிலி, இரும்பு செந்தூரம்,பயிறு, ஊமத்தன்விதை மட்டும் இரண்டு பங்கு, மற்றதெல்லாம் ஒரு பங்கிட்டு கெந்தகமும் ஒரு பங்கிட்டு ஊமத்தைச் சாற்றில் அரைத்துக் கொள்ளவும்.

369. குன்றி போலே யுண்டையதுத்

கொம்புத் தேனிற் கயன மிட

நன்றாஞ் சுவாச காசமுடன்

நயன்ற மந்தார சேட்டுமமும்

யென்றே வலியபயித்தியமும்

மியன்ற வரமது வெல்லாஞ்

சென்றதி சாரக் கிராணியுடன்

தீர்க்குங் குளிகை நவக்கிரகம்

இவற்றைச் சேர்த்த குன்றிமணி அளவாக உருண்டைகள் செய்த கொம்புத்தேனில் சாப்பிட்டு வர சுவாசகாசம்,மந்தார காசம், சேட்டுமம் வலிமையான பித்தம், அதிசாரக் கிராணி ஆகிய நோய்கள் குணமடையும்.

370. கிரக தாம்பூர மெட்டுடனே

கெந்தி ரெண்டு சரமொன்று

தரக மனோசிலை முன்றாகும்

சொல்லரி தாரம் நாலாகும்

விரகம் நாவி ரெண்டுடனே

மேவி யதனை நிறைகொண்டு

உரகங் கையான் சாறாகும்

ஓங்கும் நொச்சிச் சாறதனால்

நவலோகங்களில் ஒன்றான தாமிரம் எட்டு பங்கு, கெந்தி இரண்டு பங்கு இரசம் 1 பங்கு, மனோசிலை மூன்று பங்கு, அரிதாரம் நான்கு பங்கு, நாவி இரண்டு பங்கு என சரியாக நிறுத்திக் கொண்டு கையான்தகரைச் சாற்றாலும் நொச்சிச் சாற்றாலும் அரைத்துக்கொள்ள வேண்டும்.

371. நாலு நாளாய்த் தனரைக்க

நன்றாய்க் குன்றிப் பிரமாணம்

மேலாந் திரிகடுகுப் பொடியுடனே

விளங்குந் தேனில்த் தானிடவே

பாலா மகோதரம் பஞ்சசயம்

பருத்த கவிசை பஞ்சகுன்ம

மாலாம் பாதம் பொத்திவினை

மாருஞ் சுரந்தான் ராச்சதகுளிகை

இவ்வாறு நான்குநாட்கள் தொடர்ந்து அரைத்து அக்கலவையை குன்றியளவு உருண்டைகளாக உருட்டிக் கொள்ளவும். இதனுடன் திரிகடுகுத் தூள் சேர்த்து, தேனில் குழப்பிச் சாப்பிட்டுவர மகோதரம், பஞ்சசயம், கவிசைநாற்றம், பஞ்சவகை குன்மங்கள் இவை நீங்கும்.

திருமாலுக்குப் பூஜை செய்து வணங்கி இம்மருந்தளிப்பது நல்லது.

372. ராக்ஷத குளிகை

குளிகை யிரதங் கெந்தகமாங்
கட்டி யிருவி வெங்காரம்
அளவாம் நாவி அரிதார
மால திரிபலை திரிகடுகு
புகழ்ந்த சுத்தம் பெருங்காயம்
போத்தம் விடையஞ் சாதிக்காய்
தளமாங் கிராம்பு யெட்டிவிரை
தாக்குங் காரம் நவச்சாரம்

இனிவரும் பாடலில் சுரம் நீங்குவதற்கான ராட்சத குளிகை சொல்வேன். இரசம், கெந்தகம், இருவி, வெங்காரம், நாவி, அரிதாரம், திரிபலை, திரிகடுகு, சுத்தம், பெருங்காயம், விடையம், சாதிக்காய், கிராம்பு, எட்டிவிதை, காரம், நவச்சாரம் இவற்றைச் சேகரித்துக் கொள்ளவும்.

373. சாரந் தருசு பவளமுடன்
சமனா மிதனைச் சரிகொண்டுச்
சேர யிடித்துத் தூளாக்கி
அலங்கச் சீலை வடிகொண்டு
தீர கத்தாளஞ் சாற்றொருநாள்
திகைக்க கையான் நாள்பத்து
மீரப் பழுத்த மிளகளவாய்
மேனி யதனை நிழலுலர்த்தே

சாரம், தருசு, பவளம் இவற்றை எல்லாம் சமஅளவாக நிறுத்துக் கொண்டு ஒன்றாக இடித்துத் தூளாக்கி துணியில் வடித்துக்கொண்டு கற்றாழம் சாற்றில் ஒரு நாளும், கையான் தகரைச் சாற்றால் பத்து நாளும் அரைத்து மிளகளவு உருண்டைகள் செய்து நிழலில் உலர்த்திக் கொள்ளவும்.

374. உலர்த்துங் குளிகை ஓமப்பொடி
உடனாஞ் சீத கழிச்சலுக்கு
குலத்த நாவி பொசித்தாக்கால்
கொடியே ஆமணக் கெண்ணெதனில்
நிலத்தச் சர்பம் வேப்பெண்ணை
நின்ற வாய்வுக் கிஞ்சிரசம்
பிலத்தச் சொரியுஞ் சிரங்குக்கு
பின்னும் பசுவின் நெய்யேழே

இக்குளிகையை ஓமப்பொடியில் சாப்பிட சீதக்கழிச்சலும், நாவி உண்டவர்க்கு விளக்கெண்ணெயிலும், மண்ணுளி பாம்பு தீண்டியவர்க்கு வேப்பெண்ணெயிலும் சொறிசிரங்கிற்கு பசுவின் நெய்யிலும் தொடர்ந்து ஏழு நாட்கள் உட்கொள்ளவும்.

375. யேழுநாள்க் கொள்ச் சொரிபரங்கி
யீளை கய்யாநந்த கரைச்சாறு
வாழும் பிரமிய மெட்டுக்கும்
வளருங் குருஞ்சா விலைச்சாற்றில்த்
தாழும் பித்தஞ் சீனிதனில்
தாக்கப் போகு மதவெல்லா
மீளும் மேக மணைத்திற்க்கும்
வெண்ணை ஆவின் பால்த்தயிரே

இவ்வாறு இக்குளிகையை ஏழுநாட்கள் பசுநெய்யில் உட்கொள்ள சொரி, பரங்கிப்புண், ஈளை, இவை நீங்கும். கையாந்தகரைச் சாற்றில் வழங்க பிரமியம் எட்டும், குறிஞ்சா இலைச்சாற்றில் வழங்க பித்தமும், சர்க்கரையில் உட்கொள்ள மதுமேகமும், மேகம் அனைத்திற்கும் ஆவின் வெண்ணை, பால், தயிர் இவற்றைச் சேர்த்து உட்கொள்ளவும்.

376. தயிர்மோ ராகும் பசுவின்மோர்
        தான்காய் பித்தம் வெல்லமுடன்
அயிரா மேழு நாள்கொள்ள
        ஆகாதிருமல் கீழ்நெல்லி
முயிறாம் சீரணம் பெருங்காய
        முத்தம் வசுவாசி வசம்புடனே
தயிராம் பாண்டு காக்கணம்வேர்
        தலக்கக் குடிக்கச் சுகமாமே

ஆவின்மோரைச் சேர்த்துக் கொள்ளலாம்.பித்தநோய் நீங்க வெல்லத்துடன் வழங்கலாம்.கீழாநெல்லியுடன் சேர்த்து 7 நாட்கள் சாப்பிட்டுவர இருமல் நீங்கும். பெருங்காயத்தில் சாப்பிட சீரணம் சீராகும்.வசுவாசி வசம்பு சேர்த்தும் சாப்பிடலாம்.பாண்டு, காக்கணம்வேர் அரைத்துச் சேர்த்துக் கொள்ள நன்றாகும்.

377. சுகமா முத்திரக் கிரிச்சிக்கு
        தவிங்கு கோமயந் தனிலருந்த
தகமா மருந்து அரையாண்டு
        சயமுங் குன்மமந் தான்தீரும்
அகமாம் பித்தந் தானகழ்ய
        ஆமணக் கென்னை பதிலத்தீரும்
பகமா மந்த அக்கினிக்கு
        பகருங் கடுக்காய் யிளநீரே

முத்திரக் கிரிச்சரத்திற்கு மாட்டு கோமயத்திலும், கோமியத்தில் 6 மாதகாலம் அருந்த சயமும்,குன்மமும் தீரும்.பித்தம் நீங்க ஆமணக்கு எண்ணையில் வழங்கவும்.மந்தாக்கினிக்கு கடுக்காய் தூளிலும், இளநீரிலும் வழங்கலாம்.

378. நீராஞ் சருவ விடமும்போக
நிச்சய மாவின் நெய்யாகும்
பாரய கண்டச் சொறிசிறங்கு
பசுவு மாவின் பாலாகுந்
தீராய்ப் பித்தங் கற்பூரஞ்
சேருஞ் சுவாச காசமிது
கூறாய்த் திப்பிலிப் பொடியாகுங்
கொள்கு முஷ்ட்டனஞ் செண்பகச்சாறு

அனைத்து வகையான விடமும் நீங்குவதற்கு ஆவின் நெய்யாகும். சொறி, சிரங்குகளுக்கு பசும்பாலாகும். பித்தத்திற்கு கற்பூரம் தனை மருந்தாகும். சுவாச காசத்திற்கு திப்பிலிப் பொடியாகும். உஷ்ணத்திற்கு செண்பகச் சாற்றையும் வழங்கலாம்.

379. சார்ந்த வகுரி வருகிறமுனி
தாக்குங் குளிகை தேனிவிட
வாந்தம் பலப்பல வியாதிகளுக்கு
வையே வெத்திலைச் சாறதனில்
போந்த தலையின் வலிதனக்கு
புத்ட்டு மனத்தக் காளிச்சாறு
சேர்ந்த சூலை தாள்போக
தேடு மாவின் நெய்யாமே

இக்குளிகையைத் தேனில் குழைத்துச் சாப்பிட வைகுரி நோய் நீங்கும். மேலும் பல நோய்களுக்கும் வெற்றிலைச் சாற்றில் வழங்கலாம். தலைவலிக்கு மணத்தக்காளி சாற்றில் வழங்கலாம். சூலை நோய்கள் நீங்க ஆவின் நெய்யில் வழங்கவும்.

380. ஆமே குன்ம மிந்துப்பு

ஆக வாய்வு வாதசன்னி

போமே மத்த விலைச்சாறு

பொல்லா விடங்கள்போம் நமந்தாளி

தாமே பிரமிய மாவின்பால்

தாக்குங் கன்னோ யதுவாகும்

காமே மூல வியாதிபோங்

கருணை பிரண்டைப் பொடியிடவே

ஊமத்தினிலைச் சாற்றில் வழங்க வாத சன்னி நீங்கும். குன்மம் இந்துப்பிலும், நமந்தாளி இலைச்சாற்றில் வழங்கிட பலவகை விடங்கள் நீங்கும். பிரமியத்திற்கு ஆவின்பாலிலும், கன்னோய்க்கு ஆவின்பாலிலும் மூலநோய்க்கு கருணைக் கிழங்கு பொடி, பிரண்டை பொடியில் வழங்கிடவும் நீங்கும்.

381. இடவே கக்கலுமந் தாக்கினிபோ

மேகுஞ் சாற்றில்த் தாளிடவே

தொடுவே வாய்வு முசலிலையுந்

துலங்கும் வாய்வு பலமனைத்தும்

விடுமே நொச்சிச் சாற்றிலிட

விளங்கு மந்திர வாய்வதுவாம்

கடுகு தீபன அசமோதந்

கழற மூலாக்கினி வாய்நாற்றம்

கக்கல் எனப்படும் வாந்திக்கு மந்தாக்கினி சதாற்றிலிடலாம். வாயுக்கள் நீங்குவதற்கு முசலிலையிலும் வாயு நொச்சிச் சாற்றில் வழங்கவும் நீங்கும். மந்திரவாயும், பசியின்மையும் இக்குளிகையை அசமோதகத்தில் வழங்க நீங்கும். மூலாக்கினி வாய் நாற்றத்தைப் போக்கும்.

382. நாத்த மீரு மிளைபோம்
நன்றாய்த் சாத்திர பேதிதனில்
சுத்த மதிர்ந்தால் சாயத்தால்
சொல்லுஞ் சன்னி பசுவின்நெய்
யேத்தமான வாயூக்கு
ஏகுஞ் சயத்தின் வாய்வூக்கு
நீத்த சிறுக்கீரைச் சாறருந்த
நிகழு மனுபானம் நீகேளே

ஈளை நோயானது சாத்திரபேதி சாற்றிலும் சுத்தமதிர்ந்தால் சாற்றால் சன்னிநோயும், பசுவின் நெய்யில் வழங்க பலவகை வாயுக்களும், சயவாய்விற்கு சிறுகீரைச் சாற்றிலும் வழங்கலாம்.

383. ஆள ஆவின் பால்நெய்யாம்
ஆகா புளிப்புகை கைப்புவிடு
போன காச சுவாசமுடன்
பொருந்தும் கரந்தைச் சாறாகும்
யேனும் பறங்கி கால்ப்பிடிப்பு
எருக்குத் தவாலைப் பெரும்பாடு
தானா மாவிலஞ் சானாக
சந்தனந் தீரும் தானாகும்

பசும்பால், நெய் இவை சேர்க்கப்படவேண்டியவை. புளிப்பும், புகையும் நீக்கப்படவேண்டியவை. சுவாச காசத்திற்கு கரந்தைச் சாற்றிலும் பரங்கிப் பூள், கால்பிடிப்பிற்கு எருக்கிலையில் தவாலை இடவும். பெரும்பாட்டு நீங்குவதற்கு சந்தனத்திலும் இக் குளிகையை வழங்கலாம்.

384. ஆகுஞ் சருவ வியாதிகளுக்கு
ஆன பசுவின் நெய்யதனில்
போகுங் கொத்த மல்லியுடன்
பொருந்த மாங்காய் கட்டியுண்ணு
வேகஞ் செண்பகம் பட்டைச்சாறு
விளங்கு மிரத்தம் பிரமியம்போம்
தாகம் பார்வை தான்குறைந்தால்
தாக்கு மெள்ளுத் தோல்போக்கி

சகல வியாதிகளுக்கும் பசு நெய்யில் வழங்கலாம்.கொத்தமல்லியும், மாங்காயும் சேர்த்துச் சாப்பிடலாம்.செண்பகம் பட்டைச் சாற்றில் வழங்க இரத்த பிரமியம் நீங்கும்.பார்வை குறைவிற்கு எள்ளுத்தோல் போக்கி வழங்கவும்.

385. போக்குங் காதிற் சீழ்வடிந்தால்
புகட்டுஞ் சிறுநீர் குளிகையுடன்
தாக்குங் கண்ணிற் படலமது
தாங்காக் கதலிச் சாறதனில்
யேற்கும் வைசூரி தான்வந்தால்
யேகுந் திரிபலைச் சாற்றிலிட
ஆக்குங் குளிகை அனைத்துநீக்கும்
அடவா மெருவர் குளிகையிதே

காதிற் சீழ்வடிந்தால் குளிகையைச் சிறுநீரில் இழைத்துக் கொடுக்கவும்.கண்ணில் உண்டாகும்படலத்திற்கு வாழைச்சாற்றிலும், வைசூரி உண்டானால் திரிபலைச் சாற்றிலும் இக்குளிகையை சாப்பிட்டு குணமடையலாம்.

386. இதவாம் லிங்கம் வெங்காரம்
பேசுந் கெந்தி நாவியுடன்
அதவே திரிபலை திரிகடுகு
ஆக பதின்களஞ் சடவாக
பொவாந் தாரம் பதின்களஞ்சி
பூகமும் வாளம் பதின்களஞ்சி
றெதவா மருந்து பன்னிரண்டும்
விளங்குங் களஞ்சி முப்பதவே

இலிங்கம், வெங்காரம், கெந்தி, நாபி, திரிபலை, திரிகடுகு இவை வகைக்கு 50கி, அரிதாரம் 75கி, நேர்வாளம் 755ஆக மொத்தம் 450கி எடுத்து(திரிபலை 3×50 = 150, திரிகடுகு 3×50 = 150, 75×75 = 450கிராம்) கொள்ளவும்.

387 உமுருக்கிலை கோடாகுடி மாத்திரை
முப்பது களஞ்சி யடவாக
முருக்கிலை பூரச விலைச்சாற்றால்
தப்பா தோர்நாள்ச் சாதத்தால்
தானே அஞ்சு நாளரைத்து
மிப்பாற் பூகமு மிளகளவாய்
மீறுங் குளிகை நிழலுலர்த்தி
ஒப்பாம் வியாதிக் கனுப்பான
முறைப்போ மிஞ்சிச் சாற்றிலிடே

மேற்சொன்ன சரக்குகள் 450கி முருக்கிலைச் சாற்றிலும், பூரசனிலைச் சாற்றிலும் 15 மணிநேரம் அரைத்து மிளகு அளவதாய் உருண்டைகள் செய்து நிழலிலுலர்த்தி எடுத்து நோய்களுக்கு இஞ்சிச் சாற்றில் வழங்கலாம்.

388.இஞ்சிச் சாற்றில்ச் சீதசுரம்

மிகன்ற தாப சுரம்பசும்பால்

மிஞ்சும் வெள்ளுள்ளித் தைலத்தில்

மேவும் பழஞ்சுர மசவாகும்

வஞ்சத் சத்துக் காய்ச்சலுக்கு

மகிழுஞ் சுக்கு விடையம்நீர்

அஞ்சவிஷ பாக சுரத்துக்கு

ஆகும் முலைப்பால் சர்க்கரையே

சர்க்கரையும் பசும்பாலும் சேர்த்து காமாலை நோய்க்கு வழங்கலாம்.பாம்புகடித்தால் எலுமிச்சம் பழச்சாற்றில் குளிகையை இழைத்து கலக்கமிடவேண்டும்.திரிபுரச் சாற்றில் அரைத்து வாயிலிடுக் சுவைக்க தேள்கடி விஷம் நீங்கும். மாம்பட்டைச்சாற்றில் வழங்கிட கிராணி நோய்கள் நீங்கும்.

389.சக்கரை பசும்பால்க் காமாலை

தானே பாம்பு கடித்தாக்கால்

மிக்க தேசிப் பழச்சாற்றில்

விரைய உரைத்துக் கலிக்கமிடு

தக்க திரிபுரச் சாற்றரைத்து

தானே தேள்க்கொட்டு வாயிலிடு

ஒக்கும் மாம்பட்டைச் சாற்றிலிட

ஓடுஞ் கிராணி யதற்குள்ளே

இக்குளிகையை இஞ்சிச்சாற்றில் சாப்பிட்டுவர சீதசுரம் நீங்கும். தாபசுரங்கள் பசும்பாலில் நீங்கும். பூண்டுத்தயிலத்தில் வழங்க பழஞ்சுரங்கள் நீங்கும்.பலமான காய்ச்சலுக்கு சுக்கு, அதிவிடையம் கலந்த நீரில் வழங்கலாம்.விஷபாக சுரங்களுக்கு தாய்ப்பாலும் சர்க்கரை சேர்த்து இக்குளிகையை வழங்கலாம்.

390. கொள்ளுத் தண்ணி தனிலிடவே
சுசா தோடும் வாதமெல்லாம்
மெல்லப் பத்தியம் பால்ச்சோறு
மிளகு நீருந் தானாகும்
உள்ள வாதக் காய்ச்சலுக்கு
உகந்த கஞ்சி தானாகும்
கொள்ளும் கிராணி தயிருடனே
கொண்டே சோம வெள்ளிராம்

இக்குளிகையைக் கொள்ளுத் தண்ணீரில் வழங்கிட வாதநோய்கள் யாவும் நீங்கும். இதற்கு பத்தியம் பால்சோறு சாப்பிடவும். மிளகுத் தண்ணீர் அருந்தலாம். வாதக்காய்ச்சல் உள்ளோர் சூடான கஞ்சி அருந்தலாம். கிராணி நோயுள்ளோர் தயிர் சேர்த்துச் சாப்பிடலாம். சோமவெள்ளிற் பருகலாம்.

391. வெள்ளிற் நீக்கிச் சாதிக்காய்
விளங்க நயக்கித் தாள்வெதுப்பி
தின்னிற் பொடியைத் தேன்கலந்து
தியக்கும் வயத்தில் னோயறமே
பின்னிற் வெள்ளைக் கழிச்சலுக்கு
பெருத்த கழச்சிப் பொடியுனே
மன்னிற் வெண்ணை தான்கலந்து
மதித்துத் தின்ன மாறிடுமே

இக்குளிகையை மஞ்சள் சாற்றில் கொடுத்தால் மூத்திர கிரிச்சரம் நீங்கும். அல்லது வெண்காரத்தைப் பொரித்துக் குளிகையுடன் சேர்த்துச் சாப்பிடலாம். காட்டுத்துளசிச் சாற்றில் குளிகையை உரைத்துக் கொடுக்க இருமல் நீங்கும். இக்குளிகையுடன் ஊமத்தஞ்சாறு சேர்த்து நசியமிட பித்தம் நீங்கும்.

392. மாமஞ் கருத்தச் சீரகத்தை
வாகாய்க் கஷாயந் தேனிட்டி
கறாந் ரத்தக் கிராணிக்குக்
குடுக்கத் தீரு மசிவலீலாவ்
ஏறந் தாப சுரத்துக்கு
யிடுகீறா நெல்லிச் சாறதனில்
மாமம் நாலபே முறைக்காய்ச்சல்
வையே காரைச் சாறாகும்

கருஞ்சீரகக் கஷாயத்தைத் தேன் சேர்த்துப் பருக இரத்தக் கிராணி தீரும். தாபசுரம் கீழாநெல்லிச் சாற்றில் வழங்கினால் நாலாம் முறைக்காய்ச்சல் நீங்கும் என்பதாம்.

393. சாறாஞ் காரைச் சாறதனில்
காக்க அசீரண தபம்போம்
பாராய் தயிர்வடி தண்ணீரில்
பருத்த வயற்றுக் கழிச்சல்போம்
தீரா செவ்வட்டை கடிதனக்கு
தேசிப் பழச்சாறு மேல்பூசு
நேராஞ் கற்றாளைச் சாறுதனிலே
நெகிழப் பூசி உள்முழுங்கு

காரைச் சாற்றில் சாப்பிட்டுவர அசீரண நோய்கள் நீங்கும். என்பதாம். தயிர்வடி தண்ணீரில் சாப்பிட்டு வர வயிறு பருத்தலால் உண்டாகும் கழிச்சல் நீங்கும். தீராத செவ்வட்டை கடிக்கு எலுமிச்சம்-பழச்சாற்றில் வழங்கிடலாம். கற்றாழைச் சாற்றில் இதனைப் பூசி உள்ளுக்குக் கொடுக்க மூத்திரக் கிரிச்சரம் நீங்கும்.

394.முழுங்கு மூத்திரக் கிறிச்சிமஞ்சள்

முளிந்த காற்றில் வெங்காரம்
பிளங்கம் பொரித்துக் குளிகையுடன்
பேணி யுண்ண அறுநீரும்
களங்க மான யிருமலரும்
காட்டு துளசி சாற்றிலிட
விளிங்கும் பித்த மதுதலைக்கு
மீறும் தத்தஞ் சாறுநசியம்

கற்றாழைச் சாற்றில் வெங்காரத்தைப் பொரித்து குளிகையுடன் சேர்த்துச் சாப்பிட்டு வர மூத்திரக் கிரிச்சரம் நீங்கும். காட்டுத்துளசிச் சாற்றில் சாப்பிட்டு வர இருமல் நீங்கும். ஊமத்தன் சாற்றில் நசியமிட பித்தம் தீரும்.

395. நசியந் பண்ண வெறிபித்தம்

நன்றாய் மத்தை யிலைச்சாத்தில்
யிசைய வெள்ளாட்டுப் பால்தனிலே
யிட்டுமோர் குளிகை தலைதனக்கு
அசையா வெள்ளாட்டுப் பாலரைத்து
அதுவுந் தலையில்த் தப்பிடவே
நிசமாம் பிரமிக் கஷாயத்தில்
நிச்சயம் பித்தந் தீர்ந்திடுமே

ஊமத்தை இலைச்சாற்றில் நசிய் பண்ண வெறிபித்தம் நீங்கும். இதற்கு இலைச்சாற்றையும் பயன்படுத்தலாம். வெள்ளாட்டுப் பாலில் ஒரு குளிகையை அரைத்துத்தலையில் அப்பி, பிரமிக் கஷாயத்தில் குளிகையைச் சாப்பிட்டு வர பித்தம் நீங்கும்.

396. தீர்ந்திடு வேப்பிலைச் சாற்றதினால்த்
தெளியுங் குட்ட மனைத்துநீற் கும்
மாழ்ந்திடு மெருக்கம் பாலதனை
ஆன ச்லை தனிவாட்டி
வாய்ந்த குளிகை தனையுரைத்து
மடித்துத் திரியுந் தானுருட்டி
போந்த நெருப்பில்த் தான்கொளுத்தி
புகையை நாசி தனிலேத்த

இக்குளிகையை வேப்பிலைச் சாற்றில் சாப்பிட்டு வர குட்டங்கள் அனைத்தும் நீங்கும். எருக்கம் பாலைச் ச்லையில் வாட்டி குளிகை உரைத்துமடித்துத் திரிபோலாக்கி நெருப்பில் பற்றவைத்து புகையை நாசிக்குள் ஏற்றவும்.

397. யேத்தியதோர் புகையதனை நாசிக் கேத்த
யெழுந்தோடுந் தலைநோவு யெங்கே யென்று
கோர்த்திடுமே கோவையிலைச் சாற்றினாலே
கூறபட அஞ்சனமாம் நோவு தீரும்
போத்தியதோர் மருந்திட்டுப் போக உன்னு
மாகமதாய் யின்னமொரு மருந்து கேளே

நன்றாகப் புகையினை நாசிக்கேற்றினால் தலைநோய் நீங்கும். கோவையிலைச் சாற்றில் வழங்கிட கண்நோய்கள் யாவும் தீரும். பிறர் நமக்கு வைத்த மருந்திடு நீங்குவதற்கு இன்னும் ஒரு மருந்தைச் சொல்வேன்.

398. கேளு திப்பிலி தேனுடனே
கிளரும் விக்கல் சரத்தியல
வாளுந் தேனு கொட்டாக்கால்
மதித்த யிஞ்சி தன்னிலிடு
தாளு மகோதரஞ் சிறுநீரில்
தாக்கு மணத்தக் காளிச்சாறு
ஆளும் பூராண் நட்டுவக்காலி
அதுவு மிஞ்சிச் சாறுநசியம்

திப்பிலி பொடியுடன் தேன்சேர்த்துச் சாப்பிட்டு வர விக்கல் தீரும். வாந்தி நிற்கும். தேள் கொட்டினால் இஞ்சியை மத்தித்து அதில் இந்த குளிகை சேர்த்துக் கொடுக்கலாம். மகோதர நோய்க்கு சிறுநீரில் வழங்கலாம். பூரான் நட்டுவாக்கிளி கடிகளுக்கு மணித்தக்காளிச் சாற்றில் சாப்பிட்டு இஞ்சிச்சாற்றை நசியம் பண்ணவும்.

399. நசிய மகோதர மணத்தக்காளி
நாட்டும் வயத்திற் பூசவிடும்
வகையாய்க் கண்ணோய் தேசிப்பழம்
மானுடர் முலைப்பால் அஞ்சனமாம்
மசையா திருமல் பலதீரும்
மான கொள்ளுத் திரிபலையும்
பிசகொன் றில்லாச் சூரணத்தில்
பேணிக் குளிகை பொடித்தன்னே

குளிகையைத் தூளாக்கி மணித்தக்காளி சாறு சேர்த்து வயிற்றில் பூச மகோதரம் நீங்கும். கண்ணோய் எலுமிச்சம்பழச் சாற்றில் வழங்கினாலும் தாய்ப்பாலில் கரைத்து கண்ணில் மைபோல் இட்டுக் கொள்ளவும். இதனால் இருமல் நோயும் தீர்வதற்கு திரிபலைச் சூரணத்தில் குளிகையைச் சேர்த்து உட்கொள்ளவும்.

400. உன்னும் வாழ்வு மனலிச்சாறு
உரைத்துக் குளிகை தாவென்ன
தின்னும் வாழ்வு உடந்தீரும்
தெளிவாய்க் குன்மம் பலவுக்கும்
நன்னும் நொச்சிச் சாற்றிலிடு
நாட்டுங் கன்னுச் சூட்டுக்கு
யென்னும் மெல்லிலைச் சாற்றிலிட
யேகுந் சூடு தாசிகரையும்

வாயு நீங்குவதற்கு இக்குளிகையை மனலிச் சாற்றில் உரைத்துச் சாப்பிடலாம். நொச்சிச் சாற்றில் இக்குளிகையை உட்கொள்ள பலவகை குன்மங்கள் நீங்கும். உடல் சூட்டிற்கு மெல்லிலை எனும் வெற்றிலைச் சாற்றில் உட்கொள்ளவும். இதனால் கண்சூடு, உடல்சூடு குறையும்.

401. கரைத்த அமுக்கிறாச் சூரணத்தில்
கலந்து குளிகை வெந்நீரும்
உரைத்துக் குடிக்கச் சந்துளோய்
உடனே வாதம் பலதீரும்
திரைக்கும் வயத்து வலியும் தீரும்

குளிகையை அமுக்கிரா சூரணத்தில் கலந்து வெந்நீர் சேர்த்து உரைத்துக் குடிக்க சந்து நோய்கள் (மூட்டில் ஏற்படும் வலிகள்) வாத நோய்கள், வயிற்று வலி ஆகியன யாவும்குணமாகும் என்பதாம்.

<u>239-வது ஏடு விடுபட்டுள்ளது.</u>

402 முதல் 409 வரை பாடல் விடுபட்டுள்ளது.

410. சேருண் வெள்ளருகு செருப்படிச் சாறுகட்டி
தேடுநீ மேனியின்சாறு ஆடுதீண்டாப் பாளைகட்டி
பேறான யேழுவகைச் சாறுங் கட்டி
பிசகாம லரைத்திடுவாய் யேழு நாளுங்
கூறாகத் தானரைத்துக் கடுகு போல
குளியவே நிழலுலர்த்தி வைத்துக் கொள்ளே

இதனை வெள்ளருகு செருப்படிச்சாறு கட்டி, குப்பைமேனிச்சாறு, ஆடுதீண்டாப்பாளைச்சாறு ஆகிய ஏழு வகை சாறும் கட்டி முறைப்படி அரைத்தேழு நாட்கள் தொடர்ந்து அரைத்து கடுகளவினதாக உருட்டி நிழலில் உலர்த்தி எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும்.

411. கொள்ளுவா யிக்குளிகைதனைப் பதனம் பண்ணி
கூரறிந்து கொடுத்திடுவாய் கூத்தன் போல
தள்ளாத சன்னிவகை யனைத்தும் நிற்கும்
தாங்காத சுரங்குளிர் சுரங்க ளெல்லா
மெள்ளவே திரிதோஉஷந் தினத்தின் தோஉஷம்
விளங்கவே யனைத்து நிற்கும் விருப்பமாக
உள்ளபடி தேனதிலே குளிகை யொன்று
உரைத்துநீ குடித்திடவே ஒளிந்து போமே

பக்குவப்படுத்தி வைத்திருக்கும் இந்தக் குளிகைதனை முறையறிந்து கொடுத்து வந்தால் சன்னி நோய்கள் அனைத்தையும் போக்கலாம். சுரம், குளிர்சுரம், திரிதோஉஷம், தினைத்தின் தோஉஷம் ஆகிய அனைத்தும் நிற்கும். இவ்வெல்லா வகை நோய்களுக்கும் ஒரு குளிகையைத் தேனில் உரைத்துக் கொடுக்க அவை நீங்கும்.

412. ஒளிவான மனோசிலை சிலாசத்து

உதவுகின்ற குங்கிலியங் கற்பூரங் கூட்டி

தெளிவான யிருவிகெந்தி தாளகந் தானேத்தே

கட்டும் படிக்-காரமிந்து சருகக் கூட்டி

களியாக அரைத்திடுவாய்ச் சாம மட்டும்

கருத்த-நீரக் கம்பளிப்போல்க் காணும் பாரே

சுத்தமான மனோசிலை, சிலாசத்து, குங்குலியம், கற்பூரம், இருவி கெந்தி, தாளகம், படிகாரம், இந்துப்பு, அருஞ் கூட்டி 3மணி நேரம் அரைத்து களிபோல் வரும்போது வழித்தெடுத்துக் கொள்ளவும்.

413. பாரதுநீ வெல்லமொரு பலமும் போடு

பாங்கான கொட்டாச்சிக் கரிபலமுங் கூட

சேர்த்திடுவாய் தேங்காய்ப்பால் விட்டு ஆட்டி

சிமிழ்மாட்டுக் கொம்பதனி லடைத்துக் கொண்டு

கூரறிந்து வெற்றிலையிற் பயற தாக

கொடுத்திடவே யென்பது வாய்வுந் தீரும்

வீற்றிருந்த சன்னிபதி முஷ்டிந் தீரும்

விடங்களெல்லாம் பறந்துவிடு மேல்மை காணே

35கி வெல்லம், கொட்டாங்கச்சி கரி 35கி இரண்டையும் தேங்காய்ப்பால் விட்டு ஆட்டி மாட்டுக் கொம்பு சிமிழ்தனில் விட்டு ஆட்டி மாட்டுக் கொம்பு சிமிழ்தனில் அடைத்து பக்குவப்படுத்தவும். சிறுபயிறளவெடுத்து வெற்றிலையில் வைத்து மடித்துக் கொடுத்திட என்பது வகை வாயுக்களும் தீரும். சன்னிவகை பதின்மூன்றும் தீரும். விடங்கள்கூட இம்மருந்தால் நீங்கும் என்பதாம்.

414. நவலோக_செந்தூரம்

காணவே வெள்ளையாஞ் சீலை யூட்டிக்
    கயிறாகத் திரியுருட்டிப் புகையைக் காட்டுத்
தோனவே பல்விடமுஞ் சில்விடமு மெல்லாந்
    சுருத்கான புகைகாண ஓடிப் போகும்
பூணவே காமாலைப் பாண்டுத் தீரும்
    புகழான சூதக வாய்வு பின்விட் டோடும்
வேணதொரு வியாதியெல்லாம் விட்டே போகும்
    விதமான யிதின்முறையை விரைந்து செய்யே

நாம் மேற்சொன்ன விழுதை வெள்ளைச் சீலையில் ஊட்டி திரியாக உருட்டி புகை காட்ட பல்விடமும், சில்விடமும் நீங்கும். காமாலை நோயும் பாண்டுநோயும் தீரும். சூதக வாயு, மேலும் பல நோய்களும் நீங்கிப் போகும். விடங்களுக்கு வழங்கும் இம்மருந்தை உடனடியாக வழங்கவும்.

415. செய்யவே அரைபொடி பன்னிரு களஞ்சி
    சியமான பலமொன்று இரதங் கட்டி
பையவே கெந்திதான் களஞ்சி யேழு
    பருத்ததொரு வெங்காரம் நாங்க களஞ்சி
அவுரியின் சாறுதானும் நாலு சாமந்
    தங்கவே யரைத்திடுவாய் சாந்து போல
ஐய்யமுடன் கம்பளிபோல் நிறம தாகும்
    அதையெடுத்து அடைதட்டி வெயிலில் வையே

அரப்பொடி 60கி, இரசம் 35 கெந்தி 35கி, வெங்காரம் 20கி இவற்றை அவுரிச் சாற்றால் 12 மணி நேரம் அரைத்துசாந்துபோல் கம்பளி நிறம் போல் வந்ததும் எடுத்து அடைதட்டி வெயிலில் காய வைக்கவும்.

416.வைத்குஞ் சட்டி யதுக்குள்ளே

மருவிக் குமரி சோற்றை யிட்டு

மெத்த அதின்மே லடையை வைத்து

மேவி பின்னுஞ் சோற்றை சைத்து

மத்த சட்டி யூடன் கொண்டு

தானே சீலை மண்செய்து

ஒக்க அடுப்பில் நாலுநாள்

உரைக்க யெரிக்க செந்தூ ர மதே

ஒரு சட்டிக்குள் கற்றாழஞ் சாற்றை பரப்பினுதன் மேல் அடையை வைத்து அடையின்மேல் கற்றாழைச் சோற்றை வைத்து தகுந்த சட்டி கொண்டு மூடி சீலை மண் செய்துஅடுப்பேற்றி 4 நாட்கள் தொடர்ந்து எரித்து வர செந்தூ ரமாகும்.

417. செந்தூ ரம் பணவிடையும் தேனிற்கொண்டால்

தீருநோய் சொல்லகிறோம் செப்பக் கேளு

வந்ததொரு விசபாகஞ் சுரங்கள் தீரும்

வகத்தான மேல்வீக்கம் வாடிப் போகும்

யெத்தெந்தப் பயித்தியமுஞ் சோகை தீரு

மிதமான காமாலை யிடறிப் போகும்

உந்தியுள்ள மகோதரமும் பாண்டும் தீரும்

உகந்திடவே யின்னம் வெள்ளையுள்ளி கேளே

500மிகி செந்தூ ரத்தைத் தேனில் குழைத்து சாப்பிவிட்டு வர பலவகை சுரங்கள் நீங்கும்.உடல் வீக்கம்,பருத்தல் குறையும் . பித்தம், சோகை,காமாலை இவை நீங்கும்.மகோதரம்,பாண்டு ஆகிய நோய்களும் குணமாகும்.வெள்ளைப்பூண்டு தயிலத்திலும் இம்மருந்தை உட்கொள்ளலாம்.

418. வெள்ளை யூண்டு தயிலமதில்
மிகுத்த செந்தூரம் பணவிடைகொள்ள
உள்ள அரிவை பீலிகையு
முகந்த நீரும் நீராமை
மெள்ளச் சத்தி குன்மமுடன்
மிகுந்தக் குன்ம மெரிகுன்மம்
கொள்ளும் வியாதி தானந்தீரும்
குறித்த யிவைகள் கேள்வீரே

வெள்ளைப்பூண்டு தயிலத்தில் இந்தச் செந்தூரத்தைச் சாப்பிட்டு வர (500மிகி) பீலிகை நீர்ப்பாய்ச்சல் நீராமை, வாந்தி, குன்மம், எரிகுன்மம் போன்ற நோய்களும் குணமடையும்.

419. ஈர வெங்காயம் வெள்ளரிக்காய்
யிசைந்த தண்ணீர் முந்களஞ்சி
பாராய் செந்தூரம் பணவிடைக்கொள்
பரிந்தசதையும் நீரடைப்பும்
மாறாய்த் தீரும் கல்லடைப்பு
மதக்கு மிந்த அமப்பானந்
தீரச் சொன்னோம் ரசபோகஞ்
செய்யுக்குணங்க ளிருபகரே

வெங்காயம், வெள்ளரிக்காய் இரண்டையும் சேர்த்து எரித்து காய்ச்சிய தண்ணீர் 15மிலி எடுத்து 500மிகி செந்தூரத்தை உட்கொண்டு வந்தால் ஊளைச்சதை, நீரடைப்பு, கல்லடைப்பு போன்ற நோய்கள் நீங்கும்.

420. பாரா யரைபொடி களஞ்சித்து

பன்னும் மிஷிபொடி களஞ்சித்து

மீராக் காந்தம் பத்தடனே

விளங்கு மிர்தம் ரஷ்டையுந்

தங்குங் கெந்தி தாளைந்து

தகத்து மிவைகள் பொடிசேர்த்து

புகமு மரைவாசி சட்டியிட்டு

பொருந்தச் சட்டி மேல்மூடே

அரப்பொடி 50கி ----பொடி50கி, காந்தம் 50கி, அமிர்தம் 12.5கி, கெந்தி இவற்றையெல்லாம் சேர்த்துப் பொடித்து ஒரு சட்டியில் அரைச்சட்டி நிரப்பி வாய் பொருந்துமாறு மேல் சட்டி மூடிக் கொள்ளவும்.

421. மூடி யத்சு சீலைமண்று

முடுக யிட்டுச் சாமமெரி

சூடுங் காமாலை பெருவயிறு

நிகழ்ந்த சோகை சலக்கழிச்சல்

வாடு மீளை யிருமலுக்கு

மகிழ்ந்து தேனில் பணவிடைகொள்

நாடும் வியாதி யிவையெல்லாம்

நடுங்கி யோடும் நலமறியே

மேல்சட்டிமூடி வாய்ப் பொருத்தியதும் சீலைமண் ஏழு செய்து 3மணிநேரம் தொடர்ந்து எரித்து எடுத்துச் சாப்பிட்டு வர காமாலை, பெருவயிறு, சோகை, நீர்ப்பேதி, ஈளை, இருமல், இவற்றிற்குத் தேனில் குழைத்துச் சாப்பிட இவ்வகை நோய்கள் யாவும் நீங்கும்.

422. அரிதார செந்தூரம்
அரிதாரஞ் சுத்தி முத்களஞ்சி
ஆன கொவ்வை யிலைமேலே
நெரிதாம் வெண்ணை தாவிந்தடவி
நேரந் தரிதார மிலையில் வைத்து
குறிதாஞ் சட்டி தன்னில் வைத்துக்
கொண்டே சீலை மண்செய்து
பரிவா யடுப்பில் தான்வைத்துப்
பண்பாய்த் தீயை ஒருவேளைகே

சுத்திசெய்த அரிதாரம் 35கி எடுத்து கொவ்வை இலைமேல் வெண்ணை தடவி அதன்மேல் அரிதாரம்வைத்து வெண்ணை தடவிய இலைகளை மேலேயும் வைத்து சட்டிக்குள் வைத்து மேல்சட்டி மூடி சரியாகச் சீலை மண்செய்து அடுப்பேற்றி எரிக்கவும்.

423. ஒரு நாழிகை தானெரித்த பின்பு
உகந்த கெந்தக நாற்றதோழ்
வருமே யப்போ தாலெடுத்து
மகிழ ஆற்றிப் பொடியாக்கி
தருமே சங்கம் வேர்பட்டை
தானே போயாய் யிளைதாத்தி
திருவே ரணையாழ்ச் சர்த்திச்
திருந்த வெத்திலைச் சாற்றில்வையே

ஒரு நாழிகை நேரம் எரித்த பின்பு கெந்த வாசனை வரும். அப்போது எடுத்து ஆறியபின் பொடியாக்கி அதனுடன் சங்கம் வேர்ப்பட்டை சேர்த்து அரைத்த வெற்றிலைச் சாற்றில் வழங்கிடவும்.

424. வைத்த வெத்திலைச் சாத்றிுடன்

மருவு செந்தூரம் பணவிடைகொள்

யித்தனை யீளை யிருமலுடன்

யீய மந்தார காசமுடன்

உத்த காச சுவாசமுடன்

உகத்த தாளை விப்புருதி

யித்தினை வகையுந் தீருமெனை

யியம்பு மகஸ்த்திய முனியுரைத்தார்

வெற்றிலைச் சாற்றில் செந்தூரத்தை 500 மிகி அளவு வழங்க ஈளை இருமல், மந்தாரகாசம், தாளை, விப்புருதி போன்ற அனைத்து நோய்களும் நீங்கும். இதனை அகத்திய முனிவர் உலகிற்கு உரைத்தார். அதனை நான் உங்களுக்கு உரைத்துகிறேன்.

425. உரைத்த மாந்தை கோழைபல

உகந்த விப்புருதி ரெண்டாகு

மரைத்த யீனை மூன்றாகு

மனது யிரைப்புச் சயமாந்தை

யிரைத்த சேற்றம மேகமென

யிதவும் பக்க மந்தாரம்

கரைக்கும் பேறாந் திரச்சியுடன்

காணுஞ் சயமு மாந்தைசயம்

மாந்தை, கோழை, விப்புருதி இவற்றிற்கு 500மிகி மருந்து இரண்டுவேளையும், விப்புருதிக்கு இரண்டு வேளையும் ஈளைக்கு மூன்று வேளையும்வழங்க வேண்டும். இரைப்பு, சயமாந்தை, சேற்றுமம், மேகம், மந்தாரம், சயம், மாந்தை போன்ற நோய்களுக்கும் இதனைப் பயன்படுத்தலாம்.

426. சயமாம் பத்துவகை தனக்குந்
தானே பிரமிய முள்ளதெல்லாம்
நயமே செய்யும் மருந்துகொண்டால்
நல்றாய்ப் பாத மிகழ் பொற்றி
மயமே யுற்ற மேகதிரி
மலர்பாதஞ் சிவக்கு மாருதிதாள்
அயமே பாரில்மிக உலகு
காணும் மானந்த மருந்திதுவே

மேற்சொன்ன பத்து வகை சய நோய்களுக்கும்பிரமிய நோய்களுக்கும் இம்மருந்துண்ணும்போது, பெரியோர்களை வணங்கி, பாதம் போற்றி உட்கொள்ள வேண்டும். அவ்வாறு தொடர்ந்து உட்கொண்டு வந்தால் நோய்கள் நீங்கி ஆனந்தம் பெறுவோம்.

427. பத்தியம்:
மிதவாம் பத்தியம் பெரியவிரால்
யேகுஞ் சுறாவு நெய்த்திலியும்
மெதுவா மிரச்சி மாங்கிஷமும்
மீறு முடும்பு காண்டமுதல்
அதுவாங் கோழி முட்டையுடன்
ஆகு முருங்கை அதவளை
பொதுவா முள்ளி கொடுப்பையுடன்
புகழு முள்ளானங் கட்டுமின்னம்

மருந்துண்பவரின் பெருவிரல் கனத்திற்கு ஒத்த விரால்மீனும், சுறாமீனும், நெத்திலியும், இறைச்சியும், மாமிசமும், உடும்பு, இவை நீக்கவும். கோழி முட்டை, முருங்கை அதவளை உள்ளி, கொடுப்பை, முள்ளங்கி இவற்றைச் சேர்த்துக் கொள்ளவும்.

428. இன்ன மொழிய சொல்லக்கேள்
யிருளே தொழிய முதலாக
வினைப் பெண்கள் பூதம்பல
சேர்ந்த நெருப்பு மிகமாய்
நன்மை தானும் பலவகைக்கு
நாகம் காணும் நாடாதலகில்
வேசு கொள்ளு மன்னவிழி
காக கொள்ளு மாந்தகரில்
காணுங் கணங்க ளாய்விடுமே

இன்னும் சிலவற்றைச் சொல்லுவன். பெண்கள், பூதம் சேர்ந்த நெருப்பிலிட்டு வணங்கி பலவகையான கேடுகளை விளக்கிக் கொண்டு, பலவகைத் துன்பங்கள் செய்யும் மாந்தரில் காண வேண்டிய கணங்களாய் மாறிடுவோம்.

429. குழிழுக்குக்கு யிரத பூப்பூங்
யிடுமே யிரதம் மூன்று சிலை
யேகம் ரெண்டு செந்திரெண்டு
தொடுமே தாளக மரிதாரந்
துலங்கு லிங்கம் வெள்ளியம்
யிவைக ளொன்று களஞ்சியிடு
யேகமாகப் பதின்களஞ்சி
நடுவாங் குமரிச் சாற்றரைத்து
நன்றாய்க் கல்வத்தில் நடுவில்வையே

இரசம் மூன்றுபங்கு, மனோசிலை இரண்டு பங்கு, கெந்தி இரண்டு பங்கு, தாளகம், அரிதாரம், லிங்கம், வெள்ளியம் இவை வகைக்கு 5கி ஆக மொத்தம் பதின்கழஞ்சு எடுத்துக் கல்வத்திலிட்டு குமரி எனும் கற்றாழைச் சாற்றில் அரைத்துக் கொள்ளவும்.

•வில்லை

430• வைத்த கலத்தில் பற்பமதை
மகிழொரு கிண்ணி தாள்மூடி
யித்தைச் சூரிய புடம்வைக்க
யிதுவாம் பற்ப மிருகுன்றி
உத்த தேனிற் தாள்கொள்ள
ஒடும் பஞ்ச குன்மம்
மெல்லாந் தருளாம் வியாசமுனி
யருளும் படியே செய்யே

ஒரு பாத்திரத்தில் நடுவில் அரைத்ததை உள்ளே வைத்து ஒரு கிண்ணம் கொண்டு மூடி சூரியபுடமாய் வைத்தெடுக்க பற்பமாகும். இதனைத் தேனில் உட்கொண்டுவர ஐந்து வகையான குன்மங்கள் யாவும் நீங்கும். இது வியாசமுனிவர் அருளியதை நாம் சொல்வோமாக.

431.செய்யுங் கெந்த மரிதாரஞ்
சீரா மிர்த் மனோசிலையும்
உய்யுங் காந்த மிவைசமனாய்
உகந்து உரைத்து யிருபலமாய்
அய்யா ஆவரை யரைப்பலமும்
ஆகு முசுக்கைச் சாற்றரைத்து
அய்யா ரெண்டு சாமமரை
வரித்தே யுருக்குங் காரியம்

கெந்தம்,அரிதாரம்,அமிர்தம்,மனோசிலை,காந்தம் இவற்றைச் சமஅளவாக எடுத்துக் கொண்டு உரைத்து70கி அளவு எடுத்துக் கொள்ளவேண்டும். ஆவாரை 18கி இவற்றை எல்லாம் முசுமுசுக்கை சாற்றால் அரைத்து 6மணிநேரம் அரைத்தபின் காரியத்தை உருக்கிக் கொள்ளவும்மே

432. காரீய முருகும் போது

கதித்த பொடியு மதிலுக்கட்டி

பாராய் கிராம்பு சாதிக்காய்

பரித்த திப்பிலி வசுவாசி

நேரே சமனா யோர்க்கறும்

நிகழும் செந்தூர மிருகறு

பாராய் முலையால் கூட்டி வைத்து

மருந்து சீனி பணவிடையே

காரீயம் உருகி வரும்போது பொடியினை அதில் கூட்டி கிராம்பு, சாதிக்காய், திப்பிலி, வசுவாசி இவற்றைச் சம அளவாக எடுத்து அதற்கு இரண்டு பங்கு செந்தூரம் சேர்த்து சீனி கூட்டி5 மிகி அளவு தினமும் உட்கொண்டு வரவும்.

433. காரீயம் வழிப்பு:

விடையாம் காரீயம் பலம்நாலு

மிகுத்த சட்டி தனிலிட்டு

திடமாய் நாயுருவி யொருகட்டு

தீர்க நசுக்கிச் சட்டிக்குள்

விடமாய் வருத்துக் கரண்டியினால்

பின்பு மதுவை நசுக்கியிட்டு

அடவாய்த் சட்டி அடிப்போனால்

வையே சட்டி யிப்படியே

140கி காரீயத்தை ஒரு சட்டியில் போட்டு ஒரு கட்டு நாயுருவியைத் துண்டுதுண்டாக நசுக்கி சட்டியில் சேர்த்து அடுப்பேற்றி கரண்டியினால் வறுத்தெடுத்துக் கொள்ளவும். மேலும் அதனை எடுத்து மீண்டும் நசுக்கி சட்டியில் போட்டு மீண்டும் வறுத்துக் கொள்ளவும்.

434. இப்படி யேழு பிரகாரம்

ஏழு கட்டு நாயுருவி

தப்பா நறுக்கித் தாளெரிக்கச்

சட்டி யேழும் மிகவாகும்

ஒப்பாய்ப் பருத்திப் பூச்சிக்கப்பா

முகந்த நிறமே யானைக்கால்

தப்பில்லாத வியாதி கட்குத்

தானுப்பான மாவரையே

இவ்வாறு ஏழுமுறை ஏழுகட்டு நாயுருவியை நறுக்கி எரிக்கவும். இவ்வாறு ஏழு சட்டியை மாற்றிக் கொள்ளவும். பருத்திப்பூ நிறம் வந்ததும் இறக்கிக் கொள்ளவும். இதனை யானைக்கால் நோய்க்கு வழங்கலாம். அடுத்து ஆவாரையைப் பயன்படுத்தவும்.

435. ஆவரை சமூலந் தானுலர்த்தி

அப்பா விடித்து வடிகொண்டு

மாவாய்க் களஞ்சிப் பொடியுடனே

மருவு செந்தூ ரம் பணவிடையும்

மேவித் தேனி லொன்பததாள்

மகிழ்ந்து கொடுக்கத் தான்தீரும்

நாவா லுரைத்தா ரகத்தியமுனி

நன்றா யிம்முறை செய்திடவே

ஆவாரைச் சமூலத்தை எடுத்துச் சுத்தப்படுத்தி உலர்த்தி இடித்து சலித்துக் கொண்டு அதில் 5கி, செந்தூரம் 500மிகி சேர்த்துக் கலந்து தேனில் குழைத்து ஒன்பது நாட்கள் சாப்பிட்டு வந்தால் பல நோய்கள் தீரும் என்று அகத்தியர் சொன்னார். இச்சிறந்த முறையைச் செய்து பயன்பெறலாம்.

436. இடவே சமூலந் தானலந்த்தி

அப்பா லிடித்து வடிகொண்டு

மாவாய்க் களஞ்சிப் பொடியுடனே

மருவு செந்தூ ரம் பணவிடையும்

மேவித் தேனி லொழிப்பதநால்

மகிழ்ந்து கொடுக்கத் தான்தீரும்

நாவா லுரைத்தா ரகத்தியமுனி

நன்றா யிம்முறை செய்திடவே

நெல்லிக்காய், தான்றிக்காய், சாதிக்காய், கடுக்காய் இவை வகைக்கு 15கி வீதமெடுத்து சேர்த்திடித்துப் பொடிசெய்து 5கி பொடியுடன் செந்தூ ரம் கலந்து 500மிகி அளவு உட்கொள்ளலாம். திப்பிலி, வெட்டிவேர் இவற்றின் தூ ளைத் தேனில் குழப்பி 500மிகி அளவு வழங்கவும்.

437. ரசபூதங்கட்டு

பணமாம் நாழிக் கொள்ளதனைப்

பாங்கா யரைத்துக் குகைபிடித்து

குணமா யிரத மிருபலமும்

குகைக்குள் விட்டு துளசிச்சாறு

மணமாம் வெற்றிலைச் சாறுகூட்டி

மகிழச் சமனாய்க் குகைக்குள்விட்டு

தனலாய்ச் சட்டி யதனுள்ளே

தாக்கச் சிறுகீரை வேகவையே

1.3லிட்டர் கொள்ளை அரைத்துக் குகைபிடித்து இரசம் 70கி சேர்த்து குகைக்குள் விட்டு துளசிச் சாறும் வெற்றிலைச்சாறும் கூட்டி சமஅளவாகக் குகைக்குள் செலுத்தி சட்டிக்குள் வைத்து சிறுகீரையை வேக வைத்தெடுத்துக் கொள்ளவும்.

438. வைத்த சட்டி யதனுள்ளே
    மருவு செங்க லுப்புடனே
உத்த சமனாய்த் தானிடித்து
    ஓங்கு சட்டி தன்னில்விட்டு
மெத்தக் குகையை யதனுள்வைத்து
    மேலே சட்டி மண்செய்து
சித்த முடனே மண்ணேழு
    தீர்த்திரமாய்ச் சீலை சுத்தியிடே

மேலே சொன்ன சட்டியில் செங்கல்லும் உப்பும் சேர்த்-திடித்து உள்ளே வைத்துகுகையை அதனுள் வைத்து மேல்சட்டி மூடி சீலை மண் செய்து (7சீலை மண்) மேலும் சீலையைச் சுற்றிக்கொள்ளவும்.

439. சுத்தச் சட்டி யடுப்பேற்றி
    துலங்க நாலு சாமமட்டு
மெத்த அனலைத் தானெரிக்க
    வெளுத்து நன்றா யாமட்டும்
யித்தை யெடுத்து மறுபடியும்
    யிந்தப் படியே குகைபண்ணி
வைத்த சட்டி யிட்டபால்
    மறுத்தச் சட்டி வைத்தெரியே

சீலைமண் செய்து கொண்ட சட்டியை அடுப்பேற்றி 12 மணிநேரம் எரித்து ஆறவிட்டு எடுத்துப் பார்த்து வெளுத்த பின்னர் மீண்டும் பழையபடி குகை செய்து வேறுசட்டி மாற்றி மீண்டும்வைத்தெரித்து எடுத்துக் கொள்ளவும்.

..220

440. எரித்த பற்பம் ரெண்டாநாள்
தலங்க நால சாமமட்டு
மெத்த அனலைத் தாவெரிக்க
வெகுத்த நஷ்றா யாமமட்டும்
யித்தை யெடுத்து மறுபடியும்
யிந்தப் படியே குகைபண்ணி
வைத்த சட்டி யிட்டபால்
மறுத்தச் சட்டி வைத்தெரியே

இரண்டு நாள் எரித்து இரண்டாம் நாள் பற்பத்தை எடுத்துப் பார்க்க சுத்த பற்பமாக இருக்கும். தலை நோய்கள் அனைத்திற்கும் இப்பற்பத்தை வழங்கலாம். சிவபெருமான், திருமால் இருவரின் பாதங்களையும் வணங்கி, முருகன் விநாயகனைத் தொழுது இப்பற்பத்தை உட்கொள்ள பலவகை நோய்கள் நீங்கும்.

441. கிரஞ்சாரி லேகியம்.

போற்றுஞ் சாதிக் காயவிளம்
புகழுங் குரோசாணி சுத்தி கஞ்சா
யேற்றுங் கிராம்பு லவங்கப்பட்டை
தேறுங் சுகை நீறாகு
மாற்றுங் கருவேம்பு சமனாக
வறுத்து யிடித்து நிறைகொண்டு
ஆற்று வெல்ல மந்திடைக்கு
எல்லாம் பொடியுஞ் சேர்த்திடியே

சாதிக்காய், குரோசாணி ஓமம், சுத்திசெய்த கஞ்சா, கிராம்பு, இலவங்கப்பட்டை, சுகைநீறு, கருவேம்பு இவற்றைச் சமஅளவாக எடுத்து இளவறுப்பாக வறுத்து இடித்து நிறுத்து எல்லாம் பொடிகளையும் அதே அளவு சேர்த்து இடித்துக் கொள்ளவும்.

442. இடிக்கும் லேகியந் தனையெடுத்து
யிதமாய்ச் சுண்டைக் காயளவு
மடித்த உருட்டி யிருநேர
மருவிக் கொள்ள வல்லராய்
நொடிக்கு முன்னே சலக்கழிச்சல்
நொறுங்க அடிக்கும் பிள்ளையுங்கேள்
வடிக்குங் கிராணி வகையேழு
மாறிப் போகுங் கண்டீரே

இடித்ததை எடுத்து முறைப்படி இலேகியம் செய்து கொண்டு அதில் சுண்டைக்காயளவு உருட்டி காலை, இரவு இரண்டு நேரம் உண்கொண்டுவர சலக்கழிச்சல், ஏழு வகையான கிராணிகள் ஆகிய யாவும் நீங்கும்.

443. கண்டீரே சர்க்கரையு பலந்தானே கொண்டு
கடுகவே நீர் சேர்த்துத் தண்ணீர் விட்டு
பண்டுள்ள உப்புவள்ளி கூடச் சேர்த்தப்
பதறாமல் தானெடுத்து வடிநீ கொண்டு
மிஞ்சியதோ நெஞ்சுகட்டு வகுத்து உப்பல்
மீறுகின்ற தலைகனப்பு சேற்மமெல்லாம்
அம்மாம லோடிவிடுங் குழந்தை நோவு
ஆச்சரியம் யிம்மருந்து அறிந்து பண்ணே

35கி சர்க்கரை எடுத்துத் தண்ணீர் சேர்த்து உப்பு வள்ளியும் கூடச் சேர்த்து எடுத்து வடித்துக் கொண்டு நெஞ்சு கட்டு, வயிற்றுப்பல், தலைக்கனம், சேற்மம் ஆகிய நோய்களும் பலவித குழந்தை நோய்களும் தீர்வதற்குச் சாப்பிட்டுப் பயன்பெறலாம்.

444. அரிதார பற்பம்.

பண்ணவே அரிதாரஞ் சுத்தி செய்ய

பண்புடனே பூசனிக் காய்க்குடல் தன்னில்

நிர்ணயமாய்த் தாக்கித்தப் பின்புந் தோணும்

நன்றான கலத்சுண்ணத் தண்ணீர் வார்த்து

உண்ணவே நல்லெண்ணை சரிசமனாய்க் கட்டி

உடன்வித்தப் பின்பு நல்லெண்ணை தன்னில்

கன்னவே யவித்திடுவாய் முக்கா லப்பா

கசடறுமே அரிதாரஞ் சுத்தி யாச்சே

அரிதாரம் சுத்தி செய்தவின்னரே பயன்படுத்தவேண்டும். அரிதாரத்தைப் பூசனிக்காய் குள்ளே வைத்து அவித்துக் கொள்ளவும். அரிதாரம் சுத்தியாகும்.

445. ஆச்சப்பா முக்கிரச் சாரணை தன்னை

அரைத்து-ரெண்டு அடையாகத் தட்டி யப்பா

வாச்சுதப்பா சட்டிக்குள் ளடையை வைத்து

மாசற்ற அரிதார மேலே வைத்து

தாட்சியில்லா மறுஅடையை மேலே வைத்து

தளம்பாமல் மேல்சட்டி கொண்டு மூடி

பாச்சிடுவாய் சீலைமண் ஏழு செய்து

பதறாம லடுப்பேத்தி அனலை மூட்டே

முக்கிரட்டைச் சாரணையை நன்றாக அரைத்து அடைதட்டி ஒரு சட்டிக்குள் அடையை வைத்து அரிதாரத்தை அதன்மேல் வைத்து மற்றொரு அடையை மேலே வைத்து அரைத்து விடாமல் மேல்சட்டி கொண்டுமூடி சீலைமண் ஏழு செய்து அடுப்பேற்றி எரிக்கவும்.

446. முடியே யெரித்திடுவாய் சாம மெட்டு

முகிழ்விரியா மஞ்சிலை நன்றாயீச் செய்து

முட்டியதோர் பற்பமதை யெடுத்துக் கொண்டு

நிலவான அமிழ்பானந் தன்னில் வைத்து

தாட்டிகமாய்த் தேனிலிடு மண்டைச் சூலை

தவறிவிடும் விடநஞ்சுகளெல்லாம் தளர்ந்து போகும்

வாட்டிவிடு கண்ணோவு மிகுந்து கண்டால்

மாசற்ற பழச்சாற்றில் மருவித் தலக்கே

அடுப்பேற்றி சுமார் 24 மணி நேரம் (பிரிந்து விடாத அளவுக்கு மஞ்சிலை வலுவாகச் செய்து)எரிக்கவும். இப்போது இது பற்பமாக மாறியிருக்கும். இதனைத் தேனில் உட்கொண்டு வர மண்டைச் சூலை நீங்கும். தீண்டிய விடநஞ்சுகள் இறங்கும்.கண்ணோய் மிகுதியாகக் காணப்பட்டால் எலுமிச்சம்பழச்சாற்றில் கொடுக்கலாம்.

447. தாக்கும்வாத மதனுக்கு

தாங்காய் பனைவெட்டுப் பனைவிடைகொள்

ஆற்கும் பிரமேகந் தானீகண்டால்

அதக்குப் பூசணிப் பழச்சாறு

போக்கில் லாத நீரடைப்பில்

பொருந்து வெள்ளரிக்காய் தண்ணீர்

மாக்குக் சூத வாய்வுக்கு

பாரும் ஆவின் பால்-குணமாம்

பனைவெல்லத்தில் 500மி பற்பத்தைச் சாப்பிட்டு வர வாதக்கோளாறுகள் நீங்கும்.பிரமேகத்திற்கு பூசணிச் சாற்றிலும், நீரடைப்பாளுக்கு வெள்ளரிக்காத் தண்ணீரிலும் சூத வாய்வுக்கு ஆவின் பாலிலும் வழங்கலாம்.

கலிக்கை

448. மலமுஞ் செலமுங் கட்டி-விட்டால்

வறுத்தக் கோழி முட்டை யோடு

எலியின் புழுக்கை கோழிக்-கார

மியன்ற கோழிக் கருவு-டனே

நலமா யிதவெல் லாம்-பொடி-செய்து

நன்றாய் வெள்ளிக்காய் வெதய்யி

அலர்ந்த தண்ணீர் தானிடவே

ஆன கல்ல மகன்றிடுமே

மலசலம் கட்டிவிட்டால் வறுத்த கோழி முட்டையுடன்

எலிப்புழுக்கை, கோழிக்காரம், கோழிக்கரு எல்லாம் பொடிசெய்து

சுடுநீரில் வழங்கிட சிறுநீரகக் கற்கள் நீங்கும்.

449. அரிதார புறப்புடம்

அகண்ட சட்டி யதனுள்ளே

அமுக்கிறாச் சாரணை தானிடித்து

நிகண்டரி தாரம் மேல்வைத்து

நிரையச் சாரணை மேலிட்டு

சுவண்ட சட்டி மேல்மூடி

துலங்க எழுமண் சீலை செய்து

புகன்ற அடுப்பில் தானேத்தி

புகலாம் நாலு சாமமெரி

அமுக்கிரா சாரணையை இடித்து அகண்ட வாயுள்ள சட்டிக்குள் வைத்து அரிதாரத்தை மேலே வைத்து அதன் மேலும் இடித்த சாரணையை வைத்து மேல்சட்டி மூடி ஏழு சீலை மண் செய்து அடுப்-பேற்றி தொடர்ந்து 12 மணி நேரம் எரிக்கவும்.

450. சாமம் நாலு தாளெரித்து
தாங்க தெடுத்தி ஆறவைத்து
வேமா மலையை யெடுத்தெறிந்து
மிக்க மருந்து பொடிசெய்து
தாமாம் பொடியைப் பரணிவைத்து
தவறும் நோவுக் கனுபானம்
ஆமாம் சொல்ல வகைகேளீர்
ஆமம் வெருகின் கிழங்காமே

12மணி அநரம் எரித்தபின் ஆறவிட்டெடுத்து திப்பிகளை எடுத்தெறிந்து மருந்தைப் பொடிசெய்து பொடியைப் பரணில் அடைத்துக் கொள்ளவும். இம்மருந்திற்குரிய அனுபானத்தை இனி சொல்வேன். பெருகங் கிழங்கை எடுத்துக் கொள்ளவும்.

451. வெருகங் கிழங்கும் விளாம்பொருக்கு
மிகுத்த தயில முண்டுபண்ணி
உருக்குந் தயிலம் பணவிடையு
மோங்குந் தாரம் பணவிடையு
மிருக்கும் பொழுது தானுண்ண
இயலீர குடந்தான் போகும்
அழுக்கும் புண்ணுக் கடுப்புக்கு
ஆகுந் தேனு மனுப்பானம்

வெருகங்கிழங்கு விளாம்பொருக்கு இரண்டையும் சேர்த்துத் தயிலமுண்டாக்கி அத்தைலம் 500மிகி, அரிதார பற்பம் 500மிகி சேர்த்து உண்டுவர நீர் நன்றாகப் பிரியும். உடம்பை அழுத்தப் புண்ணாக்கும் புண்கள், கடுப்பு இவற்றிற்கு தேனை அனுபானமாகச் சேர்க்கலாம்.

452. பான முப்பு பளிதவிர்த்து
நல்நெய் வாழைப் பழமாகும்
ஆன கறுப்புக் கட்டியுமா
மதக்குச் சுக்ஷத்திரம் வெள்ளாடு
தான முப்புக் கண்டமுமாம்
தாங்கும் வெள்ளீர் தானாகும்
கான மயிலே அரிதாரம்
கறுப்புக் காணு மிதவொன்றே

மருந்துண்ணும் காலத்தில் உப்பு,புளி தவிர்க்கவும்.நெய், வாழைப்பழம் கருப்பட்டி வெள்ளாட்டு உப்புக்கண்டம்,வெள்ளீர் ஆகிய-வற்றை உட்கொள்ளலாம்.பிறவற்றை நீக்க வேண்டும் என்பதாம்.

453. ஒன்றே ரசமு மொருபலமா
முகத்தரை பொடியு மொன்றரையார்
நன்றே கெந்தம் பலமொன்று
நல்வெண் கார மரைப்பலமும்
யன்றே காந்த முக்களஞ்சி
யேகு மேனிச் சாற்றரைத்து
அன்றே சட்டி தன்னிலிட்டு
அப்பால்ச் சட்டி மேல்முடி

இரசம் 35கி, அரப்பொடி 55கிராம்,கெந்தம் 35கி, வெண்-காரம் 18கி, காந்தம் 15கி இவற்றைச் சேர்த்து அரைத்துச் சட்டியில் வைத்து அடுப்பேற்றி மேல்ச்சட்டி மூடிக் கொள்ளவும்.

454. முடிச் சட்டி சந்தவாய்
முசியா தேழு மண்சீலை
நீட்டி ரெண்டு சாமமது
நிகண்டே யெரித்துப் பொடிசெய்து
கூடிய வாந்தி வெடிசூலை
கொள்ளீர் பணவிடமும் முன்றாய்
தேடித் தேனில் வெல்லத்தில்த்
திறமாய்த் தீரும் வியாதியைப்-பார்.

முடிய சட்டியின் மூடி ஏழு சீலை மண் செய்து 6 மணிநேரம் எரித்து ஆறியபின் சாப்பிட்டு வர வாந்தி,வெடிசூலை,ஆகியன நீங்கும். 500மிகி அளவு தேனில், வெல்லத்தில் சேத்துக்கொள்ள பின்வரும் வியாதிகள் நீங்கும்.

455. பாண்டு காமாலை விஉஙபாகம்
பன்னு மகோதஞ் சத்திகுன்மம்
மீண்டு வலிகுன்மம் உள்முலம்
மிகுத்த வாய்வு திரளிச்சியுடன்
தாண்டவர் பாத மலர்பொத்தி
தானே தீரும் வயமையள்போல்
மாண்டு போமே வியாதியெல்லாம்
மகிழ்ந்துகொள் வீர பத்திரமாய்

பாண்டு,காமாலை, விஉஙபாகம்,மகோதரம்,சத்திகுன்மம், வலிகுன்மம்,உள் மூலம்,வாயுத்திரட்சி ஆகியவற்றை இம்மருந்து நீக்கும். மருந்துண்ணும் முன் இறைவனின் பாதம்போற்றி வணங்கி பின்னர் மருந்தை உட்கொள்ளவேண்டும் என்பதாம்.

456. பத்திய மாவின் பாலாகும்

பருத்த முருங்கைக் காயிலையும்

முத்த சூத்திர வெள்ளாடு

முகிந்த-உப்புக் கண்ட மதாந்தாமா

மெத்த அரைக்கீரை தானாகும்

மேவு மிருபது நாளருந்த

அத்த மருந்து அகத்தியனார்

அடவாய்ச் சொன்னார் சுத்தமுடன்

இதற்குப் பத்தியம் ஆவின் பாலாகும். முருங்கைக் காய், முருங்கை இலை, வெள்ளாட்டு உப்புக்கண்டம், அரைக்கீரை ஆகியவற்றை மருந்துண்ணும் காலத்தில் 20 நாட்கள் தொடர்ந்து உண்டு வரவேண்டும் என்பது அகத்தியர் சொன்னதாகும்.

457. வெள்ளிய பதங்கம்:

சுத்த வெள்ளிய மிருபலமுந்

தலங்கு கெந்த ரசமுடனே

வைத்த ரெண்டு மைக்கள்ஞ்சி

மருவுந் தேசிப் பழச்சாற்றில்

இத்தள மெள்ளத் தானரைத்து

இயங்குங் கட்டித் தான் பூசி

அத்தை யோர்னான் சட்டிவைத்து

ஆதித்தன் வெயில்புட மிடவே

கெந்தகம் 25கி, இரசம்25கி, இரண்டையும் சேர்த்து எலுமிச்சம்-பழச்சாற்றால் அரைத்து உருண்டையாக உருட்டி சட்டியில் வைத்து வெள்ளிய தகட்டுடன் சேர்த்து வெயிலில் வைத்துப் புடமிட்டெடுத்துக் கொள்ளவும்.

458. புடமிட்ட ரசம்பட்டை தனைப்

பொய்யாய்ச் சட்டிக்குள் வைத்து

திடமாத் தகடு அதற்குள் வைத்து

திருந்த ஒடு தான்மூடி

அடவாஞ் சீலை மண்ணேழு

ஆன குளிகை-தான் வெட்டிவகை

யிடமே யாழம் முழங்காலா

மியன்ற குழியிடு யெருமுட்டை

புடமிட்ட ரசத்தை சட்டிக்குள் வைத்து வெள்ளிய தகட்டையும் அதற்குள்ளேயே வைத்து ஒரு மூடி ஏழுமுறை சீலைமண் பூசிக்கொண்டு முழங்காலளவு குழியை வெட்டி எருமுட்டையை வரட்டி குழியில் பாதியளவு நிரப்பிக் கொள்ளவும்.

459. யெருமுட்டை மேலே சட்டிவைத்து

யதின்மே லொருமுள் முட்டைகொட்டை

திருவே ரணையா யத்திபடத்

திருந்த நெருப்பைத் தானிட்டு

வெடிவே றெடுத்துக் குழிக்கல்லில்

மிகவே யரைத்துப் பொடிபண்ணி

பொருவே லணையாய் அனுபானஞ்

பொருந்தும் வகைதான் குறியைக்கேள்

சட்டியின் மேலேயும் வரட்டிகளைப் பரப்பி நெருப்பிட்டு எரித்துக் கொள்ளவும். ஆறிய பின்னர் அதனைக் குழிக்கல்லில் இட்டு அரைத்துப் பொடியாக்கிக் கொள்ளவும். கீழ்க்கண்ட அனுபானங்களில் முறைப்படி சாப்பிட்டு வர பலநோய்களைக் குணமாக்கிக் கொள்ளலாம்.

460. கோளா சிறுமுரி வேருடனே
கிளர்ந்த திப்பிலி யேலங்கெந்தி
சூழக் களஞ்சி சூரணமாக்
சுகித்த பதிப மஞ்சாடி
ஆகும் பச்சைக் கல்நீரி
லதனைக் கொள்ள ரத்தநீர்
வாழும் மூத்திர நீர்வாங்கும்
வாங்காழ் பிரமிய மைந்தம்போம்

சிறுமுரிவேர், திப்பிலி, ஏலம், கெந்தி இவை வகைக்கு 5கி எடுத்து இடித்துப் பொடித்து மஞ்சாடி பச்சைக்கல்நீரில் இதனை உட்கொண்டால் ரத்தநீர் நீங்கும். மூத்திரநீர்க்குறையும். பிரமிய நோய்களும் நீங்கிவிடும்.

461. போகுமே விளாம்பிசினும் நெருஞ்சி வேரும்
பூனைக்காலி விதையுடனே சிறுபூளை வேரும்
வாகுடனே சூரணந்தான் களஞ்சி தன்னில்
மஞ்சாடி பதிபமது மருவிக் கொள்ள
ஆகுமே யிதைஆதி உண்டு வந்தால்
அப்பனே தாதுவிர்த்தி மிகுதி யுண்டாந்
தாகமாம் யிம்மருந்து ஆவின் பாலுந்
தாக்குவாய் மேகமெல்லாந் தவறிப் போமே

விளாம்பிசின், நெருஞ்சிவேர், பூனைக்காலிவிதை, சிறுபூளைவேர், இவற்றைச் சூரணமாக்கி 5கி எடுத்து மஞ்சாடி பதிபத்தைக் கலந்து தொடர்ந்து உண்டு வந்தால் தாதுவிருத்தியடையும். தாகம் போக்கும். ஆவின்பாலில் வழங்கினால் மேகமெல்லாம் நீங்கும்.

462. தவறியதோர் நீரழிவு நாவல்ப் பட்டை
　　தாங்காத ஆவரைச் சூரணஞ் கஞ்சி
பலமான பற்பமது தேனில்க் கொள்ள
　　பணவிடையாம் வங்கபற்பம் பரிந்து கொள்ளு
நலமில்லா மேகமெல்லாம் நடுங்கிப் போகும்
　　நாட்டிவுள்ள வயிற்றுநோய் நாடா தோடும்
அவமில்லைச் சூரணமும் பற்பம் கொள்ளு
　　அகன்டிடுமே நோய்களெல்லா மதிரிட்டோடும்
　　நீரிழிவு நோய் நாவல்பட்டை சூரணத்தால் நீங்கும்.

ஆவாரைச் சூரணம் 5கி எடுத்து மேற்சொன்ன பற்பம் சேர்த்து 500மிகி வங்கபற்பமும் கூட்டி உண்டுவந்தால் வயிற்று நோய்கள் அனைத்தும் நீங்கும். சூரணமும் பற்பமும் கலந்து உட்கொண்டு வந்தால் பலவகையான நோய்களும் நீங்கிப் போகும் என்பதாம்.

463. ஓடும் வெள்ளியத் தகடு-தட்டி
　　உத்த அரசம் புளியம்பொ-ருத்து
நீடுஞ் சட்டி யடுப்பில்-வைத்து
　　நிலவாய்த் தகடும் பொருத்-துத்தா னீ
வாடாத் தனையு முன்னிட்டு
　　வறுத்தக் கரண்டி யதிலிட்டு
சூடும் பற்பத் தனையெடுத்து
　　கொடுக்க அனுபானந் திரிகடுகு

　　வெள்ளீயத்தைத் தகடாகத் தட்டி அரசம் பொருக்கு, புளியம்பொருக்கு சேர்த்து சட்டியை அடுப்பிலேற்றி போட்டு கரண்டியால் வறுத்துக் கொண்டு அதனைப் பற்பமாக்கிக் கொள்ளவும். அந்தப் பற்பத்தை வழங்க திரிகடுகினை அனுபானமாகச் சேர்த்துக் கொள்ளலாம்.

464. திரிகடு குடனே சாதிக்காய்
தேடும் லவங்கம் வசுவாசி
அரிய சமனாய்க் கொண்டிடவே
ஆன சூரண களஞ்சிதனில்
நெறியாம் பற்பம் பணவிடைகொள்
நீடுஞ் சர்க்கரை யிருகளஞ்சி
குறியா மிருபது நீரழிவுக்
கூசா தோடுங் குணங்கேளீர்

திரிகடுகு, சாதிக்காய், லவங்கம்,வசுவாசி இவற்றைச் சமஅளவெடுத்துச் சூரணமாக்கி 5கி சூரணத்தில் 500மிகி பணவிடை சேர்த்து சீனி 10கி கட்டிக் கொடுத்திட நீரிழிவு நோய்கள் நீங்கிடும்.

465. குணமாம் வங்கப் பொடியுடனே
கூட்டும் பூலா நிலவாகை
பணமாங் குமரி வேர்ச்சாற்றில்
மகிழ அரைப்பாய் இளையமட்டும்
நிணமா மடைபோல்த் தட்டியதை
நிகண்ட முழப்புடத் தாகிபோடு
பணம்போல் தனைப் பார்த்தெடுத்தக்
பற்பங் காணுங் கண்டீரே

வங்கப்பொடி,பூலா, நிலவாகை இவற்றைக் கற்றாழை வேர்ச்சாற்றில் நேகாக அரைத்து அடைபோல் தட்டி முறைப்படி முழமளவு வரட்டி அடுக்கி புடம் போட்டெடுக்கவும். புடம் ஆறியபின் எடுத்துப் பார்க்க பற்பமாகியிருக்கும்.

466. கண்ட திரிபலைக் கஷாயத்தில்
கடுகிக் கொடுக்கப் பிரமியமும்
உண்டே மந்தார சுவாசமுடன்
உகந்த அண்ட கோசமுடன்
பாண்டே மிச்சய முடனே
பறக்குந் தேனிற் பரிந்தன்ன
அண்டா விடஷமு மூத்திரக்கிரிச்சி
மானதிரு வெல்லா மாமும் வங்கம்

இப்பற்பத்தை 500மிகி அளவு எடுத்து திரிபலைக் குடிநீரில் குடிக்க பிரமியம், மந்தார சுவாசம், அண்டகோசம், பாண்டுநோய்கள் ஆகிய அனைத்தும் நீங்கும். இப்பற்பத்தைத் தேனில் குழைத்துண்ண விடஷங்களும், மூத்திர கிரிச்சரமும் எல்லாம் நீங்கும்.

467. வங்க செந்தூ ரந்தான்பண்ண
மகிழ வெள்ளியம் பலமிரண்டு
மிங்கிதமான ஆட்டுப்பால்
மிலகும் வெண்ணைக் காடியுடன்
அங்கத் திரிபலைக் கஷாயமுடன்
ஆவின் பால மதுகளிலே
தங்கு மிளப வெள்ளியத்
தனலிற் காய்ச்சித் தோய்த்திடவே

வெள்ளியம் 70கி எடுத்து ஆட்டுப்பால், வெண்ணை காடி, திரிபலை கஷாயம், ஆவின்பால் இவற்றில் தோய்த்த காய்ச்சி (தனித் தனியே காய்ச்சி) எடுத்துக் கொள்ளவும். இதன்தொடர்ச்சியாக வங்கப் பற்பம் சொல்லப்படுகிறது.

468. தோய்த்தே மும்முறைய தாள்குறியுஞ்

சிலவுசொல்லும் வெள்ளியங் காய்ச்சி

தோய்க்கப் புளியஞ் சிறாயிடித்து

மருவுஞ் சட்டியில்த் தாள்வைத்து

நீதிகு வெள்ளிய மதிலிட்டு

நிம்பக் கோலால் மத்தித்து

வாய்க்குந் தணலாய்த் தாளெரிக்க

வரினைங் குங்கும நிறமஞ்சள்

இவ்வாறு மூன்றுமுறை காய்ச்சி தோய்த்து எடுக்கவும். இதனைச் சட்டியிலிட்டு புளியம் விறகு கொண்டு எரித்து, சட்டிக்குள் வெள்ளியத்தைப் போட்டு வேப்பங்குச்சியால் கிண்டி மசித்து எரித்து வரவும். வெள்ளியம் குங்கும நிறமாக மாறும்வரை எரிக்கவும்.

469. மஞ்சளிப் பொடியு மொருபலமு

மருவு மொம்மொரு பலமும்

மிஞ்ச வெள்ளிய மிருபலமும்

மேவி யதனைத் தாள்வைக்க

மிஞ்சும் வங்க செந்தூ ர

முசியா நாலு பணவிடைகொள்

அஞ்சி யோடும் பிணிகளெல்லா

மனுபானஞ் சொல்வேன் பின்கேளே

மஞ்சள் பொடி 35கி, வெள்ளியம் 70கி, மேலே (பஸ்பமிட்ட வெள்ளியம்) இரண்டையும் சேர்த்து வைத்தெடுக்க வங்க செந்தூ ரம் மிஞ்சும். அந்த வங்க செந்தூ ரத்தை (500மிகி×4 =2கி) 2கிஅளவு உட்கொண்டுவர தீரும். பிணிகள், அதற்கான அனுபானங்களைச் சொல்வேன்.

470.பிறமேக மெதிய மிருபதத்கும்

பெருகும் குமரி யவுபாளம்

வலமே யுதிரம் போலக்கழிந்தால்

மாறும் பசுவின் பால்க்கொள்ள

அழமே வெகுசலக் கழிச்சலுக்கு

ஆன பெருமை மோர்தனில்

நிறமே ஆவரம் கொழுந்தரைத்து

நிச்சயந் தின்னப் பிரமியம்போம்

இருபது வகை பிரமேகத்திற்கும் குமரிச்சாற்றில் வழங்கலாம். உதிரம்போல் கழிந்தால் பசுவின் பாலில் உட்கொள்ளலாம். நீர்ப்-பேதிக்கு எருமை மோரில் வழங்கலாம். ஆவாரம் கொழுந்து அரைத்து சேர்த்துச் சாப்பிட பிரமியம் நீங்கும்.

471. பிரமிய மைந்து வகைதனக்கும்

பேசு மாவின் வெண்ணெயில்க்கொள்ள

நிரமியம் வாய்வு கிரந்திக்கு

நிலவாய் ஏல அரிசியில்கொள்

மனிதர் சரீரந் தான்பெருக்க

மறவாத் தேனில் கொண்டிடவே

விரவே சலந்தான் மிகக்கழிந்தால்

மிகுந்த கஷாயம் அதிமதுரம்

ஐந்துவகை பிரமியங்கள் தீர இப்பற்பத்தை ஆவின் வெண்ணெயில் சாப்பிடலாம். வாயு கிரந்திக்கு ஏலரிசியில் உட்கொள்ளலாம். சரீரம் பெருக்க பற்பத்தைத் தேனில் உட்கொள்ளலாம். நீர் அதிகம் கழிந்தால் அதிமதுரக் கஷாயம் கலந்து சாப்பிடலாம்.

472. மதுரந் கைகால் வயரெறிந்தால்

மாமந் கற்பூரந் தன்னிலிட

அதிருஞ் சன்னி பலவுக்கு

மான தேங்குத் தேங்காயும்

மெச்வாந் வயிற்றுக் கட்டுப்போம்

விள்ளும் அம்மாள் பச்சரிசி

சுதமாஞ் சாம ஆமாக்கு

தலங்க உள்பீர் சுமயிதவே

கைகால் ஒய்ச்சலுக்கும்,வயிற்றெரிச்சலுக்கும் கற்பூரம் சேர்த்து வழங்கலாம்.பலவகையான சன்னி நோய்க்கும் தேங்காயில் வழங்கலாம்.அம்மான் பச்சரிசி இலையில் வழங்க வயிற்றுக் கட்டு நீங்கும்.

473. சுகமே முத்திர மென்றதெல்லாந்

தலங்குஞ் சர்க்கரை தேனிற்கொள்ள

சுகமே மூக்கில் ரத்தம்வந்தால்

தாக்கும் அமுக்கிராச் சாற்றிலிட

அகமே கைகா லெரிப்புக்கு

ஆகும் பூசனிக்காய் சாற்றிலிட

வகையாந் னோவுக் கனபான

மருவு யிஞ்சி சக்கரைத்தேன்

முத்திர நோய்கள் எல்லாவற்றிற்கும்பற்பத்தை சர்க்கரை அல்லது தேனில் உட்கொள்ளலாம். மூக்கில் இரத்தம் வழிந்தால் அமுக்கிரா சாற்றில் வழங்கலாம். கைகால் எரிச்சலுக்கு பூசனிக்காய் சாற்றில் வழங்கலாம். உடல் நோவுக்கு (வலி எடுத்தல்) இஞ்சி, சர்க்கரை தேன் சேர்த்துச் சாப்பிடலாம்.

474. தேனே காயம் வறண்டாக்கால்
        தேடு மெண்ணை வெண்ணெயில்கொள்
    கான வாழைப் பழமாகும்
        கனத்த பிறமேக மிருபதுக்கும்
    வானங் கைகால் சத்தியதாம்
        மருவுந் தேனிற் கொண்டிடவே
    பானங் கல்லத் தாளடைத்தால்
        பகரக் கோழி முட்டையதில்

உடல் வறட்சிக்கு வெண்ணெய் அல்லது எண்ணெயில் உட்கொள்ள-லாம்.பிரமேகம் இருபதிற்கும் வாழைபழத்தில் சாப்பிடலாம்.கை காய் குடைச்சல் நீங்குவதற்கு தேனில் உட்கொள்ளலாம்.கல்லடைப்-பிற்கு கோழிமுட்டையில் வழங்கலாம்.

475. முட்டை யோடு மெலிப்புமுக்கை
        முசியா வெண்காரத்துடன் பொரித்து
    மட்டாய்ப் போயுந் தான்கொள்ளீர்
        மருவும் வெள்ளரிக்காய் வெதுப்பி
    முட்டச் சுரையிற் தண்ணீரு
        முசிய வெள்ளாட்டுப் பாலிற்நீர்
    இட்டுப் பாலில் கல்லடைப்பாளி
        இதவோர் மிளகுச் சதையடைப்பாளி

முட்டை,எலிப்புழுக்கை இவற்றை வெண்காரத்துடன் பொரித்துச் சேர்த்த வெள்ளரிக்காயை வெதுப்பி அதனுடன் கட்டி, சுரைத்தண்ணீர் வெள்ளாட்டுப்பால் இவற்றில் வழங்கிட கல்லடைப்பாளி, சதையடைப்பாளி ஆகியனவும் நீங்கும்.

476. சதையே அடைப்பன குறிச்சிபல
தயிரே யித்த அனுபானமி
விதமாந் கழிச்ச லதுதனக்கு
மேலும் பலபல வியாதிகட்கும்
பரமாந் செந்தூ ரத் தடனே
பலவகை யுள்ள செந்தூ ரம்
அதிநே ரிடையி ரனுபான
வகைநீ ரறிந்து செய்வீரே

சதையடைப்பானக்கு தயிரும் கட அனுபானமாக வழங்கலாம். பலவிதமான கழிச்சலுக்கும் பலபல வியாதிகளுக்கும் முன்சொன்ன செந்தூரத்தை அதற்கு நேரிடையான அளவு இந்தச் சூரணத்தையும் சேர்த்து வழங்கலாம்.

477. செய்வீர் கருத்த யீயக்கட்டி
திறமாய் ரெண்டு பலம்வாங்கி
அயவீர மஞ்ச ளோமமுடன்
அதுவும் வகைக்கிதி பலம்ரெண்டு
எய்வீர் சட்டி தனில்வறுக்க
ஏற்குங் குங்கும நிறமாகும்
மையீர் விழியே செந்தூரம்
வகையாக் கொள்ள மகிமையிதே

கருத்த ஈயத்தை 70கி எடுத்து, மஞ்சள், ஓமம் இவை வகைக்கு 70கி சேர்த்து சட்டியிலிட்டு வறுத்துக் கொள்ளவும். அவ்வாறு வறுக்கும்போது குங்கும நிறமாக மாறும்போது சட்டியை இறக்கி அதனைச் சூரணத்தில் கொள்ளவும்.

478. மிதவாத் சாத்திய மிகக்கழிச்சல்
 மிதுக்குச் சர்க்கரைக் கல்க்கண்டு
பொதவாந் கிராணி வகைக்கழிச்சல்
 புகட்டு மாவிநி நெய்தேனாம்
மதவாத் தேங்கிந் நீரருந்த
 மறிக்குஞ் சலத்தப் பிரமியமும்
மெதவா யுரைத்தார் அகத்தியமுனி
 விளம்பக்கேளீர் வாதம்போம்

அதிகமாகக் கழிச்சல் ஏற்பட்டால் சர்க்கரை, கற்கண்டு, கிராணி வகையான கழிச்சல்கள் ஆகியவற்றிற்கு நெய், தேன், இவற்றை அளவாளமாகச் சேர்த்துக் கொள்ளலாம். இதனை இளநீரில் அருந்த பிரமிய நோய் நீங்கும். வாதமும் நீங்கும் என்பதை அகத்தியர் உரைக்க நாம் அதை எடுத்துரைத்தோம்.

479. வாத மாகில் வேர்க்கொம்பு
 மருவுங் கஷாய மதில்கொள்ள
சீத முடனே பித்தகுன்மம்
 சேரும் மெரிக்கும் வலிகுன்மம்
போத முள்ள சர்த்திகுன்மம்
 பொருந்த திப்பிலித் தேனிட
வேத மிஞ்சிச் சாறுடனே
 விளங்கும் வியாதிக் களவாளம்

வாதநோய்களுக்குச் சுக்குக் கஷாயத்தில் வழங்கலாம். சீதம், பித்தகுன்மம், எரிகுன்மம், வலிகுன்மம், சர்த்திகுன்மம் இவற்றிற்கு மேற்சொன்ன செந்தூரத்தை திப்பிலிப் பொடியும் தேனும் குழைத்துச் சாப்பிடலாம். இஞ்சிச் சாற்றிலும் சாப்பிடலாம்.

480. அனுபான மில்லாய் பானைதனில்

குருங் கொள்ள யதனிலிட்டுச்

சனுப்பாய்ச் சதிக் கள்ளிதன்னை

தரித்துப் பொடியாய் அதனிலிட்டு

யினிப்பா யய்படி ரெண்டுகல்லுப்பு

யேக மொன்றாய்ச் சமனாக

மனுப்பாய்ப் பானை நிறையவிட்டு

முன்னா மேழு சீலைசெய்யே

பெரிய பானையில் கொள்ளைப் போட்டு சதுரக் கள்ளியைச் சிறுசிறு துண்டுகளாக நறுக்கிப் போட்டு இதனுடன் கல்லுப்பும் சேர்த்து மேல் சட்டிகொண்டு மூடி ஏழு சீலை மண் வலுவாகச் செய்து கொள்ளவும்.

481. சீலை மண் செய்து குழிவெட்டி [illegible]

சேர்த்த உமியும் ஆட்டெருவும்

கோலமான யெருமுட்டை

கொண்டே மூன்று நாளெரித்துச்

சான யெடுத்துப் பொடித்து நன்றாய்

தாங்காச் சீலை வடிகொண்டு

காலை வெந்நீர் வெருகடி கொள்

கதித்து ஓடும் பஞ்சகுன்மம்

ஆழமான ஒரு குழியை வெட்டி உமியும் ஆட்டு எருவும் அதில்கொட்டி பானையை வைத்து மேலேயும் உமியும் ஆட்டெருவும் போட்டு 3 நாள் எரியவிட்டு எடுத்து பொடித்துக் கொண்டு தூய்மையான வெள்ளைச் சீலையில் வடிகட்டிக் கொண்டு வெருகடி-யளவெடுத்து காலையில் வெந்நீரில் உட்கொண்டுவர ஐந்து வகை குன்ம நோய்களும் நீங்கும்.

482. பஞ்ச குஷ்மம் பறந்திடவே
 பாகம் வெள்ளீர் வெருகடிகொள்
 மிஞ்சா தெரியும் வயர்தனில்
 மேவும் பசுவின் பால்தன்னில்
 அஞ்சா தோடும் பாண்டுவுடன்
 ஆன மிரிகடுகு தேனிலிட
 தஞ்ச மென்றே யிதனையுண்ண
 சகல ரோவுந் சாத்தியமே

வயிற்றுநோய் வயிற்றெரிச்சலுக்கு பசும்பாலில் இதனைச் சாப்பிடலாம். பாண்டு நோய்கள் தீர திரிகடுகு பொடியில் சாப்பிடலாம். தேனில் இம்மருந்தைச் சேர்த்துச் சாப்பிட (நம்பிக்கை- யுடன்) அனைத்து நோய்களும் நீங்கும்.

483. சத்தி சாரணைக் கிழங்குவெட்டி
 தரித்துக் குறுணிப் பொடியாக்கி
 மெத்த ஆவின் பால்விட்டு
 மேவும் நிழலில்ச் சுக்குப்போல்
 வைத்தே யிடித்துப் பொடிசெய்து
 மருவும் வெருகடி ரெண்டுதான்
 தீத்த தேனில்க் குழைத்து நன்றாய்த்
 தீரும் வியாதி தெகிட்டக் கொள்ளே

சத்திச்சாரணைக் கிழங்கை துண்டுதுண்டாக வெட்டி 2.6லி துண்டுகளை எடுத்து ஆவின் பால் வார்த்து ஊறவிட்டு நிழலில் உலர்த்தி சுக்குபோலே வைத்து இடித்துப் பொடிசெய்து, 2 பூனைக்கால் அளவு தேனில் குழைத்துச் சாப்பிட்டு வர பின்வரும் நோய்கள் பலவும் நீங்கும் என்பதாம்.

484. கொள்ள நாற்பது நாளதுதான்
 கோலக் காயங் குறித்தவோர்
உள்ள வியாதிக் கிதுவாகு
 முகந்த கைப்பும் புளிவிட்டு
மெள்ள ஆவின் நெய்யாகு
 மிகுந்த முருங்கை திருக்கைசுறா
தள்ளா திதனைக் கொண்டாக்கால்
 தாங்கும் வோய்கள் மாள்டிடுமே

நாற்பது நாட்கள் தொடர்ந்து உட்கொண்டு வர உடம்பில் உண்டாகிற நோய்களில் பலவும் நீங்கும். இம்மருந்துண்ணும் காலத்தில் உப்பு,புளி நீக்கி ஆவின்நெய் சேர்த்து, முருங்கைக்காய்,கீரை, திருக்கை,சுறா போன்ற மீன்கள் உண்டு வர உடம்பைத் தாக்கும் பல நோயகளும் மாண்டுவிடும்.

485. மண்டு ரத்தைக் கொண்டு வந்து
 மகிழ யிடித்துப் பொடியாக்கி
கொண்ட வெத்திலை நொச்சியிலை
 கூறுஞ் சுரத்தில் முக்கூற
மீரக் காய்ச்சி யூறவிட்டு
 மிகுந்த ஆட்டுக் கோமயத்தில்
ரெண்டு மூணு நாளூ ற
 நயமேற யரைக்கற் றாழைச்சாறில்

இரும்புத்தூளை இடித்துப் பொடியாக்கி வெற்றிலைச்சாறு, நொச்சி இலைச்சாறு இவற்றின் சுரசத்தில் மும்முற்முறை காய்ச்சி ஊறவிட்டு ஆட்டுக் கோமியத்தில் இரண்டு மூன்று நாட்கள் ஊறவிட்டெடுக்கவும் பின்னர் எடுத்துக் கற்றாழைச் சாற்றில் அரைக்கவும்.

486. கற்றாழஞ் சாற்றி லொருசாமம்
கடுக அரைத்து மடக்கி வைத்து
அத்த ஆலிலை யதின்மேலே
அரைத்த மருந்தை அதனிலிட்டு
உத்த ஓடு தான்மூடி
யொடுங்கச் சீலை மண்செய்து
அத்த வீராகம் பிடமாக
அமபது பிடமு மப்படியே

3மணி நேரம் கற்றாழைச் சாற்றில் தொடர்ந்து அரைத்து ஆலிலை பரப்பி அதன்மேல் அரைத்ததை வைத்து சட்டிக்குள் எடுத்து வைத்து சட்டிமூடி சீலை மண் செய்து அமபதுமுறை புடம் போடவும்.

487. அப்பா வெடுத்துப் பரணிவைத்து
ஆகு மிரண்டு பணவிடைதான்
மெய்ப்பாய்த் தேனில் கொண்டிடவே
விளங்கு மிருமல் மகோதரமும்
ஒப்பாம் பாண்டு காமாலை
உடம்பு சோகை வீக்கமுடன்
அப்பா யிரைப்பு பெருவயிறு
ஆக்க கைகா லசதியும்போம்

அரியபின் எடுத்துப் பரணில் அடைக்கவும். இதனைத் தேனில் உட்கொண்டு வர நேமல்,மகோதரம், பாண்டு,காமாலை, சோகை வீக்கம், இரைப்பு, பெருவயிறு கைகால் அசதி இவை தீரும்.

488. போமே பத்தியமுருங்கைக்காயிலையும்

புகமுங் கீரைத் தண்டுடனே

ஆமே பசுவின் நெய்பாலாம்

ஆகு மாரால்கி குருவிகொத்கு

நாமே பத்திய மிகவிருந்தால்

நன்றாய்த் தீரும் நோய்களெல்லாந்

தாமே சொன்னா ரகத்தியனார்

தவிர வின்ன மிருவிளி

இதற்குப் பத்தியம் முருங்கை காயும், முருங்கை கீரையு-மாகும். கீரைத்தண்டு, பசுவின்நெய், பசுவின் பால், ஆரால், குருவி, கொத்கு போன்றவை ஆகும். பத்தியத்தை முறையாகக் காத்தால் தீரும் நோய்கள் எல்லாம் விரைவில் தீர்ந்துவிடும் என்பதாம். இது அகத்தியர் சொன்ன மருத்துவ முறையாகும்.

489. ஈர வெங்காய மிருநாளி

யென்ற பிரண்டைதா னந்துவைத்து

மீர யிருநாழிச் சாறுதனில்

மகுத்த பசலிச் சாற்சரியாய்

வாரே முறையா யிச்சாறு

மருவூங் குமணி நானாளி

தீர யிடித்துத் தானிபிழிந்து

செலுத்தும் வகைகே ளிச்சாறு

இடித்துப் பிழிந்தெடுத்த ஈர வெங்காயச்சாறு 2.6லிட்டர், பிரண்டைச்சாறு 2.6லிட்டர், பசலிச்சாறு 2.6லிட்டர் இச்சாறுகளை எல்லாம் இடித்துப்பிழிந்து கொள்ளவேண்டும். அதிகமான அளவு பொருட்களை இடித்துப் பிழிந்து சாறுமட்டும் 2.6லிட்டர் இருக்கவேண்டும்.

490. அரிதார புடம்

அச்சாறது நால்நாலு பலமே
அரிதாரத்தைத் தாள ரைத்து
வச்ச சாறு வத்தவத்த
மகிழ்ந்து குழிக்கல் தாளரைக்க
அச்ச மில்லாச் சட்டிதனில்
அடைபோல்த் தட்டி யதனில்வைத்து
இச்சை யுடனே குழிக்கல்லை
இந்தச் சாற்றால்க் கழுவியிடே

140கி அரிதாரத்தை எடுத்து மேற்கொண்ட சாறுகளால் அரைத்து, சாறு வற்ற வற்ற அரைத்துக் கொண்டே இருக்க வேண்டும். குழிக்கல்லில் இட்டு அரைத்ததை அடைபோல் தட்டி அடுப்பேற்றிய சட்டியின் உள்ளே வைத்துக் கொள்ளவும். குழிக்கல்லை இச்சாற்றால் குழிக்கல்லை நன்றாகக் கழுவிக் கொள்ள வேண்டும்.

491. கழுவுஞ் சாறு அடைமேலே
கலந்து சட்டிக் குழம்பாக்கி
வழுவில் லதை மறுசட்டி
மகிழ்ந்து மூடிச் சீலை செய்து
அறிவா யேழு மண்செய்து
அப்பால்ப் புரைக்கு மண்ணப்பி
நழுவிப் புகைச்சல் போகாமல்
நாற்பது நாழிகை எரித்தெடுத்தே

சட்டியிலுள்ள அடையின் மீது சாற்றை ஊற்றி குழம்பாக்கி மெலிதான சட்டிகொண்டு மேல்மூடி சீலைமண் செய்து கொள்ளவும். இவ்வாறு ஏழுசீலை மண் செய்து கொண்டு புரைகளுக்கும் மண்ணப்பி 16மணி நேரம் புகைச்சல் ஏற்பட்டுவிடாமல் தொடர்ந்து எரித்துக் கொள்ளவும்.

492. எடுத்துக் கரண்டி தனைக்காய்ச்சி
யிதிலே பற்பம் பொடிபோட
மடுத்து யிருந்தால் நல்ல பற்பம்
மருகப் புகைந்தால் பற்பமில்லை
தொடுத்த சட்டி மண்செய்து
துலங்கத் திரும்ப அடுப்பேத்தி
கடுத்த மாகச் சாமமொன்று
கனலாய்த் திரும்ப வெரித்திடவே

கரண்டியைச் சூடாக்கி அதிலே பற்பத்தைப் போட்டுப் பார்க்க அது மாறாமல் இருந்தால் அது நல்ல பற்பம். புகைச்சல் உண்டானால் அது நல்ல பற்பமில்லை. சட்டி மண் செய்து மீண்டும் அடுப்பேற்றி 3 மணி நேரம் எரித்தெடுக்கவும்.

493. எரித்து யதனை யெடுத்துவைத்து
யிதமாய் பற்பம் பதங்கண்டு
தரித்தன பானத் திரிகடுகு
தந்தபொடிதான் பணவிடையும்
உரித்த பற்ப மதில்ப்பாதி
முழுங்க யிருமல் தான்போகும்
கரித்த சயரோகந் தான்போகக்
களைத்துக் கொள்ளப் பிறநீர்போம்

எரித்ததை எடுத்து பதம் உணர்ந்து சாப்பிட துணை மருந்துகள் சொல்லப்படுகின்றன. 500மிகி திரிகடுகுப் பொடியில் 250மிகி. பற்பத்தைச் சாப்பிட்டு வர இருமல் நீங்கும். சயரோகம் நீங்கும். உடலில் சேர்ந்திருந்த கெட்ட நீரும் இறங்கும்.

494. பிறநீர்க் கோவைத் தேன்டனே

பெருகும் பற்பம் பனிவிடைகொளி

அழநோய் தேசிய் பழச்சாற்றில்

அழபடு தாமரைக் கதபோதம்

வழமை பூத காமாலை

மருவுங் கையா—ளந்த கரையிலை

திருமேகுட்டம் வெண்குட்டம்

தெறிக்கும் நிலப்பனைக் கிழங்காகும்

பற்பத்தைத் (500மிகி) தேனில் உட்கொண்டு வந்தால் நீர்க்கோவை நீங்கும். இந்நோய்எலுமிச்சம்பழச்சாற்றிலும் உட்கொள்ளலாம். கண்ணோக்குக்கும், அதகாமாலைக்கும் கையாந்தகரை இலைச்சாற்றில் வழங்கலாம். குட்டம்,வெண்குட்டம் இவை இப்பற்பத்தை நிலப்பனைக் கிழங்குச் சாற்றில் வழங்கலாம்.

495. ஆகுங் குட்டஞ் சீரகத்தில்

ஆக சன்னி பலவாதம்

போகு மக்கினி மந்தமுடன்

பொருமல் தீருந் தேனிலிட

தாக முடம்பு சோகையெல்லாந்

தவறிப் போகுங் கையான்சாறு

ஏக வீக்கம் பொருமலுக்கு

யிருநீர் கடுக்காய் கையான்சாறு

பொதுவாகக் குட்டநோய்க்கு சீரகத்தில் வழங்கலாம். சன்னி பலவகை வாதங்கள் அக்கினி மந்தம்,பொருமல் இவை தீர தேனில் பற்பத்தைக் குழைத்துச் சாப்பிடலாம். உடம்பு சோகை நீங்க கையான்தகரை சாற்றில் சாப்பிடலாம். வீக்கம் பொருமலுக்கு கடுக்காய்த் தூள் அல்லது கையான் சாற்றில் சாப்பிடவும்.

496. சார்ந்த தெற்பைப் புல்ச்சாறுத்

தனம்பக் காரஞ் சாரமுடன்

கொண்ட வுடனே கருங்குட்டம்

நெகிழ்ந்து போகு மினிமிநீ

பாருங் குமரக கண்டனுக்கு

பனினுந் திப்பிலி தேன்கொள்ள

வேருஞ் சிவந்த செங்குட்டம்

விட்டேபோகுங் குமரிச்சாறு

இப்பற்பத்தைத் தெற்பைப்புல் சாற்றில் காரசாரத்துடன் சேத்துச் சாப்பிட கருங்குட்ட நோய் நீங்கும்.குமரகண்ட வலிக்கு திப்பிலி பொடியுடன் தேன் சேர்த்துச் சாப்பிடலாம். இதனால் சிவந்து காணப்படும் செங்குட்டமது குமரிச்சாற்றில் நீங்குமெனபது.

497. குமர வுடம்பு மரம்போலே

கொண்டே யுதிர்ந்து தானிருந்தால்

மரமா மக்கிறா காரத்தை

தகத்தே பொடியில் பற்பங்கொள்

அமிர்த மான திமிர்வாதம்

அடிக்கும் நிலப்பனைக் கிழங்கதனால்

யேகுஞ் காயா சுவாசத்துக்கு

ஒக்குந் திப்பிலிச் சூரணமே

உடம்பு கட்டைபோலாகி செதிகல்கள் உதிர்ந்தால் அக்-கராகாரத்தைப் பொடித்துப் பற்பத்தில் கூட்டி உண்ணவும். திமிர்வாதம் நிலப்பனைக்கிழங்கை சேர்த்து பற்பம் சாப்பிட திமிர்வாதம் நீங்கும். சுவாச நோய்களுக்குத் திப்பிலிச் சூரணம் சேர்த்துச் சாப்பிடவும்.

498. சூரண முடனே அரிதார ரந்

தங்கு பற்பந் தாள்கொண்டால்

தார மான புளிப்புகையுந்

கத்தரி வெள்ளரி பூசணிக்காய்

வாரணங் கோழி பஙிறியுடன்

விளங்குஞ் செம்பழ் பட்டையுடன்

அணங்கே யிதுவு மாகாது

அப்பாஞ்த் தயிர்மோ ரகதியதே

திப்பிலிச் சூரணத்துடன் அரிதாரமும் சேர்த்து பற்பத்துடன் உட் கொண்டால் புளியும் புகையும் தள்ளி பத்தியம் காக்க வேண்டும். கத்தரிக்-காய், வெள்ளரிக்காய், பூசணிக்காய், பஙிறி, கோழி, செம்பழ்பட்டை ஆகியனவும் நீக்கப்பட வேண்டியவை. தயிரும், மோரும் சேர்த்துண்ணலாம்.

499. அகத்தியமாஞ் சாரணையின் கிழங்கு கொண்டு

அதையிடித்து யீருகளஞ்சி நாழிப் பாலில்

சுகத்துடனே நீர்பாலுஞ் சுண்டக் காய்ச்சி

துயிலிதனிலே வடிநென்டு கொள்ளும் போது

சிகத்திலுள்ள வாய்வெல்லாந் தெறித்துப் போகுந்

திரேகத்திற் குன்மமெல்லாந் தெளிந்து போகும்

நிகழ்ந்திடவே பழம்புளியு மிஞ்சி சுண்டி

நிலவான குளகறிழ் நேர்ந்து கொள்ளே

சாரணைக் கிழங்கை இடித்து (10கிராம் அளவு) 1.3லிட்டர் பசும்பாலில் போட்டு நீரும் பாலும் சுண்டக் காய்ச்சி வடிகட்டி உட்கொண்டு வந்தால் எல்லா வகையான வாயுக்களும் நீங்கும். உடம்பில் உண்டாகும் எல்லா வகை குன்மங்களும் நீங்கும். பழம்புளியும் இஞ்சியும் சேர்த்துக் கொள்ளலாம்.

500. அரையாப்புக் குளம்பு

கொள்ளவே அரையாப்புக் கட்டி போக
கொடுகளஞ்சி யிரதமொன்று யீயம் ரெண்டு
தள்ளுரச கற்பூர மொன்று கட்டி
தாங்காத அண்டத்தோ டதவும் நாலாம்
விள்ளாமல் வெண்கருவா லாட்டிப் பின்பும்
மிளகளவாய் வெள்ளையது கூடச் சேர்த்து
யெள்ளளவு யுடையில்லாக் கட்டி மேலே
யிதமாகப் பூசிடவே யிகழ்ந்து போமே

இரசம் ஒருபங்கு, ஈயம் ரெண்டு பங்கு, இரசகற்பூரம், நால்குபங்கு, முட்டைத்தோடும் கட்டி முட்டை வெண்கருவால் ஆட்டி மிளகளவு சுண்ணாம்பு கூட்டி அரைத்து அரையாப்புக் கட்டியின் மீது பூசிட அரையாப்புக் கட்டி நீங்கும்.

501. விகழ்ந்து தான கெற்பம் வீழ்க
யின்னகேள் சூடன் ரெண்டு காயமூன்று
புகழ்ந்திடவே விராகநிடை நன்றாய்ச் சேர்த்து
பூண்டுமொரு பலமுரித்துக் கூடப் போடு
தகந்திடா மாவிலிங்கத்தைத் தளிர்பிடிதா னொன்று
தமுகாம லிவ்வளவு மிலையோ டாட்டி
உகந்திடவே புளிளைக்கா யளவு மூன்று
உத்தமியா ளருந்திடவே முத்தி யாமே

கெற்பம் வீழ்வதற்கு சூடன் 8கிராம், காயம் 12கி, 35கி பூண்டை உரித்துக் கடச்சேர்த்து, மாவிலங்கை தளிர் ஒரு கைப்பிடி-எடுத்து எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்து அரைத்துப் புளிளைக்காயளவு உருண்டைகளாக உருட்டிக் கொள்ளவும். இதனை வழங்கிட அரைகுறை கெற்பங்களும் வீழும் என்பதாம்.

502. முத்தின சாரணை முன்றுபல
முறக்கும் வெல்லஞ் சரிகொண்டு
உத்த குழிக்கல் தானரைத்து
உண்டு ஆவின் நெய்கொள்ள
மெத்தவுருட்டி நெல்லிக்காய்
மேவு பிரமாணத் தான்கொண்டு
குத்த மில்லாமல் தான்கொள்ள
குணமாம் வியாதி குணங்கேளு

நன்றாக முற்றின சாரணை 105கி, அதற்குச் சமமான அளவு 105கி, வெல்லம்,சேர்த்துக் குழிக்கல்லில் இட்டு அரைத்து எடுத்துச் சாப்பிட்டு வரவும். அம்மருந்துண்டவுடன் பசுநெய் உட்கொள்ளவும்.அல்லது அரைத்த் கலவையுடன் நெய் சேர்த்து நெல்லிக்காயளவு உருட்டி காயவைத்துச் சாப்பிட்டு வர கீழ்க்கண்ட நோய்கள் நீங்கும் என்பதாம்.

503. குன்மஞ் குணமாத்சொ ரோணிதம்போம்
குடலில் வியாதி பலதீரும்
வான மின்லைக் கிருமியுடன்
வகுத்துக் கிராணி யறுவகையும்
தன்னி மலங்குஞ் காமாலை
சொல்லும் பாண்டு சயரோகம்
நன்மை யாகும் வாதமெல்லாம்
நாட்டுஞ் சாரணை பற்பங் கெந்தி

மேற்கண்ட மருந்தை உட்கொண்டு வந்தால் குன்மம், சுரோணிதம்,குடல்நோய்கள் பலவும்.வயிற்றுக் கிருமிகள், கிராணி நோய்களான ஆறு வகை கிராணி நோய்கள், மிகவும் சிரமங்களைத் தரும் காமாலை, பாண்டு,சயரோகம்,வாதம் இவை யாவும் தீரும் என்பதாம்.

504. கெந்த சுத்தி தான்கேளீர்

கிளர்ந்த பசுவின் பால்மோராம்

மலர்ந்த காடி வெள்ளாடு

மருவும் நெய்தேன் பூசணிக்காய்

விந்தை மாதளை சம்பிராசம்

மிகுத்த கருப்பஞ் சாறுதன்னில்

சந்தேக மில்லாம லிவ்வகையில்

தானே சுத்தி பண்ணுவதே

மருந்து செய்வதற்குமுன் மருந்து பொருட்களைச் சுத்தம் செய்ய வேண்டும். பசும்பாலில் தோய்த்த மோர் காடி, வெள்ளாட்டு நெய், தேன், பூசணிக்காய், மாதளம்சாறு, எலமிச்சம்பழச்சாறு, கருப்புச்சாறு இவற்றிலெல்லாம் தனித்தனியே ஊற வைத்து கழுவி சுத்தம் செய்து கொள்ள கந்தகம் சுத்தியாகும்.

505. கெந்தக புடம்.

பண்ணு மந்திர தாமரையும்

பகருங் கருசாலை நீர்முள்ளி

எண்ணும் பானையி விதைப்போட்டு

யேக வேடு தான்கட்டி

தண்ணும் கெந்தகம் மேல்வைத்து

சுகமாய் மூடி யெரியிட்டு

நண்ணும் நாலு நாழிகைதான்

நலமா யெரித்து ஆறியெடு

அந்தரத் தாமரை, கரிசாலை, நீர்முள்ளி இவற்றை ஒரு பானையிலிட்டு நன்றாக வேடுகட்டி அதனைக் கெந்தகத்தின் மேல் வைத்து நன்றாக மூடி எரியவிடவும். இவ்வாறு தொடர்ந்து ஒரு மணிநேரம் எரிய விடவும். ஆறவிட்டெடுத்த பின் ஒரு மணி நேரம் தொடர்ந்து எரியவிடவும்.

506.எடுத்தே பார்த்கச் சுண்ணாம்பாம்
யேக விரியுங் கெந்தகமு
மடித்து வாசனைத் தானுமில்லை
வாசம் பணவிடை நெய்சக்கரையில்
தொடுத்த மருந்து பாகமதாய்
தலங்கும் வகுத்தப் பிணிபோக
வெடித்த வியாதி தானே போக
வரைய றக்குங் கெந்தகமே

முழுமையாக எரித்தெடுத்து ஆறியபின் பார்த்தால் கெந்தகமும் சுண்ணாம்பாய் (பற்பம்) விரிந்து நீர்த்திருக்கும்.கெந்தகமும் முழுமையாக மடிந்து வாசனையற்றிருக்கும். இதனை 488மிகி அளவு நெய்யில் அல்லது சர்க்கரையில் சாப்பிட்டு வந்தால் வயிற்று நோய்கள் எல்லாம் நீங்கும். இந்நோய்களை வரையறுத்தக் குணமாக்கும் தன்மை கெந்தகத்திற்குண்டு.

507. கெந்தக சுத்தி குணங்களோய்
கிளர்ந்த அமுர்த வல்லியுமாம்
வந்த குன்மங் குட்டமுடனே
மருவுங் கிரமிப் பூவுடனே
தொந்தமா சுவாசகாசந்
தலங்கு சூலை வாய்வுசுரம்
விந்தை யான வீரியமு
மிகவுந் தாதவுண்டாமே

இப்பாடலில் கெந்தகத்தின் சுத்திமுறையில் அமுர்தவல்லிச் சாற்றில் சுத்தம் செய்து பயன்படுத்தினால் குன்மநோய், குட்டம், வயிற்றுப் புழுக்கள், தொந்த நோய்கள், சுவாசகாசம்,சூலை, வாயுசுரம் இவை நீங்கும். தாது விருத்தி உண்டாகும்.

508. உண்டாந் தண்ணி விப்புருதி

ஓடும் மூல வியாதியும்போம்

கண்ட பதன முண்டாகும்

காந்தி சரீரம் புகழ்ந்திலங்கும்

மண்டலத் தோர்கள் தானறிய

மன்மத நாவார் கண்டவரே

பண்டே யுள்ள வியாதியெல்லாம்

பற்பங் கண்டு நெகிழ்ந்திடுமே

விப்புருதிநோயும், மூல வியாதிகள் இவற்றைக் குணமாக்கும் பண்புகள் இச்செந்தக பற்பத்திற்கு உண்டு. இப்பற்பத்தை உண்பதால் உடல் மினுமினுப்புண்டாகும்.உலகிலுள்ளோர் அறிந்து கொள்வதற்கேற்ப, இப்பற்பம் பற்றி உணர்ந்தோர் மன்மதனாவார். நீண்டநாள் குண-மாகாத கிரானி நோய்களையும் இப்பற்பம் போக்குமென்பதாம்.

509. நெகிழ்மத நெல்லி கெந்தகத்தை

நேரே நாலு பலம்வாங்கி

உகந்த வெங்காயச் சாறுவிட்டு

உடனே மூன்று நாளரைக்க

புகழ்ந்த முள்ளங்கிச் சாறுவிட்டுப்

பின்னும் மூன்று நாளரைக்க

தகர்ந்த பற்பந் தேன்கொள்ள

தருகாக் கிரந்தி சூலையும்போம்

நெல்லிக்காய் கெந்தகத்தை 140கிராம் நிறுத்துக்கொண்டு செங்காயச் சாறுவிட்டு மூன்று நாள் அரைத்துக் கொள்ளவும். பின்னர் முள்ளங்கிச் சாறுவிட்டு மூன்று நாட்கள் அரைத்துக் கொள்ளவும். இம் மருந்தை தேனில் உட்கொண்டு வர கிரந்திநோயும்,சூலை நோயும் நீங்கும் என்பதாம்.

510.போகும் நாகம் பலமஞ்சு

பொருந்த மிலுப்பை யெண்ணைதனை

வாகா யிரும்புக் கரண்டிதனில்

வளமாய்த் தடவி நாகமதை

யேக உருக்கி வெள்ளாட்டு

யியல்பா யிரண்டு ரெண்டுபத்து

ஆக முடனே தான்சாய்க்க

அசலுஞ் சுத்தி யாளபின்னே

துத்தநாகம் 175கி எடுத்து, இரும்புக் கரண்டியை அடுப்பேற்றி இலுப்பை எண்ணைத் தடவி நாகத்தை உருகும்வரை உருக்கி வெள்ளாட்டுப் பாலில் பத்துமுறை உருக்கிச் சாய்க்கவும்.இப்போது துத்தநாகம் சுத்தியாகிப் பயன்படும் நிலைக்கு வந்திருக்கும்.

511. பினந்தாக் குண்டு சட்டிதனில்

பிலத்த நாக மதைவைத்து

வனத்திற் சுக்குப் பலமொன்று

மமுவு மோம மரைப்பலமும்

யிஞ்ப மஞ்ச ளொருபலமும்

யேக வெடியுப்பு நாலுபலம்

முனிபோ லிடித்துப் பொடிசெய்து

மோத நாக மேல்தூவி

குண்டுசட்டியில் உருக்கிய நாகமதை வைத்து சுக்கு 35கி, ஓமம் 18கி,மஞ்சள் 35கி,வெடியுப்பு 140கி இவற்றையெல்லாம் ஒன்றாகச் சேர்த்து இடித்துத் தூளாக்கிக் கொள்ளவும்.

512. நாக செந்தூரம்

அவித் தவித் தாள்வமக்க
    துலக்க மாக வெந்தவரில
மேவிச் சிவந்த நாயுருவி
    மெத்த நறுக்கிப் போட்டு
ஆவி யற்தச் சட்டிவிட்டு
    அப்பால் மறுசட்டி யிட்டுவறு
கவிச் செந்தூர மாதளம்பூத்
    குறித்த நிறமாய் வந்தபின்பு

நாகத்தைத் தூவி,தூவி வறுத்தெடுக்கவும். நன்றாக வெந்து சிவந்து வரும்போது நாயுருவியை நன்றாகச் சிறுசிறு துண்டு-களாக நறுக்கி ஆவி வரும்வரை வறுத்தெடுக்கவும். ஆவி வந்த பின்னர் மறு சட்டியிலிட்டு வறுத்தெடுத்துக் கொள்ளவும்.செந்தூரம் நிறத்தில் அதாவது மாதளம்பூ நிறத்தில் வரும்போது இறக்கிக் கொள்ளவும்.

513, வந்த செந்தூரம் பணவிடைதான்
    வறுத்தே பொடிசெய் திரிகடுகு
செந்தேன் தனிலே வறுகடியுத்
    திரட்டிக் கொள்ளத் தீரும்நோய்
யெந்த யிளை யிருமலுடன்
    யேகு மந்தார காசஞ்சுவாசஞ்
சேர்ந்த சிலேஷ்பன மாங்குரலத்
    முலங்கும் ....நோவும்போம்

இந்தச் செந்தூரத்தை499மிகி எடுத்து வறுத்துப் பொடித்த திரிகடுகுத்தூள், தேன் இவற்றுடன் கலந்து மூவிரலளவு உட்கொண்டுவர ஈளை,இருமல், மந்தார காசம்,சுவாசகாசம், சிலேற்பனம், குரல் கம்மல் ஆகிய நோய்கள் நீங்கும் என்பதாம்.

514. போகு மப்பா வுஷ்ணரோகம்
பொருந்து சுக்கிலப் பிரமியமும்
ஆகு மிந்திரியக் கட்டுக்கு
ஆக கல்லுச் சதையடைப்பு
யேகுங் குன்மஞ் சோகையுடன்
எரியு மந்திர முகமெரிவும்
தாகங் கைகா லெரிவுடனே
சகல நோய்கள் தீர்ந்துவிடும்

உஷ்ணநோய், சுக்கிலப் பிரமியம், இந்திரியக் கட்டு, கல்லடைப்பு, சதையடைப்பு, குன்மம், சோகை, உட்பெரிச்சல், முக-மெரிதல், தாகம், கைகாலெரிவு போன்ற பலவகை நோய்களும் இந்தச் செந்தூரத்தை உண்பதால் நீங்கும் என்பர்.

515. விடுமே ஆவரை வேர்ப் பொடியும்
விளங்கும் பணவிடை செந்தூரந்
தொடுமே ஆவரைத் தயிலத்தில்
துணிந்தே கொள்ளச் சலக்கழிச்சல்
படுமே யிருவகை யுளதும்
பறிந்தே போகுஞ் செந்தூரம்
கடவாய் பத்திய முப்புப்புளி
ஆடு கோழி பன்றியுடன்

ஆவாரை வேர்ப்பொடியுடன் சேர்த்த 488மிகி. செந்-தூரத்தை உட்கொண்டால் பல நோய்கள் நீங்கும். ஆவாரைத் தயிலத்தில் இச்செந்தூரத்தை உட்கொண்டால் சாக்கழிச்சலில் இரண்டு வகையான சலக்கழிச்சல்களும் நீங்கும். உப்பு, புளி, ஆடு. கோழி, பன்றி, இறைச்சி இவற்றை நீக்க வேண்டும்.

516. வெள்ளிச்_செந்தூரம்

தள்ளாமல் வெள்ளியக் கட்டி வாங்கி

தகடாகப் புளியிலைபோலத் தறித்துக் கொண்டு

மெள்ளவே கடப்பங் கொட்டை மஞ்சளோமம்

விதமாகச் சமனிகொண்டு தூளதாக்கி

சொ விளவே கொணியப்பட்டு மேலே தான

கூறுகிற பொடிபரப்பி அதன்மே லிய

வள்ளலெனுந் தகடதனைப் பரப்பி நன்றாய்

மடித்தநீ சுருட்டிடுவாய் திரணை போலே

வெள்ளியக் கட்டியை எடுத்துக் கொண்டு தகடாகத் தட்டி புளியிலைப்போல் தறித்துக் கொள்ள வேண்டும். கடப்பங்கொட்டை, மஞ்சள், ஓமம், இவற்றைச் சமஅளவாக நிறுத்துக் கொண்டு காயவைத்து இடித்துத்தூ ளாக்கிக் கொள்ளவும். தூளைப் பரப்பி அதன்மேல் ஈய தகடுகளைப் பரப்பி நன்றாகத் திரணை போல் சுருட்டிக் கொள்ளவும்.

517. திரணையதைப் புடம்போட பற்ப மாகுந்

திறமாக யதையெடுத்துப் பரணி வைத்து

வருமேக பிரமியமுந் தீர வேண்டி

மகத்தான செந்தூ ரந் தேனிற் கொள்ள

அரும்பாவி கிரந்தியுடன் சூலை போகும்

அக்கரமும் நீர்க்கடுப்பு உடனே தீரும்

பிரளையமாம் மூத்திரத்தின் கிரிச்சி தீரும்

பின்னை -வேறு ரோகமெல்லாம் பிலத்த தோடும்

இந்திரணையைப் புடம் போட்டெடுத்தால் பற்பமாகும். பற்பமாக வில்லையேனில் பற்பமாகும்வரை புடம் போடவும். இதனைப் பரணில் அடைத்துக் கொள்ளவும். மேக பிரமியம், கிரந்தி, சூலை, அக்சரம், நீர்க்கடுப்பு, மூத்திரக்கிரிச்சரம் போன்ற பல நோய்கள் இந்தப் பற்பத்தைச் சாப்பிட்டு வருவதால் நீங்கும்.

518.மாத மாதம் மருந்துகள்

பிலமாக முதல்மாதந் கெற்ப மாகில்

பெண்வயறு நொந்திட்டால் மருந்து கேளு

சிலை-நதலே சந்தனமும் லாமிச் சோடு

சேர்த்தநீ சமப்பாலி லரைத்துக் கொள்ள

விலகாமல் ரோகங்கள் வயறு நொந்தால்

வெள்ளோத்திரம் நெய்தல்க் கிழங்கு மஞ்சிட்டி

துலையவே நீரரைத்துப் பாலில்க் கொள்ளு

சுகமான மூன்றான திங்கள் கேளே

கெற்பம் தரித்த முதல் மாதத்தில் பெண் வயிற்றில் ஏற்படும் வயிற்று நோவிற்கு இப்பாடலில் மருந்து சொல்லப்படுகிறது. சந்தனம், விலாமிச்சு இவற்றைச் சமமாக எடுத்துப் பாலில் அரைத்துக் கொள்ளவும். இதனை உட்கொண்டுவர வயிற்று நோவு நீங்கும். வெள்ளிலோத்திரம், நெய்தல்கிழங்கு, மஞ்சிட்டி இவற்றை நீரில் அரைத்து பாலில் அரைத்து உட்கொண்டால் இரண்டாம் திங்களில் உண்டாகும் வயிற்று வலி தீரும்.

519.திங்கள்தனில் வயிறுநொந்து சூலை தோன்றில்

சேருந் கச்சோலஞ் சீரகந்தா மரைவளையம்

பொங்கமுடன் சந்தனமும் பாலில்க் கொள்ளு

புகழவே புள்ளைதெள்ள புகழுத் கேளு

நாலான திங்கள் சூலை வயிறுநோகில்

நெருஞ்சிவேர் தன்னுடனே வாழைக் கட்டை

அங்குள்ள தாமரையும் நெய்தல் வேரும்

ஆவின்பால் சந்தனமு மரைத்து உண்ணே

மூன்றாம் திங்களில் வயிறு நொந்தால், சூலை வந்தால் கச்சோளம் சீரகம், தாமரை வளையம், சந்தனம் இவற்றை அரைத்துப் பாலில் உட்கொண்டு வர நீங்கும். நாலாம் மாதத்தில் ஏற்படும் சூலை; வயிற்று வலிக்கு நெருஞ்சிவேர், வாழைக்கட்டை, தாமரை வேர்; நெய்தல்வேர், சந்தனம், இவற்றை அரைத்துப் பசும்பாலில் கொள்ளவும்.

520. மற்றும் 521.

520இல் பாதியும், பாடல் 521இல் பாதியும் இடம் பெற்றுள்ளது.

520. உன்ன அஞ்சாந் திங்களிலே சூலை தோன்றி

வரைக்கின்ற சந்தனமும் நெய்தல் வேருந்

தின்மா மாவிற்பா லரைத்துக் கொள்ளு

தீரு–மாறாந் திங்களிலே நொந்த சூலைதோன்றில்

. . . .

ஐந்தாம் மாதத்தில் கர்ப்பிணி பெண்ணிற்குத் தோன்றும் வயிற்று வலிக்கு சந்தனம், நெய்தல் வேர் இவற்றை ஆவின் பாலில் இரைத்துக் கொண்டு சாப்பிட்டு வர தீரும்.

521. காட்டிலுள்ள விளாங்காய்ச்சார் நெய்தல் வேரும்

பலங்காணச் சக்கரையும் பாலில்க் கொள்ள

பதறாம வெட்டான திங்கள் தன்னில்

மலங்காமல்க் காரையிலை சந்தனமு லாமிச்சு

மீறுந் திப்–பிலிதான ரைத்துப் பாலில்கொள்ள

துலங்கிடவே ஒன்பதாந் திங்கள் தன்னில்

சூலையிற் பாளைதன்னை யிடித்துண்ணத் தீரும்

[illegible]

விளங்காய்ச்சாறும், நெய்தல்வேரும், காணச்சர்க்கரையும் அரைத்துத் தேனில் கொள்ள எட்டாம் திங்களில் ஏற்படும் வலி நீங்கும். காரையிலே சந்தனம், லாமிச்சு, திப்பிலி இவற்றை அரைத்துப் பாலில் உட்கொள்ள ஒன்பதாம் திங்கள் சூலை தீரும்.

522. தீருமடா திங்கள் செல்ல பிள்ளைபெத்தால்
திரிகளுக்கும் பாலனுக்கும் மருந்து கேளு
கருடனே சிறுதேக்கு திப்பிலியுங் கூட்டி
பொடிமதுரங் காடியரை பூசத் தீரும்
கூறியே பாலக்குடித்தா லெதிரிட் டாலுங்
கொட்டாவி யிட்டாலுங் கறக் கேளு
பாசமுள்ள வெள்ளுள்ளி அசமோ-தகமுந்தாமும்
பாகமாய் கசாயம்வைத்துப் பருகத் தீரும்
தோஉஷங்கள் கண்டுபிள்ளை முலையுண்-ணாதாகில்
கலங்கவே அதிமதுரம் பொடிய தாக்கே

பத்தாம் திங்கள் செல்ல பிள்ளை பெற்றெடுத்தால் பெண்களுக்கும் குழந்தைக்கும் தரவேண்டிய மருந்தைச் சொல்கிறது இப்பாடல். சிறுதேக்கு திப்பிலி, அதிமதுரம், இவற்றைக் காடியில் அரைத்துப் பூசத் தீரும். குடித்த பால் எதிரிட்டாலும், கொட்டாவி இட்டாலும் வெள்ளுள்ளி அசமதாகம் இவற்றைச் சேர்த்து கசாயமிட்டுக் குடிக்க நீங்கும். குழந்தை பால் குடிக்காமலிருந்தால் அடிமதுரத்தைப் பொடித்துக் கொள்ளவும்.

523. குழந்தைப் பிணி மருந்து

பொடியாகப் பாலரைத்து முலைக்காம்பில் பூசி
பிள்ளை முலையுண்ணவே போகும் நோவு
அடியாகக் குழந்தை வயிர்நொந் தழுதால்
துலங்கு புன்னைக் கொட்டை கொண்டு
வடித்த தயிர்த்தண்ணீரி லரைத்துக் காய்ச்சி
மைந்தா-வயிற்றடவிடவே நோவு தீரும்
அடிவயிறு நொந்து மலங்கட்டு மாகில்
அதிமதுரம் வேப்பந்துளிர்ச் சர்க்கரையே

பொடித்ததைப் பாலில் அரைத்து முலைக்காம்பில் பூசவும். குழந்தை பால் குடிக்கும்போது இம்மருந்து உள்ளேசென்று நோயைக் குணப்படுத்தும். குழந்தை வயிறு வலியால் முடித்தால் புன்னைக் கொட்டையைத் தயிரில் அரைத்துக் காய்ச்சி வயிற்றில் பூசிட வயிற்று நோவு நீங்கும். அடிவயிறு வலித்து மலம் கட்டிக் கொண்டால் அதிமதுரம், வேப்பந்துளிர் சர்க்கரை இவற்றைப் பயன்படுத்தலாம்.

524. அரைத்த நெயிவ்ப்பு கட்டிடுவாய் மலமிறங்கும்
அதவுமல்லால் நீரிறங்க எலிப்பு முக்கை
உரைத்திடுவாய் வெள்ளரிக்காய் விரையுங் கூட்டி
உகந்திடவே யரைத்த அடிவயிற்றில்ப்பூச
நிரைத்திடவே நீரிறங்கும் பாலு முண்ணும்
நிலவாக மசுத்தி வேருங் கொண்டு
பறையாமல் மங்களநாள் குளிசங் கட்டு
பறக்குமடா தோஷமுடன் மதலை நோவும்

அதிமதுரம் வேப்பந்தளிர் சர்க்கரை இவற்றைச் சேர்த்த-ரைத்த அடிவயிற்றில் வைத்துக் கட்டிட கட்டியமலம் இளகி இறங்கும். மலக்கட்டு மல்லாத நீரும் இறங்கும். எலிப்புமுக்கையும், வெள்ளரிக்காய் விதையும் கூட்டி அரைத்த அடிவயிற்றில் பூசிவர நீரிறங்கும். பாலுண்ணாதிருந்த குழந்தை பாலுண்ணும். சத்திவேரை எடுத்த மங்களநாளில் குளிசம் கட்ட தோஷங்களும் குழந்தை நோய்களும் நீங்கும் என்பதாம்.

525. மதலையின் மேனி வாடி
வயத்தினிற்ப் பாலுந் தேங்கா
தலைதனிற் குழியு முண்டாய்
சத்தியும் நீராய் வீழ்ந்து
நுரைநுரை சிலத்தை யன்றி
நோக்கிய விழியுங் கெட்டு
குதலைவாய் காஞ்சு தோன்றுங்
குளித்தவ ளெடுத்த காலே

குழந்தையின் உடம்புவாடி குடித்த பால் வயிற்றில் தங்காது, தலையினில் குழியேற்பட்டு, தண்ணீர் தண்ணீராய் வாந்தி உண்டாகி மூக்கினில் தண்ணீர் வழிந்து, விழிகளும் கெட்டு குழந்தையின் வாய் காய்ந்து தோன்றும். இவை குளித்தவள் எடுத்த தோஷத்தின் குணங்களாகும்.

526. தாயார் முலையில் வாய்வைத்து

சத்தே யூன்னூந் திகைத்திருக்குந்

தேய்வாய்த் தேய்க்கும் மெய்வெளிறுஞ்

சிறுக வெதும்பும் வயரொழுகுஞ்

சாய்வா யிறங்கு மெழுந்திரிக்குஞ்

சத்தே கண்டால் விரோசிக்கும்பே

ளோய் கொண்ட அவள்குளித்த

பெண்ணோய் கொண்ட தோஷமிதே

தாய் மார்பில் வாய்வைத்து குழந்தையானது சற்று நேரம் பாலைச் சுவைக்கும், பின்னர் திகைத்து மிரண்டு பார்க்கும். உடம்பை அங்குமிங்கும் தேய்த்துக் கொள்ளும். உடம்பு வெளிறும். சிறிது உடல் வெதும்பும், வயிறு கழியும். சாய்வாய் இறங்கும். எழுந்திருக்கும். மிரண்டு விரோசிக்கும் இது குளித்த பெண் கண்ட தோஷமாகும்.

527. தோயு முடம்பு செயலாவ்ந்

தோனா முலைப்பா லருந்தாது

காய முடம்பு கண்குழியுங்

கண்டால்ப் பயந்து தாவிவிழிக்குந்

தேயு முடையாள் தன்னாத்

தீரா தோஷ மெனுசெப்பு

ஆயும் வேதந் தாள்கண்ட

அகத்திய முனியும் அருளியதே

குழந்தையின் உடம்பு தோய்ந்து போகும். தாய்ப்பால் அருந்தாது. உடம்பு காயும். கண்ணில் குழிவிழும். நம்மைக் காணும்போது பாய்ந்து பார்த்து விழிக்கும். இது உடையாள்தன் தீராதோஷம் என்று அழைக்கப் பெறும். இதை தீராதோஷம் என அழைத்து விளக்குபவர் அகத்தியர் ஆவார்.

528. குளிசம்

அருளியதோ ரின்னமொரு குறியைக் கேளு

அப்பனே பாலனுமே மெலிந்து வாடிச்

சீருடனே தோஷவகை மாந்த மெல்லாந்

தெறிபட்டுப் போவதற்குச் செப்பக் கேளு

வேரான தூதுவளை குப்பை மேனி

விளங்குகின்ற குருவிஞ்சி தும்பை யோடும்

நீருடனே இவ்வேரு ஒன்றாக் கொண்டு

நிச்சயமாய்க் குளிசம்நீ நிகழக் கட்டே

குழந்தை மெலிந்து வாடும். தோஷ வகைகள், மாந்தம் எல்லாம் நம்மைவிட்டு ஓடுவதற்கு மருந்து சொல்வேன். தூதுவளை குப்பைமேனி, குருவிஞ்சி, தும்பை இவையெல்லாம்

529. கட்டுவாய் திருகுகள்ளி வடக்கு வேரு

காப்புக்கட்டி ஞாயறுநாள் பிடுங்கி வந்து

கட்டுவாய் குளிசமுடன் நீர்சொரிந்து

சுகமாகக் கட்டிடவே நோய்கள் தீரும்

மட்டாக மூன்றுநாள் நீர்சொரிந்து

மதலைக்குக் களித்திடவே மயக்க மில்லை

தொட்டிருந்த தோஷமெல்லாம் விட்டே யோடும்

சொன்னபடி குளிசநீர் சொரிந்தி டீரே

வடக்குப்பக்கம்செல்கின்ற திருகுகள்ளி வேரை எடுத்துக் காப்புக்கட்டி ஞாயிற்றுக் கிழமையில் எடுத்து வந்து குளிசத்துடன் நீர்சொரிந்து கட்டிக்கொள்ள வேண்டும். 3 நாட்கள் நீர் சொரிந்து குழந்தைகளுக்குக் கட்டிவிட்டால் மயக்கம் ஏற்படாது. குழந்தையைப் பிடித்த தோஷமெல்லாம் நீங்கும்.

530. சொரிந்தாவின் நெய்யுரியில் நல்லெண்ணை பாதி

சுகமாக நன்னாரி தண்ணீர் விட்டாள்

கரிந்தபொன்னாங் காணியுமோர் பலமொன் றாக

களஞ்சியொன்று ஏலரசி சீரகமுங் கட்டி

பொருந்தவே ஆவின்பால் வார்த்த ரைத்து

புகழடுப்பி லேத்தியே காய்ச்சிக் கொண்டு

திருந்தவே குழிதோஷம் போவ தற்கு

சிறுகரண்டி புகட்டிடவே தெளிவு கேளே

மேற்சொன்னபடி குளிசத்தில் நீர் சொரிந்த 675மிலி நெய்யில் 336மிலி, நல்லெண்ணெய் சேர்த்து தண்ணீர்விட்டான், பொன்னாங்காணி இவற்றை வகைக்கு 35கி எடுத்து, ஏலரிசி, சீரகம் இவை வகைக்கு 5கி சேர்த்து இவற்றை ஆவின்பால் அரைத்து அடுப்பேற்றி காய்ச்சி சிறு கரண்டி அளவு புகட்டிட்டால் குழிதோஷம் நீங்கி குழந்தை தெளிவு பெறும்.

531. கேளுநீ கெருடனுட கூட்டுக் குள்ளே

கிடந்ததொரு முட்டையோ டெடுத்து வந்து

ஆளவே சுட்டதனை சாம்ப லாக்கி

அப்பனே குழந்தைகட்குத் திலதம் போடு

வாழுகின் முள்க்கூட்டைச் சுட்டுச்சாம்பல்

மைந்தனுக்கு நெத்தியிட மயக்கந் தீருந்

தாஞுமே குழிதோஷம் பட்சி தோஷந்

தான்பறக்குந் தப்பாது மீண்டு செய்யே

கெருடப் பறவையின் கூட்டிலிருக்கும் முட்டையை எடுத்து சுட்டுச் சாம்பலாக்கி குழந்தைகளுக்குப் பொட்டிடவும். பின்னர் கருடன் வாழ்ந்த கூட்டை சுட்டுச் சாம்பலாக்கி குழந்தைகளுக்கு நெற்றியிலிட மயக்கம் நீங்கும். இவ்வாறு மீண்டும் மீண்டும் செய்து வர குழிதோஷமும், பச்சி தோஷமும் நீங்கும்.

532. சாதிலிங்கக்கட்டு-

செய்யவே யின்னமொரு குளிகை கேளு

திறமாக சாதிலிங்கம் பலந்தா னொன்று

பொய்யல்ல வெங்காரம் பலந்தா னொன்று

புகழ்சுதிவாளமது பலந்தான் ரெண்டு

நய்யவே பழச்சாற்றைக் குழிக்கல்லில் விட்டு

நால்சாம மரைத்துவிடு கவிறி போல

எய்யாம வுருட்டியே நிழலு லர்த்தி

யெந்தெந்த வியாதிகட்கு மீடுநீ சுக்கு

சாதிலிங்கம் 35கி, வெங்காரம் 35கி, நேர்வாளம்70கி, இவற்றை எலுமிச்சம்பழச் சாற்றால் 12மணிநேரம் அரைத்து பின்னர் சிறுசிறு உருண்டைகளாக உருட்டிக் கொண்டு நிழலில் உலர்த்தி சுக்கு நீரில் வழங்கிட எல்லாவிதமான நோய்களும் நீங்கும்.

533. யெடுத்திடவே யின்னமோ சேதி கேளு

மியல்பாக மேமருந்து நிறையாய் வாங்கி

கொடுத்திடவே குழிக்கல்லி லரைக்கக் கேளு

கொம்புத்தேன் விட்டாட்டக் குழம்ப தாகும்

மடித்திடவே ரெண்டுதர மல்லாத் தானும்

விதமாகத் தீபமணி வைத்துக் கொண்டு

வெடிப்பில்லாக் குளிர்ந்த-தண்ணீர் கலக்கிக் கொள்ளு

மிதமாகக் குழம்பு சுண்டைக்கா யளவுதானே

மேற்சொன்ன மருந்து பொருட்களை எல்லாம் மேற்சொன்ன அளவிலேயே எடுத்துக் கொண்டு குழிக்கல்லில் போட்டு கொம்புத்தேனை விட்டு ஆட்டினால் குழம்பாகும். நன்றாக மடியும்வரை இரண்டாம் முறையும் ஆட்டிக் கொள்ளவும். சுண்டைக்காயளவு எடுத்துச் சாப்பிட்டு குளிர்ந்த தண்ணீர் பருகவும்.

534. ஆகுமே சாதிலிங்கக் குழம்பு உண்டை

அப்பனே பலபல வியாதிக் கெல்லாம்

போகுமடா சன்னியுடனந் தோஷம் மூர்ச்சை

போக்கில்லா நெஞ்சடைப்பு வாய்வு காந்தல்

யோதமுடன் வயிரெரிவு வயத்த ஊதல்

யிதமான யிஞ்சிச்சாற் றன்னி லுண்ண

வேகமுடன் விஷபாகம் பித்த பாண்டு

விட்டோடுங் கொடிவேலி வேரி லுண்ணே

இச்சாதிலிங்க குழம்பு உருண்டையானது. பறீபல வியாதிகளை எல்லாம் போக்கும். சன்னிதோஷம், மூர்ச்சை, நெஞ்சடைப்பு, வாயு, காந்தல், வயிற்றெரிவு, வயிறு ஊதிக்கொள்ளல் இவை நீங்கும். இஞ்சிச்சாற்றில் உண்டு வர விஷபாகங்கள், பித்த பாண்டு இவை கொடிவேலி வேர்ச்சூரணத்தில் சாப்பிட்டு வர நீங்கும்.

535. சகல சுரஞ் சன்னிக்கு மாத்திரை

உண்ணவே யின்னமொரு குளிகை சொல்வேன்

உடன்சங்கு சுட்டநீர் பலந்தான் நால

நண்ணான் லிங்கமது விராகன் நால

நாலிரெண்டு விராகனுடன் ஆவின் பாலாற்

எண்ணாமல்ச் சாமமது மூன்று ஆட்டு

யியல்பாக உளுந்தபோல் நிழலு லர்த்தி

திண்ணமுடன் சகலநீர் கட்டுந் தோஷம்

தீருமே சுரஞ்சன்ன தெறிக்கும் பாரே

சங்குசுட்ட சாம்பல் 140கி, இலிங்கம் 32கிராம் இரண்டையும் ஆவின் பாலால் ஆட்டிக் கொள்ளவும். ஒன்பது மணிநேரம் ஆட்டிய பின் உளுந்தளவு உருண்டைகளாக உருட்டி நிழலில் உலர்த்திக் கொள்ளவும். இதனைச் சாப்பிட்டு வந்தால் நீர்க்கட்டு, தோஷம், சுரம் ஆகியவை நீங்கும்.

536. பாருநீ சுரமெல்லாம் போவதற்கு

பச்சையிஞ்சிச் சாறுடனே துளசி கூட்டு

மாறுநீ கையாந்தகரைச்சாறு தேனிற் கொள்ள

மறுபடியுந் திப்பிலியு மிளகும் வங்கம்

சேருநீ யிவ்வகையிற் சுரங்கள் போகுந்

தீருமே யின்னம்வெகு ரோகந் தானும்

வாருநீ சிறுபூளை நீர்முள்ளித் தானும்

வழுதலையுஞ் சுரைக்கொடியுங் கஷாயந் தானே

இக்குளிகையைச் சுரத்திற்குக் கொடுக்கும்போது பச்சை இஞ்சிச்சாற்றுடன், துளசிச்சாறும் சேர்த்து கையாந்தகரைச் சாறு கூட்டி தேனில் உட்கொண்டுவர சுரங்கள் நீங்கும். திப்பிலி, மிளகு, வங்கம் இவற்றைச் சேர்த்துப் பொடித்து வழங்கினால் சுரங்கள் நீங்கும். சிறுபீளை, நீர்முள்ளி, வழுதலை, சுரைக்கொடி இவற்றைக் குடிநீரிட்டும் வழங்கலாம்.

537. கஷாயமதில்க் கொள்ளும் போது

கழன்றிடுமே சயரோகம் நீரடைப்பு

அசையுமே தலைனோவு நீர்ச்சுருக்கு

அப்பனே உப்பிசமும் வாயுதீரும்

வசையில்லாத் தீர்ந்திடுமே நோய்களெல்லாம்

மகத்தான குளிர்சுரங்கள் மாறிப்போகும்

நிச்சயமாய் யிந்தமுறை செய்யாதானால்

நிச்சயமாய் நோய்களெல்லாஞ் நெகிழுஞ்சாதி

மேற்சொன்ன கஷாயத்தில் இக்குளிகைச் சாப்பிடும்போது சயரோகம், நீரடைப்பு, தலைநோவு, நீர்ச்சுருக்கு, வயிற்றுப்பிசம், வாயு இவை தீரும். பல நோய்கள் நீங்கும். குளிர்சுரங்கள் மாறிப்-போகும். நாம்சொன்ன முறையைச் சரியாகப் பயன்படுத்தினால் இந்நோய்கள் எல்லாம் தீர்ந்தது நிச்சயம் என்பதாம்.

538. சாதிலிங்கக் கட்டுநான் சொல்லக் கேளு
சாம்பிராணி பலமிரண்டு கூடன் ரெண்டு
பேதியா யரைத்திடவே தயில மாகும்
பிசகாமல் யீரத்துணியி லதனைப் பூசி
கோதில்லா லிங்கமதில் மேலே சுத்தி
கொழுத்திவிடத் தீயாகிச் சீலை வே க
நீதியாய் லிங்கமது இருகிக் கட்டு
நிறையவே சீலை தனி லாட் டெ-ரியே

70கி சாம்பிராணியை கற்பூரக்கட்டி இரண்டு சேர்த்து ஆட்டி எடுக்க தயிலமாகும். இதனை நனைத்து துணியில் பூசி அத்-துணியை லிங்கத்தின் மேலே சுற்றி தீமுட்டி எரிக்க சீலை வெந்தபின் எடுத்து மீண்டும் சீலை சுற்றி இருக்கக் கட்டி எரித்து விடவும்.

539.யெரித்திடுவாய் சீலைதன்னி லாட்டிக் கொண்டு
இயல்பாகத் தயிலமது யிறங்கு மட்டும்
முறித்திட்டுப் போகாமல்ப் பிரட்டி வைத்து
முக்கியமா யெரித்தபின்பு யெடுத்துக் கொண்டு
தெரிந்திடவே நெல்லிக்காய்க் கெந்தி தன்னை
சாதிக்காய் பலமிரண்டு கரண்டி தன்னில்
பொரித்திட்டுப் போகாமல் அனலில் வைத்து
போட்டிடவே லிங்கக்கட்டு புதுமை காணே

சீலைதனில் ஆட்டி ஆட்டி எரித்து தயிலம் இறங்குமட்டும் முறிந்து போய்விடாமல் பிரட்டி பிரட்டி எடுத்து எரித் நெல்லிக்காய் கெந்தி, சாதிக்காய் இவை வகைக்கு 70கி எடுத்து கரண்டியிலே விட்டுப் பொரித்து அனலில் வைத்து எடுக்க லிங்கம் கட்டியிருக்கும். இந்த லிங்கக்கட்டுப் புதுமையானதாகும்.

540. புதுமையாம் குளிர்சுரங்கள் தோஷம் போகும்
பொழுக்காத சன்னி பதின்மூன்றும் தீரும்
வெதுமையாம் வயத்திலுள்ள வியாதி தீரும்
வெளுப்பான சோகை காமாலை பாண்டு
பதறுபோ லிருக்கின்ற பித்த தோஷம்
பாரிலுள்ள மேகமெல்லாம் பறந்து போகும்
ஆதான சூலையும்போம் கொடிவேலிக் கஷாயம்
துலங்குமடா யிஞ்சி தேன்தனிற் பருகே

கொடிவேலிக் கஷாயத்தை இஞ்சிச்சாறு அல்லது தேனில் பருகி வர குளிர்சுரங்கள், தோஷம்,பதின்மூன்று வகை சன்னி நோய்கள், வயிற்று நோய்கள், சோகை, காமாலை, பாண்டு,பித்ததோஷம், மேக நோய்கள் இவையாவும் நீங்கிவிடும்.

541. பருத்திபோ லிருக்குமது தீயைப் பிடுங்கி
வேருரித்துத் தோல்வாங்கி ஒளிய பசுவிற்பாலில்
கருத்திர அரைத்து நீயும்
கருதியே குடிப்பீ ராகில்
யெரிப்பது விட்ட பின்பு
மீறு கின்ற நோயறுமே

பருத்தி போல் காணப்படுகின்ற மூட்டையை பிடுங்கி வந்து வேரைக் கழுவி சுத்தம் செய்து தோலை உரித்து பசும்பாலில் நன்றாக அரைத்துக் கலக்கிக் குடித்தால் பலவகை நோய்கள் நீங்கும் என்பதாம்.

542. சுக்கு மஞ்சள் வசம் பூண்டி
தீய மிளகு குங்கிலியம்
ஒக்கக் கொண்டு பொடிசெய்து
எரிப்பது விட்டபின்பு
மீறுகின்ற நோயருமே

சுக்கு, மஞ்சள், வசம்பு, பூண்டு, மிளகு, குங்கிலியம், இவற்றைச் சமமாக இடித்துப் பொடியாக்கிக் கொண்டு எரிப்பதை விட்டுக் கொண்டால் மீறும் நோய்கள் யாவும் அறுமுப் போகும்.

543. அருகு நெய்

அருகஞ் சாறு நாநாழி
ஆன மதுரம் வெண்களஞ்சி
நறுநெய் நாழி பால்நாழி
நன்றா யரைத்துச் சேர்த்தொன்றாய்
குருக வெந்த நெய்நக்க
கோடி கோடி உஷ்ணங்கள்
வெழுமை யான வேசையள்போல்
விட்டே போகுஞ் சுக்குப்போல்

அருகம்புல் சாறு 5.200லிலி, அதிமதுரம், 40கி, நெய் 1.3லிட்டர், பால் 1.3லிட்டர் இவற்றை சேர்த்து அரைத்து வேக வைத்து அந்த நெய்யை நக்கிவர உடம்பிலுள்ள பற்பல உஷ்ணங்கள் நீங்கும். வெழுமையான பெண்நோய் போகும். பிற நோய்கள் சுக்கு எனும் மருந்திற்கு நீங்குவது போல் இம்மருந்தும் நோய்களை நீக்கும் என்பதாம்.

544. தவறிப்போம் நீரேத்தம்தலைப்பா ரங்களி

சாம்பிராணி பளிங்குபோல்க் கட்டி வாங்கி

கமறியே யிடித்திடுவாய் தூள தாக

களைத்த குண்டுசட்டி தனிலிட்டு மேலே

உபரியாம் மேல்ச்சட்டி கவிழ்த்தி நீயும்

உத்தமனே சீலைமண் செய்து நன்றாய்

சுவரிடவே யடுப்பேத்தி அகிலஞ் சட்டி

துலங்க நல்லெண்ணை விட்டுத்திரியும் ரெண்டே

நீரேற்றம், தலைவலி, இவையும் நீங்கும். சாம்பிராணி கட்டிகை ஒரே கட்டியாகப் பளிங்குபோல் வாங்கி நன்றாகத் தூளாகுமாறு இடித்துக் கொள்ளவும். இதனைச் சட்டியிலிட்டு அதனுள் போட்டு மேல் சட்டி கவிழ்த்து மூடி சீலை மண் செய்து நன்றாக வேகுமாறு அடுப்- பேற்றித் காய்ச்சி சட்டி துலங்குமாறு நல்லெண்ணைய்விட்டு இரண்டு திரி போட்டுக் கொள்ளவும்.

545. ரெண்டுதிரி யேத்தியே அடுப்புக் குள்ளே

நலமாக வச்சுநீ யெரிக்கும் போது

மட்டியே புகையெல்லாங் கலந்து சட்டி

மாசிபோல்ப் படர்ந்துநன்றாய் மடித்து ஒட்டும்

கண்டுபத மறிந்துநீ யெடுத்துவைத்து

கவசங்கட்டுத் தானளித்துக் கவுத்த சட்டி

துண்டுபட யெடுத்துநீ வழித்துக் கொண்டு

தூளாக நாசிதனில்த் துலங்கச் செய்யே

இரண்டு திரிதிரித்து அடுப்பேற்றி எரிக்கவும். கரி சட்டியின் மேல்பாகத்தில் படிந்திருக்கும் புகையைத் தடவிப்பார்த்துப் பதம் கண்டு ஒட்டும் பதத்தில் வழித்துக் கொள்ள வேண்டும். கவிழ்த்த சட்டியை இரண்டாக உடைத்து எடுத்து அதில் படிந்த கரிய எடுத்து வழித்துக் கொள்ளவும். இதனை நாசியில் இட்டு உள்ளிழுக்கவும்.

அகத்தியர் சிந்தாமணி -600

அகத்தியர் மெஞ்ஞானம்

சிந்தாமணி அறுநூறு

பாகம் III

(முதல் பிர)